# றோயல் வெள்ளி மலர்




## றோயல் கல்வி நிலையம்

கனகபுரம் - கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "றோயல் வெள்ளி மலர்"

## 1990 - 2015

## றோயல் கல்வி நிலையம்

**21 / 1, கனகபுரம், கிளிநொச்சி.**

# Royal Education Centre

## 21/1, Kanagapuram, Kilinochchi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | - | றோயல் வெள்ளி மலர் |
| பதிப்புரிமை | - | றோயல் கல்வி நிலையம் |
| மொழி | - | தமிழ் |
| தாளின் தன்மை | - | 70gsm |
| நூலின் அளவு | - | B5 |
| அச்சு எழுத்து | - | 12 புள்ளி |
| பக்கங்கள் | - | 122 + கலர் படங்கள் |
| அட்டைப் படம் | - | அரசரட்ணம் சங்கர் |
| பதிப்பு | - | மல்ரி கலர் - பிறிண்டேர்ஸ் கிளிநொச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறு் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!

உன் சீரளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துமே!!
வாழ்த்துமே!!!

**மனோண்மணீயம் சுந்தரனார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் கல்வி நிலைய கீதம்

போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம்!!!
வாழ்க வளர்க வெல்க என்று போற்றுவோம்!!!
வளங்கொளிக்கும் வன்னி நாட்டின்
கிளந்தெழுந்த கிளிநொச்சியில்
உதய நகரில் உதயமான உயர்ந்த றோயல் கல்வி நிலையம்!!
போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம்

வாழ்க வளர்க வெல்க என்று போற்றுவோம்!!!
தமிழுடனே ஆங்கிலமும் தரணிபுகழ்
விஞ்ஞானம் வளங்கொளிக்க வர்த்தகமும்
எழில் சிறக்க சித்திரமும்!!
வயல் சிறக்க விவசாயம் சமயமுடன் சங்கீதம்!!
சமூகமுன் வாழ்ந்திடவே கணிதமுடன் சமூகவியல்
என்று பல கலைகளுடன் ஏற்றம் தரும் கலாசாலை
போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம்!!!

வாழ்க வளர்க வெல்க என்று போற்றுவோம்!!!
நல்ல தமிழ் சொல்லுகின்ற நாவலராய்
பாலராய் பல்லுயிரும் போற்றுகின்ற
பண்புடைய ஆசான்கள்!!
கல்வியுடன் கலைத்துறையும்
வீரமுடன் விளையாட்டும்!!....

எல்லையில்லா பயன் கொடுத்து
ஏற்றம் தரும் கலாசாலை
போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம்!!!
வாழ்க வளர்க வெல்க என்று போற்றுவோம்!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் கல்வி நிலையம்

## மகுட வாசகம்

ஒழுக்கம் உயிரினும் மேம்பப்படும்

## தூரநோக்கு – Our Vision

உன்னத கல்வியூட்டலில் உத்தம சமுதாயத்தை உருவாக்குதல்

## இலட்சிய நோக்கு – Our Mission

உயரிய கல்வியை பாதுகாப்பானதும் திறன் மிக்கதுமான சூழலில் சிறந்த ஆசிரிய வளத்தையும், பௌதீக வளத்தையும் பயன்படுத்தி மாணவர்களை மாறிவரும் உலகத்தின் தேவைக்கேற்ப சிறந்த தலைவர்களாக உருவாக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

**திரு. ச. குமார்**

கல்வி நிலைய இயக்குனர்

**திரு. மாரிமுத்து அகிலநாயகம்**

ஆசிரியர் - விஞ்ஞானம்

**திருமதி குமார் புவனேஸ்வரி**

ஆசிரியை - வர்த்தகம்

**திருமதி சிவபாலன் சுலோஜினி**

ஆசிரியை - தமிழ்

**திரு. சற்குருநாதன் சுரேசன்**

விரிவுரையாளார்- பொருளாதாரம்

**திரு. சுந்தரலிங்கம் லோகேஸ்வரன்**

ஆசிரியர் - தமிழ்

**திரு. குமார் பார்த்தீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழலையின் சிரிப்பினிலே உலகம் ஒளி பெறுகின்றது

முழு உலகமும் பிள்ளைச் செல்வத்தை பேரன்புடன் அரவணைக்கின்றது. மழலையின் சிரிப்பினிலே உலகம் ஒளி பெறுகின்றது. பிள்ளைகளை பெற்றோரின் பாதுகாப்பிற்கப்பால் சமுதாயத்தில் பிள்ளைகளின் சிறப்பான எதிர்காலத்திற்கு வித்தாக அமைவது ஆரம்பக் கல்வி ஆகும். இக் கைங்கரியங்களை 25 ஆண்டுகளாக றோயல் கல்வி நிலையம் சிறப்பான முறையில் செயற்படுத்தி வருகின்றமையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

**"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"** என்பதற்கிணங்க, தாய்மடி சுமந்த செல்வங்களை தம்மடி சுமந்து, கொஞ்சும் மழலைச் செல்வங்களின் விடியலுக்காக விழுதாக நின்று, கற்பவை கற்க நல்வழிகாட்டி நானிலம் போற்றி நிற்கும் றோயல் கல்வி நிலையத்தின் சாதனைகளை பாராட்டி, எதிர்காலத்தில் மேலும் பல சிறப்புக்களையும், கல்விமான்களையும் உருவாக்கிட கல்வி நிலையத்தின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் வாழ்த்தி எனது ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

இவ்வண்ணம்,

**சிவஸ்ரீ ஜெக. ஜெகதீஸ்வரக் குருக்கள்.**

பிரதம குரு, ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்

குமரபுரம், பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றல் சிறப்பும் பெறுபேற்றின் விருப்பும் கொண்ட கல்வி நிலையம்

களனி சூழ் கதிர்ச் சிறப்பும், காற்றில் பட்டுத் தெறிக்கும் ஆரணியப் புள்ளிசையும், அமிழ் தூறும் தமிழ்ச் செழிப்பும், தழைத்தோங்கி எழில் சேர்க்கும் கிளிநொச்சி மாநகர் அமர் கனகபுரத்தில் தண்ணொளி பரப்பும் வெண்ணிலவாய் வெள்ளிடை மலைதனில் ஒளிர் முத்தாய் ஐயைந்து ஆண்டுகள் ஈராய்க் கலையுடன் கல்வியும் கூடவே தமிழ்ப் பண்பாடும் வளர்த்து வரும் கல்வி நிலையமாம் றோயலின் உயர் நிலையும் வளர்ச்சிப் பண்பாடும் சொல்லிடமுடியா சிறப்பும் பெற்றது. யுத்தம் புடைசூழ் எம் நாட்டில் வளர்ந்த ஈரபத்து ஆண்டுகளின் பாதையில் தமிழர் இடர்நிலையில் நித்தம் அறப்பணி தனையும் தத்தம் பணியென ஏற்று துணைகரம் நீட்டி துயர் துடைத்து கல்வியோடு ஒழுக்கமும் இணைந்து உயர் வளர்ச்சி கண்ட இக்கல்வி நிலையத்தின் திட்டமிடல் சிறப்பு இயக்குநர் திரு. சண்முகநாதன் குமார் அவர்களின் அறப்பணி என்றால் அதற்கு ஈடு இணை இல்லை.

கற்றல்சிறப்பும் பெறுபேற்றின் விருப்பும் கொண்ட இந்நிலையத்தின் இருபத்தைந்து ஆண்டு நிறைவினில் ஆசிச்செய்தி பகிர்வதில் நான் பெருமகிழ்வெய்துகிறேன். விழுமியப் பண்புகளை சிரமேற்று விழுப்பமே ஒழுக்கமதாய்க் கொண்டு அறிவுத்திறன் மனப்பாங்கை வளர்த்து வெள்ளி விழாக் காணும் இக்கல்லூரியின் பொறுப்புற்ற இந்நிலைய ஆசான்களும் இறையருள் பொழியப் பெற்று, செல்வழி நல்வழி தொடர என உளமார்ந்த நல்லாசிகளை வழங்குவதில் பெருமகிழ்வெய்து கின்றேன்.

அருட்பணி

**R.C.X. நேசராசா**

புனித யாகப்பர் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed., B.A., PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882. ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.

தொலைபேசி :+94 21 3207584, +94 21 2280024
தொலைநகல் :+94 21 2221595, +94 21 2280024
கைபேசி :+94 77 6913244
மின்னஞ்சல் :shritharan08@hotmail.com
shritharanmp@gmail.com
இணையத்தளம் :www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed., B.A., PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Srilanka.

Tel. :+94 21 3207584, +94 21 2280024
Fax. :+94 21 2221595, +94 21 2280024
Mob. :+94 77 6913244
E.mail :shritharan08@hotmail.com
shritharanmp@gmail.com
Web :www.shritharan.com

**2015.09.04.**



# கிளிநொச்சியின் கல்விப் பாரம்பரியத்தில் ஓர் விழவெள்ளி

கிளிநொச்சி மாவட்டம் அதனுடைய வரலாற்றில் பல சவால்களை சந்தித்து இன்று அது கல்வி, பொருளாதாரம், கலை, இலக்கியம், விளையாட்டு என பல்வேறு துறைகளில் தனக்கென ஒரு தனித்துவத்தை உருவாக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றது. குளங்களும், கானகங்களும் வயல்களும் என விரியும் கிளிநொச்சியின் தோற்றம் ஒரு விவசாய பூமியாகவே விளங்கமுடியும் என எதிர்பார்ப்புக்கள் இருந்த போது அது கால மாற்றங்கள் படையெடுப்புக்கள், இடப்பெயர்வுகள், தனி மாவட்டம் நிர்வாக நிலைகள் காரணமாக கிளிநொச்சி தனக்கென ஒரு வடித்தை மாற்றங்களின் அடிப்படையில் பெற்றுள்ளது. இப்பொழுது அது வரலாற்றுத்தனித்துவமிக்க மண்ணாக விளங்குகின்றது.

கிளிநொச்சியின் வரலாற்றில் கல்வித்துறையில் பலதசாப்பதங்கள் கடந்த நிலையில் தனித்துவமான பாடசாலைகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெயர்களை குறிப்பிடும் அளவிற்கு ஒரு கல்விப்பாரம்பரியத்தை பெற்றுள்ளது. குரு சிஸ்ய பரம்பரைகளும் கூட இங்கே வளர்ந்து வந்திருக்கின்றது. பாடசாலைக்கல்விக்கு பக்க பலமாக அந்தக் கல்விக்கு நிகராக தனித்துவம் மிக்க கல்விச் சிந்தனை கொண்டவர்களால் தனியார் கல்வி நிறுவனங்களும் கிளிநொச்சியில் இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டு அவை மக்களின் பெருத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையையும் அடையாளத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன என்பது இந்த மாவட்டம் அறிந்த விடயம். ஒரு காலத்தில் மேலதிக கல்விக்காக இக்கட்டான சூழல்கள், பாதைகள், பயணங்கள் ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி படையெடுத்த கிளிநொச்சி மாணவர்கள் பின்னாளில் கிளிநொச்சி தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களின் கற்பித்தல், தரம் காரணமாக இந்த மாட்டவத்துக்குள்ளேயே மேலதிக கல்வியை பெறும் வாய்ப்பை பெற்றுள்ளனர். இதில் இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக தனியார் கல்வி நிலைய பணி செய்யும் றோயல் கல்வி நிலையத்தையும் அந்த தரம் மிக்க கல்விப்பாரம்பரியத்துள் அடக்குதல் மிகவும் பொருத்தமானது.

1990ல் ஆரம்பிக்கப்பட்ட றோயல் கல்வி நிலையம் குறிப்பாக நிர்வாகியும் ஆசிரியருமான திரு.ச.குமார் அவர்களின் கற்பித்தல் பெரும் ஆற்றல் அவரின் ஆரம்பகால ஆசிரியர் குழாமான விஞ்ஞான ஆசிரியர் அகிலன், தமிழ் ஆசிரியர் சுலோஜினி, ஆசிரியர் புவனா உள்ளிட்டவர்களின் குழு முயற்சி இன்றைக்கு பல்லாயிரம் மாணவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றியிருக்கின்றது. பல்துறை சிந்தனையின் ஊடாக ஒரு பாடசாலையின் செயற்பாடுகளுக்கு நிகரான பண்புகளை கொண்டிருந்ததன் மூலம் றோயல் கல்வி நிலையம் பாடசாலைக்கு அடுத்தபடியாக பெற்றார்களால் உச்சரிக்கப்படுகின்றது. க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கு கிளிநொச்சியில் இக்கல்வி நிலையம் ஒரு வரம் என்றே சொல்லலாம். குறிப்பாக திரு. குமார் அவர்களின் கணித பாடத்திற்கென்றே இக்கல்வி நிலையத்திற்கு படையெடுத்த மாணவர் பெருங்கூட்டத்தை நான் பார்த்திருக்கின்றேன். மிகவும் இக்கட்டான போர்ச்சூழல்கள் இடப்பெயர்வுகள் காலத்திலும் மாணவர்கள் பெற்றோர்களின் பலத்துடன் இந்த கல்வி நிலையும் அழியாமல் காக்கப்பட்டு வந்திருக்கின்றது.

இன்றைக்கு உயர்பதவிகளில் இருக்கின்ற பல துறைசார் வல்லுனர்கள் இந்தக்கல்வி நிலையத்தில் அடிப்படையை பெற்றிருக்கின்றார்கள் என்பது பெருமைக்குரிய விடயம்.

1994ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில். க.பொ.த. உயரத்தில் 4A சித்திகள் பெற்ற சாதனை முதன் முதல் நிலைநாட்டப்பட்ட போது அந்த மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள் றோயல் கல்வி நிலையத்தின் அசிரியர்கள் என்பது வரலாற்றுப் பெருமை அதேவேளை க.பொ.த.சாதாரண தரத்திலும் வருடாவருடம் மிக உயர் பெறுபேறுகள் பெறப்படுகின்றபோது சித்தி பெற்ற அந்த மாணவர்களை விசாரித்தபோது அவர்கள் இக்கல்வி நிலையத்தின் மாணவர்களாகவே அனேகமாக இருந்தார்கள். மாணவர்களை உயர்தர சித்தி எய்த வைப்பதில் இந்த மாவட்டத்தில் றோயல் கல்வி நிலையம் தன் முதல் தர பணியை ஆற்றி வருகின்றது. இத்தகைய ஒரு சாதனை பயணத்தை மேற்கொள்வதற்கு தன்னலமற்ற ஒரு ஆசிரியர் குழாம் இக்கல்வி நிலையத்திற்கு வாய்த்திருப்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2010 பரிசில் நாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் உரையாற்றுகையில்



2011 பரிசில் நாளில் தற்போதய வடமாகாண கல்வி,விளையாட்டு,பண்பாட்டு அலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராசா கலந்து கொண்ட நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் ஆரம்பம் முதல் இன்றுவரை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக தொடர்ந்து இங்கே கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் எனில் அதை பொன்னெழுத்துக்களால் பொறிக்கவே வேண்டும்.

கடந்த முறை இந்த கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா ஒன்றிற்கு வந்தபொழுது இதன் வளர்ச்சி அதன் சாதனை தடங்களை அறிந்து மிகவும் ஆச்சரியமும் பெருமையும் அடைந்தேன். இந்த கல்வி நிலையத்தின் ஆசிரியராக இருந்து போரின் போது மரணமடைந்த அமரர் ச.சசிசராஜ் நினைவாக ஒரு அரங்கையும் அமைத்து அதில் மாணவர்களின் வெற்றிகளுக்கு பரிசில்கள் வழங்கியதையும் மாணவர்களின் ஆற்றல்கள் கலைகள் அதில் அரங்கேற்றப் பட்டதையும் ஒரு நல்ல சிந்தனையாக நான் உணர்ந்தேன். ஒரு பரந்தவெளியை இந்த றோயல் கல்வி நிலையம் தன்னை நாடி வரும் மாணவர்களுக்கு உருவாக்கி கொடுத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. இன்றைக்கு வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப உலகத்திற்கு ஏற்ப இக்கல்வி நிலையமும் நவீனத்துவம் பெற்றிருக்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி பாரம்பரியத்தில் தன் பணியையும் பற்றுறுதியுடன் செய்யும் றோயல் கல்வி நிலையத்தின் நிர்வாகி ஆற்றல் மிக்க ஆசிரியர்குழாம், மற்றும் பணியாளர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**சி. சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த கல்விப் பாரம்பரியம் உள்ள கல்வி நிறுவனம்

சிறந்த கல்விப் பாரம்பரியம் உள்ள கல்வி நிறுவனமே "றோயல் கல்வி நிறுவனம் ஆகும். கிறிநொச்சியின் கரைச்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரிவில் உதயநகர் கிராமத்தில் 05.10.1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனம் தான் "றோயல் கல்வி நிறுவனம்" இப்பிரதேசத்தின் கல்வி பாரம்பரியத்தில் ஒரு புதிய முயற்சியாக இந்த ஆரம்பம் இருந்திருக்கிறது. யுத்த சூழ்நிலைகளால் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நேரங்களில் கூட வடபுல மக்கள் தமது கல்வியை தொடர்ந்து முன்னெடுத்து வந்திருக்கிறார்கள். அவர்களின் இந்த நம்பிக்கைக்கு தூண்டுகோலாக இந்த கல்வி நிறுவனம் இருந்திருக்கிறது.

கல்வி நிறுவனம் ஆரம்பிப்பதும் அதனை தொடர்ந்து வெற்றிகரமாக நடத்திவருவதும் சாதாரணமான விடயமல்ல வடபுலத்தில் இன்றுவரை எத்தனையோ கல்வி நிறுவனங்கள் மழைக்கு முளைவிடும் காளான்களாக முளைவிட்டு மறைந்த வரலாற்றில் கிளிநொச்சி மாவட்டத்தில் 1990களில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை வெற்றிகரமாக இயங்கிவரும் நிறுவனமாக இந்த நிறுவனம் விளங்குகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியில் இதன் பங்களிப்பு என்பது மிக முக்கியமானது குறிப்பாக கா.பொ.த.சாதாரண தரத்தில் இக்கல்வி நிறுவனத்தில் கல்வி கற்ற, தொடர்ந்து கற்கின்ற மாணவர்கள் கூடிய பெறுபேறுகளைப் பெறுவது இன்றுவரை இடம்பெற்று வருகின்றது. கிளிநொச்சியினுடைய கல்விப் பாரம்பரியம் உள்ளவர்களில் அநேகமானவர்கள் இந்த கல்வி நிறுவனத்தில் இருந்து கற்று வெளியேறியவர்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

கல்வி நிறுவனத்தினை இயக்கும் திரு ச.குமார் என்பவர் எமது செயலகத்தில் விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றுகிறார். இவரது துணைவியார் உபஅதிபராக பணியாற்றுகின்றார். இவர்கள் இருவரது கூட்டு முயற்சியே இந்தடி கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியாகும். எமது செயலகத்தில் விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றினாலும் சிறந்த ஒரு ஆசிரியராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் வாழும் மாணவர்களாலும், தற்போது அரச பதவிகளிலும், வேறு தொழில்களிலும் உள்ளவர்கள் இவரை "சேர்" என்று கௌரவமாக அழைப்பதை நான் கண்டிருக்கிறேன். சிறந்த கல்விப் பாரம்பரியம் உள்ள இவர்களால் முன்னெடுக்கப்படும் இந்த நிறுவனம் கல்வியை வெறுமனே தொழிலாக கொண்டிருக்காமல் அதனை ஒரு சேவையாகவும், ஒழுங்காகவும் மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை எண்ணி பெருமை அடைகின்றேன்.

ஏனைய கல்வி நிறுவனங்களைப் போல் அல்லாமல் இந்த கல்வி நிறுவனம் கிளிநொச்சி மாவட்டத்திலே சிறந்த கட்டுப்பாடும் நல்ல ஒழுக்க நெறிகளை இறுக்கமாக கடைப்பிடிக்கின்ற நிறுவனமாக விளங்குவது போற்றுதற்குரியது. மாணவர் கல்வி என்பது வெறுமனே அறிவின் பாற்பட்டது மட்டுமல்லாது நல்ல ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதுமாகும் என்பதை இந்த கல்வி நிறுவனத்தின் நிர்வாகி திரு. ச.குமார் அவர்கள் ஆற்றிவருவதையிட்டு மகிழ்ச்சி யடைகின்றேன்.

மேலும் இன்று தனது இருபத்தைந்தாவது வெள்ளிவிழாவினை கொண்டாடும் இந்த நிறுவனத்திற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன். கிளிநொச்சியின் கல்விப் பாரம்பரியம் இவர்களில் இருந்து இன்னும் துளிர்க்கட்டும்.

**திரு. கோ. நாகேஸ்வரன்**
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகவரியைத் தொலைக்காமல் இன்றும் வீறுநடைபோடும் றோயல்

இருபத்தைந்து அகவையை முடித்துக் கொண்டு வெள்ளி விழா கொண்டாடும் கிளிநொச்சி றோயல் கல்வி நிலைய வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துரை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததை நினைந்து பேருவகை அடைகின்றேன். இத் தருணத்தில் இருபத்தைந்து வருடங்களிற்கு முன்பு றோயல் கல்வி நிலையத்தை விதைத்த - தாபித்த நிலைய பணிப்பாளர் திரு.ச.குமார் அவர்களை பாராட்டி வாழ்த்துவது மிகப் பொருத்தமாக அமைகின்றது. அன்றிலிருந்து படிப்படியாக வளர்ந்து இன்று விருட்சமாக காட்சியளிக்கும். இந்நிலையம் இடைக்காலத்தில் அனுபவித்த இன்னல்களையும் அல்லல்களையும் நினைவு கூருகின்றேன். யுத்த காலத்திலே பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து முகம் குப்புற விழுந்திருந்தாலும் தன் முகவரியைத் தொலைக்காமல் இன்றும் வீறு நடை போட்டுக் கொண்டு இருக்கும் றோயல் கல்வி நிலையம் இனிமேல் என்ன இடையூறு வந்தாலும் மங்காது ஒளி வீசும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

பூமிப் பந்தின் வரைபடத்தில் இன்றும் கிளிநொச்சி என்ற இடம் இடம்பெறுகின்றதென்றால் அதற்கு குறிப்பிட்ட சில அரச பாடசாலைகளும் றோயல் கல்வி நிலையம் போன்ற தனியார் கல்வி நிலையங்களும் மிக முக்கிய காரணிகள் என்பது யாவரும் அறிந்ததே.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தலுக்கு மேலாக இணை பாட விதானங்களிலும் கூடிய கவனம் செலுத்தி பூரண ஆளுமை கொண்ட மாணவர்களை உருவாக்கி அதன் மூலம் நாட்டிற்கு உகந்த நல்ல பிரசைகளை வழங்குவதில் றோயல் கல்வி நிலையம் முன்னிற்பதைக் கண்டு நான் புளகாங்கிதம் அடைகின்றேன்.

வருடா வருடம் பாடசாலைகளுடன் இணைந்து சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளை பெற்றுக் கொடுப்பதில் முனைப்பாகச் செயற்படும் இந் நிறுவனத்தைப் பாராட்டாமல் விட்டால் அது ஒரு பாவச் செயலாகக் கருதப்படும் என்பதை உணரக் கூடியதாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாப நோக்கம் மட்டும் இருந்திருந்தால் என்றோ இந் நிறுவனம் வீழ்ச்சி அடைந்திருக்கும். ஆனால் உண்மையான சேவை நோக்கம் இருந்ததால் தான் இன்றைய இந்த உச்ச நிலை என்பதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை.

இப்படியான ஒரு நிறுவனம் மென்மேலும் வளர்வதற்கு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அறிஞர்கள், புத்திசீவிகள், பிரமுகர்கள் அனைவரும் தங்களது ஒத்துழைப்புக்களையும் கருத்துக் களையும் வழங்கி திடமாக்குவதில் கூடிய கவனம் செலுத்துவார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றேன்.

வாழ்க நிலையம்!! வளர்க மாணவர்கள்!!

மகிழ்வுடன்,

**மா. தேவேந்திரன்**

மாகாணக் கல்வி அமைச்சு,
வடக்கு மாகாணம்,
செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறப்பான தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் நிறுவனம்

இன்றைய கால கட்டத்திலே மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தனியார் கல்வி நிலையங்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதொன்றாக விளங்கி வருவதைக் காண்கின்றோம். அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களில் தலை சிறந்த கல்வி நிலையமாக றோயல் கல்வி நிலையம் விளங்குகின்றது என்று கூறினால் அது மிகையாகாது. நகரின் மத்தியில் அமைந்துள்ள இக்கல்வி நிலையத்தில் பல்வேறு பாடசாலைகளின் மாணவர்கள் கல்வி கற்பதும் காலத்துக்குக் காலம் முன்னணிப் பெறுபேறுகளைப் பெறுவதும் கண்கூடு. அந்த வகையில் எனது பிள்ளைகளும் இக்கல்வி நிலையத்தில் பயின்று முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றார்கள் என்பதை இச்சந்தர்ப்பத்திலே மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த 25 வருட காலப்பகுதியில் றோயல் கல்வி நிலையம் ஆற்றிய கல்விப்பணியை பெற்றோர்கள் ஒருபோதும் மறந்து விடவில்லை. யுத்தம்.... இடப்பெயர்வு.... மீள்குடியமர்வு..... என்ற நெருக்கடியான காலகட்டங்களில் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து சளைக்காமல் இக் கல்வி நிலையம் ஆற்றிய பணி காலத்தால் அழியாதது. கல்வி மாத்திரமன்றி மாணவர்களின் ஒழுக்கம் மாணவர்க்கான பாதுகாப்பு என்பன இக்கல்வி நிலையத்தில் சிறப்பாகப் பேணப்படுவதால் பெற்றோர்கள் இக்கல்வி நிலையத்தினை விருப்போடு தேர்ந்தெடுக்கின்றார்கள். பாடசாலை கலைத்திட்டத்திற்கு அமைவான கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு நடைபெறுதல், இணைபாடவிதான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவமளித்தல், வருடந்தோறும் நடைபெறும் பரிசளிப்பு விழாக்களின் மூலம் மாணவர்க்கு சிறந்த ஊக்குவிப்பை வழங்குதல் என்பன இக்கல்வி நிலையத்தின் சிறப்பம்சமாகும்.

றோயல் கல்வி நிலையத்தின் நிர்வாகி திரு. ச. குமார் அவர்களின் சிறப்பான தலைமைத்துவத்தின் கீழ் அவரது துணைவியார் திருமதி பு. குமார் அவர்களின் பூரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைப்போடும் வினைத்திறன் மிக்க ஆசிரியர்களின் கூட்டு வலுவோடும் இக்கல்வி நிலைய மானது மென்மேலும் பல சாதனைகளை நிலைநாட்ட எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சி நிற்கின்றேன். வெள்ளிவிழா நிகழ்வுகளும் மலர் வெளியீடும் சிறப்புடன் நிறைவேற வாழ்த்துகின்றேன்.

**வாழ்க! றோயல் கல்வி நிலையம்!**

**வளர்க! அதன் புகழ்.**

**திருமதி பிறேமா மதுரநாயகம்**

உதவிக் கல்விப் பணிப்பாளர்,

வலயக்கல்வி அலுவலகம்

கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின்றேல் வாழ்வேது

" எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"

என்ற திருவள்ளுவரின்வாக்கிற்படி 25 வருடங்களாக மாணவ மாணவிகளுக்கு கல்வி அறிவு புரிகிறது றோயல் கல்வி நிலையமாகும். பிள்ளைகளை ஊக்குவித்து கல்வியை மேலோங்கிய நிலைக்கு கொண்டு வந்துள்ளது. இதற்கு ஏற்றவாறு ஒரு வெளியீட்டை பிரசுரிக்க இதன் ஸ்தாபகர் முழு முயற்சி செய்து வருவதை நன்குணர்ந்து சில வரிகளை சமர்ப்பித்து ஆசி கூறுவதில் மட்டற்ற உவகையும் பெருமையும் அடைகின்றேன். எனது 65 வருட கால இக்கல்வித் துறையில் உள்ள அனுபவத்தை வைத்து அறிவுரை வழங்குகின்றேன்.

றோயல் கல்வி நிலையம் கிளிநொச்சியில் கனகபுரம் என்னும் கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. அடியேனுடைய காலம் சென்ற அண்ணன் திரு. கலொக் சண்முகநாதனின் உந்து சக்தியுடன் அவரின் மகனான திரு. குமாரினதும் அவரது பாரியாரான திருமதி புவனேஸ்வரி குமாரினதும் அர்ப்பணிப்பால் நெருக்கடியான சூழ்நிலையில் ஸ்தாபிக்கப்பட்ட கல்வி நிலையம் பெயருக்கு ஏற்றவாறு ஒரு கலங்கரை விளக்காக பல துறைகளில் மாணவச் செல்வங்களுக்கு வழிகாட்டியாக வியக்கத்தக்க முறையில் செயற்பட்டு வருகின்றது. பட்டதாரிகளாக, வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, ஆசிரியர்களாக, கணக்காளர்களாக உருவாக்கிய பெருமை இக்கல்வி நிலைய ஆசான்களுக்கும் ஸ்தாபகருக்குமே சாரும்.

றோயல் கல்விக்கூடம் தனில் கல்வி கற்கும் அன்பான மாணவச் செல்வங்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று சிறந்த தகைமையும் உள்ளவர்களாக சிறந்த தலைமைத்துவப் பண்புகளோடு வாழ இறையாசி வேண்டி நிற்கின்றேன். செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். எனவே மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் அழியாச் செல்வமான கல்விச் செல்வத்தை ஆசையோடு கற்க வேண்டும். "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது ஆன்றோர் வாக்கு" கல்விச் செல்வமானது கள்வரால் கொள்ளையிட முடியாது. வெந்தணலால் வேக வைக்க முடியாது. ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத்தினால் கூட அடித்துச் செல்ல முடியாது. இன்றைய எலகின் விஞ்ஞான வளர்ச்சிப் போக்கில் நீங்கள் அனைவரும் கட்டாயமாகக் கல்வி கற்க வேண்டும். கல்வி இன்றேல் வாழ்வேது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டிய காலமதில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

"கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதவர்" என்பது பொய்யாமொழி வாக்காகும். இன்றைய உலகில் கற்றவர்களே அதிகம் மதிக்கப்படுகின்றார்கள். கல்லாதவர்கள் அதிகம் வெறுக்கப்படுகின்றனர். மதங்களை எடுத்துக் கொண்டால் அவை கூட கல்வியில் சிறப்புடையவர் ஆகுங்கள் என்றுதான் கூறுகின்றன. இவ்வாறே பல நீதிப் பாடல்களும் அறநூல்களும் எடுத்து இயம்புகின்றன. கல்வி என்பது மாணவச் செல்வங்களாகிய உங்கள் வாழ்வில் முன்னுரிமை பெற வேண்டும். ஏனெனில் கல்விக்கு வரையறை கிடையாது. இறக்கும் வரைக்கும் கல்வியைக் கற்க முடியும். உதாரணமாக டாக்டர் அப்துல் கலாம் அவர்களை நோக்கின் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கும் வேளையில் உயிர் துறந்தார். எனவே இதன் மூலம் கல்விக்கொரு புத்துயிர்ப்பு வழங்கிய ஒரு மேதையாக இவரைக் கொள்ளலாம். இன்றைய நவீன உலகில் மாணவர்கள் மத்தியில் கலாசார சீர்கேடுகள் துஷ்பிரயோகம், போதைவஸ்துக்கு அடிமையாகுதல், பெற்றோர்களுக்கு கீழ்ப்படியாமை, குருவை மதியாமை இவ்வாறான தீய பழக்கங்களை மறந்து நல்ல பிரஜைகளாகத் திகழ கல்வி அறிவு தேவை என்பதை உணர்ந்து சிறந்த சமுகத்தைக் கட்டியெழுப்ப மாணவர்கள் அனைவரும் பாடுபடல் வேண்டும். புத்தகப் படிப்புடன் நில்லாது விளையாட்டுத்துறை, கலைத்துறை என்பவற்றிலும் முன்னேற வேண்டும்.

"வாழ்க றோயல் கல்வி நிலையம் வளர்க மாணவர் கல்வி"

**திரு. க. கு. விசுவநாதன்**
சமாதான நீதவான்
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. றோயல் கல்வி நிலையத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்

02. நெஞ்சமதில் நிலைத்து நிற்கும் மாமனிதர்

03. கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செய்கின்றோம்.

04. வாழ்வியலில் சமயம்

05. வளங்கொழிக்கு கிளிநொச்சி

06. கனகபுரம் கிராமமும் கல்வி நிலையமும்

07. கிளிநொச்சியின் கல்வி நிலை

08. "றோயல்" கிளிநொச்சியின் கல்விக்கான ஒரு அடையாளம்

09. இந்திரனை அழைத்து பன்னீர் தூவ ஆணையிடும் கவிஞனின் பரவசம்

10. கிளிநொச்சியின் சுற்றுலாத்துறை மையங்கள்

11. இன்றைய விஞ்ஞானமும் இந்துக்களின் மெய்ஞ்ஞானமும்

12. தமிழர் வாழ தமிழ் போதுமா?

13. பொன் விகிதமும் பொன் செவ்வகமும்

14. ஆங்கில மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்

15. வர்த்தகத்துறை கல்வியும் தொழில் வாய்ப்பும்.

16. Influence of Health in education

17. பெரு நகரங்களின் மீதான பாடல்

18. உயிரை கையில் வைத்திருப்பவர் யார்?

19. எங்களுக்குள் றோயல் என்றும்........

20. விந்தைமிகு விஞ்ஞான வளர்ச்சியும் வலைத்தளங்களும்

21. மராமா? மனிதனா? உயர்திணை

22. விஞ்ஞானம் தந்த மனித வாழ்வு

23. கணிதத்தின் வளர்ச்சியும் அதில் தமிழரின் பங்கும்

24. இலக்கை நோக்கிய பயணம்

25. இன்றைய உலகில் மாணவர்களின் பங்கு

26. இலங்கை நிர்வாக சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. COSMETIC DENISTRY

28. காலத்தால் அழியாத மேதை அப்துல்கலாம்

29. இந்து சமயத்தின் மர வழிபாடு

30. உணவும் உடலும்

31. மருத்துவத்தின் போக்கு

32. நனோ தொழில்நுட்பம்

33. காலங்களின் அரவணைப்பு

34. கல்வி நவீனமயப்படுத்தலின் அவசியமும் அவசரமும்

35. The Importance of the English

36. வாய்ப்புற்று நோய்க்கான புதிய அணுகுமுறை

37. ஒரு கிராமத்து மாணவனின் முதல் நகரத்து பயணம்

38. சிறுமைப்படும் சிறுவர்கள்

39. அறிவியல் வளர்ச்சியினால் சமூகத்தில் ஏற்பட்ட தாக்கம்

40. Like us on face book

41. தாலாட்டுப்பாடல்

42. சித்திரக்கலையும் வாழ்வியலும்

43. இசைக்கலையின் சங்கமம்

44. நடனக்கலையின் வெளிப்பாடு

45. ஆடற்கலை, நாட்டியக்கலை

46. தளை நீக்கத்திற்கான அரசாங்க ஆற்றுகைகள்

47. நல்ல நட்பும் நல் வாழ்வும்

48. பிறவிப்பயன்

49. Leadership

50. கிளிநொச்சியின் விளையாட்டின் பதிவுகள்

51. ஔவை தரு முகிலி - சிறுகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் கல்வி நிலையத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்



திரு. ச. குமார்
இயக்குனர்
றோயல் கல்வி நிலையம்
கிளிநொச்சி.

**1988**ம் ஆண்டு பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை விடுதியில், க.பொ.த உயர்தரக் கல்வியை படித்துவிட்டு, விளையாட்டுத் துறையில் அதிக ஆர்வத்தோடு ஈடுபட்டுக் கொண்டிருந்தேன் அக்காலப்பகுதியில் கணித பாடத்தில் எனக்கிருந்த ஆற்றலையும் திறமையையும் அறிந்த எனது சக நண்பர்களும், அவர்களது சகோதரர்களும் என்னிடம் கணித பாடத்தை விரும்பிக் கற்றார்கள் பின்னர் இவர்களோடு எனது சகோதரர்களும் இணைந்து கொண்டார்கள், மிகவும் விருப்புடன் கற்ற இவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுச் சித்தியடைந்தார்கள்.

இதன் பின்னர் "எல்லாப்பாடங்களும் கற்பிக்கப்படவேண்டும்" என்ற பல பெற்றோர்களின் வேண்டுதல்களுக்கு இணங்க, ஆங்கில பாடத்தை எனது தந்தையார் அமரர் சீ. எச்.எஸ் நாதன் அவர்களும் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை கணக்காளர்) விஞ்ஞான பாடத்தை ஆசிரியர் கிருஷ்ணகுமார் அவர்களும், தமிழ், சைவசமயம் ஆகிய பாடங்களை ஆசிரியர் சிவஞானம் அவர்களும் கற்பித்தற் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். சிறந்த முறையில் கல்விச் செயற்பாடுகள் நடைபெற்றது. இதனால் உமையாள்புரம், பரந்தன், முரசுமோட்டை மட்டுமல்லாமல் கிளிநொச்சியில் இருந்தும் மாணவர்கள் வருகை தரத்தொடங்கினர். மாணவர்களின் ஒழுக்கம், மற்றும் கல்விச் செயற்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பை எனது மூத்த சகோதரி உஷாமேரியோசப் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

1990 இல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக பரந்தனில் இருந்து இடம்பெயர வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் பின்னர் டிப்போ வீதி உதயநகர் மேற்கில், எனது மாணவர்களின் பெற்றோர்களின் ஒருவரான திரு. பாலசிங்கம் குடும்பத்தவர்களின் முழு ஒத்துழைப்புடன் அவர்களின் உறவினரின் காணியில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ம் திகதி எமது றோயல் கல்விநிலையம் ஆரம்பிக்கப்பட்டது. கணித பாடத்தை நானும், விஞ்ஞான பாடத்தை இரத்தினம் சதாதனந்தனும், தமிழ்பாடத்தை பாலசிங்கம் பாலகுமாரியும், சமய பாடத்தை பாலசிங்கம் வசந்தியும், சமூகக்கல்வியும் வரலாறும் பாடத்தை S.E.R



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதுபதியும் கற்பித்து வந்தோம். இக்காலப் பகுதியின் இறுதியில் மாரிமுத்து அகிலநாயகம் விஞ்ஞான பாடத்திற்காகவும் சுலோஜினி சண்முகநாதன் தமிழ் பாடத்திற்காகவும் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள் தொடர்ந்து.

1991இன் ஆரம்பத்தில் ஆங்கில பாடத்தை கற்பிப்பதற்காக எனது தந்தையாரான சீ.எச்.எஸ் நாதன் மற்றும் சிவனேசன் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த செயற்பாட்டினால் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது இக்கால இறுதிப்பகுதியில் க.பொ.த உயர்தர வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டன. இதில் கிருஷ்ணசாமி நந்தினி கணக்கியல் பொருளியல் பாடங்களையும். சண்முகராசா கௌசலா வர்த்தக பாடத்தையும் கற்பித்த பொழுது கிறிஸ்ரிறூபன். ஸ்ரீஞானேஸ்வரன். சத்தியானந்தன் போன்ற மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களினதும் எண்ணிக்கை அதிகரிக்கவே 1992இல் கலைப் பிரிவுப் பாடங்களும் ஆரம்பிக்கப்பட்டன. ஆசிரியர் சிவஞானம் இந்து நாகரீகம். இந்து சமயம் ஆகிய பாடங்களையும் திரு. ஸ்ரீசெல்வராஜா அளவையியற் பாடத்தையும். ஆசிரியர் சுலோஜினி தமிழ்ப் பாடத்தையும் கற்பித்தார்கள். அத்துடன் திரு. சதானந்தன். மற்றும் திரு. பத்மநாதன் ஆகியோர் கணக்கியல் பாடத்தையும் திரு. கிறிஸ்ரிறூபன் பொருளியல். திரு. சத்தியானந்தன் வர்த்தக பாடத்தையும் கற்பித்தார்கள். இக்காலப் பகுதியில் கல்வி நிலைய வளர்ச்சி உயர்ந்து காணப்பட்டது.

1993இல் க.பொ.த. சாதாரணதரப் பெறுபேறு மிகவும் உயர்ந்த நிலையில் காணப்பட்டது. உயர் பெறுபேற்றைப் பெற்றவர்களில் இருவர் வைத்தியர்களாகவும். இருவர் ஆசிரியர்களாகவும் தற்போது பணி யாற்றுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெரோம் டேரியஸ் (வைத்தியர்). கனகேந்திரன் யாழினி (வைத்தியர்). சிற்றம்பலம் வர்மன் (ஆசிரியர்). இரத்தினம் சிவானந்தி (ஆசிரியர்)

1994 இல் க.பொ.த உயர்தரப் பெறுபேறு ஒரு சாதனை மிக்க பெறுபேறாக அமைந்தது பரமசாமி ஜெயராசா வர்த்தகப்பிரிவில் நான்கு பாடங்களிலும் அதிவிசேடசித்தி (4A) பெற்றார் அத்துடன் யோகநாதன் 3AB, யசோதா 2A,2B ஜீவா 2A,2B என எட்டு மாணவர்கள் வர்த்தகப் பிரிவிலும் பரமசாமி செல்வராணி 2A,2B, குறிஞ்சி A, 2B,C என கலைப்பிரிவில் ஐந்து மாணவர்களும் பல்கலைகழக அனுமதியைப் பெற்றிருந்தார்கள். இது எமது கல்வி நிலையத்தின் வளர்ச்சியையும் எழுச்சியையும் காட்டுவதாய் அமைகின்றது.

1996 யூலை. மீண்டும் ஓர் இடப் பெயர்வை கிளிநொச்சிமாவட்ட மக்கள் சந்திக்க நேரிட்டது அப்போது நாம் ஸ்கந்தபுரம் சென்று இத்தியடி அம்மன் ஆலய அருகாமையில் "மோகனா" அவர்களின் காணியில் குடியிருந்தோம் அவ்வேளை மாணவர்களின் கல்வி நலன் கருதி தரம் 6-11 வரையான மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு வகுப்புக்களை ஆரம்பித்து கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். என்னுடன் இணைந்து எனது சகோதரனான சசிசராஜ் கணித பாடத்தைக் கற்பித்தார். ஆசிரியர் அகிலனுடன் இணைந்து ஆசிரியர் விமலராஜ் விஞ்ஞான பாடத்தையும், திருமதி சுலோஜினியுடன் இணைந்து திரு வே.லவன் தமிழ் பாடத்தையும், திரு. விக்கி, திரு. தேவராஜா ஆகியோர் வரலாற்றுப் பாடத்தையும், திரு. சீ. எச் நாதனுடன் இணைந்து துரைராஜா ஆங்கில பாடத்தையும் கற்பிக்கின்ற காலப் பகுதியில் கோணாவில் பிரதேசத்திலும் அதிபர் திரவியம் அவர்களின் முழுமுயற்சியின் பயனாக "றோயல்" என்ற பெயரில் கல்வி நிலையத்தை ஆரம்பித்தோம். 1996 இடப்பெயர்வு காரணமாக க.பொ.த. சாதாரணதரப் பெறுபேற்றில் மந்தநிலை காணப்பட்டாலும் 1997, 1998 இல் படிப்படியாக வளர்ச்சி பெற்று 1999ம் ஆண்டு மூன்று மாணவர் 10 பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்று எமது கல்வி நிலையத்திற்குப் பெருமை சேர்த்தார்கள், இராஜேந்திரம் அகிலன் 10D (வைத்தியர்) கணேசராஜா பிரகாஸ் 10D, (பொறியியலாளர்) பாலச்சந்திரன் ரஜதீபன் 10D (பொறியியலாளர்) இதய சிவதாஸ் இதயரூபன் 9DC (வைத்தியர்) என்ற வகையில் பெறுபேற்றைப் பெற்றுக் கல்வியியலாளர்களின் பாராட்டைப் பெற்றார்கள்.

இவ்வாண்டில் தான் எனது தந்தையும், ஆங்கில ஆசானுமாக இருந்த சீ. எச். எஸ் நாதன் அவர்கள் மாரடைப்பால் மரணம் அடைந்தார். தொடர்ந்து 2001ம் ஆண்டு திரும்பவும் கிளிநொச்சிக்கு வந்தபோது கனகபுரம் 2ம் பண்ணை கமலாக்காவின் காணியில் கல்வி நிலையத்தை அமைத்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்தோம். 2002ம் ஆண்டு காலப் பகுதியிலே பகல் நேர வகுப்பில் (O/L Day Class) கல்வி கற்ற மாணவன் பாலசுப்பிரமணியம் சுதர்சன் 10 பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்று (10A) பாடசாலைச் சமூகத்தை விழிப்படையச் செய்தான். இவ்வாண்டில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களின் முதன்மைப் பெறுபேற்றை எமது கல்வி நிலைய மாணவர்களான சி. உமைசொரூபி (9A, C), சி. எழில்வேள் (8A, 2C) பெறுபேற்றைப் பெற்றார்கள். இவ்விருவரும் தற்போது வைத்தியர்களாகப் பணியாற்றுகின்றார்கள்.

தொடர்ந்து 2003ம் ஆண்டிலும் மதுரநாயகம் சிந்துஜா (10A) (மருத்துவத் துறை இறுதியாண்டு மாணவி), வி. அபிரா (9A, B) (வைத்தியர்) மற்றும் சி. மயூரன் (9A, B), இ.நிஷாந்தன் (8A, B, C), ஆகியோரும் உயர்ந்த பெறுபேற்றைப் பெற்று எமது கல்வி நிலையத்திற்கு பெருமை சேர்த்தார்கள், 2004இல் ப. கோகிலன் (9A, B), தி. அர்ச்சனா (8A, B, C), ச. சுஜீபன் (7A, 2B, C), கு. டனுஜா (5A, 3B, C) செ. கிருஷாந்தன் (4A, 4B, C) ஆகியோர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்கள். இவர்கள் ஐவரும் தம் தாய்நாட்டிலே தற்போது வைத்தியர்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். தொடர்ந்து 2005 இல் எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்ற அமிர்தலிங்கம் அனுருத்தன், பாலச்சந்திரன் தனதீபன், மகேஸ்வரன் ரஜிதன் ஆகியோர் 10 பாடங்களிலும் A தரச் சித்தியைப் பெற்றார்கள்.

2006ல் தவராசா தவக்குமார் (10A) லோகநாதன் நேருஜா, லோநாதன் நிரோஜா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயபாலன் சுவேந்தி, திருச்செல்வம் துளசிகன் ஆகிய ஐவரும் 9A,B மற்றும் விக்கினேஸ் வரன் ஆரபி 8A, 2B ஆகிய பெறுபேறுகளைப் பெற்று பெருமை சேர்த்தார்கள் 2007ம் ஆண்டு மேலும் வலுப்பெற்று மூன்று மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றார்கள். எட்டு மாணவர்கள் 9 பாடங்களில் அதிவிசேட சித்தியையும் பெற்றார்கள் கதிர்காமநாதன் மகிந்தன் 10A (பொறியியற்பீடம்) மோகன்ராஜ் அச்சுதன் 10A (மருத்துவபீடம்) சிவானந்தம் ரஞ்சீவ் 10A, ஆறுமுகம் அனுசாந் 9A,B (இவர்கள் இருவரும் யுத்த அனர்த்தத்தில் காணாமற் போனோர்) பாலகுமாரன் மகிழினி 9A,B அமிர்தலிங்கம் சாரங்கி 9A,B திருச்செல்வம் சுபாங்கி 9A,B கார்த்திகா 9AB இவ்விதமாக எமது கல்வி நிலையம் பல சாதனைகளை நிலைநாட்டி கிளிநொச்சி மாவட்டத்தில் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பெற்றுக்கொண்டது.

2008ல் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வினால் மக்கள் எல்லோரும் மேற்குநோக்கி இடம் பெயர்ந்தார்கள் அப்போது நாம் தர்மபுரம் பிரதேசத்தில் நிலை கொண்டோம். தர்மபுரம் கிராம அலுவலராக இருந்த திரு. சந்திரன் அவர்களது காணியில் கல்வி நிலையத்தை அமைத்தோம். அக்காலப் பகுதியில் கல்விகற்ற அமிர்தலிங்கம் ஆருத்திரன் 9A (பொறியியற்றுறை) சந்திரசேகரம் தேவப்பிரியன் 9A (மருத்துவத்துறை), மேரிஜோசப் அருள்சில்வெஸ்ரன் 8A, B (மருத்துவத்துறை) சிறந்த பெறுபேற்றைப் பெற்றார்கள். அத்தோடு 2009 ஜனவரி மாதம் முதல் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத அளவுக்கு இராணுவ நடவடிக்கை உக்கிரம் அடைந்தது. போரின் உக்கிரமான இக்கால கட்டத்தில் தான் எனது வலது கரமாக இயங்கி வந்த எனது அன்புச் சகோதரன் சசீராஜ் (சசி சேர்) பிரமந்தனாறுப் பாடசாலையில் குண்டு வெடிப்பில் இலக்காகி 2009 பெப்ரவரி 9ம் திகதி மரண மடைந்தார். இத்துன்ப துயரங்களை எல்லாம் தாங்கி, முகாம் வாழ்க்கையும் அனுபவித்து பல மறக்கமுடியாத வடுக்களைச் சுமந்து ஒரு ஆண்டாக 2009 ஐ கழித்தோம், ஆயினும் முகாம் வாழ்க்கையில் கல்வியை மறந்து போகும் நிலையில் இருந்த 250 வரையான மாணவர்களுக்கு இலவசமாக கணித பாடத்தைக் கற்பித்து வந்தேன்.

2010 இல் மீண்டும் கிளிநொச்சிக்கு வந்து கனகபுரத்தில் உள்ள எமது காணியில் (2ம் பண்ணை, கனகபுரம்) சகல வசதிகளுடனும் கூடிய கல்வி நிலையத்தை ஆம்பித்தேன். சிதறிக்கப்பட்டிருந்த ஆசிரியர் குழாத்தை ஒன்றிணைத்து தமிழ் சி. சுலோஜினி, ந. கிருஷ்ணா விஞ்ஞானம் மா. அகிலன், வே.பேரானந்த சிவம், ச. விமல்ராஜ், ஆங்கிலம் இ. சுதாபரன் P. மதன், வரலாறு கி. மதன், நா. ஜெகதீஸ், புவியியல் கு. புவனா ஆகியோரும் கணித பாடத்தை நானும் எனது மாணவனான பா. சசிபாபுவும் கற்பித்தோம், அதே ஆண்டில் சந்திரசேகரம் பானுப்பிரியன் 9A, மதுரநாயகம் அஜித்ஜேரோம் 8A,B, இராஜேந்திரன் தர்சினி 7A,B, குமார் கீர்த்தனன் 6A,3B இவர்கள் பொறியியல் மற்றும் மருத்துவத்துறை மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து 2011இல் இராமமூர்த்தி ஜனத் 8AB, மகாதேவா நியோகிதன் 8AC, சிவஞானம் பிரணவன் 7A,2B, விக்கினேஸ்வரன் டினுசியன் 7ABC என சிறந்த பெறுபேறு களைப் பெற்றனர்.

2012 இல் சிவபாலன் கௌதமன் 9A, சிம்மேந்திரன் சஜீபா 9A. சண்முகராசா. கோடீஸ்வரன் 8AC பெறுபேற்றைப் பெற்றனர் அடுத்து 2013 இல் சிம்மேந்திரன் வினிபா 9A. நல்லைநாதன் நதுர்ஷா 8AB சந்திரசேகரன் சோபனப்பிரியன் 8AC என உயர் பெறுபேறு களைப் பெற்றிருந்தனர்.

2014இல் மூன்று மாணவர்கள் அனைத் துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் பதிவாக்கியிருந்தனர். ஜெயசேகரம் சத்திய தரண்யா 9A, குலதாசன் கிருத்திகா 9A, நவரத்தினராசா கௌசிகன் 9A, புருசோத்தமன் புருகாசினி 8AB, குமாரகுலசிங்கம் தர்மிளா 8AB. நந்தகுமார் மிதுசிகா 8A,B என பெறுபேறுகளைப் பெற்றிருந்தார்கள். இவ் வாண்டில் கணித பாடத்தில் 43 மாணவர்கள் அதிவிசேட சித்தியைப் (A) பெற்றார்கள் இவ்விதமாக எமது கல்விநிலைய மாணவர்கள் கிளிநொச்சி மாட்டத்திலேயே முதல்நிலைப் பெறுபேறுகளைப் பெறுவதற்கு எமது கல்வி நிலைய ஒழுக்க விழுமியங்களும். கட்டுப்பாடு களும் மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய கற்பித்தலுமே என்று கூறிக்கொள்வதில் நான் பெருமிதமும் மட்டமற்ற மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

மேலும் கல்வித்துறையோடு கலைத் துறையும் வளரவேண்டும் என்ற நோக்கோடு வருடாவருடம் நடாத்தப்படுகின்ற பரிசளிப்பு விழா வின் போது கலை நிகழ்வுகள் பயிற்றுவிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டு வருகின்றது. இதற்காக அமரர் சசிசராஜ் அரங்கம் என்னும் அரங்கத்தை அவர் நினைவாக நிறுவி அரங்கத்தில் நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டு வருகின்றது. கல்வியுடன் கூடிய விளையாட்டுத்துறையையும் மேம்படுத்துதற்காக "றோயல் இளைஞர் கழகம்" ஆரம்பிக்கப்பட்டு கரம். சதுரங்கம். பட்மின்ரன். மேசைபந்து போன்ற விளையாட்டுக்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு போட்டிகளும் நடாத்தப் படுகின்றன. குறிப்பாக மேசைப்பந்து பயிற்சிக்காக மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் என்னிடத்தில் பயிற்சி பெறுகின்ற சிவஞானம் கௌதமன். யுவராஜ் அபிசன். ரகு திலக்சன். டானியல் சாருபன். தினேஸ் கோபிலூயன். தரணியா. பாலகிருஷ்ணன் தனுசிகா ஆகியோர் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் - நிலையிலுள்ள வீர வீராங்கனைகளா வர். க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் அடைவு மட்டம் குறைந்த மாணவர்களுக்கு மிகவும் சிறப்பாக பகல் முழுநேர வகுப்பு (O/L Day class) கற்பிக் கப்பட்டு உயர்தர வகுப்பு கற்பதற்கு உயர்த்தப் படுகின்றார்கள். க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கியதாக வினாவிடை வகுப்பு "O/L Paper class" கற்பிக்கப்படு கின்றது இதில் வேறுமாவட்ட மாணவர்களும் கற்று பயன் பெறுகின்றார்கள். மாணவர்களை ஊக்கப்படுத்து வதற்காக சகல தர வகுப்பு மாணவர்களுக்கு போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு முதல் மூன்று நிலைகளைப் பெறுவோர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் முன்னிலையில் பரிசளிக்கப்பட்டு கௌரவிக்கப் படுகின்றார்கள்.

எமது கல்விநிலைய மாணவர்கள் அதிக விருப்புடன் ஒழுக்க விழுமியங்களை கடைப் பிடித்து கல்வி கற்பதனாலும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய கற்பித்தலாலும் இன்று எமது கல்வி நிலையம் 25 ஆண்டு நிறைவு பெற்று "வெள்ளி விழா" காணும் நிலையை எட்டியுள்ளது என்று சொல்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன்.

**"வாழ்க கல்வி நிலையம்! வளர்க ஆசிரியர் சேவை!!**
**பரவுக மாணவர் கல்வி!"**

**ச. குமார்**
இயக்குனர்
றோயல் கல்வி நிலையம்
கனகபுரம்,
கிளிநொச்சி.

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

உயர்ந்த பீடத்தில் நின்று உன் கையில் ஐந்து காசுகளை எடுத்துக் கொண்டு ''ஏய் பிச்சைக்காரா! இதை வாங்கிக் கொள்'' என்று நீ சொல்லாதே. மாறாக அவனுக்குக் கொடுப்பதனால் உனக்கு நீயே உதவி புரிந்துகொள்ள முடிந்ததை நினைத்து அந்த ஏழை அங்கே இருந்ததற்காக அவனிடம் நீ நன்றி உள்ளவனாக இரு. கொடுப்பவன்தான் பாக்கியசாலியே தவிர, பெறுபவன் அல்லன். இந்த உலகில் உன்னுடைய தர்ம சிந்தனையையும், இரக்க மனப்பான்மையையும் பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்திருப்பதற்காக நீ நன்றி உள்ளவனாக இரு. இதன் மூலம் தூய்மையும் பரிபூரணத் தன்மையும் உன்னை வந்தடையும்.

சுயநலமா? இல்லையா என்பதை உனது மனச்சாட்சியையே முதலில் கேட்டு நீ தெரிந்துகொள். சுயநலம் என்பது இல்லையானால், பிறகு எதையும் நீ பொருட்படுத்தவேண்டாம். எதுவும் உன்னைத் தடை செய்யமுடியாது. செயலில் இறங்கு. அவ்விதம் செய்யச் செய்ய உண்மை உனக்கு எளிதிற் புலப்படும்.

உலகில் வாழும் உயிர்களுக்கு தொண்டு செய்வதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறில்லை. உண்மையோடு ஒருவன் இந்த ஓர் அறத்தைக் கடைப்பிடிப்பானானால் அவன் முத்தி பெறுவது நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றோயல் கல்வி நிலையத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சமதில் நிலைத்து நிற்கும் மாமனிதர்



திரு. என்.எம். யோசப்
(கல்வி நிலைய நலன்விரும்பி)

நல்லாரை கண்களால் காண்பதும் நன்மை ஆகும்
நல்லவர்களின் அறிவுரைகளை செவியாரக் கேட்பதும் நன்மை ஆகும். நல்லவர்களின் குணங்களை வாயாரப் பேசுவதும் நன்மை ஆகும். நல்லவர்களோடு சேர்ந்து வாழ்வதும் நன்மை ஆகும்.

வார்த்தைகளிலும் ஏட்டிலும் முற்றுத் தரிப்பு இடமுடியாத உயர்நிலையிலும் இவ் உலகில் வாழ்ந்து எம்மை எல்லாம் உயர்த்தி விட்டு, இன்றும் எங்கள் உள்ளங்களிலும் குடி இருக்கின்ற மதிப்புக்குரிய நாதன் அய்யா அவர்களை பற்றி ஒரு சில வார்த்தைகளை றோயல் கல்விக்கூடத்தின் வெள்ளிவிழா மலரிலே வரைந்திட பகிர்ந்திட விரும்பு கின்றேன்.

வாழ்க்கை பயணத்திலே ஒரு சில மனிதர்கள் மறக்கப்பட முடியாதவர்கள், இன்னும் சிலர் நினைக்கப்பட வேண்டியவர்கள் வேறு சிலர் குறித்து வைக்கப்பட வேண்டியவர்கள் இந்த விதத்திலே நாதன் அய்யா அவர்களை மாமனிதன் என்ற கருப்பொருளிலே என் நெஞ்ச மதில் வைத்து நினைத்துப் பார்க்கின்றேன்.

ஈழத்தமிழர்களின் தாயக பூமியாம் யாழ்ப்பாணத்திற்கு மிக மிக அருகிலே உள்ள மானிப்பாய் எனும் கிராமத்திலே கலைக்குமார சாமி வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனாக தலைமகனாக 02.07.1937 ஆண்டு பிறந்தவர் தான் இந்த மாமனிதன் இந்த மாமனி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருக்கு சண்முகநாதன் என்ற பெயரை சூட்டி இவர் பெற்றோர்கள் மகிழ்ந்திருந்த காலமதில் இவருடைய உடன் பிறப்புகளாக இரு சகோதரர் களும் ஒரு சகோதரியும் இணைந்து கொண்டார்கள் தங்கள் குடும்பத்தின் தலை மகனாய் கிடைத்த செல்வமகனை அன்போடும் பாசத்தோடும் பரிவோடும் பாதுகாப்பாக வளர்த்து வந்தார்கள். பெற்றோரின் பராமரிப்பிலே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த மாமனிதரை சண்முகம் என்று செல்லமாக அழைத்து மகிழ்ந்தார்கள்.

கல்வியில் மிகவும் உயர்நிலையில் இருந்து இவருடைய தகப்பனார் இவருடைய ஆரம்பகல்வியை மானிப்பாய் மெமோறியில் பாடசாலை ஊடாக ஆரம்பித்து வைத்தார். கல்விக் குடும்பத்தின் தலைமகன் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சிறுவயதிலேயே கல்வியை கற்பதில் ஆர்வமுள்ளவராகவும் விளையாட்டிலே விற்பன்னராகவும் திகழ்ந்தார். ஆரம்ப கல்வியின் அடித்தளமே மிகவும் சிறப்பாக உறுதியாக இருந்த காரணத்தினால் தனது உயர்கல்வியை தொடர்வதற்காக யாழ் மத்திய கல்லூரியிலே இணைந்து கொண்டார். இணைந்து கொண்டதோடு நின்றுவிடாது, அக்கல்லூரிக்கு பெருமை சேர்க்கும் வகையிலே தன்னுடைய பங்களிப்பை நிறைவாக மேற்கொண்டார். குறிப்பாக ஆங்கிலம், கணிதம், தமிழ்மொழி போன்ற முக்கிய பாடங்களிலே முதன்மை மாணவனாக தன்னை வெளிப்படுத்தினார். சிறந்த குரல் வளமும் சொற்களை அழுத்தம் திருத்தமாக வெளிக்கொணரும் ஆற்றலும் உடையவராக இருந்த காரணத்தினால் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் முதல் இடத்தை பலமுறை பெற்று கல்விமான்களின் பாராட்டுதலையும் பரிசில்களையும் பெற்றுகொடுத்தார். கல்வியில் மாத்திரமல்ல மல்யுத்தம், சாகசம், காணிவேல் போன்ற விளையாட்டு துறையிலும் முதன்மை பெற்ற மாணவனாக திகழ்ந்தார்.

நடைபெற்ற உயர் பரீட்சைகளிலும் விசேட சித்தி பெற்று குறிப்பாக ஆங்கிலம் கணிதம், தமிழ்மொழி போன்ற பாடங்களிலே அதிவிசேட சித்திகளை பெற்று கல்லூரிக்கும் கிராமத்திற்கும் குறிப்பாக தன்னுடைய குடும்பத்திற்கும் பெருமை தேடி கொடுத்தார். பல்துறைகளிலும் அறிவு ஆற்றல் அக்கறை என்பன நான்கண்ட மாமனி தரில் நிறைந்து காணப்பட்ட காரணத்தினால் தமிழ் ஆங்கிலம் போன்றமொழிகளில் சிறந்த பேச்சாளராகவும் நுட்பமான எழுத்தாற்றல் கொண்டவராகவும் தனக்கே உரித்தான தலைமைத்துவ பண்பினையும் கொண்டவராக விளங்கினார். இப்படியாக மாணவ பருவத்திலே வாழ்ந்த இம்மாமனிதர் தனது கல்வியை நிறைவு செய்து கொண்டவராக வேலை தேடும் பணியில் முழுமூச்சாக செயல்பட்டுக் கொண்டி ருந்ததால் இக்காலகட்டத்திலே பரந்தன் இரசாயன தொழிற் சாலையிலே எழுதுநருக்கான வெற்றிடம் உள்ளதாக அறிந்து அதற்கான பத்திரம் மனுவை சமர்ப்பித்தார்.

இவர் அனுப்பிய மனு ஏற்றுக்கொள்ளப் பட்டு நேர்முகப் பரீட்சைக்கான அனுமதியும் கிடைக்கப்பெற்றது. நேர்முகப் பரீட்சைக்கு சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் திறமைகளை கல்விப்பெறுபேறுகளை கண்ட உயர் அதிகாரிகள் இவரை உடனடியாக பணியில் இணையுமாறு கேட்டுக்கொண்டார்கள். இதனை ஏற்றுக்கொண்டவராக தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார். பொறுப் பேற்றுக் கொண்ட பணியை நிறைவாக. ஏற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல், அங்கு பணி புரிந்த தொழிலாளர்களின் உரிமைக்கு குரல் கொடுக்கும் தொழிற்சங்கத்தை உருவாக்கி அவர் களின் உரிமைகளை பெற்றுக்கொடுக்க அயராது உழைத்தார்.

தொழிலாளர்கள் அனைவரும் இவர் மேல் அன்பும் பாசமும் கொண்டவர்களாக கிளாக்கர் ஐயா என்று அழைத்து மகிழ்ந்தார்கள் மேலும், இவர் பரந்தன் இரசாயனத் தொழிற் சாலையின் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் தன் னால் முடிந்தவைகளை திறமையாக செய்து கொடுத்தார். இதன் காரணத்தினாலே சாதாரண எழுதுவினைஞராக தனது பணியை ஆரம்பித் தவர். குறுகிய காலத்திலே உதவிக் கணக் காளராக உயர்நிலைபடுத்தப்பட்டார். மேலும் பரந்தன் இரசாயனத் தொழிலாளரின் நன்மை கருதி பொழுதுபோக்கு மண்டபம் ஒன்றை நிறுவி கலை, கலாச்சாரம், உதைப் பந்தாட்டம், கரப் பந்தாட்டம் பாரம் தூக்கல் மல்யுத்த பயிற்சி போன்ற பல்வேறு துறைகளிலும் தொழிலாளர் களை ஊக்குவித்து பயிற்சிகளும் கொடுத்து வந்தார்.

இப்படியாக இவருடைய பணிகள் பல துறைகளிலும் உயர்ச்சி பெற்று வந்த நாட்களில் இவருடைய திருமணம் தொடர்பாக செய்திகள் வெளிவரத்தொடங்கியது. இவருடைய உயர்ச் சியை வளர்ச்சியை அறிவுத்திறனை ஆற்றலை அறிந்தபலர். இவரை அடைய முயற்சிகள் பல செய்த போதும் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்பதற்கு ஏற்ப தொட்டிலடி சங்கானையை சேர்ந்த செல்வி. இராஜேஸ்வரி விநாயகர் என்பவரை 1960ம் ஆண்டு தனது வாழ்க்கை துணைவியாக ஏற்றுக்கொண்டார். தொடர்ந்தும் இவர் தனது வாழ்க்கை துணைவி யோடு பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் விடுதியிலே தங்கி வாழ்ந்த காலங்களில் இல்லறம் என்கின்ற நல்லற வாழ்விலே இறைப பரிசாக கிடைத்த பிள்ளைச் செல்வங்களோடு (உஷா, குமார், அனுசா, ரகு, சசி பேபி) மிகவும் நிறைவாக மகிழ்வாக வாழ்ந்து வந்தார்.

தொடர்ந்து தன்னுடைய பணிகளையும் இதனோடு இணைந்ததாக தொழிற்சங்க செயற்பாடுகளிலும், கலை கலாச்சார விளை யாட்டு போன்ற துறைகளிலும் பயிற்சியாளராக ஆலோசகராக பணிகள் பல புரிந்து வந்தார். இவருடைய சாகசங்கள் பலவற்றை குறிப்பாக மல்யுத்த பயிற்சி, மார்பினிலே குண்டை தாங்குதல், பாரமான வாகனங்களை தன் மேல் ஏற்றுதல், கயிறு இழுத்தல் போன்ற வீரசெயல் களை வெளிக்காட்டியதன் பயனாக அனைவரும் இவரை சாண்டோ நாதன் என்று அன்போடு அழைத்தார்கள். இன்று கூட யாழ்ப்பாணத்தில் சாண்டோ நாதன் என்றால் தான் அங்குள்ளவர் களுக்கு தெரியும். இப்படியாக பல்வேறு துறை களிலும் சிறந்தவராக உயர்ந்தவராக வாழந்த இவர் கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச சங்கத்தின் தலைவராகவும் பணி யாளர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் பிரச்சனைகளுக்கு வாதாடும் திறமை யையும் பெற்றிருந்தார் என்பதை சொல்வதில் நான் பெருமைப்படுகின்றேன்.

பல்வேறுபட்ட துறைகளிலும், ஆசானாக திகழ்ந்த இவர் தன்னுடைய குடும்பவாழ்விலும் மனைவிக்கு ஏற்ற கணவராக தன்னுடைய பிள்ளைச் செல்வங்களின் ஒளிமயமான எதிர்கால வாழ்விற்கு ஒளி ஊட்டும் கலங்கரை விளக்காக அவர்கள் நல்லவர்களாக வல்லவர் களாக நாடு போற்றும் உத்தமர்களாக சிறந்த கல்வி மான்களாக வரவேண்டுமென்பதில் அதிக அக்கறையும் கரிசனையும் கொண்டவராக வாழ்ந்தார். இவருடைய வழிநடத்தலிலே வளர்ந்து வந்த பிள்ளைச் செல்வங்களும் கல்வியிலும், விளையாட்டிலும் முதன்மை பெற்றவர்களாக பிறந்த வீட்டிற்கு பெருமை தேடிக்கொடுக்கும் நல்லவர்களாக வல்லவர்களாக வாழ்ந்து வந்தார்கள். மேலும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையிலே மாலை நேர ஆங்கில வகுப்புகளை நடாத்தி தான் பெற்றுக் கொண்ட கல்விச் செல்வத்தை மாணவ மாணவி களுக்கு எடுத்தியம்பியும் வந்தார்.

வறுமையிலும் வாழத்தெரியும், வளமையிலும் வாழத்தெரியும் என்பதற்கு இலக்கண மானவர் ஆடம்பரமற்ற வாழ்க்கை, நேர்மை, உண்மை, திறந்த மனப்பான்மை, மற்றவர்களின் வளர்ச்சியில் மகிழ்தல், யாரிலும் திறமைகள் நல்ல குணங்களை கண்டால் தட்டிக்கொடுத்து பாராட்டி ஊக்குவிக்கின்ற பெருந்தன்மை இவரிடம் அதிக உண்டு இதே போல் தவறுகள் ஏற்படு மிடத்திலும் குற்றம் குற்றமே என்பதை சுட்டிக் காட்டவும் இவர் தவறுவதில்லை அநீதிகளை முக்கியமாக பொய் பேசுகின்றவர்களை இவருக்கு அறவே பிடிக்காது. தனக்கென வாழ்ந்து தனக்கென எதையும் வைத்திருக்காது வாரிக்கொடுக்கும் ஒரு வள்ள லாக திகழ்ந்தார். இம்மாமனிதர் பெரியோராக இருந்தாலும் சிறியோராக இருந்தாலும். சரி உதவியென்றும் தேவையென்றும் வரும்போது தன் கஸ்டங்களையும் நோக்காது உதவி செய்வதில் வல்லவராக திகழ்ந்தார்.

ஒவ்வொருவரும் வையத்துள் வாழ் வாங்கு வாழ்வதற்கு ஆன்மீக பலம் இறை வழிபாடு அவசியம் என்பதை உணர்ந்த இம்மாமனிதர். மருதடியான் கொடியேறி திரு விழா தீர்த்தம் பூங்காவனம் முடியும் வரை சைவ சித்தார்ந்தத்திற்கு அமைய விரதம் இருந்து பூரண இறைவழிபாட்டில் தன்னை இணைத்துக் கொள்வார். இப்படியாக பல்வேறு பட்ட சிறப்பு அம்சங்களை தன்னகத்தே கொண்டு இவ ருடைய வாழ்க்கை பயணம் சென்று கொண் டிருந்த வேளை 1990ம் ஆண்டு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உள்ளத்தை எல்லாம் உறைய வைக்கும் கொடூரச்செயல் ஒன்று நடைபெற்றது.

ஆம் பல்லாயிரக் கணக்கான தொழி லாளர்களின் வியர்வையினால் உருவாக்கப்பட்ட பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, நிர்மூல மாக்கப்பட்டு அங்கிருந்த அனைவரும் அகதி களாக ஓட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. இதைக் கண்ட மாமனிதர் நான் நினைக் கின்றேன். முதன் முதலாக தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை பயணத்திலே கண்ணீர் விட்டு அழுதார். இதை நான் நேரிடையாக கண்டேன். இது மாத்திரமல்ல இந்த சம்பவமே இந்த மாமனிதரை இருதய நோயாளியாகவும் மாற்றியது.

எந்த நிலையிலும் எதற்கும் அஞ்சாத அய்யா அவர்கள் தன் குடும்ப உறவுகளை கூட்டிக்கொண்டு தான் புகுந்த கிராமத்திற்கு சென்றார். அங்கு ஒரு சில வருடங்கள் வாழ்ந்த பின் மீண்டும் தன் குடும்ப உறவுகளையும் கூட்டிக் கொண்டு கிளிநொச்சி வந்து சேர்ந்தார். இச்சம்பவம் நடைபெற்ற வேளை இன்று 25வது வெற்றி விழாவை கொண்டாடும் றோயல் கல்விக் கூடத்தின் நிர்வாகி குமார் அவர்கள் உயர்தரப் பரீட்சையிலே சித்தி அடைந்தவராக கணித பாடத்தில் ஆசானாக விளங்கினார்.

கிளிநொச்சி வந்த ஒரு சில மாதங்களில் றோயல் கல்விக் கூடத்தை மிகவும் எளிய முறையிலே ஆரம்பித்து தான்பெற்ற கல்விச் செல்வத்தை முக்கியமாக கணித பாடத்தை போதித்து வந்தார். இவருடன் இணைந்து இந்தமாமனிதரும் ஆங்கில பாடத்தை பொறுப்பேற்று கல்வி அறிவை ஊட்டிவந்தார். இவர்களுடைய கற்பித்தல் திறனை அறிந்த மாணவச் செல்வங்களும் அணி அணியாக வந்து றோயல் கல்விகூடத்திலே தங்களை இணைத்துக் கொண்டார்கள். முக்கியமாக ஆங்கில மொழியின் அறிவு மிக மிக குறைவாக இருந்த காரணத்தினாலும் ஆங்கில பாடத்தை கற்பிக்கும் நாதன் அய்யா அவர்களின் திறமையை அறிந்த காரணத்தினாலும் மாணவர் கூட்டம் பெருகியது. இக்காலப் பகுதியிலே இந்த மாமனிதருடைய கற்பித்தல் திறனை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இவரது கற்பித்தலில் பாண்டித்திய திறன்கள் (Professional skils) எனப்படும் முறையான முன்னாயத்தம் செய்து கற்பித்தலை மேற்கொள்ளும் அரிய பண்பு இவரிடம் நிறைய உண்டு கற்பிக்கப்படவுள்ள அனைத்து விடயங் களையும் இலகுவான முறையில் செயற்படுத்து வார். ஆங்கில பாடம் தொடர்பாக மாணவர்களின் அபிப்பிராயங்களை கேட்டறி வார். எல்லா மாணவர்களையும் முழுக்கவனத்தோடு துல்லியமாக கவனித்து அவர்களின் முழுக் கவனத்தையும் பாடத்திற்குள் கொண்டு வரும் இவருடைய ஆற்றல் சிறப்பானது அனைத்து மாணவர்களுக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்கும் பண்பு இவரில் உண்டு. இந்த மாமனிதரின் குரல்வளமும் தொனியும் குரல் ஏற்ற இறக்கங் களும் ஆங்கில வார்த்தைகளை உச்சரிக்கும் அழகும் மாணவர்களை உற்சாகமடைய வைத்ததை நான் பல முறை கண்டிருக்கிறேன். மேலும் தன்னிடம் கல்விகற்கும் மாணவச் செல் வங்களை தம் பிள்ளை போல் கருதி அவர்களின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்படுவார். தனது அனுபவங்களையும் நல்ல சிந்தனைகளையும் மனம் திறந்து மாணவர் களுடன் பகிர்ந்து கொள்வார். மாணவர்களை பல்வேறு வழிகளிலும் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தி அவர்களின் திறமைகளை வெளிக்கொணரவும் ஓர் சிறந்த ஆசானாகவும் மாணவர்களின் எழுத்தாக்கங்களை தட்டிக் கொடுத்தும் உற்சாகப்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக சரியான இலட்சியங்களோடு மனித அபிமானத்துடனும் நேர்மையாளனாக வும் அதே வேளை இருதய நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டவருமாக வாழ்ந்த இம்மாமனிதர் 1999 அன்று சுகயீனம் காரணமாக அக்கராயன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தன் னுடைய மரணத்தை முன்கூட்டியே அறிந்தவர் போல் தன் அன்பு மனைவியையும் மூத்த மகளையும் அருகே அழைத்து என்னை வைத்தியசாலைக்கு கொண்டு போகிறீர்கள் மீண்டும் பிணமாகத்தான் கொண்டு வருவீர்கள் என்று சொன்னதோடு தனது அன்பு மகன் குமார் மகள் உஷா ஆகியோரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு வைத்தியசாலைக்கு சென்றார். இவரை பரிசோதித்த வைத்தியர்கள் இவரின் உடல்நிலையின் நிலையை அறிந்த வகையில் வைத்தியசாலையில் தங்க அனுமதித்தார்கள்.

வைத்தியசாலையில் இவர் அனுமதிக் கப்பட்ட நாள்தொடங்கி இவருடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள், கல்வி கற்ற மாணவர்கள், கல்விமான்கள் எல்லோரும் சென்று இவருக்கு ஆறுதல் கூறியதோடு இம்மாமனிதர் சுகம் பெறவேண்டி விசேட பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டார்கள். ஆனாலும் பிறந்தால் ஒருநாள் இறந்தே ஆகவேண்டும் என்பதற்கேற்ப நீண்ட வருடங்கள் இவ்வுலகில் தான் செய்ய பணிகள் அனைத்தையும் சிறப்பாக செய்து முடித்த நிறைவுடன் 1999-10-06 இறைவனடி சேர்ந் தார். இம்மாமனிதரின் ஆன்மா ஆண்டவன் பாதமதில் அமைதி கொள்ள அன்நெஞ்சத்தின் அடித்தளத்தில் இருந்து சொரிகின்ற கண்ணீர் துளிகளை 25 வருட வெற்றி விழா மலர் ஊடாக காணிக்கை ஆக்குகின்றேன்.

தோல்வி அடைவது குற்றமில்லை.
ஆனால் இலட்சியமற்ற வாழ்வு குற்றமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சிந்துகிறோம்
# கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செய்கின்றோம்






**போ**ர்விட்டுச் சென்ற வடுக்களும் எம் உறவுகள் சிந்திய இரத்தத்தின் வெடுக்களும் மலக்குளிக்குள் மனித எலும்புக்கூடுகளும் அன்றாடம் எம் வாழ்க்கையே அதிர வைத்துக் கொண்டிருக்கும் இவ்வேளைதனில்- கல்வியின் வளர்ச்சிக்காய் - உயர்ச்சிக்காய் மாணவ சமு தாயத்தின் எதிர்கால நல்வாழ்விற்காய் உறுதி யோடு உழைத்த உன்னை - நீ கல்வியை அள்ளிக்கொடுத்த றோயல் கல்வி கூடத்தின் பரிசளிப்பு விழாவிலே நினைவுகூர்ந்து உன் நினைவாக அமைக்கப்பட்ட அரங்கத்தின் மத்தியிலே நின்று இக்கவிதனை காணிக்கை யாக்குகின்றோம்.

கல்விச் செல்வமதை மற்றவர்க்கு சொல் லிக் கொடுப்பதிலே நல்லவர்களாய், வல்லவர் களாய், நாடு போற்றும் உத்தமர்களாய், கல்விக் குடும்பமாகவே செயல்படும் இல்லமதில், நீயும் ஒரு மகனாக பெற்ற கல்வியை மற்றவர்க்கு சொல்லிக் கொடுக்கும் ஆசிரியனாக நல்ல ஆசானாக பணிபுரிந்தாய், பட்டங்கள் பல பெற வழிசமைத்தாய்.

வகுப்பறையினிலே கல்வியை நீ புகட்டும் வேளை உனது வார்த்தை வடிப்புகளில் அசைவின் துடிப்புகளில் கல்வி உணர்வின் கொதிப்பதனை கண்டபோது மாணவச் செல்வங்கள் மேல் நீ வைத்த பாசத்தையும் - வழி நடாத்தும் ஆர்வத்தையும் அன்று கண்டு மகிழ்ந்த நாம் இன்று உன் பிரிவினை தாங்க முடியாதவர்களாக - கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செய்கின்றோம்

தொடர்ச்சியாக நடந்த யுத்தத்தின் கொடூரம் தாங்க முடியாமல் பெருநிலப்பரப்பிலே வாழ்நத மக்கள் இடம் பெயர்ந்து ஓடிய வேளை நீயும் - உன் உறவுகளோடு இடம் பெயர்ந்தாய் இருக்க இடமுமின்றி அலைந்து திரிந்தாய்.

நீ சென்ற பாதையெல்லாம் எறிகணை களும் விமானத்திலிருந்து ஏவப்பட்ட குண்டு களும் வெடித்துச்சிதறி காவுகொண்ட கொடு மையை நினைத்து நீபட்ட வேதனையை - உன்பிரிவால் நாம் அனுபவித்து கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செய்கின்றோம்.

இல்லறம் என்கின்ற நல்லறவாழ்வில் இறை துணையால் கரம்பிடித்த உன் காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையாளும் அன்புச் செல்வங்களும் - உன் உடன்பிறப்புகளும் உயிர்பிழைக்க வேண்டு மென்று - உன் உயிரை துச்சமாக மதித்து நீ அன்று திரிந்து உன் உறவுகளை கரை சேர்த்து விட்டு காலனிடம் நீ சென்றதை நினைத்து கண்ணீர் சிந்துகின்றோம். இத்தனைக்கும் மத்தியிலும் அத்தனை துன்பங்கள் துயரங்கள் மரண வேதனைகள் அனைத்திலுமிருந்து விடிவு கிடைத்தது என்று நீ மகிழ்ந்த வேளை உறவுகளை காப்பாற்றி விட்டேன் என்று உவகை கொண்ட அக்கணப்பொழுதில் காலன் உனைத் தேடி வந்து உன் உயிரை பிரித்ததை இக்கணப் பொழுதில் கூட நம்பமுடியாமல் கண்ணீர் சிந்துகின்றோம். கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலியும் செய்கின்றோம்.

வருவாயா சசி - வரமாட்டீர்களா சேர். இல்லை, இல்லை வரவேமாட்டீர்கள் ஆண் டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்ட வர் மீண்டும் வரவேமாட்டார் - எனவே நீயும் வரமாட்டாய் என்பதை நினைத்து உள்ளத்தால் தினம் தினம் கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலி செலுத்து கின்றோம்.

நீ கரம்பிடித்த மனையாளும் - பாசத் தோடு வளர்த்த குஞ்சுகளும் உன்னை சுமந்து பெற்ற அன்னையும் - உன் உடன் பிறப்புக்களும் உன்னிடம் கல்வி கற்று உயர்வடைந்த மாணவர்களும் ஏன் கல்விச் சமூகமே கண் கலங்கி நிற்பதை கண்டு - கண்ணீர் சிந்து கின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செலுத்துகின்றோம்.

என் உயிரை காக்க உன் உயிரை மதியாது - பயங்கர வெடி ஓசை மத்தியிலே உன் முதுகில் எனைத்தாங்கி ஊர்ந்து. ஊர்ந்து என் உயிரை பாதுகாத்த செல்வமே - சசிக்குட்டி பெற்றகடன் தீர்த்த உன் உயிரை காப்பாற்ற பெற்று வளர்த்த என்னால் முடியவில்லையே என்று இரத்தக் கண்ணீர் வடிக்கும் உன் தாயின் நிலை கண்டு கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செய்கின்றோம்.



உன் உடன் பிறந்தவள் - அன்போடு உனை நேசித்தவள், உன் உயர்ச்சியிலே மகிழ்ச்சி கொண்டவள், நீ காதலித்த உன் மனையாளை கரம்பிடிக்க தூது சென்றவள், குடும்பத்தில் மூத்தவள் உன் அக்கா, உயிரற்ற உன் உடலை கூட காண கொடுத்து வைக்காத பாவியாகிவிட்டேன். என்று பதறி துடிப்பதை பார்த்து கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலியும் செலுத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா என்று பாசத்தோடு நீ அழைத்து உன் அண்ணன் - வன்னிப் பெரு நிலப்பரப்பின் பல்லாயிரம் மாணவச் செல்வங் களின், கல்வி வளர்ச்சிக்கு கலங்கரை விளக்காக, றோயல் கல்விக்கூடத்தின் தந்தையாய் இயக் குனராய் ஆசிரியனாய் பணிபல புரிந்து, அனைவரின் மதிப்பையும் பெற்ற குமார் சேர், உன் அதிர்ச்சி மரணத்தால் உளம் உடைந்து நீ உயிர்விட்ட வேலை உன் உடல் கிடந்த கொடூரத்தை கண்டு அதிர்ச்சியிலே இருந்து மீள முடியாமல் மௌனக்கண்ணீர் வடிப்பதை தினமும் கண்டு கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செலுத்துகின்றோம்.

சின்னக்கா சின்னண்ணா என்று உரிமையோடு நீ அழைத்து மகிழ்ந்த உன் உடன் பிறப்புகள் உன்பிரிவால் துயருற்று வேதனைதீயிலே தினம் வெந்து துடியாய் துடிப்பதை பார்த்து கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செலுத்து கின்றோம்.

காலமெல்லாம் உன்னோடு வாழ்ந்து இல்லற வாழ்வின் இலட்சிய எண்ணங்களை உன் துணையோடு நிறைவாக்க காத்திருந்த காதல் மனையாள் பூவிழந்து பொட்டிழந்து விதவைக் கோலம் தரித்து நீ விடிவிற்காய் ஏங்கும் நிலைதனை கண்டு கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செலுத்து கின்றோம்.

உன் பரம்பரையின் வாரிசுகளான உன் பிஞ்சுக்குஞ்சுகள் அப்பா சாகவில்லை எம்மிடம் நிச்சயம் வருவார் என்று விழிமேல் விழிவைத்து காத்திருக்கும் காட்சிதனை பார்த்து கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செய்கின்றோம்.

பாரதிபுரத்திலேயே றோயல் கல்விக் கூடத்திலே உன்னிடம் கல்வி கற்று கணித பாடத்திலே ஆங்கில பாடத்திலே உயர்வடைந்த மாணவக் குஞ்சுகள் தாயை பறிகொடுத் குஞ்சுகளாய் பரிதவித்து விடுவதையும் உன்னுடன் கல்விதனை கற்பித்த ஆசிரிய சமூகம் ஆறாத்துயரில் ஆழ்ந்து கிடப்பதை பார்த்து கண்ணீர் சிந்துகின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செலுத்துகின்றோம்.

நல் ஆசானாய் உயர் ஆசிரியனாய், நல்லதொரு குடும்பத்தந்தையாய் உடன் பிறப்புக்களின் உயிர் சகோதரனாய் வாழ்ந்து எமையெல்லாம் தவிக்கவிட்டு சென்ற உன் ஆத்மா அமைதித் துயில் கொள்ள றோயல் கல்விக்கூடத்தின் பரிசளிப்பு விழாவில் இணைந்திருக்கும் அனைத்து உள்ளங்களின் இதயத்தின் அடித்தளத்திலே இருந்து எழுந்து வரும் ஆசி மலர்களை கண்ணீர் சிந்து கின்றோம் கண்ணீர் பூக்களால் அஞ்சலியும் செலுத்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலில் சமயம்



கலாபூஷணம்
செல்வராணி சோமசேகரம்பிள்ளை
(சமாதான நீதவான்)

சமயம் அல்லது மார்க்கம் என்பது நாம் வாழ நந்நெறி காட்டும் பாதையாகும். நாம் சென்றடைய வேண்டிய இலக்கினை அடைவதற்கு சரியான பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுத்தோமேயானால் வீடுபேறென்னும் பேற்றைப் பெற்று சிவபெருமான் என்ற சற் சமுத்திரத்திலே கலந்து பேரின்பத்தை அனுபவிக்கமுடியும் இதற்கு முதற்காரணி பக்தியாகும். பக்தி என்றால் என்ன? யாருக்கு யாருடன் உண்டாகும்? அது முதிர்ந்த அன்பினால் உண்டாகும். ஈடுபாடு, அன்பு ஈன்குழவி அருள். உயிர்களிடம் காட்ட வேண்டியது அன்பு.

'அன்பு செய்தால் அல்லல் தீரும். அல்லல் தீரவுற்றாள் அமைதி பெருகும். அமைதி பெருகினால் அதுவே இன்பம்'. அன்புடையவனுடைய அகத்திலே இரக்கம், கருணை என்பன உண்டாகும். தாய் தன் பிள்ளைகளுடனும், சகோதரர்களுடனும் காட்டுவது பாசம். தாய்ப்பாசம், பிள்ளைப்பாசம், சகோதர பாசம் இஃது பிரிக்க முடியாத உறவாகும்.

**"பக்தியால் யானுன்னைப் பலகாலும்**
**பற்றியே மாதிருப் புகழ் பாடி"**

என்கின்றார் அருணகிரிநாதர். பக்தி வலையில் பாடுவோன் காண்க என்கிறார் மணிவாசகர் பெருந்தகை மணிவாசகர் தன் திருவாசகத்திலே இறைபக்தியுடையவன் எவ்வாறிருப்பான் என்று கூறியதைப் பார்ப்போம்

**"சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்.**
**திரண்டு திரண்டு உன் திருவார்த்தை**
**விரிப்பார் கேட்பார் மெச்சுவார்**
**வெவ்வேறு இருந்துன் திருநாமம்**
**தரிப்பார் பொன்னம்பலத்தாடும்**
**தலைவா என்பார் அவர் முன்னே**
**நரிப்பாய் நரியேன் இருப்பேனோ**
**நம்பி இனித்தான் நல்காயே"**

இது வாசகர் நிறைந்த அன்பால் இறைவனோடு உறவு கொண்டு உரையாடிய வாசகம்.

மானிடப் பிறவியினைப் பெற்றுக் கொண்டமை பூர்வீக புண்ணிய பயனேயாகும். சைவன் ஒருவன் அதி காலையிலே எழுந்தவுடன் "இறைவா யானின்று மரணம் என்கின்ற நித்திரையிலிருந்து விழிப்பு நிலைக்கு வந்து விட்டேன், நின்றும் இருந்தும் கடந்தும் உன்னை மறவாதிருக்க அருள் புரியப்பா" என்று இறைவனிடம் தன்னை அர்ப்பணித்து விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து நித்திய கடமைகளை முடித்ததன் பின் பூக்கைக்கொண்டு அரனைப்பாடிப்பணிதல் வேண்டும். சமயப்பிரவேசம் செய்தவனே உண்மையான சைவசமயி ஆவான். தினசரி சமய அனுட்டானத்தை செய்தல் அவசியமாகும் நல்ல தொடக்கம் நல்ல முடிவையே அளிக்கும் அன்றையதினம் மகிழ்ச்சிகரமான நாளாக அமையும். ஆலய வழிபாடு மனதிற்கு அமைதி யையும் ஆனந்தத்தினையும் அளிக்கும்.

**"திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாசாகில்**
**தீவண்ணத் திறமொருகாற் பேசாராகில்**
**ஒருக்காலும் திருக்கோயில் சூழாராகில்**
**உண்பதன்முன் மலர் பறித்திட்டுண்ணாராகில்**
**அரிரு நோய்கள் கெட வெண்ணீறணியாராகில்**
**அளியற்றார் பிறந்தவாறேதோ வெண்ணில்**
**பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்தும்**
**பிறப்பதற்கே தொழிலாகி இருக்கின்றாரே."**

என்று ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தினை எடுத்துரைக்கின்றார் அப்பரடிகள் இன்றைய எமது சமுதாயத்திலே ஆலய வழிபாட்டிற் கலந்து கொள்வதற்குப் பின்னிற்கும் நிலையே காணப் படுகின்றது. பயனற்ற பொழுது போக்குகளிலே காலத்தைக் கழிக்கின்றனர். ஐந்தாம் குரவ ரென்று சைவ உலகத்தாலே போற்றப்படும் ஆறுமுக நாவலர் அவர்கள் பரம் பொருளின் பெரும் புகழைப்பாடிப் பணிதல் சைவர்களது முதற் கடமை என்பதை தன் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியுள்ளார். அறிவுக் கண்களைத் திறக்கக்கூடிய சைவ வினாவிடை 1ம் பாகம் 2ம் பாகம் பாலபாடம், இலக்கணச் சுருக்கம் போன்ற பல நூல்களை வெளியிட்டும் சைவசமய பிரசங் கங்களை ஆற்றியும் சைவ பாடசாலைகளை அமைத்தும் சைவ உலகம் வாழ வழி அமைத் துச் சென்றுள்ளார்.

சேக்கிழார் பெருமானது பெரியபுராணத் திலே கூறப்பட்ட மெய்யடியார்களது வரலாறு எமக்குப் பல்வேறு பாடங்களைப் புகட்டுகின்றது. நால்வர் காட்டிய வழியிலே நீ நட என்று பெற்றோர் தம் பிள்ளைகட்குக் கூறுவது வேறு யாருமல்ல பெரிய புராணத்திற் கூறப்பட்ட சம்பந்தர், அப்பர். சுந்தரர் ஆகியோருடன் மணிவாசப் பெருத்தகையையும் சேர்த்தே எமது சமய வழிகாட்டிகளாக முன்னிலைப்படுத்து கின்றனர். சந்தண மரத்தைச் சார்ந்த மரமும் நறுமணங்கமழும் என்பதற்கமைய நல்லோர் உறவு நலத்தையே விளைவிக்கும்.

அட்டைப் பெட்டிக்குள் வைத்திருக்கும் பொருளுக்கேற்ப அதற்கு மதிப்பு வருவது போல மனதுக்குள் வைத்திருக்கும் எண்ணத்திற்கேற்ப அதற்கு மதிப்பு வருகின்றது. நெஞ்சம் ஆலய மாவது அல்லது அற்ப பொருளாவது நாம் அதில் போட்டு வைத்திருக்கும் எண்ணத்தைப் பொறுத்து குப்பைத் தொட்டி கீழ்மையடைவதும் குப்பையால் மனம் கீழ்மையடைவதும் கீழான எண்ணங்களால் தகாத எண்ணங்களை எண்ணிக்கொண்டிருப்பதே கீழோர் பாங்கு அவைகளையெல்லாம் துடைத்து விட்டால் மனம் தானே தேவாலயமாய் விடுகின்றது.

"எண்ணதா எண்ணமெல்லாம்
எண்ணி எண்ணி
ஏழை நெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப்
போதும் பராபரமே"

எனத் தாயுமான அடிகள் கூறியதையும் யாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கொள்ள வேண்டும். எல்லா மதங்களும் இறைவனைச் சென்றடைய வெண்டுமென்ற சிறந்த பாதையையே காட்டி நிற்கின்றது ஆனால் எமது சைவ சமயம் மற்றசமயத்தைச் சார்ந்த வர்களை எம்மதத்திற் சேர்க்க வேண்டுமெனத் திட்டம் தீட்டிச் செயற்படுவதில்லை எமது தாய் தந்தையர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களோ அதுவே எமது மதமாகும்.

இந்து சமயமும் அதனைச் சார்ந்த பண்பாட்டு விழுமியங்களும் உலகெங்கிலும் பரவியிருந்ததை வரலாற்று நூல்களிலிருந்து அறிய முடிகின்றது. மனிதன் இவ்வுலகிற் பிறந்தது தொடக்கம் இறக்கும் வரை சமய ஆசாரங்களை அடிப்படையாகக் கொண்டு கிரியைகளைச் செய்து வருகின்றான். பிறந்த குழந்தையின் 31வது நாள் காதுகுத்து, சோறூட்டல், சமயப்பிரவேசம், ருதுசாந்திக் கிரியைகள், திருமணச்சடங்கு, அபரக் கிரியைகள் எனத் தொடர்கின்றது. இறைவிசு வாசமும் சமயப்பற்றுமுள்ள சைவமக்கள் இவற்றை முறையாகக் கடைப்பிடித்து வருகின்றனர். பாடசாலை மாணவர்கட்குச் சமயக் கல்வியுடன் ஒழுக்கமுடைமையையும் போதித்து வருகின்றனர்.

வெள்ளி விழாக் காணும் எமது றோயல் கல்வி நிலைய இயக்குனரும், கல்வி போதிக்கும் ஆசிரியர்களும் சமயப்பாரம்பரியங்களைக் கடைப்பிடித்தொழுகுவதுடன் மாணவர்களது ஒழுக்நெறி விழுமியங்களை அவதானித்து நெறிப்படுத்தி வருகின்றனர். "அன்பே சிவம்" என்பதை சிந்தை கொண்டு மாணவர்கள் மீது அன்பு செலுத்துவதுடன் நல்லறிவையும் சமயப்பழக்க வழக்கங்களையும் போதித்து வழிகாட்டுவதில் முன்னோடிகளாகத் திகழ்ந்து வருகின்றனர்.

இதனால் மாணவர்களது பெற்றோர்களும் இக்கல்வி நிலையத்தின் மீது பெருமதிப்புடை யோராகத் திகழ்கின்றனர். வெள்ளிவிழாகாணும் இவ்வற நிலையம் பொன்விழா, வைரவிழா, நூற்றாண்டுவிழா காண ஈழத்துசிதம்பர ஆனந்தக் கூத்தனின் அருள் கிட்டுவதாக

**"மேன்மைகொள் சைவநீதி**
**விளங்குக உலகமெல்லாம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கொழிக்கும் கிளிநொச்சி



திரு. கி. மதனேஸ்வரன்
(ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
கோப்பாய்)

ஈழநாடு என அழைக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள புனித நகரமான யாழ்ப்பாணத்தின் தென்கோடியில் அமைந்துள்ள பகுதியே கிளிநொச்சி ஆகும். கடற்கோளால் அழிவடைந்து பண்டைய குமரிக் கண்டத்தில் தனிச்சிறப்புடன் காணப்பட்ட இப்பகுதி, அதிலிருந்து மீண்டு யாழ்ப்பாண நாடு நிலைப்பதற்கு அடிஅத்திவாரமாக திகழ்கின்றது. வடக்கே பச்சிலைப்பள்ளியும் தெற்கே கரைச்சியையும் கிழக்கே கண்டாவளையையும் மேற்கே பூநகரியையும் பிரதேசங்களாகக் கொண்ட கிளிநொச்சி ஆனது வடக்கே யாழ்ப்பாணத்தையும் தெற்கு மற்றும் கிழக்கே முல்லைத்தீவையும் மேற்கே இந்துசமுத்திரக் கடலையும் எல்லைகளாகக் கொண்டு உள்ளது. இங்கு மயோசின் கால அடையற் பாறைகளே அதிகளவில் உள்ளது.

## புவியியல் பின்னணி

மயோசின் கால அடையற்பாறைகளும் வளமுடைய நீர்நிலைகளும் இடையிடையே காட்டும் பரம்பலையும் புதர்களையும் வழுமான மண் தொகுதியையும் சிறுகற் பாறைப் பரம்பலையும் தரைக்கீழ் நீர் அமைப்பையும் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தின் இடையே ஆனையிறவுக்கடல் நீரேரியும் உள்ளது. மாமடுவையில் உற்பத்தியாகும் கனகராயன் ஆறு (பாசியாறு) இப்பிரதேசத்தின் ஊடாகவே பாய்ந்து ஆனையிறவில் கடலோடு கலக்கின்றது. வருடத்தில் ஒரு பகுதி மழையும் மறுபக்கம் வரட்சியும் நிலவுவதனால் சிறப்பான காலநிலையும் உள்ளது. புவிக்கோளத்தின் கிழக்கு, மேற்கு காலநிலை வேறுபாட்டினால் நாடுவிட்டு நாடு தாவும் வெளிநாட்டுப் பறவைகளும் சுண்டிக்குளம் போன்ற பகுதிகளில் காலத்துக்கு காலம் வந்து நிலைகொள்ளுவதும் சிறப்பாகும். இலங்கையிலேயே மிகப் பெரிய உப்புக்கனியம் விளையும் ஆனையிறவும் மீன்கள் அதிகளவிலுள்ள சுண்டிக்குளம், கிளாலி, பூநகரி போன்ற பிரதேசங்களும் இதில் அடங்குகின்றது. இந்துமா கடல் ஊடறுத்துச் சென்றாலும் அமைதியான காற்று நிலவுவதோடு கடலாதிக்கமும் கட்டுப்படுத்தக்கூடிய தர அமைப்பும் கொண்டது.

## புராதன வரலாற்றுப் பின்னணி

இலங்கையிலே இற்றைக்கு 35000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆதி ஹோமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேபியன் மனிதனின் உறைவிடமாக இரணைமடு கருதப்படுகின்றது. கிளிநொச்சியில் இரணைமடு குளத்திற்கு என்ற தனியான சிறப்பும் உள்ளது. இக்குளம் கர்ண பரம்பரைக் கதைகளின்படி "பூதங்கள்" என்று சொல்லப்படுகின்றன. ஒரு வர்க்கத்தினரால் அமைக்கப்பட்டதாகவே கூறப படுகின்றது. இங்கு வாழ்ந்த மக்கள் கண்ணன், சிவன், அம்பாள் போன்ற இந்து தெய்வங் களையே வழிபட்டு உள்ளமைக்கான சான்றுகள் வட்டக்கச்சி, உருத்திரபுரம், வேரவில், பொன்னா வெளி, பல்லவராயன் கட்டு, நாகபடுவான் ஆகிய இடங்களில் காணப்படும் இடிபாடுகள் மூலம் அறிய முடிகின்றது. யாழப்பாண அரசர்கள் வன்னிக்கும் வன்னி அரசர்கள் யாழ்ப்பாணத் திற்கும் பாதுகாப்பு தேடிய காலங்களிளெல்லாம் கிளிநொச்சியை இடைத் தங்கல் நிலையமாகவும் ஆனையிறவு யானைப் படைகள் நிலை கொள்ளும் இடமாகவும் காணப்பட்டது. இதனா லேயே ஆனையிறவு என்னும் பெயரும் வரலாறாயிற்று. அத்துடன் பூநகரி, நல்லூர்ப் பகுதி யாழ்ப்பாணம் மீது அந்நியர்கள் படையெடுக்கும் போது ஆரியச் சக்கரவர்த்திகள் தற்காலிக இராசதானிகளை அமைக்கும் இடமாக திகழ்ந் தமையும் குறிப்பிடத்தக்கது.

## புராதன குடியியல் பின்னணி

ஆதிகால முற்பகுதியில் இரணைமடு, பொன்னாவெளி, பூநகரி, குஞ்சுப் பரந்தன், இயக்கச்சி ஆகிய இடங்களில் பண்டைய காலத்தில் கிராமங்களே காணப்பட்டது. பின்னர் கண்டாவளை, முழங்காவில், கல்மடு போன்ற கிராமங்களும் விருத்தி பெற்றது. இவை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் மக்கள் தமது பாதுகாப்புக்காகவும் குழுக்குழுவாக குழுமி இருந்ததாகவும் வழிபாட்டு அடிப்படை யில் இயக்கர், நாகர் என வேறுபாடு இருந்த தாகவும் கூறப்படுகின்றது.

## இலங்கை அரசர்களும் கிளிநொச்சியும்

கிளிநொச்சி என்ற தனிப்பெரும் பிரதேசத்தை எல்லாளன் என்ற தமிழ் மன்னனே தனது ஒரு நிர்வாக அலகாகக் கொண்டு ஆட்சி செய்தான். வசபன், கஜபாகு, மகாபராக்கிரமபாகு, 2ம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் யாழ்ப்பாணத்துடன் இணைந்து இறையாண்மையை மதித்தே தமிழ் பிரதி நிதிகளை நியமித்து ஆட்சி புரிந்தனர். வசபன், இஸகிரி என்பவரையும் 2ம் பராக்கிரமபாகு யாவன் என்பவனையும் பிரதிநிதிகளாக நியமித்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 6ம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தி கிளிநொச்சியில் பாதுகாப்பு தேடினான். பண்டார வன்னியனும் ஆங்கிலேயர் முல்லைத்தீவைக் கைப்பற்றிய வேளை கிளிநொச்சி கல்மடு பகுதியில் படைகளை ஒன்றிணைத்ததாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் ஆண்ட காமினி போன்ற சிங்கள அரசர்களும் அனுராதபுர காலத்தில் கிளர்ச்சிகளுக்கு அஞ்சி இப்பிரதேசத் தில் வாழ்ந்துள்ளனர். அரபு நாட்டு இபின்பதூதா கி.மு. 1344ல் ஆரியச் சக்கரவர்த்திகளின் உதவியோடு பூநகரி ஊடாகவே சிவனொளிபாத மலையைத் தரிசிக்கச் சென்றதாகக் கூறப்படு கின்றது.

## ஐரோப்பியரின் ஆதிக்கமும் கிளிநொச்சியும்

1621 இல் யாழ்ப்பாணம் போர்த்துக்கேய ரிடம் வீழ்ச்சி கண்டதை அடுத்து கிளிநொச்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தனித்துவத்தை இழக்கத் தொடங்கியது. பழைய கண்டி வீதி எனப்படும் அம்பலகாமம், வட்டக்கச்சி, கண்டாவளை எனக் கிளிநொச்சிக்கு கிழக்கே காணப்பட்ட இவ்வீதியை போர்த்துக் கேயரும் தொடர்ந்து ஒல்லாந்தரும் பயன்படுத் தினர். பண்டார வன்னியனைத் தோற்கடித்த பிரித்தானியர் தற்போது உள்ள கிளிநொச்சி ஊடான கண்டி வீதியை அமைத்து பயன்படுத்தத் தொடங்கியதால் கிளிநொச்சியும் வளர்ந்தது. ஆனையிறவு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் பிரதான காவல் அரண் அமைந்திருந்த பகுதியானது இதன் மூலம் கிளிநொச்சியுடன் யாழ்ப்பாணம் இடையறாத தொடர்பாக இருந்தால் தமது ஆதிக்கம் தோல்வியடையும் எண்ணியமையை உணர முடிகின்றது.

1796இல் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்த ரிடம் இருந்து மீட்ட பிரித்தானியர் சுதேச நீர்ப்பாசனத்தை மேம்படுத்தும் 1900ம் ஆண்டு திட்டத்தின் கீழ் இரணைமடுக் குளமும் புனரமைக்கப்பட்டது.

**சுதந்திரத்தின் பின்னர் கிளிநொச்சி**

1948ல் பிரித்தானிய காலணித்துவத்தில் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்தது. சுதந்திரம் முதல் 1985வரை யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. இக்காலத்தில் வடக்கின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு படித்த வாலிபர் திட்டங்கள் 1970ல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா அரசினால் கொண்டு வரப்பட்டதன் அடிப்படையில் திருவையாறு, உருத்திரபுரம், பிரமந்தனாறு. அக்கராயன் ஆகியன முதல் கட்டமாக உள்வாங்கப்பட்டு பொதுவாக யாழ்ப்பாணத்திலிருந்து படித்து வேலையின்றி இருந்த இளைஞர் யுவதிகள் வரவழைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். அத்துடன் 1977ல் ஆட்சிக்கு வந்த J.R. ஜெயவர்த்தனா அவர்கள் பரந்தனின் ஒரு இரசாயனத் தொழிற்சாலையை நிறுவி வேலை வாய்ப்புக்களை வழங்கியதால் யாழ்ப்பாணத்தில் கல்விகற்ற உயர் சமுதாயம் கிளிநொச்சி நோக்கி நகர்ந்தது. இதனால் கல்வியிலும் மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது.

1983ல் ஏற்பட்ட யூலைக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டின் தெற்கே உள்ள தமிழ் மக்களின் ஒரு தொகுதயினரும் பாதுகாப்புத் தேடி கிளிநொச்சியில் வந்து குடியேறினர். மக்கள் தொகை நிலத்தொடர்பு, வளங்கள் என்பவற்றின் அடிப்படையில் 1985ல் கிளிநொச்சி தனி மாவட்டமாக்கப்பட்டு இலங்கையின் 25வது மாவட்டமாக இணைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விவசாய நீர்ப்பாசனம் மேலும் எழுச்சியடைந்தது. இரணைமடுக்குளம், கரியாலை நாடுபடுவான் குளம் எனக் குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு விவசாயமும் மேம் படுத்தப்பட்டது. இலங்கையின் நெற்செய்கையில் முன்னணி வகிக்கும் மாவட்டங்களில் ஒன்றாக கிளிநொச்சியும் உள்ளது. 1995 - 2009 வரை பல வெளிநாட்டவரைக் கவர்ந்த இடமாகவும் கிளிநொச்சி இருந்ததென்றால் அது மிகையாகாது. 2007 - 2009 வரை உள் நாட்டுப் போரினால் பாரியளவில் கிளிநொச்சி பாதிக்கப் பட்டதாயினும் தற்போது மீண்டெழுந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்களின் குடிநீர்த் தேவைக் காக இலங்கையின் மிகப்பெரிய குளங்களில் ஒன்றாக இரணைமடுக்குளம் வெளிநாட்டவரின் (ஆசிய அபிவிருத்தி, உலக வங்கி) உதவியுடன் அபிவிருத்திப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள் ளமையும் யாழ்ப்பாணம் தென்பகுதியையும் இணைக்கும் A9 வீதி, புகையிரத வீதி, இரணைமடு விமான நிலையம் எனபனவும் இம்மாவட்டத்தின் சிறப்பிற்கு மேலும் காரணங் களாகின்றது.

இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் வளர்ச்சி கண்ட பிரதேசங்களாக கிளிநொச்சி, வட்டக்கச்சி, தர்மபுரம், பரந்தன், பளை, உருத்திரபுரம், ஸ்கந்தபுரம், முழங்காவில், பூநகரி என்பன திகழ்கின்றது. தமிழ் மக்களே பெரும்பான்மை யாக வாழும் இப்பகுதியில் கல்விமான்களின் தொகையும் படிப்படியாக அதிகரித்து வருவதுடன் தமிழர் பாரம்பரியம், கலாசாரம், பண்பாடு என்பனவும் பாதுகாக்கப்படுகின்றது. சமுதாய வளர்ச்சிக்காக யோகர் சுவாமிகளால் ஆரம்பிக்கப் பட்ட மகாதேவா ஆச்சிரமம் மற்றும் கருணா நிலையம், நவஜீவன அன்னை இல்லம் என்பன ஏழை மாணவர்களின் கல்வியிலும் குறிப்பிடத் தக்க செல்வாக்கை செலுத்துகின்றது. அத்துடன் புகழ்பூத்த பாடசாலைகளும் நகரை அண்மித் துள்ள ஒரு சில கல்வி நிலையங்களும் மாணவர் கல்வியின் தூண்டுகோலாகத் திகழ்கின்றது. உள்நாட்டுப் போரினால் பல கல்விமான்களை இழந்த இப்பிரதேசம் அதிலிருந்தும் மீண்டு வெகுவாக வளர்ந்து வருவதும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வாழ்விடங்கள், வீதிகள், மின்சாரம், தொழில் நிறுவனங்கள் என்பன வற்றின் விருத்தியும் கிளிநொச்சியை வளம் கொழிக்கும் பிரதேசமாக மாற்றி வருகின்றது என்பதிலே எவ்வித ஐயமுமில்லை.

**உசாத்துணை நூல்கள்**

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை - யாழ்ப்பாண சரித்திரம்
கமலா குணராசா - இலங்கை வரலாற்றுத் தொகுப்பு
கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - இலங்கையின் சுருக்க வரலாறு

நம் துன்பங்கள் அனைத்திற்கு பெரும் காரணம் அச்சம்தான்.
அச்சமின்மையோ ஒரு நொடியில் சொர்க்கத்தின் அருகில் கொண்டு செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுர கிராமமும் கல்வி நிலையமும்



திரு. அ. கனகரத்தினம்
(ஓய்வு பெற்ற அதிபரும்
சமாதான நீதவானும்)

கனகபுரம் கிராமத்தில் இயங்கிவரும் றோயல் கல்வி நிலையம் கிளிநொச்சி மாவட்ட கல்வி நிலையங்களுக்கு முன் மாதிரியாக செயற்பட்டு வருவதனால், கனகபுரம் கிராமத் தைப் பற்றி சில குறிப்புகள் சொல்வது சாலப் பொருத்தமாகும்.

1956ம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் தனிச் சிங்களம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. இதனால் தமிழ் இளைஞர்கள் மிகவும் பாதிக்கப் பட்டார்கள். இளைஞர்கள் ஒன்று கூடி கிளிநொச்சிக்குச் சென்று விவசாயத்தில் ஈடுபட எண்ணினர். இளைஞர்களின் மனஎழுச்சியி னால் கனகபுரம் கிராமம் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த உயர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களும், பச்சிலைப்பள்ளி, கரைச்சிப் பிரதேச உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு. முருகேசம்பிள்ளை அவர்களினதும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. குமாரசாமி அவர்களினதும் முயற்சியினால் கனகபுரம் கிராமம் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண சித்தர் பரம்பரையின் தவமுதல்வர் யோகர் சுவாமிகள் "எல்லோரும் கிளிநொச்சிக்குப் போங்கள்" நாங்கள் எல்லோரும் அங்கேதான் போகப் போகிறோம் என்று கூறி வந்தார். எக்காலமும் அறிந்த ஞானியின் கூற்றை முழுமையாக உணர்ந்த சுவாமிகளுடைய அணுக்கத் தொண்டரும், அரசாங்க அதிபருமாகிய உயர்திரு.ம.ஸ்ரீகாந்தா அவர் களினால் கனகபுரம் படித்த வாலிபர் மேட்டு நிலக் குடியேற்றத்திட்டம் ஆரம்பமானது.

1958ம் ஆண்டு ஆடி அமாவாசைத் தினத்தில் கனகபுரம் கிராமம் ஆரம்பிக்கப்பட்டது. கனகபுரம் கிராமம் 11 பண்ணைகளைக் கொண்டது. முதலாம் பண்ணை 1958ம் ஆண்டும், 1959ம் ஆண்டு 2ம், 3ம், 4ம் பண்ணைகளும், 1960ம் ஆண்டு 5ம் பண்ணையும் ஆரம்பிக்கப்பட்டது.

1958ம் ஆண்டு கனகபுரம் கிராமம் ஆரம்பிக்கும் போது அக்காலத்தில் கிளிநொச்சி யில் இருந்து வட்டக்கச்சிக்கு செல்லும் பாதையில் (சந்தியில்) ஒரே ஒரு பலசரக்குக் கடை (காக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை) கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் ஒரு தேநீர்க் கடையும் (செல்லையா கடை) போன்றவை மாத்திரமே இருந்தன. யானையும், கரடியும், மானும், மரையும், பன்றியும், பலவிதமான பாம்புகள் யாவும் நிறைந்த இடமாக கிளிநொச்சி காணப்பட்டது.

திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் வட்டக்கச்சி, அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம், முத்தையன்கட்டு, விசுவமடு, திருவையாறு குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. மேற்படி குடியேற்றத் திட்டங்களும், அதற்கு முன்பு இருந்த குடியேற்றத் திட்டங்களான கணேசபுரம் பரவிப்பாஞ்சான், ஜெயந்தி நகர், உருத்திரபுரம் 8ம் வாய்க்கால், குடியேற்றத் திட்டங்களும் படிப்படியாக முன்னேறி இன்று தற்போதுள்ள நிலைக்கு வந்துள்ளது. வட மாகாணத்தில் கிளிநொச்சி முக்கிய நகரமாகத் திகழ்கின்றது.

கிளிநொச்சி 1986ம் ஆண்டு தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு சகல துறைகளிலும் சிறந்து விளங்கி வருகின்றது. கிளிநொச்சி மாவட்டம் வளர்ந்து வரும் காலங்களில் 1964ம் ஆண்டு மார்கழி மாதம் 24ம் திகதியும், 1978ம் ஆண்டு கார்த்திகைமாதம் 23ம் திகதியும் கடுமையான சூறாவளியாலும் 2004ம் ஆண்டு சுனாமியினாலும், 1986, 1990, 1996, 2008ம் ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினாலும் கடும் பாதிப்பு ஏற்பட்டது. இங்கு வாழ்ந்து வருகின்றவர்களின் விடாமுயற்சியினாலும், தன்னம்பிக்கையினாலும், தற்போது இந்நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். மக்களின் விடாமுயற்சி, துணிவு, தன்நம்பிக்கை, அவர்களை இப்போதும் வாழ வைக்கின்றது.

1960ம் ஆண்டு நாங்கள் கிளிநொச்சிக்கு வந்தபோது கிளிநொச்சி வளர்ந்து வரத் தொடங்கியது. கிளிநொச்சிக்கு தனி உதவி அரசாங்க அதிபர்பிரிவு, தேர்தல்தொகுதி என்பன அமைக்கபபட்டிருந்தன. இக்காலம் அரச அதிகாரிகளின் நடமாட்டமும், அபிவிருத்தியும் தொடங்கிய காலம், ஆனால் அரச அலுவலர்கள் இருப்பதில்லை என்ற குறை நிலவிய காலம். அவர்கள் நாங்கள் இங்கு வந்து தங்குவதற்கு ஒரு நல்ல பாடசாலை இல்லை, வைத்திய சாலை இல்லை என்று குறைபட்டுக் கொண்டிருந்தனர்.

1983ம் ஆண்டு வரலாறு காணாத இனக் கலவரத்தை இலங்கை கண்டது. 1985இல் கல்வி முறையில் கொத்தணி முறை வந்தது. 1986ம் ஆண்டு கிளிநொச்சி தனி மாவட்டம் ஆனது. இவை மூன்றும் கிளிநொச்சி கல்வி வளர்ச்சியில் படிக்கற்கள் ஆகும். கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தின் கீழ் கொத்தணி முறை வந்த பின் கல்வியில் வளர்ச்சி ஏற்பட்டது. ஆரம்பக் கல்வியும், பொதுவான கல்வி வளர்ச்சியும் இவற்றை வெளிப்படுத்தின. ஆனால் இடைநிலைக் கல்வியில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் குறைபாடு காணப்பட்டது. இக்குறையைப் பின்னர் போக்கிய தனியார் கல்வி நிலையங்கள் அன்று தோற்றம் பெறவில்லை. இது பெரிய குறைபாடாகக் கணிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 இல் கல்வி நிர்வாகம் தொண்டர் ஆசிரியர் நியமனங்களைத் தடை செய்ய வில்லை. வசதியான பாடசாலைகள் போதுமான தொண்டர் ஆசிரியர்களை நியமித்து கல்வியை வளர்த்தனர். தொண்டர் ஆசிரியர்கள் ஆரம்பக் கல்வியை வளர்க்க உதவவில்லை. கணித விஞ்ஞான, ஆங்கில பாடங்களுக்கு பாடசாலை களில் கடும் தட்டுப்பாடு நிலவியது. இக்குறை யை காலமறிந்து றோயல் கல்வி நிலையம் போக்கியது. இக்கல்வி நிலையத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமையான ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர். இக்கல்வி நிலையம் பொறுப்பாளர் ஒரு சிறந்த கணித பாட ஆசிரியராக இருந்தார். இவர் பாடசாலையில் பணி புரியாதவராக இருந்த போதும் பாடசாலைக் குறைபாடுகளையும், தேவைகளையும், நன்கு அறிந்தவராக பெற்றோ ரால் கணிக்கப்பட்டார். கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அத்தியாவசியமான பாடங்கள் யாவற்றையும் இங்கு கற்று பரீட்சையில் சித்தியடைந்து உயர் கல்வி கற்கத்தக்கதாக இருந்தது.

1986ம் ஆண்டு முதல் பாடசாலைக் கல்வியை நாட்டில் ஏற்பட்ட அவலநிலை பெரிதும் பாதித்தது. பாடசாலை நாட்கள் அவலமாகவே கழிந்த நாட்களும் உண்டு. எறிகணை வீச்சாலும், குண்டு வீச்சாலும் பாடசாலை குழம்பும், ஆனால் இக்கல்வி நிலையம் தன் பணியைத் தொடரும். பாடசாலைக்கு ஒழுங்காக போகாவிடினும் றோயல் கல்வி நிலையத்திற்கு நாள் தவறாது சென்று கல்வி கற்று மாணவர்கள் பலமடைந்தனர்.

இக்கல்வி நிலையத்தில் ஆண்டு தோறும் பரிசளிப்பு விழா, ஆசிரியர் தினம், சரஸ்வதி பூசை, உயர்தர மாணவர் ஒன்றுகூடல் என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இந் நிகழ்வுகள் நடைபெறும் காலங்களில், மாணவர் களினதும், ஆசிரியர் களினதும் கலைத்திறன் வெளிக்கொண்டு வரப்படுகின்றது.

இங்கு நடைபெற்ற முக்கிய நிகழ்வு களில், முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மதிப்பிற்குரிய தி. இராசநாயகம், முன்னாள் கல்விப் பணிப்பாளர் அமரர் பொன் சபாபதி, கிளிநொச்சி மாவட்ட முன்னாள் கணக்காளர் ப.ஜெயராசா முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ம.பத்மநாதன் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தற்போதய வடமாகாண சபை கல்வி அமைச்சர் த. குருகுலராசா ஆகிய முக்கிய கல்விமான்கள் பிரதம விருந்தினர்களாக நிகழ்வுகளுக்கு வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்ததோடு, றோயல் கல்வி நிலைய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரையும் வாழ்த்திச் சென்றதும் மிகவும் பாராட்டுக்குரியது.

க.பொ.த.சாதாரண தரப் பகல் நேர வகுப்பு, பாடசாலை செல்லாத மாணவர் களுக்காக நடாத்தப்பட்டு வருகின்றது. பகல் நேர வகுப்புகளில் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட மாணவர்கள் பங்குபற்றி சிறந்த பெறுபேற்றைப் பெற்று வருகின்றார்கள்.

ஆரம்ப காலம் முதல் க.பொ.த சாதாரண தர மாணவர்களின் திறமையால் முதன்மைப் பெறுபேறுகள் இக்கல்வி நிலையத்தில் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ற மாணவர்களினாலேயே பெறப்பட்டு வருகின்றதும் குறிப்பிடத்தக்க விடயம் ஆகும்.

பூப்பந்தாட்டம், கரம், டாம், சதுரங்கம், மேசைப்பந்து, மென்பந்து, உதைபந்து, கலை நிகழ்வுகள் எல்லாவற்றிலும் போட்டிகள் வைத்து பரிசளிப்பு விழா வருடா வருடம் நடைபெறும் போது பரிசில்கள் வழங்கி மாணவ, மாணவிகளை மென் மேலும் ஊக்கப்படுத்தி வருவதும் மிகவும் பாராட்டப்பட வேண்டியது.

இக்கல்வி நிலையம் தரமான உயர்தரப் பாடசாலையைப் போல் செயற்பட்டு வருவதை எல்லோரும் பாராட்டி வருகின்றார்கள். இக்கல்வி நிலையம் வருங்காலங்களிலும் பல சாதனை மாணவ மாணவிகளை உருவாக்க எல்லாம் வல்ல இறைவனின் அருள் கிட்ட வேண்டு மென்றும், எனது நல்லாசிகளையும் தெரிவித்து இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

**"வாழ்க றோயல் கல்வி நிலையம்**

**வளர்க மாணவ மாணவிகளின் கல்வி"**

நன்றி

## பழவகைகளும் இவற்றை உண்பதால் அடையும் பலாபலன்களும்

**அன்னாசிப்பழம் :**

அஜீரணம், மலக்கட்டு, இருமல், வாய்நாற்றம், வாதநோய் என்ப வற்றை நீக்கும். உடம்பு, எலும்பு, பல் போன்றவற்றைப் பலப் படுத்தும்.

**அப்பிள்பழம் :**

தாகம், உடல்வரட்சி, வயிற்று அழற்சி போன்றவற்றை நீக்கும்.
குடல்புண், பேதி, இரத்தபேதி, தள்ளுமூலம், வயிற்றுப்புண், வாய்ப் புண் போன்றவற்றைக் குறைக்கும்.

**இலந்தைப்பழம் :**

வாந்தியை நிறுத்துவதுடன் உடலுக்கு வலுவைக் கொடுக்கும்.

**எலுமிச்சம்பழம் :**

வாந்தி, மயக்கம், பித்தம், வயிற்றுப்புண், வாயுக்கோளாறு, மூலக் குத்து, வயிற்றுப்போக்கு, இருமல், சிறுநீரகநோய், வயிற்றுவலி, வாய் நாற்றம், பல்ஆட்டம், தூக்கமின்மை, கண்நோய் போன்றவற்றைநீக்கும்.

**கொய்யாப்பழம் :**

வயிற்றுப்புண், மலக்கட்டு, வயிற்றுக்கோளாறு, இருதய படபடப்பு, தோல் கோளாறு என்பவற்றை நீக்கும். மூளை, எலும்பு, உடல் என்பன பலமடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் கல்வி நிலை



திரு. ந. சோதிநாதன்
முன்னாள் அதிபர்
கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்

இக்கல்வி நிலையம் உருவாக்கப்பட்ட காலத்தில் கல்வி எந்த நிலையில் இருந்தது என்பதை அறிந்தால், இந்தக் கல்வி நிலையம் தோன்றிய நோக்கத்தை, நாம் அறிந்து கொள்ள முடியும். சென்ற ஆண்டு கல்வி பொது தராதர சாதாரண தரப்பரீட்சையின், பின் கல்வி அமைச்சர் வெளியிட்ட அறிக்கையில் இப்பரீட்சை யில் 50% வீதமான அளவில் மாணவர் சித்தி யடையவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அதே போன்று கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கிளிநொச்சி மாவட்ட சாதனையாளர் விழா அறிக்கையில் கிளிநொச்சியின் கல்வி நிலை எவ்வாறு உள்ளது என்பது குறிப்பிடப்பட்டுள்ளார். இந்தத் தேசியமட்ட கல்வி அறிக்கையும் மாவட்டக் கல்வி அறிக்கையும் கல்வி நிலையின் சுட்டிகள் இவை இன்று என்றால் இருபத்தைந்து ஆண்டுகளின் முன் கிளிநொச்சியில் கல்விநிலை மிகவும் தாழ்ந்திருந்த ஒரு கட்டத்தில் 05. 10. 1990 ல் கல்விச் செயற் பாட்டிற்கு ஒரு உதவு கரமாக உந்து சக்தியாக தொடங்கப்பட்டது தான் றோயல் கல்வி நிலையம்.

04.02.1986ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டம் இலங்கையின் இருபத்தைந்தாவது மாவட்டமாக வட இலங்கையின் புதிய மாவட்ட மாக உருவானது இம்மாவட்டம் நிறுவ முக்கிய காரணியாக அமைந்தது, கல்வியில் நிலவிய பின்னடைவே. இதற்கு முன்னர் யாழ்மாவட்டத் தோடு கிளிநொச்சி இணைந்து இருந்தது. கிளிநொச்சி நியமிக்கப்பட்ட கல்விப் பணிப் பாளர்கள் கூட இரண்டு மாவட்டங்களை முகாமை செய்பவர்களாக இருந்தனர். இக்காலங் களிலும் கல்வியின் அபிவிருத்தி ஏதும் ஏற்பட வில்லை கிளிநொச்சியில் குடியேற்றங்கள் ஏற்பட்டு 35 ஆண்டுகளான போதும் ஆரம்பக் கல்வியைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத சூழலே நிலவியது கல்வியிற் கருசினை உள்ள யாழ்ப்பாண சமூகத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் வசதி படைத்தவர்கள் பிள்ளைகளை உறவின ருடன் வாழவைத்து ஊர்ப் பாடசாலைகளில் சேர்த்து பிள்ளைகளைக் கல்வி கற்க வைத்த னர். பெரும்பான்மையினரான சாதாரண குடி மக்கள் கிளிநொச்சிப் பாடசாலைகளையே நம்பி இருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேயர் காலம் முதல் சைவச் சான்றோர்களும், சமய நிறுவனாங் களும் நிர்வகித்து வந்த பாடசாலைகளில் கல்வி

உயர் நிலையில் இருந்தது அதுவும் 1960களில் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டதன் பின் நலிவடைந்தது பழைய பராமரிப்பும் கட்டுப்பாடும் தொடராததால் கல்வி இந்நிலையடைந்தது. யாழ்ப்பாண சமூகம் பல்வேறு தொடர் நட வடிக்கைகளை மேற்கொண்டு கல்வி நிலையை மேம்பட்ட நிலையில் பேணிவந்தது. கிளிநொச்சி யில் புதிய கிராமங்கள், புதிய அயலவர்கள் புதிய வாழ்க்கை முறை இத்தகைய மாறுபாடுகளாற் பர்திப்புற்ற சமூக வாழ்க்கை இருந்தாலும் யாழ்ப்பாணம் போன்று அமையாதுபோனாலும் மிக குறைந்த அளவிலான எண்ணிக்கையை யுடைய பாடசாலைகள் சமய அமைப்புகளால் நடாத்தப்பட்டன. ஏனையவை யாவும் அரச பாடசாலைகளே; கல்விக்கு யாழ்ப்பாண ஆசிரியர்களையே நாடி நிற்கவேண்டியிருந்தது அவர்களோ ஊர் விட்டுப் புறப்படாத் பாரம் பரியத்தைச் சார்ந்தவர்கள் இவற்றால் பாரிய ஆசிரியர் பற்றாக்குறையுடனும் வளக் குறைபாடு களோடும் பாடசாலைகள் இங்கு இயங்கி வந்தன. இலங்கையின் வேறெந்தப் பாகத்தை யும் விட கிளிநொச்சியில் கணித விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை மிக நீண்ட காலமாகத் தொடர்ந்தது.

இத்தகைய நிழலில் ஆரம்பிக்கப்பட்ட றோயல் கல்வி நிலையத்தின் தேவை, சேவை என்பன பெற்றோரால் நன்குணரப்பட்டிருந்தன றோயல் கல்வி நிலையப் பொறுப்பதிகாரி திரு. குமார் மாவட்டத்திலேயே ஒரு சிறந்த கணித பாட ஆசிரியராக ஏற்கப்பட்டிருந்தார். இவருடைய தம்பியாரும் இவர் போன்று கணித பாட விற்பனர் சிறந்த மாணவர்களும் சேர்ந்து கணித பாட ஆசிரியர் அணி றோயல் கல்வி நிலையத்திற்கு வளம் சேர்த்தன. ஏனைய பாடங்களுக்கும் சிறந்த ஆசிரியர் குழாம் ஒன்றைக் கொண்ட கல்வி நிலையமாக உதய நகரில் எட்டு ஆசிரியர்களுடன் ஒரு முழுமையான கல்வித் தேவைகளை நிறைவு செய்யுங்கூடமாக தொடர்ந்தது கல்வித் தேவைக்கான விடாயோடு இருந்த பெற்றாருக்கு இது நம்பிக்கையூட்டும் கல்வி நிலையமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக்கல்வி நிலையத்தில் ஏற்படுத்தப் பட்டிருந்த ஒழுக்க கட்டுப்பாடு, நேரந் தவறாத பணி மாணவர் நலனில் மிகுந்த ஈடுபாடு, என்பன மிக விரைவாக கிளிநொச்சியில் ஒரு சிறந்த கல்வி நிலையமாக நிலைநாட்டியது கல்விச் செயற்பாடு போன்று இணை பாட முயற்சிகளான றோயல் கலாமன்றம் றோயல் இளைஞர் கழகம் என்பனவும் இக்கல்வி நிலை யத்தை மேம்படுத்தின. இக்கல்வி நிலையத் திற்கென ஒரு கொடி, ஒரு கீதம் என்பனவும் மாணவரிடையே ஒன்றிணைந்த உணர்வை வளர்த்தன. கல்வி நிலைய நிர்வாகக் கட்ட மைப்பை பொறுப்பாளர் குமார் சீரிய முறையில் கையாண்டார். மாணவர்களின் விபரம், தேவை என்பவற்றை மாணவர் மத்தியில் புகழ்பெற்ற ஆசிரியை புவனா செயற்படுத்தினார். இவர்கள் இருவருக்கும் மாணவர் நலனில் ஒத்த சிந்தனை ஒருங் கமைந்த செயற்பாடு என்பன இவர்களை வாழ்க்கையிலும் ஒன்றிணைய வைத்தது. இவர்கள் இருவரும் பகிரங்கமாகப் பலர் முன்னிலையில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். இதன் பின் கல்வி நிலையம் வளமும் பலமும் பெற்று சீரும் சிறப்பு மாக வளர்ந்தோங்கியது.

இக்கல்வி நிலையப் பொறுப்பாசிரியர் குமார் ஒரு விளையாட்டு உத்தியோகத்தர். அவர் இணைபாட முயற்சியில் உள்ளக விளையாட்டுக் களான சதுரங்கம், கரம், பூப்பந்தாட்டம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக்களில் மாணவரிடையே போட்டி நடாத்தி ஆண்டு தோறும் பரிசளிப்புவிழா நடாத்தி வருகிறார். தனியாக கல்விமாத்திரம் பயிலாமல் பிற விளையாட்டு, கலை ஈடுபாடு என்பன கல்வியை வளர்த்து மனித வளமேம் பாட்டை ஏற்படுத்தும் என்ற புரிந்துணர்வோடு இங்கு கல்வி கற்று வருகின்றனர்.

மேலும் இக்கல்வி நிலையத்தில் வகுப்பு ரீதியாக ஆண்டு தோறும் பரீட்சை நடாத்தி முதல் மூன்று மாணவர்களுக்கும் பரிசளித்து வருகின் றன. 1994ம் ஆண்டு நடந்த கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சையில் கிளிநொச்சி யில் முதல் முதலாக ஜெயராசா என்ற மாணவர் 4A பெறுபேற்றைப் பெற்றார். பின்னர் இவர் மாவட்டச் செயலகத்தில் கணக்காளராகப் பணி புரிந்த வேளை கல்வி நிலையத்திற்கு அழைத்து மதிப்பளிக்கப்பட்டார். அப்போது அவர் தனது கல்வி முன்னேற்றத்தில் றோயல் கல்வி நிலையம் ஆற்றிய உயர்ந்த பணியை சுட்டிப் பேசினார்.

இங்கு நிகழ்ந்த சிறப்பான பணி ஒன்றைக் குறிப்பிட வேண்டும். பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு பகல் வேளையில் பாடசாலை நேரத்தில் வகுப்புகள் நடைபெறும் இதில் கலந்து கொண்ட பாலசுப்பிரமணியம் சுதர்சன் என்ற மாணவன் 10A பெறுபேற்றை பெற்றான். இது இக்கல்வி நிலையம் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு ஆற்றிய பணியின் வெளிப் பாடாகும். அத்தோடு ஒவ்வொரு ஆண்டும் கல்வி பொது சாதரண தர பரீட்சையில் மாவட்டத்தில் முதன்மை பேறுகளை இக்கல்வி நிலையம் பெற்று வந்துள்ளது.

2014ம் ஆண்டு நடந்த கல்விப் பொது சாதாரணதரப் பரீட்சையில் கணித பாடத்தில் தோற்றிய மாணவர்களில் 40 பேர் A தர பெறு பேற்றைப் பெற்றது சிறப்பு அம்சமாகும். இதைவிட மூன்று பேர் 9A ஐந்து பேர் 8AB பெறுபேறு களைப் பெற்றது. இம்மாவட்டத்தில் இன்றும் இக்கல்வி நிலையம் ஆற்றிவருகின்ற கல்விப் பணியைச் சுட்டுவதாகும் இக்கல்வி நிலையம் இன்று போல கடந்த 25 ஆண்டுகளில் சிறந்த கல்விப்பணியாற்றி வந்ததை கிளிநொச்சி கல்விச் சமூகம் அறியும்.

இவர்களின் கல்விப் பணி மாணவர் நலன் கருதியது மக்கள் இடம் பெயர்வுகளில் இடர்பட்டபோது பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர் பெரிதும் கவலை கொள்வர் இவர்களுடைய துன்பத்தை நீக்கும் நோக்கோடு மக்கள் 1996ல் மேற்கு நோக்கி நகர்ந்த போது ஸ்கந்தபுரத்திலும் பின்னர் மிக மோசமான இடப் பெயர்வொன்று வந்து கிழக்கு நோக்கிய போது 2009ல் தருமபுரத்திலும் கல்வி நிலையத்தை நடாத்தி யதை மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

மாணவர்கள் கல்வியோடு சமூகஞ் சார்ந்த நலன்களில் அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக கிளிநொச்சி கிருஷ்ணர் கோவில் சிரமதானத்தில் ஈடுபடுத்தப் பட்டனர். அதேபோல கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் பல்முறை இப்பணியை மேற் கொண்டனர். இன்று கனகபுரத்தில், சொந்த இடத்தில், சித்திரம், சங்கீதம் உட்பட சகல பாடங்களிலும் 24 ஆசிரியர்களோடு கூடிய ஈடுபாட்டோடு இயங்கி வருகிறது. மாணவர் தொடர்ந்து பயன்பெற்று வருகின்றனர். பெற்றோர் றோயல் கல்வி நிலையம் இருக்கிறது என்ற அமைதியோடு தங்கள் தொழிலைச் செய்கின்றனர்.

**"வளர்க றோயல் கல்வி நிலையம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "றோயல்" கிளிநொச்சியின் கல்விக்கான ஒரு அடையாளம்



திரு. கருணாகரன்
எழுத்தாளர்

கல்வி என்பது அறிதலுக்கும் ஆற்றல் விருத்திக்கும் ஒழுக்கத்திற்குமுரியது என்பதால் தான் படித்தவர்களிடத்தில் கூடுதலாக இந்த மூன்று விடயங்களும் இருக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதிலும் ஒழுக்கத்தை கூடுதலாக எதிர்பார்க்கின்றார்கள். படித்த மனிதர் என்றால் பண்பாக நடக்க வேண்டும்' என்றும் நியாயமற்று நடக்கும்போது 'படிச்ச மனிதருக்கு ஏற்றமாதிரிக் கொஞ்சமாவது நியாயமாக, பண்பாக நடந்து கொள்ளுங்கள்' என்றும் சமூகம் வலியுறுத்திக் கூறுவது இந்த அடிப்படையிலேயே! கல்வி என்பது திறன்களையும் ஆற்றல்களையும் அறிவையும் வளர்ப்பதுடன் கூடவே பண்பையும் ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டும். ஆகவே தான் ஒழுக்கம் குறித்து இந்தக் கூடுதல் எதிர்பார்ப்பு.

கல்வியின் மூலமாகப் பெறும் அறிவு மட்டும் போதுமானதாக இல்லை. அந்த அறிவைப் பயன்படுத்துவதற்கான ஆற்றல் அவசியம் தேவை. இல்லையென்றால், பெற்றுக் கொண்ட அறிவு அவருடன் மட்டுப்படுத்தப்பட்டு விடும். அது ஒரு சுய அனுபவமாக மட்டும் சுருங்கிக் கொள்ளும். அதனால் பெரிய நன்மைகளோ பயன்களோ யாருக்கும் எட்டாது. ஆகவே பெற்றுக்கொண்ட அறிவைப் பயன்படுத்தும போதுதான் அது சமூகமயப்படுகிறது. அதனால் அடுத்த கட்ட வளர்ச்சி ஏற்படுகிறது. இதற்கு ஆற்றல் அவசியம். ஆற்றல்தான் செயற்பாடுகளைத் துலக்கமடையச் செய்யும். துலக்கமடையும் செயற்பாடுகள் மூலமாகத்தான் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் எட்ட முடியும். இதற்கெல்லாம் அடிப்படையாக இருப்பது ஒழுக்கம். ஒழுக்கம் இல்லையென்றால், ஒழுங்கு குலையுமாக இருந்தால் எல்லாமே தலைகீழாகி விடும். எனவே ஒழுக்கத்தைப் பேணுவதன் மூலமே எதையும் செய்யமுடியும். ஒழுங்கு குலையும்போது எல்லாமே சிதைந்து விடுகிறது.

இந்த ஒழுக்கம் இரண்டு விதமாகத் தொழிற்படும். ஒன்று நிர்வாக ரீதியாக பேணப்படுகிற, நிர்ணயம் பெறுகின்ற சட்ட அமைவோடு இணைந்த ஒழுங்கு. இன்னொன்று நமது அகத்தில் ஏற்படுகின்ற - ஏற்படுத்தப்படுகின்ற ஒழுங்கு. இந்த இரண்டு ஒழுங்குகளும் ஒன்றிணைந்து தொழிற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தான் அறிவும் ஆற்றலும் அதற்கான வினைதிறன்களைப் பெறும். கல்வியில் உரு வாகும் ஒழுங்கு என்பதும் ஒழுக்கம் என்பதும் அகரீதியாக உருவாகுவதாகும். இதில்தான் கல்வித் துறையும் அந்தத் துறையில் இயங்கு வோரும் கூடுதலான பங்களிப்பைச் செலுத்த வேண்டியுள்ளது.

கற்றலிலும் கற்பித்தலும் முன்னே சொன்ன இந்த மூன்று அடிப்படையான விசயங்களும் முக்கியம் பெறுகின்றன. ஆனால், இவற்றை எல்லாக் கல்வி மையங்களும் உரிய முறையில் பின்பற்றுவன என்று சொல்ல முடியாது. குறிப்பாக ஒழுங்கை, அதிலும் தனியார் கல்வி மையங்கள் பெரும்பாலும் ஒழுங்கிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஒழுங்கிற்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது அது மாணவர் களிடத்தில் சற்றுக் கசப்பையும் விலகல் உணர்வையும் ஏற்படுத்தும். அப்படி மாணவர் களின் கசப்பையுட விலகலையும் பெறும் ஒரு கல்வி மையத்தினால் வருமான ரீதியில் தாக்குப்பிடிக்க முடியாது. அப்படி வருமான ரீதியாகவும் மாணவர்களின் அபிமான ரீதியாகவும் தாக்குப் பிடிக்க முடியாதபோது அந்த நிறுவனம் நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாது. தனியார் கல்வி மையங்கள் முற்றிலும் மாணவர் வருகையில் ஆதாரத்தைக் கொண்டி யங்க வேண்டியிருப்பதால், அவை மாணவ ருடன் சுமுகமான ஒரு உறவையும் உணர்வு நிலையையும் பேணவேண்டியதுண்டு. அப்படிப் பேணும்போது அவர்களைக் கண்டிக்க முடியாது. அவர்களின் மீது இறுக்கங்களைப் பிரயோகிக்க முடியாது.

ஆகவேதான் பெரும்பாலான தனியார் கல்வி மையங்கள் ஒழுங்கு சம்மந்தமான விடயங்களில் புறநிலைப்படுகின்றன. அவை மாணவரின் பாடங்களோடு தம்மை வரை யறுத்துக் கொள்கின்றன. இதனால்தான் தனியார் கல்வி நிறுவனங்களும் மாணவர் களுக்குமான உறவு ஒரு எல்லையுடன் நின்று விடுகிறது. இதைக் கடந்து மாணவர்களின் இதயத்தில் கலந்து விடுகின்ற தனியார் கல்வி மையங்களும் உண்டு. அவை அவற்றின் இயல்பான தன்மையினால் மாணவர்களிடத் தில் தம்மைப் பதியம் செய்து விடு கின்றன.

கிளிநொச்சியில் கல்விச் செயற்பாடுகளில் அரச பாடசாலைகளுக்கு அப்பால் தனியார் கல்வி நிறுவனங்கள் செய்த, செய்து வரும் பங்களிப்பு களும் செயற்பாடுகளும் புறந்தள்ள முடியாதவை. அதிலும் போர் அல்லது நெருக்கடிக் காலத்தில் கல்வியில் வீழ்ச்சியேற்படாமல் இருப்பதற்கு இவை கூடுதலான பங்களிப்பைச் செய்திருக் கின்றன. நெருக்கடிகளின் மத்தியிலும் சில மையங்கள் நீண்ட காலமாக அப்படிச் செயற்பட் டிருக்கின்றன. இன்னும் செயற்பட்டு வருகின் றன. ஒன்று றோயல் கல்வி நிலையம். இன்னொன்று விஞ்ஞானக் கல்வி நிலையம். இந்த இரண்டு மையங்களுக்கும் ஒரு பங்களிப்பு வரலாறும் தொடர்ச்சியும் உண்டு. பொதுவாகவே தனியார் கல்வியைப் பற்றிய விமர்சனங்கள், அபிப்பிராயங்கள் நீண்ட காலமாகவே இன் னொரு கோணத்தில் இருந்தாலும் அவற்றையும் மீறி இந்த மாதிரி மைய ங்கள் செயற்பட்டிருப் பதையும் செயற்பட வேண்டியிருந்ததையும் நாம் மனதிற் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியில் வளங்கள் வரையறுக்கப் பட்ட நிலை நீண்ட காலமாகவே உண்டு. யுத்தத்தின் முன்னும் யுத்த காலத்திலும் யுத்தத்தின் பின்னும் இந்த நிலையிற் பெரிய மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. யுத்த காலத்தில் இது இன்னும் மோசமாக இருந்தது. அப்பொழுது வன்னிக்குள் இருந்த வளங்களை மட்டும் வைத்துக் கொண்டுதான் எதையும் செய்ய முடியும். ஆசிரிய வளமும் அப்படித்தான். போதிய ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குக் கிடையாது. தொண்டு அடிப்படையில் பலர் முன்வந்து படிப்பித்தபோதும் நிறைவான நிலை ஏற்பட வில்லை. யுத்தம் முடிந்த பின்னான இந்த நாட்களிலேயே இந்தப் பற்றாக்குறை இருக்கிற தென்றால், அப்போதைய நிலமையைச் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே பாடசாலை களில் உரிய கல்வியைப் பெற முடியாதவர்கள், வெளியேதான் அதைப் பெற வேண்டியிருந்தது. இந்த நிலையில் அதை வழங்கியவை தனியார் கல்வி மையங்கள்தான்.

கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லது கல்வியை வழங்குவதற்காக இன்று பல வகையான வழிமுறைகளும் மையங்களும் உள்ளன. அரசாங்கத்தின் கல்வி முறையும் அரச கல்வி நிறுவனங்களும் அமைப்புக்களும் ஒரு வகை என்றால் தனியார் கல்வி நிறுவனங் களும் அமைப்புக்களும் அவற்றின் செயற்படு முறைமைகளும் இன்னொரு வகை. இதைவிட வெளிநாட்டுக் கல்வி அமைப்புக்களும் இங்கே தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளு கின்றன.

எங்களுடைய சூழலில், றோயல் கல்வி நிலையம் கிளிநொச்சியில் கடந்த 25 ஆண்டு களாகச் செயற்பட்டு வருகிறது. இந்த 25 ஆண்டுகளும் கிளிநொச்சி சந்தித்த நெருக்கடிகள் ஏராளம். ஆனாலும் அந்த நெருக்கடிகளை யெல்லாம் எதிர்கொண்டவாறே றோயல் இயங்கியது; இயங்கி வருகிறது. இடப் பெயர்வுகள், போர் நிலைமைகள் எல்லாவற்றை யும் தாக்குப் பிடித்துக் கொண்டு வெவ்வேறு இடங்களுக்கு நகர்ந்து இயங்கியிருக்கிறது. இதற்காக அதனுடைய நிர்வாகி திரு. குமாரும் அவருடைய துணைவி புவனாவும் கடுமை யாகப் பாடுபட்டிருக்கிறார்கள். இவர்களோடு இணைந்து அவ்வப்போது ஆசிரியர் அணிகளும் செயற்பட்டிருக்கின்றன. குமார் விளையாட்டுத் துறையைச் சேர்ந்தவர் மட்டுமல்ல, அவர் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் கூட. ஆனாலும் அவர் அதற்கு நிகராக ஆசிரியராகவும் உள்ளார். என்னுடைய மனப்பதிவின்படி அவர் ஒரு ஆசிரியர்தான். சிறந்த கணித ஆசிரியர். அப்படித்தான் எனக்கு அவர் அறிமுகமா யிருக்கிறார்.

எங்களுடைய மூத்த மகன் 1997, 1998, 1999 களில் றோயலில் படித்தபோது இந்த அறிமுகம் ஏற்பட்டது. அப்பொழுது நாங்கள் இடம்பெயர்ந்து ஸ்கந்தபுரத்தில் இருந்தோம். றோயலும் திரு. குமார் குடும்பமும் இடம் பெயர்ந்து ஸ்கந்தபுரத்தில் இருந்தனர். மகனின் படிப்புத் தொடர்பாக நாங்கள் இவர்களுடன் பேசுவது வழமை. பாடங்களில் மகனுடைய முன்னேற்றம் எப்படி இருக்கு? என்று கேட்போம். அதை நீங்களும் கவனிக்கலாம். வீட்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின் கொப்பிகளை வாங்கிப் பார்த்தால் விளங்கும். ஆனால், அவர் வகுப்பில் எப்படி யிருக்கிறார்? படிக்கும்போது என்னமாதிரி இருக் கிறார்? என்றுதான் நாங்கள் உங்களுக்கு சொல்லமுடியும். வகுப்பிற்கு வருவதில் அவரை நீங்கள் கவனிக்க வேண்டும். வகுப்புக்கு வருவதை விட வெளியே அவருடைய கவனம் போகுது" என்று திருமதி புவனா குமார் சொன்னார்.

இதைக் கேட்ட நாங்கள் பிள்ளையை அவதானிக்கத் தொடங்கினோம். அப்பொழுது தான் எங்களுக்குத் தெரிந்தது, அவர் வகுப்பு நேரங்களில் சிலவேளை அதைக் 'கட்' பண்ணிக் கொண்டு வெளியே உள்ளவர்களுடன் விளை யாடுகிறார், சுற்றுகிறார் என்பதை. அந்தப் பருவத்தில் இந்த மாதிரி பிள்ளைகளின் கவனம் போவது வழமை. பிள்ளைகளின் மகிழ்ச்சியைக் குலைக்காமல், அவர்களுடைய கல்வியிலும் பாதிப்பில்லாமல் ஒரு சமனிலையைப் பேண வேண்டும். இதில் பெற்றோரும் ஆசிரியர்களும் ஒத்திசைவோடு செயற்படுவதுதான் பொருத்தம். இதற்குத்தான் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கு மான உறவு அவசியமாகிறது. இந்த உறவைக் கவனிப்பதில் முன்னணியில் இருந்தது றோயல்.

எங்களுடைய மகனில் மட்டுமல்ல பிற பிள்ளைகளின் நடத்தைகளிலும் அவர் களுடைய கவனம் உச்சமாக இருந்தது. வகுப்பிலும் ஆண், பெண் சமத்துவம் தொடக்கம், கண்ணியமான நடத்தைகள், பொறுப்புணர்வு, கூட்டுச் செயற்பாடுகள், நேர ஒழுங்கு, பாட ஒழுங்கு கற்றல் ஒழுங்கு எனப் பலவற்றிலும் நேர்த்தியையும் அதற்கான இறுக்கத்தையும் அவர்கள் கடைப்பிடித்தனர். இதுதான் றோயலின் அடையாளம். 'குமார் சேர் கண்டிப்பார். ஆனால், எங்களோட அன்பாக வெளிப்படையாக இருப்பார். பாரபட்சம் காட்டமாட்டார். எங்களோட நண்பர்களைப் போலவும் நடப்பார்' என்று எங்களின் இரண்டாவது மகன் மகிழ் சொல்வார். இதுதான் குமாரின் வெற்றியும் றோயலின் வெற்றியும்.

அதிகம் பேசாதவர் குமார். ஆனால் எதிலும் சுறுசுறுப்பானவர். காரியங்களை கச்சிதமாக நடத்துவதில் சமர்த்தர். றோயலுக்கு அப்பால், தன்னுடைய தொழில் சார்ந்த விளையாட்டுத்துறை நிகழ்ச்சிகளில் குமாரின் திட்டமிடலையும் ஒழுங்கு நேர்த்தியையும் உழைப்பையும் பார்த்திருக்கிறேன். இதைப் போலத்தான் புவனாவும், சிறந்த நிர்வாகி அவர். திரு. குமாரும் அவருடைய துணைவி புவனாவும் எங்களுடைய குடும்ப நண்பர் ளாகியது.

எங்களுடைய பிள்ளைகளின் படிப்பு வழியாக என்றாலும் அந்த அறிமுகம் நட்பாகி, அதுவொரு உறவாக இன்று மாறியிருக்கிறது. இப்படியான சந்தர்ப்பத்தில் நாங்கள் அவதானிக்க இன்னொரு விசயம். ஒருபோதும் தங்களுடைய பிள்ளைகளிள் கல்விக்காகவோ அவர்களுடைய முன்னேற்றத்துக்காகவோ குமார் குடும்பம் அதிக முன்னுரிமை அளித்ததில்லை என்பதை இதைப்பற்றி நானே அவர்களிடம் சிலபோது கேட்டிருக்கிறேன். பதிலாக ஒரு மெல்லிய சிரிப்பு மட்டும் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுடைய பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம், முன்னேற்றம் என்பதை விட றோயலுக்கு வரும் பிள்ளைகளின் முன்னேற்றம், ஒழுக்கம், கல்வி என்பவற்றையே அதிகம் கவனித்தனர். இதனால்தான் றோயல் இப்பொழுது கால் நூற்றாண்டைக் கடந்து பயணம் செய்கிறது. இந்தக் கால் நூற்றாண்டின் இடர்களைக் கடந்து சாதனைப் பட்டியலைத் தயார் செய்கிறது. சிறந்த நிர்வாகமும் நல் மனப் பாங்குமே இதற்குக் காரணம். 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்ற மாதிரி இவர்களுடைய பிள்ளைகளும் நல்ல முன்னேற்றத்தைக் கண்டனர். றோயலின் பிள்ளைகளும் முன்னேற்றத்தைக் கண்டனர்.

மாணவர்கள் வகுப்புக்கு ஒழுங்காக வருவது, பாடங்களில் கவனம் செலுத்துவது, வகுப்பிலும் வெளியிலும் பிள்ளைகளின் நடத்தைகள் போன்றவற்றையெல்லாம் றோயல் கவனிக்கிறது. இப்படி ஒரு கல்வி மையத்திற்குரியஅடிப்படைகளைப் பேணுவதனால்தான் றோயல் இத்தனை கால இடர்களின் மத்தியிலும் நின்று, தாக்குப்பிடித்து, வளர்ச்சியடைந்திருக்கிறது. இதனால் பெற்றோருக்கும் றோயல் மீதான ஈடுபாடும் உறவும் வலுக்கிறது. இது மேலும் தொடர வேண்டும். சிறக்க வேண்டும் இப்பொழுது கிளிநொச்சியில் 'றோயல்' கல்விக்கான ஒரு அடையாளமாக மாறியுள்ளது. சூழலிலுள்ள, சூழலுக்குத் தேவையான பல புதிய உள்ளடக்கங்களைக் கொண்டு இன்னுமின்னும் றோயல் வளர்ச்சியடைய வாழ்த்துக்கள்.

## புத்தரின் பதில்கள்

| | | |
|---|---|---|
| மிகவும் கூர்மையான வாள் | - | கோபத்தில் வீசப்பட்ட வார்த்தை |
| தோல்வி அடையாத ஆயுதம் | - | பொறுமை |
| மிகப் பயங்கரமான திருடன் | - | தீய சிந்தனை |
| மிகக் கொடிய விஷம் | - | எல்லாம் வேண்டும் என்ற எண்ணம் |
| மிகப் பெரிய தீ | - | ஆசை |
| மிகவும் பெரிய பலனை அடைபவன் | - | பிறருக்கு ஈபவன் |
| மிகவும் இருள் நிறைந்த இரவு | - | அறியாமை |
| மிகவும் மேலான செல்வம் | - | தர்மம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2011 ம் ஆண்டு றோயல் கல்வி நிலையத்தில் கற்பித்த ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரனை அழைத்து பன்னீர் தூவ ஆணையிடும் கவிஞனின் பரவசம்



பொன் காந்தன்
கவிஞர்

இன்னமும் மனதில் கவிதை இருப்பது
உன்னைப்போல் சிலவேரில் பற்றியிருக்கும்
விந்தை பொழுதுகளால்தானென்
எழவேண்டும் போலிருக்கிறது.
என் நினைவுச்சாலைகளில் பூத்துக்குலுங்குகின்ற
தேன் மலர் கொடிகளால்தான்
என் ஆத்மா கண்ணீரை துடைத்துவிட்டு
கங்கையென பாயும் புன்னகையுடுத்து பூரிக்கின்றது.
அடிமுடி தெரியா
என் ஆத்ம பயணத்தில்
ஆசுவாசப்பட இளைப்பாறப்போய்
கடைசிவரை கைபற்றிச் செல்கின்ற
இருக்கைகள் பற்றி எழுதிச்செல்கின்றேன்.
நண்பர்களே!
கண்டும் காணாது போனால் இடறிவிழுத்திவிட்டு
என் ஊரின் எண்ணத்தை ஊற்றுகின்ற
கால வீதியில் போய்க்கொண்டிருந்தேன்.
அமைதிப்படையின் காலம் முற்றுப்பெற்று
காடுகளுக்குள் இருந்து எங்கள் கடவுள்கள்
ஊருக்கு வர புல்லரித்து கிடந்தது பொழுது
பனி படர்ந்த புளுதிச் சாலைகளின் மீது
உன்னி உளக்கி எக்கி மிதித்து
எம் மண்ணின் மகத்துவங்கள் போய்க்கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே இந்த இலட்சிய பயணம்
அங்கே தூரத்தில் ஆங்காங்கு வெடியோசை
ஆனையிறவில் இருந்து
வயல்களிலோ வாழைத்தோட்டங்களிலோ
மாஞ்சோலையிலோ
பாயும் எறிகணைகள்
பரப்பரப்பாக விற்பனையாகும் ஈழநாதம்
அதில் என் கன்னிக் கவிதைகள்
கண் விழித்துள்ளதா என தேடி
பேப்பர் தின்னும் மனம்.
அலைவரிசைகளில் பாய்ந்து வரும்
சிறுத்தையின் வரிகளில்
உயிர்ப்புற்றுக்கிடக்கும் முற்றங்கள்.
சுயம்வர காண்டத்துக்கும் தயாராகும்.
மடிப்புக்குலையாத மச்சான்கள்
இளையராசாவின் இடைக்காலப்பாடல்களில்
கசிந்துருகிவிழும் காதல் கனிகள்
முடக்குகளிலும்.
இரணைமடு தேவதையின்
இரட்டைப்பின்னலென நீளும்.
பால்ய வயது பச்சை மீசையென துளிர்த்துக்கிடக்கும்
புற்கள் அடர்ந்த வாய்க்கால் ஓரங்களிலும்
ஆங்காங்கு ஆதாம் ஏவாள்கள்.
லோங்சின் காலம் கிட்டத்தட்ட முடிவுக்கு வருகின்றது.
கசக்கிப்பிளிந்து காலத்தை
தேனாகவும் குடிக்க முடியவில்லை
நஞ்சாகவும் வெறுக்கவும் முடியவில்லை
ஏதோ ஒரு கால மருத்துவிச்சி
காய்ச்சிக்கொடுத்த கசாயம் போல
இனிப்பும் கசப்புமற்று இருந்தகாலம்
விட்டில் பூச்சிகளாய் இருந்தது போதுமென
பெட்டைக்கூட்டம் புயலென புறப்படுகின்றது.
கட்டிலுக்கு தயாரானவள் களத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்தூரியாயும் வானதியாயும்
உப்புவெளியில் போய் உயர்ந்தவேதம் சொல்கின்றாள்.
கண்ணாடிச் சந்திரனின் கம்பீரமும் பேச்சும்
புல்லரித்துக்கிடக்கின்ற பொழுதுகளை தந்திற்று
கறுப்பழகி சிவகாமியும்
வெள்ளை கவுணுக்கு விடைகொடுத்திருந்தாள்
பின்னாளில் சிவகாமி தமிழினியாய்
அரியாத்தையாய் அணிகளோடு வந்து நின்று
புரட்சி பேசும் புதுமைப்பெண் ஆனாள்
நண்பன் சூட்டியையும் ரஜனியையும் காணவில்லை
சில மாதங்கள் கழிய
ஒருவன் குட்டிமணியோடும் மற்றவன்
கையெறி குண்டோடும் காவலிருக்கின்றான் என சேதி வந்தது.
நித்தியா மேஜர் தரம் பெற்று
என் இதயத்துக்கு நெருக்கமான அந்த வீதியால்
இறுதிப்பயணம் போயிருந்தாள்.
துயிலும் இல்லம் போகிற வீதியில்
இன்றும் நான் பயணிக்கின்றேன்.
ஆயினும் இப்பொழுது அது துயிலும் இல்லம்போவதில்லை.
துயரைத்தரும் வீதி.
இருபது இருபத்தைந்து ஆண்டுகள்.
ஒரு நினைவு வீதியில் நின்று கொண்டு
கடந்து வந்த காலச்சாலையில்
நேசத்துக்குரிய ஆசிரியர்கள் குமாரையும் அகிலனையும்
புவனாவையும் சசியையும் சுலோஜினியையும் தேடிப்பார்க்கின்றேன்.

முந்தநாள் நாற்றென முகிழ்த்த மீசையோடும்
அரைக்காற் சட்டைக்கு டாட்டா காட்டிய பூரிப்பு.
பாட்டாவுக்கு பதிலாக சீப்பா கொம்பனியின்
கீல்ஸ் மொடல் ஒன்றை கொழுவிய கிளர்ச்சி,
அடிக்கடி அதன் எனக்கு மீது பார்வைவேறு
கனியா ரெயிலரில் தைச்ச ஜீன்ஸ்சை
முதன்முதல் போட்டு நடக்க ஒரு சொரசொரப்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பண்டிகை பரபரப்பும்.
அன்றைய நாளில் என் முகவரியை
றோயல் கல்வி அகத்தின் முற்றத்திலும்
உலவி உட்கார்ந்து தேடுகின்றேன்.
சத்தியானந்தன் சொல்லித்தந்த சந்தைப்படுத்தலின்
நான்கு பி துண்டங்களையும் பொறுக்கி எடுத்து
சிறீஞானேஸ்வரனின் கம்பனி பங்குடமையில்
சிவந்திமணியின் செக்கச்சிவேலென்ற அப்பிள் கன்னத்தின்
அழகிலும் கடைக்கண்ணை அரைவாசி அலையவிட்டும்
கிறிஸ்ரிறூபனின் கேள்வி நிரம்பலில்
பாதியை கேட்டும் மீதியை பள்ளிபேடுகளின் கண்ணீரில் விழுந்து
கனவில் மிதந்து இரவுகளை கடந்து
வரைபுகளை தடுமாறி வளைத்துவிட்டும் ஒருவாறு நான் பாஸ்
ஆகா அருமை நண்பன் ஜெயராசாவுக்கு நான்கு ஏ
யசோ, ஜீவா, எட்விச், யோகநாதன் அடுத்தடுத்த ராங்
சிவந்திமணிக்குக்கூட நல்ல ரிசல்ட்ஸ்
குமார்ச்சேரின் முகத்தில் றோயல்களை
குண்டுகள் வீழும் பொழுதிலும் கல்வியை நாட்டி அதில்
வெற்றிக்கொடி பற்றவிட்ட அசான் குமார்.
கிளிநொச்சி பிள்ளைகளுக்கு இரண்டாம் பள்ளி றோயல்.
கரடிப்போக்கில் மரியதாஸ் மாஸ்ரர் மேல்
இந்த மருத நிலமண்
மலையென நம்பிக்கையும் மாண்பும்.
வைத்திருந்ததை மறந்திலேன்
மரியதாஸின் கண[illegible]யும்
கைத்தடியையும் கிளிநொச்சி மண்
நம்பியிருந்த காலம் மனசுக்கு என்றும் பசுமை
மகாலிங்கம் ஐயாவையும் எண்ணம் இரைபோடுகின்றது.
ரியூசன் எனும் போது.
முதலில் என் முன்வீட்டு நகுலன் அண்ணனின் அக்காமார் வசந்தி சாந்தி
சத்திவேலப்பாவின் சுவர்ணா பாரதி அக்கா
சுமார் முப்பந்தைந்து ஆண்டுகள் முன்
என் முன்னே நிழலாடிப்போகின்றார்கள். பிறகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டவாளத்திற்கு அருகாக சி.ரி.பி. டிப்போவுக்கு பின்னாக
ராஜா கல்வி நிலையம்
கற்றல் விளையாட்டு ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என
ராஜாவும் ராஜாங்கம் நடத்தினார் இந்திராகாந்தி ரீச்சர் இப்பொழுதும்
என் இதயத்திற்கு நெருக்கமாக இருக்கின்றாள் இந்திராகாந்தி
எலுமிச்சை நிறமும் இதமான நடையும்
புன்னகை ஒன்றாலேயே வகுப்பை கட்டி வைத்திருந்த அவளின் இயல்பும்
இப்பொழுதும் என்னை நித்திரையில் வந்து தட்டி எழுப்புகின்றது.
அப்பா அன்றி வீட்டு ஒழுங்கையில் இருக்கும்
கோகிலேசையும் செல்வநாயகியையும் அன்றைய காதல் இளவரசனில் ஒருவரான
அஞ்சல் அலுவலகத்தில் வேலை செய்யும் புத்மநாதனையும் காணும் போது
ராஜா கல்வி நிலையத்தின் நினைவுகள் உடைப்பெடுக்கும்
போதுமடா கண்ணீர் கசிந்துவிடும் நண்பர்களே!

கடந்த இரண்டு தசாப்தத்தில் நெருக்கமான ஓர் பசுமையை
என் நெஞ்சில் படரவிட்டிருக்கின்றது. றோயல் கல்வி நிலையம்
குமார் அண்ணையின் கணக்கும் கலை ஆர்வமும்
விளையாட்டு விற்பன்னமும் இதுகாலவரையும் மண்ணின் வாரிசுகளை
கண்ணியமாய் காலச்சிகரத்தில் ஏற்றிச்செல்கின்றது.
பல வெற்றிடங்களை நிரப்பிய கால நதியாய் றோயல் என் கண்முன் விரிகின்றது.

கணிதம் எனக்கு கற்கண்டாய் ஆனது
குமாரின் தேற்ற வகுப்பில் இருந்த போதும்.
முக்கோணத் தேற்றமொன்றை
அவர் ஆணையின்பேரில் முன்னே கரும்பலகையில்
நிறுவிக்காட்டிய போதும் தான்.
அந்த வகுப்பில் என் காதலியும் இருந்தாள் என்பது
கடைசி வரையும் நான் சொல்லாத சேதி.
இனிமையான காலமொன்று எனக்குள்ளும் இருந்ததை
இந்த கல்வி நிலையத்தின் கால்தடமும் சொல்லும்.
என் புதுக்கவிதைகளை முழங்குவதற்கும்
இதய தாகங்களை எடுத்துச் சொல்வதற்கும்
குமாரின் குருசந்நிதானம் அன்றே அரங்குகளை திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரகோசங்களையும் பாராட்டுக்களையும்.
இந்தக் கவிஞனுக்கு கால மூலதனமாய்
கையில் கொடுத்தது நன்றி ஆசான்களே
இரண்டு தசாப்தங்கள் கடந்து விட்ட
இக்கல்வி அகத்தின் காலவெளியில்
வந்துபோய்விட்ட பல்லாயிரம் மாணாக்கர் முகங்களில்
என்னையும் ஓர் இலட்சணமாய் ஏற்றி
உன் எண்ணங்களையும் எழுதிச்செல்லென இடப்பட்ட கட்டளையில்
வானத்தில் ஊஞ்சல் கட்டி வடித்துள்ளேன்.
விதியை மாற்றுவோம் என புறப்பட்ட இருள்கவ்விய சாலையில்.
அறிவும் தந்திரமும் ஆற்றலும் ஆத்மார்த்த துணையும்
வழி நெடுக்கக் கிடைக்கும் போது
இலட்சியம் இனிக்கும் அது இடைவிடாது பயணிக்கும்.
உந்தித்தள்ளும் கரங்களில்
ஓர் தாய் போல றோயல் கல்வி அகமெனும்
மந்திரமும் கலந்திருத்தல் கண்டு களிப்பெனக்கு
கல்வியும் எங்கள் மூலதனம் என்று பாடிச்சென்ற பாவலரின்
கண்ணில் பட்ட கற்பக தருவென
எங்கள் தெருவில் எழுந்து நிற்கும்
றோயல் கல்வி நிலையத்தின்
வேரின் வாசத்தையும்
விழுதுகளின் வீரியத்தையும் காணும் பொழுதினில்
இந்திரனை அழைத்து நறுமண
பன்னீர் தூவ ஆணையிடுகின்றான் இந்த ஊரின் கவிஞன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் சுற்றுலாத்துறை மையங்கள்




திரு.ஜோயல்பியசீலன்
ஆசிரியர்
கிளி/கிளிநொச்சி ம.ம.வி.


கிளிநொச்சி என்பது இலங்கையில் இறுதியாக பிரகடனப்படுத்தப்பட்ட மாவட்டமாகும். ஆயினும் நீர் வளமும், நில வளமும் கொண்ட கிளிநொச்சியின் தொன்மையும், பூர்வீகக் குடியேற்றங்களும் புவிச்சரிதவியல் ஆய்வுகளால் மேலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சியின் 30 வருட கால போர்க்கால வாழ்வியல் சுற்றுலா மையங்கள் தொடர்பான சிந்தனைகளை சிறிதளவும் தோற்றுவிக்கவில்லை. கிளிநொச்சியின் சுற்றுலாத்துறை தொடர்பான தேடலை மேற்கொள்ளும் போது அது குளங்கள், ஏரிகள், கால்வாய்கள், கடல்கள் போன்ற நீர்வளங் களோடு காடுகள், களணிகள் பூர்வீக குடியிருப் புக்கள், பழமை வாய்ந்த கட்டுமானங்கள், திருத்தலங்களோடு தொடர்புடைய நிலவளங் களையும் கொண்டமைந்து சுற்றுலாத்துறை மையங்களாக பரிணமிக்கிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் சுற்றுலாத்துறை தொடர்பாக இக்கட்டுரையை எழுதத் தூண்டுதலாக அமைந்த மூன்று விடயங்கள் நன்றியுடன் மனங்கொள்ள வேண்டும்.

- கிளிநொச்சி நகர றோட்டறி கழக நண்பர்கள்.
- கிளிநொச்சி மாவட்ட செயலக பண்பாட்டு பேரவையால் வெளியிடப்பட்ட தொண்மையின் மூலங்கள் எனும் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்களது கட்டுரை.
- கிளிநொச்சி சுற்றுலாத்துறையில் காணப்படும் வெற்றிடம் தொடர்பான பலரது ஆதங்கம்.

கிளிநொச்சியில் சுற்றுலாத்துறை எனும் போது அது கிளிநொச்சியின் இதயமாக கருதப்படும். இரணைமடுக்குளத்திலிருந்து ஆரம்பிப்பது பொருத்தமானது.





இரணைமடுவின் எழில்மிகு தோற்றம் மட்டுமன்றி அதுவே இலங்கையின் முதலாவது மனிதக் குடியிருப்பு ஆரம்பித்த இடமாகவும் அமைந்த வரலாற்றுத் தொன்மை முக்கியமானது. இரணைமடுக் குளத்திற்கு கிழக்காக உள்ள மேட்டு நிலப்பகுதியில் காணப்படும் 125000 ஆண்டுகளிற்கு முன்பாக பெருங்கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் (உடைந்த தாழிகள், சுடுமண் உருவங்கள், கல்மணிகள், கழிவிரும்புகள் காணப்படுகின்றன.

அடுத்து பூநகரியை நோக்குமிடத்து,

- பூநகரிச் சந்தியில் அமைந்துள்ள பூநகரிக் கோட்டை.
- யாழ்ப்பாணத்தோடு வன்னிப் பெரு நிலப்பரப்பை இணைத்து சங்குப்பிட்டி கேரதீவு பாலம்.
- சோழர்கால கலை மரபை காட்டும் மண்ணித்தலை சிவன் ஆலயம்.
- கௌதாரி முனையில் காணப்படும் பனையுயர மணல் மேடும், வெண் மணல் வெளியும் பரவைக் கடலும், பனங் கூடலும், அழகு மிளிரும் காட்சியாய் விரியும், அங்கு தால் 75 அடி நீள சோழர் கால கலை மரபு உடன் கூடிய விநாயகர் ஆலயமும் காணப்படுகிறது.

இவை கிளிநொச்சியின் பூநகரி பிரதேசத்தில் சுற்றுலாத் தலங்களினை சுட்டி நிற்கும் அம்சங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





01. உருத்திரபுரம் சிவன் ஆலயமும், அதன் தீர்த்தக்கேணியும், ஆவுடையுடன் கூடிய சிவலிங்கமும் 1882 யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த SIR. WILLIAM TWYNAM என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

02. உருத்திரபுரத்திற்கருகே குஞ்சுப்பரந்தன் டி8 குடியேற்றத்தில் 1990ல் கண்டுபிடிக்கப்பட்ட 4 அடி உயரமும் 8 அடி சுற்றுவட்டமும் உடைய முழுமையான தாழி முக்கியமாகதாகும். இது தற்போது யாழ்ப்பாணம் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

03. ஊற்றுப்புலத்தில் காணப்படும் வற்றாத கிணறும் கற்கால தொல்லியல் எச்சங்களும் கவனிப்பிற்குரிய தலங்களாகும்.





இவ் ஈயத்தாழி உட்பட பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய சுடுமண் பாவனைப் பொருட்கள், கல் மணிகள், கல்லாயுதங்கள், நாணயங்கள், எழுத்துக்கள் என்பன கிளிநொச்சியில் பொருத்தமான இடத்தில் அருங்காட்சியகம் அமைத்து பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

கிளிநொச்சியில் காணப்படும் கோட்டைகளை கருதுமிடத்து ஆணையிறவுக் கோட்டை மற்றும் சுற்றுலா விடுதி ஆகியன அழிவுற்றுள்ள போதும் பூநகரிக் கோட்டை, இயக்கச்சிக் கோட்டை என்பன சுற்றுலா மையங்களாக பேணக்கூடிய வகையில் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பறவைகள் சரணாலயங்களுடன் கூடிய நீரேரிகள்

வன்னேரிக்குளம் அற்புதமான சுற்றுலாத் தலமாக மாற்றக்கூடிய எழில் கொஞ்சும் மனோரம்மியமான இடமாகும். விரிந்து பரந்த குளமும் பசுமையான இடமாகும். விரிந்து பரந்த குளமும் பசுமையான புற்தரையுடன் கூடிய அணைக்கட்டும் குளமருங்கே காணப்படும் சடைத்துப் பரந்த மரங்களும், அழகிய வெளிநாட்டுப் பறவைகளின் சஞ்சாரமும் கவிநிலையை ஏற்படுத்துபவனவாக அமையப் பெற்றுள்ளது.



மீன்பிடிக்கச் செல்லும் காட்சி மனதுக்கு இதம் தருபவை. கிளிநொச்சியில் ரம்மியமான சுற்றுலா மையமாக அமையப்பெற பொருத்தமான அம்சங்களை இங்கு காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுண்டிக்குளம் விடுமுறை தங்ககம்

இதே போன்றதொரு வனப்புமிக்க ஏரியும் பறவைகளின் சரணாலயமாகவும் அமையப் பெற்றது சுண்டிக்குளம் விடுமுறை தங்ககம் ஆகும். இயற்கையான மண்மேட்டில் பனங்கூடல்களிற்கு இடையில் அமைக்கப்பட்ட தங்ககத்திலிருந்து பார்க்கும் போது ஒருபுறம் சுண்டிக்குளத்தின் அழகிய காட்சியும், பறவைகளின் சஞ்சரிப்பும் மறுபுறம் விரிந்த கடற்பரப்பும், அழகிய வெண்மணல் கரையும் சுற்றுலாத் தலமாக அமைவதற்குரிய இலட்சணங்களை கொண்டமைந்துள்ளது. தற்போது சுண்டிக்குளம் விடுமுறை தங்ககத்தில் வெளிநாட்டு உல்லாச பயணிகளின் வருகையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.





இறுதியாக கிளிநொச்சி நகரை அண்டிய இரணைமடுச்சந்திக்கருகில் காணப்படும் கனகாம்பிகைக்குளம், அதன் சூழலமைவும், அதனை நோக்கியமைந்திருக்கும் Tank View Hotel உம், குளமருங்கே காணப்படும் அழகிய பிரதேசமும் சுற்றுலாத் துறைக்கான இரசனைமிகு இடமாக குறிப்பிடலாம்.





இக்கட்டுரையின் மூலம் அடையாளப்படுத்தப்படும் கிளிநொச்சியின் ஒரு சில சுற்றுலாத் தலங்களையாவது சம்பந்தப்பட்ட நிர்வாக முறைமைக்குள் உள்வாங்கி, தத்தெடுத்து மெருகூட்ட வேண்டிய பொறுப்பை யாவரும் மனங்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய விஞ்ஞானமும் இந்துக்களின் மெய்ஞ்ஞானமும்



திரு. மா. அகிலநாயகம்
பிரதி அதிபர்
வட்டக்கச்சி மகாவித்தியாலயம்

இன்றைய உலகம் அறிவைத் தளமாகக் கொண்டே இயங்கிக் கொண்டிருக் கிறது. மனித சமுதாயம் எதிர்நோக்கும் சகல விதமான சவால்கள் மற்றும் தடைகள் கட்டுப் படுத்துவதற்கும் நிகழ்கால உலகளாவிய நெருக்கடி நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கும் மனிதனிடம் உள்ள அறிவுப் பொக்கிஷம் அத்தியாவசிய சாதனமாக அமைகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த அறிவை உருவாக்கி விருத்தி செய்து நிர்வகித்து பாதுகாத்துப் பரவலடையச் செய்யும் இன்றைய சமூகத்தின் அறிவு எமது பண்டைய மக்களிடமும் பரந்து காணப்பட்டுள்ளது.

கைத்தொழில் புரட்சி உலகளவில் பல்வேறு தளங்களில் ஏற்படுத்திய மாற்றங் களை விட பண்டைய மக்களின் மெய்ஞ்ஞானக் கருத்துக்களம் நம்பிக்கைகளும் நம்மிடையே பன்மடங்கு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டி ருக்கின்றது. உலக ஒழுங்கைத் தீர்மானிக்கின்ற மாபெரும் சக்தியாக விஞ்ஞானம் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது. விஞ்ஞானத் தின் மூலக்கருத்துக்கள் இந்துக்களின் மெய்ஞ் ஞானத்தில் பல்கிப் பெருகிப் பரவிக் காணப்படு வதை அவதானிக்க முடிகின்றது.

விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத் தையும் ஒப்பிட்டு நோக்குவது எமது முன்னோர் களின் அறிவுத்திறத்தினைக் கண்டு வியப்பதற்கு ஏதுவாக அமைகின்றது. இந்து தத்துவங்களிலும் இந்துப் பண்பாட்டிலும் வலியுறுத்தப்பட்டுள்ள கருத்துக்களையும், விஞ்ஞானக் கருத்துக் களையும் மேலோட்டமாக ஒப்பிட்டு நோக்குவ தாகவே இக்கட்டுரை அமைகின்றது.

அணுகுண்டு தயாரிப்பதற்கு வித்திட்ட அயன்ஸ் ரைன் விஞ்ஞானிகளில் மிக முக்கிய மானவராவார். இவர் வெளியிட்ட பௌதீகம், கணிதத்தில் சிறந்த சார்பு இயக்க கொள் கையை இவரின் அணு பற்றிய கருத்துக்களும், $E = MC^2$ என்ற சமன்பாடும் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். அயன்ஸ்ரைனின் ஒளியில் மின்சாரத் தாக்கம் விஞ்ஞான உலகத்தில் மிகவும் பிரபல்யம் ஆனது. ஒளியானது உலோகத்தட்டில் விழும் பொழுது இலத்திரன்கள் வெளியேறும். வெளியேறும் இலத்திரனின் எண்ணிக்கை நிறத்திற்கு நிறம் வேறுபடும். இத்தாக்கம் ஒளி பல துணிக்கைகளால் ஆனது என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. ஒளி அலையினால் மட்டும் உண்டானது என்ற கருத்துக்கு முரணானது. இப்பரிசோதனை தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிற்கு (Nobel prize) நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. இப்பரிசோதனையே தொலைக் காட்சி போன்ற உபகரணங்கள் செய்ய உதவியது. ஒளி அலையால் ஆனது எனவும் துணிக்கைகளால் ஆனது எனவும் பரிசோதனை களால் விளக்கலாம். இக்கருத்து வேதாந்தி களான சங்கரர், மத்துவரின், ஜீவாத்மா, பரமாத்மா கருத்தோடு ஒப்பு நோக்கலாம்.

இறைவன் தனக்கு மேல் இல்லாத ஒப்புவமையற்ற தலைவன். இவ்வாறான இறைவன் ஆன்மாக்களை உய்விப்பதற்காக அருவம், உருவம், அருவுருவத் திருமேனி களில் பரிபாலிக்கின்றான். இக்கருத்தினை உமாபதிசிவாச்சாரியார் பின்வருமாறு கூறுகின்றார்.

**"அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்**
**உருவும் உடையான் உளன்"**

எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு முத்திருமேனிகளில் உள்ள இறை வனை பல நாமங்களில் பல்வேறு உருவம் கொடுத்து வழிபடுகின்றோம். இவ் இறை வனுக்குத் தடத்த நிலையும், சொரூபநிலையும் உள்ளன. அறிவாம் உருவாகிய இறைவன் ஓர் உணர்சிப் பொருள் என திருவருட்பயன் பதிமுது நிலை கூறுகின்றது.

**"உன்னும் முளதைய மிலது உணர்வாய் ஓவாது**
**மன்னுபவன் தீர்க்கும் மருந்து"**

ஆன்மாக்களின் அறியாமைக்குக் காரணம் ஆணவமாகும். ஆணவம் நீங்க உணர்விற்கு உணர்வாக விளங்கும் இறைவனால் தான் முடியும் என்ற உமாபதி சிவாச்சாரியாரின் கருத்து அயன்ஸ்ரைனின் கருத்தோடு ஒத்துப் போகின்றது. ஆழ்ந்து அறிவுடன் கூடிய இன்ப உணர்வு நிலையை ஒருவன் பெறவேண்டில் அது இறையருளுடன் கூடிய ஆன்ம ஞானம் பெற்றவனின் (Mystic) நிலையாகத்தானிருக் கும் அவ்வகைப்பட்ட ஆச்சரியமான உணர்வு நிலையை அறியாது அதில் ஆழ்ந்து அனுபவி யாது ஒருவன் இருப்பானாகில் அவன் ஓர் நடைப்பிணத்துக்கு ஒப்பாவான். இந்த உணர்வே உண்மையான விஞ்ஞானத்தைக் கொடுக்கின்றது. He to whom this emotion is a stranger is as good as dead it is the sower of all science. உமாபதிசிவாச்சாரியார் கூறிய அறிவாம் உரு என்பது Highest wisdom and sensation of the mystical என்ற கருத்தோடு ஒத்துப்போகின்றதை உணர முடிகின்றது.

மாணிக்கவாசகர் தமிழ் இலக்கியத்தில் புதிய வகை இலக்கியங்களைப் பரப்பிய பெருமைக் குரியவர் இவர் திருச்சதகம் என்னும் இலக்கியத்தில் சுட்டறுத்தல் என்னும் பகுதியில் 26 ஆம் பாடலில் "சிந்தனை நின் தனக்கு ஆக்கி நாயினேன் தன் கண்ணினை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி....." என செந்தாமரைக் காடு போன்ற மேனியை உடையவன் சிவன் என கூறுகின்றார். அனேக மலர்களைப் பார்க்கும் போது தீச்சுவாலை போன்ற தோற்றப்பாடு இருந்தாலும் அது தீயில்லை. எனவே சுடர் குளிர்ச்சியுடையது. அயன்ஸ்ரீன் என்ற விஞ்ஞானி இறைவனைப் பற்றிக் கூறும் போது Radient beauty எனக் கூறிய சொல்லின் ஒத்த தன்மையினை உணர முடிகின்றது.

விஞ்ஞான வளர்ச்சி பல மாறுதல்களை ஏற்படுத்தி இருந்தபோதும் பக்தியோடு இணைத்து கருத்துக்களை கூறும்போது அக்கருத்துக்கள் சமூகத்தைச் சென்றடைவது இலகுவானதாகும். இவ்வுத்தியையே ஆழ்வார் களும் நாயன்மார்களும் கையாண்டு அவைதீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் இருந்து வைதீக சமயத்தைக் காப்பாற்றினார்கள். ஒரு தனிமனிதனின் தன்மைகள் அவனின் ஆளுமை, குடும்பம், சமூகம் என்பவற்றால் மாற்றம் அடைகின்றது என உளவியலாளர்கள் கருத்துக்களை முன் வைத்துள்ளனர். இக்கருத்துக்கள் இன்று மக்கள் மத்தியில் பரப்பப்பட்டாலும் இந்துப் பண்பாட்டில் கடமைகளாகவும் ஒழுக்கங்களாகவும் பரப்பப் படுகின்றபொழுது அவற்றை மக்கள் கடவுளின் பெயராலும் பாவ புண்ணியங்களுக்கு அச்சப் பட்டும் சிறிதளவும் பிசகாது கடைப்பிடித்து வந்துள்ளனர்.

உதாரணமாக

**"நின்றக்கால் நிற்க அடக்கத்தால் என்றும் இருந்தக்கால் ஏவாமை ஏகார் பெருந்தக்கார் சொல்லின் செவி கொடுத்துக் கேட்க மீட்டும் வினாவற்க சொல் ஒழிந்தக்கால்"**

ஆசிரியர் கற்பிக்கும் பொழுது அடங்கி அடக்கமுடன் இருக்க வேண்டும். பாடம் சொல்லித் தராத நேரத்திலும் பணிவுடன் இருக்க வேண்டும். ஆசிரியர் கற்பித்து முடிந்து போ என்ற பின் போக வேண்டும். ஆசிரியர் கற்பிக்கும் போது கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று இப்பாடல் கூறுகின்றது. மாணவர்களின் மனநிலை கல்வியோடும் கல்வி கற்பிப்பவ ரோடும் ஒன்றிப்போக வேண்டும் என எண்ணிய மெய்ஞ்ஞானம் இறைவன் குருவாக வருவார் குருவே இறைவன் எனக் கூறுகின்றது. இறை வன் அடியார்களை ஆட்கொள்வதற்காக குரு வடிவம் தாங்கி வருவார் என நம்பப்படு கின்றது.

இந்துக்களின் ஆலய அமைப்பு மனித உடலுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. உடல் ஆரோக்கிய மாக இருக்கும் நிலையிலேயே ஆயுள் நீடிக்கும் என விஞ்ஞானம் கூறுகின்றது. இன்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் உடம்பை வளர்பதால்தான் உயிரை வளர்க்க முடியும் **"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே..."** எனக் கூறுகின்றார்.

இறைவழிபாட்டுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும் விஞ்ஞானக் கருத்துக்களுடன் ஒத்துப்போகும் தன்மை யினைக் காணலாம். இந்த வகையில் இந்துக் களின் வழிபாட்டில் விநாயகர் வழிபாடு மிகவும் முக்கியமானதாகும். விநாயகர் திருவுருவம் இன்று போற்றப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் தேவையினை வலியுறுத்தும் வடிவமாக விளங்குகின்றது. பிள்ளையாரின் தோற்றம் மக்களுக்கும் மிருகங்களுக்கும் இடையே தேவையான வாழ்க்கை முறை ஒருமைப்டி பாட்டினை உணர்த்தும் பெரிய தத்துவ தெய்வமாக விளங்குகின்றது.

புலால் மறுத்தலின் தேவையினையும் சைவ உணவின் மேன்மையையும் யானைமுகம் குறிப்பால் உணர்த்துகின்றது. மிருகங்களில் யானை கம்பீரத் தோற்றம் உடையது. அயராத உழைப்பு, திடபலம், அறிவு முதலியன அமையப் பெற்று அளப்பெரிய சக்தியை உடையதாயினும் தாவர உண வினையே உண்கின்றது. தாவர உணவின் சாத்விக உணர்வினை இன்றைய சமூகம் உணர்த்தும் தன்மையை மெய்ஞ்ஞானத்தில் காணலாம்.

மேலும் விநாயகர் வழிபாட்டின் மூலம் தலையில் குட்டிக்கும்பிடுவதும் தோப்புக்கரணம் போடுவதும் நரம்புகளின் தூண்டுதலுக்கு ஏதுவாக அமைந்துள்ளது. ஆலயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையில் உள்ள பஞ்சாங்க, அட்டாங்க நமஸ்காரங்கள் ஐம்பொறிகளின் சீரான இயக்கத்திற்கு பெரிதும் துணைபுரிகின்றது. ஆலய வீதிகளில் அடி அழிக்கும் முறையானது அடிமேல் அடி வைத்து வணங்கும் தன்மையில் கருப்பப்பை சம்பந்தமான நோய்களுக்கு சிறந்த தீர்வாக அமைகின்றதாக வைத்திய நூல்களான பரராசசேகரம், செகராசசேகரம் கூறுகின்றது. மேலும் ஆலய வீதியின் அமைப்பு முறையானது சூரியனைப் பூமிசுற்றிவர எடுக்கும் நேரமான 365 நாளின் அளவிலேயே அமைக்கப்பட்டுள்ள தால் ஆலயங்களைச் சுற்றி வரல் மிகச்சிறந்த உடற்பயிற்சிகாக மட்டுமன்றி ஆக்க சக்தியையும் உற்சாகத்தையும் கொடுக்கக் கூடியது. ஆலயங் களில் மெய்ஞ்ஞானிகளால் கூறப்பட்ட சிவசின் னங்கள் வழங்கப்படுவதும் சிவசின்னங்கள் சிவனுக்கு நிகரானவை என்றும் இந்துக்களின் இலக்கியங்கள் கூறுகின்றன.

ஆயுள்வேத வைத்திய முறையில் தலையில் உள்ள சளித்தொல்லைகள், நீரினால் ஏற்படும் தலைப்பாரம் போன்ற நோய்களிற்கு சிவசின்னங்களில் ஒன்றான வீபூதி பரிந்துறை செய்யப்படுகின்றது. தலையின் நரம்புகள் சுமூகமாகச் செயற்படுவதற்கும் குளிர்ச்சியை ஏற்படுத்தவும் நெற்றியில் சந்தனம் இடுவது மரபாகின்றது. இவ்வாறு மெய்ஞ்ஞானத்துடன் கலந்த செயற்பாடுகளில் பக்தியுடன் நேர்த்தியாகச் செய்கின்ற தன்மையும் ஏற்படுவதால் ஆரோக் கியமான வாழ்வுக்கு வழிகாட்டுவதில் மெய்ஞ் ஞானமும் விஞ்ஞானமும் ஒத்த தன்மை யையே கொண்டுள்ளமையைக் காணலாம்.

பல்வேறு விதமான நோய்களுக்கும் உடல், உள அமைதிக்கும் யோகா சிறந்த சாதனமாக அமைகின்றது. யோகா பயிற்சிகளை உலகளாவிய ரீதியில் யோகா தினம் கொண் டாடப்படுகின்றமை இதற்குச் சான்றாகின்றது. அதுமட்டுமன்றி உணவுப் பழக்கவழக்கங்கள் கொண்டாட்டத்திற்குரிய பண்டிகைகள் பண்டி கைக் காலத்தில் செய்ய வேண்டிய உணவுகள் தயாரிக்கும் முறை என்பன விஞ்ஞானத்தின் கருத்துக்களை உள்வாங்கி உள்ளமையை இந்து சமயத்தின் ஒழுகலாறுகள் மூலம் அறிய முடிகின்றது.

உதாரணமாக உணவு பரிமாறும்போது வாழையிலையில் பரிமாறுவதனால் உணவில் உள்ள விஷத் தன்மைகள் முறிக்கப்படுகின்றது. இதே போன்று ஆடிப்பிறப்பன்று பனங்கட்டிக்கூழ் காய்ச்சுவது இந்துக்களின் பாரம்பரியம் ஆகும். பனங்கட்டியில் சூட்டைத் தணிக்கும் தன்மையும் வெயில் காலத்தில் ஏற்பட்ட உஸ்ணம், சீதம், பேதி போன்ற நோய்களைக் குணமாக்கி குளிர் காலத்திற்கு ஏற்றவாறு உடலை சீராக்கும் தன்மையைக் கொண்டது என சித்த மருந்துவம் கூறுகின்றது. ஆடிக்கூழை பலாவிலையில் குடிக்கும் போது ஆடிக்கூழில் உள்ள இனிப்பின் தன்மை பலா இலையால் குறைக்கப்படுகின்றது. இவ்வாறு இந்துக்களின் சமூகக் கட்டமைப்பு, ஒழுக்கம், பண்பாடுகள், பண்டிகைகள் போன்ற அனைத்து விடயங்களிலும் மெய்ஞ்ஞானத்தின் பங்கு விரவிக் காணப்படுகின்றது. மெய்ஞ் ஞானத் தின் சிந்தனைகள் விஞ்ஞானத்தின் விளக்கங்களாகின்றன. இந்துக்களின் மெய்ஞ் ஞானமும் இன்றைய விஞ்ஞானமும் மக்கள் சமூகத்தின் வளர்ச்சியையும் உயர்வினையுமே குறிக்கோளாகக் கொண்டுள்ள போதிலும் சில வீழ்ச்சிகளையும் தரிசிக்கக் கூடியதாக உள்ளது.

**"நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில் வாட்டமும் இல்லை மனைக்கு அழிவில்லை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ தமிழ் போதுமா?




குமார் பார்த்திபன்
2014 கலைப்பிரிவு மாணவன்


உலக மொழிகளில் பல நூற்றாண்டு தொன்மையும் பழமையும் பொருந்திய மொழியாக தமிழ் காணப்படுகிறது. இதன் பெருமைக்கு சான்றாக செம்மொழிகளில் ஒன்றாகவும் வைக்கப்பட்டுள்ளமை சிறப்பான விடயமாகும். செம்மொழிக்கான இலக்கணங்களில் ஒன்று தொல்காப்பியம் என்ற இலக்கண நூலின் தொன்மையினை அறியலாம். இதன் மூலம் தமிழின் செம்மை தரு இலக்கணங்களை அறிய முடிகிறது.

தமிழுக்கு மிகுந்த சோதனைகள் வாய்ந்துள்ளதாக திரும்ப திரும்ப குரல் எழுப்பப்பட்டு வருகின்ற கால கட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கின்றோம். தமிழுக்கு அப்படி என்ன தான் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்று பார்ப்போமானால் ஒரு வகையில் பார்த்தால் முன் எப்போதும் இல்லாத வகையில் தமிழ் பல ஏற்றங்களை கண்டிருக்கின்றது. உலகெங்கிலும் சுமார் 8 கோடி தமிழர்கள் இன்றும் வாழ்கின்றார்கள் இவர்கள்அனைவருமே தமிழ் பேசத் தெரிந்தவர்கள் பல தலைமுறைகளாக வெளிநாடுகளில் தங்கி அந்நாட்டு மொழிகளையும் வேறு மொழிகளையும் கற்று விட்டு தமிழை பயன்படுத்தவே முடியாத சூழலில் தமிழ் பேசாத் தமிழர்களும் இருக்கிறார்கள்.

இவர்களின் மொத்த எண்ணிக்கை சில ஆயிரங்களை தாண்டாது என்று கொள்ளலாம். இப்படி அதிகளவில் தமிழ் பேசத் தெரிந்தவர்கள் தமிழ் இனம் தொடங்கிய காலம் முதல் இன்று வரை இருக்கிறார்கள்.

தமிழில் எழுதப்படிக்க தெரிந்தவர்களின் எண்ணிக்கையும் இப்போது உள்ள அளவிற்கு இதுநாள் வரை இருந்ததில்லை என்பதை ஒரு பலமாகவும் பார்க்கலாம். தமிழில் பத்திரிகைகள் புத்தகங்கள் எண்ணற்றளவில் பிரசுரமாகின்றன. தமிழ் புத்தகங்களில் மொத்த ஆண்டு விற்பனை தொகை ரூபாய் 80 கோடியை தாண்டிவிட்டது. 8 கோடி தமிழர்களின் புத்தகச் செலவு இது தான் என்று பார்க்கும் போது இந்த தொகை அவ்வளவு பொருட்படுத்தப்பட்ட தாக இல்லை. இதில் 6½ கோடி தமிழர்கள் தான் புத்தகங்களை அதிகம் வாங்கிப் படிப்பவர்கள். தமிழர்களில் எழுத படிக்க தெரியாதவர்கள் ஏறத்தாள 20 சதவீதத்தினருக்கு அதிகம். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களில் பலரும் புத்தகம் வாங்கும் பழக்கத்தை இன்னும் கைக்கொள்ளாதவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகங்கள் தவிர ஒரு சிறுபான்மையின தமிழர்களே புத்தகம் வாங்கும் பழக்கம் உடையவர்கள். எனினும் ஆண்டு தோறும் புத்தகம் வாங்கும் தொகை பெருகி வருவது கண்கூடு வானொலி, தொலைக்காட்சி நிலை யங்கள் அதிகரித்தே வருகின்றன. இவை தமிழ் நிகழ்ச்சிகளை சிறப்பாக வெளியிட்டு வருகின் றமை குறிப்பிடதக்க விடயமாகும். கணனியிலும் தமிழ் காலம் தாழ்த்தாது நுழைந்து விட்டது. ஆனால் உயர் தரத்தில் கலைத் துறையை தெரிவு செய்யும் மாணவர்களில் தமிழை கற்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மேடைகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் தமிழை சரியாக உச்சரிப்பது கூட இல்லை.

ஆங்கிலத்தை விரும்பி உபயோகிப்பவர் களில் தமிழர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகி வருகின்றது. உரையாடலிலும் கூட பெரும் பாலான தமிழர்கள் ஆங்கிலத்தையே பயன் படுத்துகிறார்கள். குழந்தைகள் அம்மா, அப்பா என்றெல்லாம் அழைக்காமல் Dad, mam என்றே அழைக்கிறார்கள். சுருக்ககூறின் தமிழுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக ஆங்கிலம் கருதப்படுகின்றது. தனித் தமிழை வேண்டிய வர்கள் வடமொழி மீது தான் அதிக வெறுப்பை கொண்டிருந்தனர் ஆங்கிலத்தின் மீதல்ல. வடமொழிச் சொற்கள் தமிழில் கலக்க கூடாது என்பது பலரின் வேண்டுகோள். இவ்வேண்டு கோள் பெருமளவில் நிறைவேற்றப்பட்டதாக கருதலாம். மணிபிரவான நடைச் சொற்கள் வழக்கொலிந்து போய் விட்டது. வடமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைப் பலரும் விருப்புடன் எடுத்தாள துவங்கி விட்டனர். வடமொழி, தமிழ்மொழி என்பன உள்ளார்ந்த பல குணங்களை கொண்டது. இதிகாசங்களும் வேதங்களும் வடமொழியில் வளர்ந்தன. தமிழில் பல நீதி நூல்களும் ஆய்வு நூல்களும் பல்சுவை கதம்பங்களும் படைக்கப்பட்டன. பக்தி இலக்கியங்களும் வடமொழியிலேயே தோன் றின. தமிழ்மொழி இன்று வரை மக்கள் மொழியாகவே காணப்படும் சிறப்பை உடையது.

தமிழர்கள் தங்களுக்கு. வைத்துள்ள பெயர்கள் தமிழ் பெயர்களாக இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமைகள் உள்ளன. இந்து சமயத்தை சேர்ந்த தமிழர்கள் இந்து கடவுள்களின் மகான்களின் பெயர்களை தங்களுக்கு சூடிக்கொள்ளும் மரபும் காணப்படு கிறது. ஆனால் அவை பெரும்பாலும் வடமொழிப் பெயர்களாகவே காணப்படுகிறது. அப்பெயர் களை சூடிக்கொள்பவர்கள் சமய இறை உணர்வு காரணமாக சூடிக் கொள்கிறார்கள். தமிழர் களான இஸ்லாமியர், கிறிஸ்தவர் போன்றோர் தங்களது இறைவழிபாட்டு பண்பினையொட்டி சமயப் பெயர்களை சூட்டிக் கொள்கிறார்கள். அவை அந்நிய மொழிப் பெயர்களே தமிழ்மொழி அல்ல. கார்ல்மாக்ஸ், சாக்ரடீஸ் போன்ற அறிஞர்களின் பெயர்களை விரும்பி சூடிக் கொள்கிறார்கள். 'ஷ' என்ற எழுத்தை 'ச' என்றும் 'ஹ' என்ற எழுத்தை 'க' என்றும் தமிழ் எழுத்தை போட்டு எழுதுகின்ற பழக்கம் தமிழ் பற்றை நிரூபித்து கொள்ளும் வழக்கம் பாரசீகம் அரபு மொழிகளிலும் காணப்படுகிறது.

எனவே பிறமொழி சொற்கள் கொண்டுள்ள ஒலியினை வரிவடித்தில் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவேண்டும் என்றால் இந்த எழுத்துக்களை நாம் கட்டாயமாக ஏற்க வேண்டும். ஷேக்ஸ் பியரை சேக்ஸ்பியர் என கூற முடியாது. நம் மொழிக்கு பிறர் இத்தகைய சிதைவுகளை செய்தால் நம் மனம் ஒப்புவோமா? என எண்ண வேண்டும். மொழிகள் பரஸ்பரம் கொள்கின்ற பாதிப்புக்கள் நாகரீகத்தின் அடையாளம் பிறமொழிகள் மீது பகைமை கொள்ள கூடாது.

ஆங்கிலத்தில் உரையாடுவது தவறல்ல. ஆங்கிலத்தில் உரையாடினால் 'தமிழ் மெல்ல சாகும்' என்பது தவறானது. அந்தளவுக்கு தமிழ் பலவீனமான மொழி அல்ல இன்று தமிழ்ர்களின் சமூக, பொருளாதார நிலை உயர்ந்திருக்கிறது என்றால் ஆங்கில மொழியே காரணம். தங்கள் பிள்ளைகள் ஆங்கிலம் கற்க வேண்டும் என்பதில் உறுதியானவர்கள் ஒரு புறம் வாழ்க்கையின் வெற்றிக்கு தேவையான ஆங்கில அறிவை அடையும் முயற்சியும் இன்னொரு புறம் தமிழ் பின் தங்கி விடக்கூடாது என்றெண்ணி செயற்படும் தவிப்பும் இவை தான் தமிழனின் இன்றைய நிலை.

தமிழ் அசாதாரணமானதும் அற்புத மானதுமான ஒருமொழி என்பதில் சந்தேக மில்லை. இத்தகைய ஆயிரம் வருடங்களாக அது எத்தனையோ இடர்களை கடந்தும் இன்றும் இளமையுடன் தோன்றுகின்றது. உலக ஓட்டத்தில் தமிழ் ஈடு இணையில்லா வளர்ச்சியை பெற்றிருக்கிறது. எந்த மொழியிலும் புதிய சொல்லாக்கங்கள் ஏற்பட்டாலும் தமிழில் தக்க ஒரு சொல்லை உருவாக்கி விட முடிகிறது. ஆங்கில மொழியில் வரும் சொற்கள் தான் தமிழில் இவ்வாறு மறு ஆக்கம் செய்யப்படு கின்றன. சுயமாக ஒரு கருத்துக்கு சொல்லாக்கம் செய்வது அரிதாகவே உள்ளது. நேரிடையாக பல ஆங்கிலச் சொற்களுக்கு தமிழ் சொற்கள் உருவாக்கப்படுகின்றன. மென்பொருள், அலைவரிசை, தொங்கு பாராளுமன்றம் என்பன எடுத்துக்காட்டுக்களாகும். நேரிடை இல்லாமல் பொருளை உள்வாங்கி உருவாக்கப்படும் சொற்களும் உளநகை, முரண், புகைப்படம், வானொலி என்பன உதாரணங்களாகும்.

வருங்கால சந்ததியினருக்கு தமிழின் பால் தன்னார்வத்தை தூண்டுமாறு இன்றைய தலை முறையினர் செய்ய வேண்டும். கடின மான தமிழை படிப்பதை விட பிரஞ்சு, வடமொழி ஆகியவற்றை படித்தால் சுலபமாக புள்ளி பெற்று விடலாம் என்ற யதார்த்தத்தை மாற்றும் வகையில் தமிழ் படிப்பதற்கும் சுலபமாக இருக்க வேண்டும்.

பாடசாலையிலும் பல்கலைக்கழகங் களிலும் வெறும் இலக்கிய இலக்கண படிப்பாக மட்டும் தமிழ் இருக்கக் கூடாது தமிழ் அதிகார பூர்வ செம்மொழியாகி விட்ட நிலையில் உலகெங்கிலும் உள்ள புகழ் பெற்ற பல்கலைக் கழகங்களிலும் தமிழ் இருக்கைத் தூண்கள் ஏற்படுத்த வேண்டும். இதனை வசதி படைத்த தனியாரும் விரைந்து செயற்பட முன் வர வேண்டும். தமிழை பரப்புவது என்பது தமிழை தமிழ்ர்களின் எல்லைக்கப்பால் கொண்டு செல்வதாகும். தமிழை தமிழர் மட்டுமே படிப்பது எழுதுவது என்றில்லாமல் .தமிழை தமிழர் அல்லாதோரும் அறிந்து கொள்ளுமாறு செய்யவேண்டும் அதுவே தமிழருக்கும் தமிழுக்கும் பெருமை சேர்ப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விகிதமும் பொன் செவ்வகமும்
## (Golden Ratio and Golden Rectangle)



M. சதாநந்தகுமாரன்
B.Sc (Maths Special)
ஆசிரியர் கிளி/கிளிநொச்சி ம.ம.வி

**பொ**ன் விகிதம் பல்வேறு வகையான ஆர்வங்களைக் கொண்ட அறிஞர்களை 2,400 ஆண்டுகளாக ஈர்த்து வந்துள்ளது. எக்காலத்தும் சிறந்த சில கணித மூளைகளான பண்டைக் கிரேக்கத்தின் பித்தாகரஸ், இயூக்கிளிட் ஆகியோரில் இருந்து, மத்தியகால இத்தாலியக் கணிதவியலாளராகிய ஃபிபோனாசி, மறுமலர்ச்சிக்கால வானியலாளர் ஜொஹான்னஸ் கெப்லர், ஆகியோரூடாக இன்றைய அறிவியலாளர்களான ஆக்ஸ்போர்ட் இயற்பியலாளர் ரோஜர் பென்ரோஸ் வரை உள்ள அறிஞர்கள் இந்த எளிமையான விகிதத்தின் இயல்புகள் பற்றி ஆராய்வதற்காகப் பெருமளவு நேரத்தைச் செலவு செய்துள்ளனர். ஆனால் இவ்விகிதத்தின் மீதான ஆர்வம் கணிதவியலாளர்களுக்கு மட்டும் ஏற்பட்டதல்ல. உயிரியலாளர்கள், கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், வரலாற்றாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், உளவியலாளர்கள் போன்றோரும் இது பற்றிச் சிந்தித்து இதன் கவர்ச்சியின் அடிப்படைகள் பற்றி விவாதித்துள்ளனர்.

உண்மையில் கணிதவியலின் வரலாற்றில் வேறெந்த எண்ணையும் விட அதிகமாக எல்லாத் துறைகளையும் சேர்ந்த சிந்தனையாளர்களையும் பொன் விகிதம் ஈர்த்துள்ளது என்று சொன்னால் நியாயமாக இருக்கக்கூடும்.

வடிவவியலில் அதிகமாக பொன் விகிதம் காணப்படுவதால் பண்டைய கிரேக்கர்கள் இது பற்றி ஆய்வுகள் செய்துள்ளனர். ஒழுங்கு நட்சத்திர ஐங்கோணம் மற்றும் ஒழுங்கு ஐங்கோணம் பற்றிய வடிவவியலில் ஒரு கோட்டை முடிவு மற்றும் இடை விகித்தில் பிரிப்பது முக்கியமாகதாக அமைகிறது. இக்கருத்துருவை பித்தாகரஸ் அல்லது அவரைப் பின்பற்றுவோர் கண்டுபிடித்திருக்க வேண்டுமென கிரேக்கர்கள் நம்புகின்றனர். ஒழுங்கான ஐங்கோணத்தை உள்ளடக்கிய ஒழுங்கான நட்சத்திர ஐங்கோண வடிவம் பித்தாகோரியர்களின் சின்னமாக உள்ளது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொன் விகிதத்தில் பிரிக்கப்பட்ட கோட்டுத் துண்டு a + b : a = a:b**

கணிதவியலிலும் கலையிலும் எவையேனும் இரு அளவுகளின் கூடுதலுக்கும் அவற்றில் பெரிய அளவுக்குமான விகிதமானது, பெரிய அளவுக்கும் சிறிய அளவுக்குமான விகிதத்திற்கும் சமமாக இருந்தால் அந்த இரு அளவுகளும் பொன் விகிதத்தில் (golden ratio) அமைந்துள்ளன எனப்படுகின்றன. இவ்விகிதத்தின் மதிப்பு ஒரு விகித முறா மாறிலி எண்ணாகும். இதன் தோராயமான மதிப்பு 1.61803398874989..... பொன் விகிதத்தின் குறியீடு கிரேக்க மொழியின் சிறிய எழுத்து (φ) (phi).

(இவ்வெழுத்தின் தலைகீழ் $\frac{1}{\varphi}$ அல்லது $\varphi^{-1} = \Phi$ (Phi) இது கிரேக்க மொழியின் பெரிய எழுத்து)

$$\frac{a+b}{a} = \frac{a}{b} = \varphi$$

விகிதமுறா எண்களின் கணத்தில் இச்சமன்பாட்டிற்கு ஒரு நேர்மத் தீர்வு உள்ளது.

$$\varphi = \frac{1+\sqrt{5}}{2} = 1.6180339887.....$$

பொன் விகதமானது கவின்கலை, ஓவியம், கட்டிடக்கலை, புத்தக வடிவமைப்பு, இயற்கை இசை, நிதிச்சந்தை என பல் வகையான துறைகளிலும் பரந்து காணப்படுகின்றது. 20ம் நூற்றாண்டிலிருந்து பல ஓவியர்களும், கட்டிடக் கலைஞர்களும் தமது படைப்புக்களில் பொன் விகிதத்தைப் பயன்படுத்தினார்கள். இவர்களின் பாகுபாடு பொதுவாக பொன் செவ்வக வடிவில் அமைந்தது. நீளமும் அகலமும் பொன் விகிதத்தில் இச்செவ்வகம் அழகியல் அடிப்படையில் மனதுக்கு உகந்தது என நம்பப்பட்டது. இவ்விகிதத்தின் தனித்துவமான இயல்புகள் கணிதவியலாளர்களை ஆராயத் தூண்டியது.

**பயன்பாடுகளும் அவதானிப்புகளும்**

**1. பூக்களின் இதழ்கள் ஒழுங்கமைப்பு**

பூக்களின் இதழ்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் ஒழுங்கமைப்பு என்பன பொன் விகிதத்திற்கமைவாகவே அமைந்துள்ளது. ஒவ்வொரு இதழும் 1.618034... எனும் விகிதத்தில் வட்ட வடிவில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் எல்லா இதழ்களும் சூரிய ஒளியை பூரணமாக பயன்படுத்துகின்றன.



**2. சூரியகாந்தி பூவில் விதை ஒழுங்கமைப்பு**

கருக்கட்டலின் பின்னர் வித்து உருவாக்கமானது பூவின் மத்திய பகுதியிலிருந்து ஆரம்பித்து வெளி நோக்கி நடைபெறும். இது குறிப்பிட்டதொரு சுருளி ஒழுங்கமைப்பிலேயே நிகழ்கிறது. இதன் மூலம் பூவில் உள்ள மொத்த வித்துக்களையும் கணக்கிட முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. பைன் மர விதை ஒழுங்கமைப்பு

பைன் காய்களில் விதை ஒழுங்கமைப்பு ஒரு சோடி சுருளி வடிவானதாக காணப்படும். அதேவேளை சுருளி வடிவம் ஒன்றுக்கொன்று எதிர் எதிர் திசையில் காணப்படும். இது பொன் விகிதத்திற்கமைவாகவே காணப்படுகின்றது.



### 4. பழம், மரக்கறி ஒழுங்கமைப்பு

அன்னாசிப் பழத்தில் பூக்களின் மற்றும் இலைகளின் ஒழுங்கமைப்பும், பூக்கோவாவில் பூக்களின் ஒழுங்கமைப்பும் பொன் விகிதத்தின் அமை வாகவே காணப்படுகின்றது.





### 5. மரங்களின் கிளை ஒழுங்கமைப்பு

மரங்கள் ஒரு குறிப்பிட்ட அட்சரகணித ஒழுங்கு முறையிலேயே கிளை கொள்ள செய்கின்றன.




### 6. நத்தை ஓடு அமைப்பு

இங்கு பொன் செவ்வக முறைக்கமைவாகவே ஓடு உருவாகின்றது.



### 7. பால் வீதி ஒழுங்கமைப்பு



### 8. சூறாவளி உருவாக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9. மனித உடலில் புற அங்கங்களின் உருவாக்கம்

உடலின் புற அங்கங்கள் பொன் விகித அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ள தாலேயே உடலின் வெளி வடிவம் வெளிப்படு கின்றது.










### 10. கட்டடங்கள் வடிவமைப்பு







### 11. இசைக்கருவிகள் வடிவமைப்பு



### 12. ஓவியங்கள் வரைதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கையடக்க தொலைபேசி தயாரிப்பு




14. நில அலங்காரம்



15. விளம்பர இலச்சினைகள் (வர்த்தக குறியீடுகள்)




நமது வருமானங்கள் நமது காலணிகளைப் போன்றதே சிறியதாக இருக்குமானால் நம்மைக் கடிக்கிறது. மிகப் பெரியதாக இருக்குமானால் தடுக்கி விழச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்



திரு. இ. சுதாபரன்
(BBA), Dip in English
பிரதேச செயலகம்.

உலகளாவிய ரீதியில் பார்க்கின்ற போது பலமொழிகள் தோற்றம் பெற்றிருக் கின்றன. ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களின் தனித்துவமான கலை, கலாசார பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகிய விழுமியங்களை எடுத்துக் காட்டுவனவாக மொழி விளங்குகின்றது. ஒரு குறிப்பிட்ட மக்கள் பேசும் மொழியானது அம் மக்களை பிரதி நிதுத்துவப்படுத்துவதாக அமை கின்றது. இன்று உலகில் அதிகளவான மொழிகள் தோற்றம் பெற்று இருந்தாலும் சில மொழிகள் மாத்திரமே முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. அவ்வாறு உலகளவில் அதிகம் பேசப்படும் மொழிகளில் சீன மொழி யானது முதல் நிலை பெறுகின்றது. அடுத்து பிரஞ்சு மொழியினைத் தொடர்ந்து மூன்றாவது நிலையில் ஆங்கில மொழியானது விளங்கு கின்றது. தற்பொழுது ஆங்கில மொழியானது ஒரு தனித்துவம் பெற்ற மொழியாகக் காணப்படு கின்றது. தற்கால உலகில் அதன் பங்கு மேல் நிலையில் உள்ளது.

ஆங்கில மொழியின் வரலாறானது அதன் தனித்துவத் தன்மையினை வெளிப் படுத்துகின்றது. இன்று ஆங்கிலம் கற்கின்ற நாம் அதன் வரலாற்றினையும் தனித்துவத்தினையும் சற்றுத் தெரிந்து கொள்வது அவசியமாகின்றது. ஆங்கில மொழியானது ஆங்கிலேயர்களுக் குரியது ஆங்கிலேயர் ஆங்கில மொழியை உலகளாவிய ரீதியில் பரப்புவதற்கு கொண்டுள்ள நாட்டம் பெரும் பங்கு வகிக்கின்றது.

ஆங்கிலம், இங்கிலாந்தில் தோன்றிய ஒரு மொழியாகும் இது ஜேர்மனிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. ஜேர்மனிய மொழிக் குடும்பம் இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும் பத்தில் இருந்து கிளைத்ததாகும் ஆயினும் ஆங்கிலம் பல மொழிகளின் கலப்பு மொழியாகும் இவ்வாறு தோன்றிய ஆங்கிலமொழியின் வரலாறு ஒரு தனித்துவம் பெற்றதாக விளங்குகிறது.

கி.மு 6500ம் ஆண்டளவில் ஐரோப்பிய நிலத்துடன் இணைந்திருந்த பனிப்பிரதேசம் உருகியமையால் கடல் மட்டமானது உயர்ந்து அப்பிரதேசம் தீவாகத் தோன்றியது. தனிமை யாகத் தோன்றிய இப்பிரதேசம் தற்பொழுது பிரித்தானியா என்று அழைக்கப்படுகின்றது. பிரித்தானியாவில் ஐரோப்பிய பிரதேசங்களில் இருந்து கெல்டிக் என அழைக்கப்பட்ட ஒரு இன மக்கள் குழுமங்களாக வந்து குடியேறினர். இவர்கள் விவசாயிகளாகவும், போர்க்குணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கவர்களாகவும் விளங்கினர். இவர்கள் வந்து குடியேறிய இடங்களில் குடில்கள் அமைத்து சிறிது கிராமங்களாக வாழ்ந்தனர். வேட்டையாடு வதை பழக்காகவும் போர் விரும்பிகளாகவும் விளங்கினர். இரும்பில் ஆயுதங்கள், கருவிகள் போன்றனவற்றை செய்யக்கூடியவர்களாக இருந்தனர். அத்துடன் தெய்வ நம்பிக்கை கொண்டவர்களான இவர்கள் 400ற்கும் மேற்பட்ட தெய்வங்களை வணங்கினார்கள் என அறிய முடிகிறது.

கெல்டிக் இனக்குழுமங்கள் பேசிய மொழிகள் குழுமங்களுக்கிடையில் வேறு பட்டவையாக இருந்தாலும் கிட்டத்தட்ட அம் மொழிகள் ஒரே மாதிரியானவையாகவே இருந்தன. இதனால் இவர்கள் பேசிய மொழி கெல்டிக் என்றும் இவர்களை கெல்டிக் மக்கள் என்றும் உரோமானியர்கள் அழைத்தார்கள். கெல்டிக் என்னும் சொல்லானது ஒரு கிரேக்க மொழிச் சொல்லாகும். உரோமானியர்கள் ஆரம்பத்தில் பிரித்தானிய இனக்குழுமத்தினரை மட்டுமன்றி ஐரோப்பாவில் வாழ்ந்த பல்வேறு பழங்குடியினரையும் அழைக்கும் பொதுவான பெயராகவே கெல்டிக் எனும் சொல்லைப் பயன்படுத்தினர்.

பின்னர் கி.மு. 43ல் உரோமானியர்கள் பிரித்தானியாவைக் கைப்பற்றி தமது ஆதிக்கத் தின் கீழ் கொண்டு வந்தனர். அதாவது பிரித்தானியா உரோமப்பேரரசின் ஆட்சியின் கீழ் வந்தபின்னர் அதன் வளர்ச்சி ஆரம்பமாகியது. உரோமர் ஆட்சிக்காலத்தில் ஐரோப்பா கண்டத் தின் பல நாடுகளுக்குமான வணிகத் தொடர்பு களுக்கு ஏற்ற இடமாக தாமஸ் ஆற்றுடன் (The River Thames) அண்மித்த நிலப்பரப்பு அமைந் திருப்பதை உணர்ந்து லண்டனைத் தலைநகர் ஆக்கினர். பிரித்தானியா என்னும் சொல்லும் உரோமர்கள் வழங்கிய இலத்தீன் மொழிச் சொல்லாகும் இப்பெயர் காலப்போக்கில் மருவி Britaniz – Britain என்றானது. இப்பகுதியில் வாழ்ந்த பூர்வக்குடிகளான கெல்டிக் இனத்த வரையே பிரிட்டன் (Briton) அல்லது பிரிட்டிஸ் (British) என அழைக்கப்படுகின்றவர்கள் ஆவர். உரோமானியர்கள் பேசிய இலத்திரன் மொழியையும், எழுத்தையும் அடிப்படையாகக் கொண்டே ஆங்கில மொழி தோற்றம் பெற்றது. இன்றைய ஆங்கில எழுத்து உரோமன் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகக் கருதப்படுகிறது.

உரோமானியர்களின் வெளியேற்றத் தைத் தொடர்ந்து ஏங்கோ- செக்சான் என்ற குழுமத்தினர் பிரித்தானியாவை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். இவர் களின் பரம்பரையினரே தற்போதைய இங்கிலாந்து மக்கள் ஆவர். இவர்கள் ஆங்கில மொழியை வளர்ப்பதில் பெரும் பங்காற்றினர்.

ஆங்கில மொழியினை பழைய ஆங்கிலம் மத்திய கால ஆங்கிலம், நவீன ஆங்கிலம் (முன்னைய நவீன ஆங்கிலம், தற்போதைய நவீன ஆங்கிலம்) என வகைப்படுத்திப் பார்க்கப்படுகிறது. ஆரம்பத்தில் இருந்தே பல மொழிக்கலப்புகள் காணப்பட்டாலும் காலப் போக்கில் மொழித்தொடர்பில் ஒரு வர்க்கப்பிரிவு உருவானது. அப்பொழுது ஆட்சி அதிகாரங்களின் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் செல்வாக்குச் செலுத்தினர். அதாவது பிரெஞ்சு மொழி பேசுவோர் மேல் வர்க்கமாகவும், ஆங்கில மொழி பேசுவோர் கீழ் வர்க்கமாகவும் கருதப்பட்டனர். இத்தகைய மொழித்தொடர் பிலான ஏற்றத்தாழ்வு ஆங்கில தாய்மொழிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றாளர்களிடையே தம்மொழி தொடர்பான எழுச்சியை ஏற்படுத்தியது. அதாவது 14ம் நூற்றாண்டளவில ஆங்கில மொழி அறிவிய லாளர்களும், மொழிப்பற்றாளர் களும் மேற் கொண்ட கடும் முயற்சியினால் ஆங்கிலம் மீண்டும் பிரித்தானியாவில் அதிகார மொழி யானது இக்காலப்பகுதி மத்திய காலம் எனக் கொள்ளப்படுகிறது. இக்காலப்பகுதியில் ஏராள மான பிரெஞ்சு சொற்கள் ஆங்கில மொழியால் கலந்து கொண்டது.

நவீன ஆங்கிலமானது பல்வேறு வழி களில் வளர்ச்சி அடைந்துள்ளது. இக்காலப் பகுதியில் ஆங்கில மொழி உச்சரிப்புகளில் திடீர்மாற்றம் ஏற்படத் தொடங்கின. எழுத்திலக் கணத்திலும், ஒலிப்புகளிலும் மாற்றம் ஏற்பட்டன 16ம் நூற்றாண்டுகளில் ஆங்கில மொழியை பலதுறைகளிலும் பயன்படுத்த வேண்டும். என்ற எண்ணம் ஆங்கில மொழிப்பற்றாளர்களிடையே தலை தூக்கியது. அச்சு இயந்திரத்தின் தோற்றம் இதற்கு பெரிதும் துணை புரிந்தது. அத்துடன் மதச்சீர்திருத்தம் புதிய கண்டுபிடிப்புகள் பண் டைய இலக்கியங்களில் ஏற்பட்ட மோகம் மறுமலர்ச்சி இயக்கம் போன்றனவும் இதற்கு துணை புரிந்தது. மொழியை சகல வழிகளிலும் முதன்மை மொழியாகக் கொண்டுவர வேண்டும் என்னும் எண்ணக்கரு ஆங்கில அறிவியலாளர்களிடையே தோன்றியது. உலகம் மற்றும் பொது அறிவினை பாமர மக்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் ஒரு மொழியின் வளர்ச்சிக்கு அம் மொழியின் வாசிப்புத்திறனே முதன்மையானது என்றும் ஆங்கில மொழிப் பற்றாளர்கள் உணர்ந் தனர். எனவே பாமர மக்களும் பயன் பெறும் வகையில் நூல்கள் வெளியிடப்பட்டன. விஞ் ஞான நூல்களை ஆங்கில மொழியில் மொழி பெயர்ந்தனர். அது வரை காலமும் இலத்தீன் மொழியில் இருந்த மருத்துவக் கல்வி நூல்கள் ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. அங்கு ஆங்கில வழி மருத்துவக்கல்வியும் அறிமுகப்படுத்தப்பட்டது. கத்தோலிக்க விவலியம் எனும் நூல் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டது.

இவ்வாறு ஆங்கில மொழியின் வளர்ச்சி யில் புதிய பரிமாணத்தினை இங்கிலாந்தின் தேசியக் கவிஞர் என்று அழைக்கப்பட்ட உலகப் புகழ் பெற்ற நாடக ஆசிரியரும், கவிஞருமாகிய வில்லியம் சேக்ஸ்பியரின் பங்கு அளப்பரியது. இவர் பல்லாயிரக் கணக்கான சொற்களை ஆங்கிலத்தில் அறிமுகம் செய்தார். பல நாடகங்களை ஆங்கிலத்தில் எழுதி புரட்சியை ஏற்படுத்தினார்.

இவ்வாறு இலக்கண வளம் மிக்க மொழி என்னும் தகதி ஆங்கில மொழிக்கு ஏற்பட வேண்டுமாயின் ஆங்கில இலக்கண நூல்கள், அகராதிகள் ஆங்கில மொழியில் வெளிவர வேண்டும் எனும் தேவையை உணர்ந்தது. இதன்படி 1604ல் அகர வரிசையில் அமைந்த உலகின் முதலாவது ஆங்கில அகராதி பிரசுர மானது இதனைத் தொடர்ந்து 1702ல் முதல் ஆங்கில நாழிதழ் "The Daily Courant" லண்டனில் வெளியானது.

இதன் பின்னர் ஆங்கில மொழியானது உலகளாவிய ரீதியில் தனது செல்வாக்கினை ஏற்படுத்திக் கொண்டது விரைவாகப் பரவ லடைந்து வளர்ச்சி அடைவதற்கு பிரதான காரணிகளாக கைத்தொழில் புரட்சி, அச்சு இயந்திரசாதனம் கண்டுபடிப்பு, மற்றும் பிரித்தானியா பல நாடுகளைத் தமது ஆளுகைக் குள் கொண்டு இருந்தமை போன்றவற்றினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். இதனால் நவீன ஆங்கிலத்தில் பல்வேறு நாடுகளில் உள்ள மக்கள் எண்ணற்ற பிற மொழிச் சொற்களைக் உள்வாங்கிக் கொண்டனர். அதாவது ஏறத்தாழ 146 மொழி களில் இருந்து ஆங்கிலம் பல சொற்களை தனதாக்கி கொண்டது. தமிழ் மொழியில் இருந்தும் பல சொற்களை ஆங்கில மொழி உள்வாங்கிக் கொண்டுள்ளது. Cash – காசு, Curry – கறி, Rice – அரிசி போன்ற சொற்களை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

இவ்வாறு ஆங்கிலத்தைப் பொறுத்த மட்டில் பிற மொழிச் சொற்களையே தாராள மனதுடன் பெற்றுக்கொண்டு தனது துரித வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளது. இன்று ஆங்கில தொழில் நுட்பம் சொற்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. உலகில் இன்று ஆங்கிலம் கற்போரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

இவ்வாறு வளர்ச்சி பெற்ற ஆங்கில மொழி யானது இன்று கிட்டத்தட்ட 375 மில்லியன் களுக்கு மேற்பட்ட மக்கள் அங்கில மொழியை தமது தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். அத்துடன் உலகளவில் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் பேசுவோரின் எண் ணிக்கை 1.8 மில்லியன்கள் ஆகும். இவ்வெண்ணிக்கை யானது உலக மக்கள் தொகையில் அண்ணள வாக 1/3 ஆகும். இன்று ஆங்கிலம் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராட்சியம், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அயர்லாந்து, தென் ஆபிரிக்கா உற்பட 53 நாடுகளில் ஆட்சி மொழியாக உள்ளது. அத்துடன் 130றkkum அதிகமான நாடுகளில் இரண்டாம் மொழியாகப் பேசப்படுகின்றது.

ஐக்கிய இராட்சியத்தின் ஆதிக்கத்திற்குள் உலகின் பல நாடுகள் உட்பட்டிருந்ததன் விளைவாகவும், அண்மைக் காலத்தில் ஐக்கிய அமெரிக்காவின் வளர்ச்சியினாலும் ஆங்கிலம் உலகெங்கும் மென்மேலும் பரவி வருகிறது. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை (united Nation) ஐரோப்பிய ஒன்றியம் (European union) பொதுநலவாயநாடுகள் (Common wealth nations) ஐரோப்பிய ஆலோசனைசபை (Council of Europe) வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு (North atlantic treaty organization) போன்ற உலக அமைப்பு களிலும் ஆங்கிலம் முதன்மை அலுவலக் மொழியாக உள்ளது. அத்துடன் பொருளாதாரம் மருத்துவம், அரசியல், நவீன விஞ்ஞானக் கண்டு படிப்புக்கள் இராணுவ பலம், கொலிவூட், சினிமா. ஊடகத்துறை, ஆங்கில கலாச்சார மோகம், கணனி, இணையம் போன்றவற்றின் காரண மாக ஆங்கில மொழியானது இன்று உலகில் பலருக்கு அவசிய மொழியாகவும் விரும்பும் மொழியாகவும் மாறிவிட்டது. அத்துடன் இன் றைய இணையம் கைத்தொலைபேசி குறுந் தகவல் பரிமாற்றத்தில் அதிகம் பயன்படும் மொழியாக ஆங்கிலம் விளங்குகின்றது. வயது வேறுபாடு இன்றி அனைவரும் ஆங்கில வார்த்தைகளை உச்சரிப்பதை அன்றாடம் பழகிக் கொண்டுள்ளனர்.

எனவே இனிவரும் காலங்களில் ஆங்கில மொழியைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கையானது பன்மடங்காக அதிகரிக்கும் என்பதோடு அதன் தனித்துவம் சிறப்பு, பாவனை இன்றி யமையாத்தன்மை என்பன மேம்படும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் ஆங்கில மொழியினை அணைவரும் விரும்பியோ விரும்பாமலே கற்க வேண்டும்என்பது புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகத்துறை கல்வியும் தொழில் வாய்ப்பும்




M. A. நிதர்சன்
வர்த்தகத்துறை மாணவன்
தென்கிழக்கு பல்கலைக்கழகம்


வன்னிப்பெரு நிலப்பரப்பின் மாணவச் செல்வங்களின் கலங்கரை விளக்கமாக தனது கல்விச் சேவைதனை ஆற்றிவரும் றோயல் கல்வி நிலையத்தின் பழைய மாணவனாக, தற்போது பல்கலைக்கழகத்தின் வர்த்தகத்துறையின் இறுதி ஆண்டு மாணவனாக வளர்ந்து கொண்டிருக்கும் நான்; என்னை உருவாக்கிய, உயர்ச்சியடையச் செய்த றோயல் கல்வி நிலையத்தின் இருபத்தைந்தாவது வருட மலரிலே "வர்த்தகத்துறை கல்வியும் தொழில் வாய்ப்பும்" என்ற கருப்பொருளோடு இணைந்து இம்மலர் வழியாக பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

மகிழ்வடையும் இவ் வேளையிலே றோயல் கல்வி நிலையத்தின் தந்தையாக, ஆசானாக, ஆலோசகராக பணியாற்றி ஆங்கில மொழிக்கு உயிர் கொடுத்து இறைவனடி சேர்ந்த திருவாளர் C.H.S.நாதன் ஐயா அவர்களையும், மறைந்தும் மறையாமல் என் உள்ளமதில் என்றும் நிலைத்திருக்கும் திருவாளர் S.சசிசராஜ் ஆசிரியர் அவர்களையும் இவ் வேளையில் நினைவு கூர்வதோடு, என்னுடைய கல்வி வளர்ச்சிக்காக, உயர்ச்சிக்காக தன்னை அர்பணித்து செயற்பட்ட ஆசான் திருவாளர் S.குமார் அவர்களையும், வர்த்தகத் துறை பாடத்தை என் உள்ளத்தின் ஆழத்தில் பதியக்கூடிய விதமாக என்னை உருவாக்கிய அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய ஆசிரியை திருமதி குமார் புவனேஸ்வரி அவர்களையும், மற்றும் எனக்கு கரம் கொடுத்த ஒவ்வொரு ஆசான்களையும் நன்றிப் பெருக்கோடு என் உள்ளமதில் நினைத்து அவர்களை வணங்கி என்னுடைய ஆக்கத்தை சமர்ப்பிக்கின்றேன்.

## அறிமுகம்

வர்த்தகத்துறை என்பது ஓர் பரந்து பட்ட துறையாகும். சந்தைப்படுத்தல், பொருளாதாரம், நிதிக்கொள்கைகள், தொழில்துறை செயற்பாடுகள் தொடர்பான நுணுக்கமான ஆய்வுகளை மேற்கொள்ள வர்த்தகத்துறை உதவி செய்கின்றது. வர்த்தகமானது ஓர் பரந்துபட்ட சுற்றுப்பாதையில் பயணித்துக்கொண்டு இருக்கின்றது. கணக்கியல், வணிக நிர்வாகம் நிதித்திட்டமிடல், பொருளாதாரம், சந்தைப்படுத்தல், விளம்பரம், ஆளனி, கணக்காய்வு, வரியியல் போன்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு விதமான செற்பாடுகள் வர்த்தகத் துறையை மேம்படுத்துகின்றது என்றால் அது மிகையாகாது.

## நோக்கம்

வர்த்தகத்துறையானது பல வாழ்க்கை நெறிகளை இலகுவான முறையில் அடைவதற்கு உதவி செய்கின்றது. உலக மயமாக்கல், வெளிநாட்டுக் காப்பீடு மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள் வர்த்தகத் துறையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மகத்தான வேலை வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. பட்டயக் கணக்காளர் மூலமாக மேலுமொரு படி முன்னே சென்று சர்வதேச ரீதியான வாழ்க்கை முறையையும் உருவாக்குகின்றது.

இதுமாத்திரமல்ல இத்துறையானது முகாமையாளர், கணக்காளர், கணக்காய்வாளர், கணக்குப்பதிவுக் காப்பாளர், வணிக ஆய்வாளர், தலைமை நிதி அதிகாரி, கட்டுப்பாட்டாளர், நிதி மேலாளர், பங்குத்தரகர் போன்ற பல தரப்பட்ட வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள உதவுகின்றது. மேலும் வர்த்தகத்துறை அல்லாத நிறுவன அமைப்பிலும் கூட அதாவது வெகுசனத் தொடர்பு, சட்டம், ஹோட்டல் நிர்வாகம் மற்றும் பொதுச்சேவைகள் உள்ளிட்ட துறைகளிலும் இணைந்து கொள்ள உதவி செய்கின்றது.

## உயர் கல்விக்கான தெரிவு பற்றிய கண்ணோட்டம்

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் வர்த்தகத்துறை மாணவர்களின் போக்கினை அவதானிக்கின்ற போது, பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றிருந்தும் குறிப்பிட்ட ஒரு தொகையினர் மாத்திரமே அதாவது 12.25 வீதமானவர்களே பல்கலைக்கழக அனுமதியினைப் பெற்றுக் கொள்கின்றனர். எவ்வாறாயினும் ஏனைய மாணவர்கள் வெளிவாரி ரீதியான பட்டப் படிப்புக்கள் மற்றும் CIMA, ACCA, IABF, DABF (Banking) CMA, CA, AAT போன்ற கற்கை நெறிகளில் தங்களை இணைத்து முன்னேற்றமடையக் கூடிய வாய்ப்புக்கள் தற்கால சூழலில் காணப்படுகின்றது.

## வர்த்தகத்துறை மாணவனுக்குரிய முக்கியமான திறன்கள்

- கணினி மற்றும் எண்கள் தொடர்பான சிறந்த திறன்
- தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கான திறன்
- நல்ல தொடர்பாடல்களை ஏற்படுத்துவதற்கான திறன்
- குழுவேலை மற்றும் அணி தலைமை திறன்
- SMART முடிவுகளை எடுக்கும் திறன்
- நிறுவன மற்றும் நிர்வாகத் திறன்
- தர்க்க ரீதியான சிந்தனை
- படைப்பாற்றல் மற்றும் உயர் அறிவார்ந்த திறன்
- கடின வேலை, பல மணி நேரம் வேலை செய்யக்கூடிய மனநிலை
- நெகிழும் தன்மை மற்றும் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்கள், புதிய முறைமைகளை நாளுக்கு நாள் கற்றுக்கொள்ளும் ஆற்றல் போன்றவை.

தொழில் வாய்ப்புக்கள்

- **உயர்கல்வி :** BBA, BCOM மாணவர்கள் தமது பட்ட பின் படிப்பாக MBA, MCOM, PHD அல்லது சிறப்பு கற்கை நெறிகளான CIMA, ACCA, IABF, DABF (Banking) CMA, CA, AAT போன்றன.
- **வங்கியில் :** நியாயமான சம்பளம், தொழில் பாதுகாப்பு மற்றும் உயர் சமூக அந்தஸ்து போன்றவற்றை பல்தேசிய, உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகள் நல்ல வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றது.
- **முதலீடுகள் :** பங்குச்சந்தை தொடர்பான ஆய்வு, முதலீட்டு வங்கியாளர், பரஸ்பர நிதி நிர்வாகி மற்றும் துணிகர முதலாளித் துவ வாய்ப்புக்கள் போன்றன.
- **காப்பீடு:** காப்பீடு மூலமாக தாராள மய மாக்கல் கொள்கை அதிவேகமான வளர்ச்சி யைக் காட்டுகின்றது. மகத்தான தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத காப்பீடு, பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் இடர் மேலாண்மை வேலைகளை வழங்குகின்றது.
- மூலதனச் சந்தை: தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை மூலமாக உள் நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் இணைந்த சந்தை செயற்பாடுகள் மூலம் வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படு கின்றன.
- **KPO & BPO:** வளர்ந்து வரும் இத் துறையில் வர்த்தகத்துறை மாணவர் களுக்கு பிரமாண்ட வாய்ப்புக்கள் காணப் படுகின்றது. (Knowledge process Outsourcing, Business Process Outsourcing)
- **வரியியல் :** வரி மதிப்பீடு தொடர்பான பல வேலைகள் சமீபத்திய ஆண்டுகளில் உருவாக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இத்துறையின் சிறப்பு யாதெனில், ஒரு நிறுவனத்தை உருவாக்குவதற்கான திட்டமிட லில் இருந்து, அதனுடைய செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், நெறிப்படுத் தலுக்கு வேண்டிய வழிமுறைகளை இனங் காணல், முக்கியமாக அந்த நிறுவனத்தின் இறுதி விளைவுகளை வினைத்திறனுடன் கணிப்பிடுதல், மற்றும் கட்டுப்படுத்தல் செயற் பாடுகள் மூலம் முன்னேற்றப் பாதையில் நிறுவனத்தை கொண்டு செல்லல் வரை பல கோணங்களில் வர்த்தகதுறை பாரிய பங்களிப்பை வழங்குகின்றது என்பது எனது எண்ணக்கருத்தாகும். என்னுடைய எண்ணக் கருத்தை இம்மலர் ஊடாக உங்களுடன் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பத்தை தந்த மலர்க் குழுவின ருக்கும் எனது சிரம் தாழ்த்திய நன்றிகள்.

றோயல் கல்வி நிலையத்தின் கல்வி சேவை இன்னும் தொடர இறைதுணை வேண்டி வாழ்த்தி விடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INFLUENCE OF HEALTH IN EDUCATION



Dr. P.Gohilan(MBBS)
Teaching Hospital,
Jaffna.

World health organization definition for health is a state of complete physical, mental and social well – being and not merely the absence of disease or infirmity. Education is defined as the act or process of imparting knowledge especially at a school, college or university. Those definitions reflect us as health is an important fact to get the good educational performance.

Health and education are the foundation for human development. It is difficult to hold the job or care for a family if one is sick or doesn't have relevant skills and knowledge. Expanding access to health and education services is a central element for any strategy to eliminate poverty and reduce inequality.

Sleep and nutrition are the important facts to get good health and to maintain the best performance in studies. Sleep is vital to your well – being and food for the brain as important as the air you breathe, the water you drink and the food you eat. It can even help you to eat better and manage the stress of being a teen. During sleep can be harmful. You can look bad, you may feel moody and you perform poorly. Sleepiness can make it hard to get along with your family and friends and hurt your scores on school exams. A brain that is hungry for sleep will get it, even when don't expect it.

Recommended time for sleep
Preschoolers (3 – 5 years) : 10 – 13 hours
School age children (6 – 13 years) : 9 – 11 hours
Teenagers (14 – 17 years) : 8 – 10 hours
Young adults (18 – 25 years) : 7 – 9 hours

You may not be noticeably sleepy during the day, but losing even one hour of sleep can affect your ability to think properly and respond quickly. It also compromises



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

your cardiovascular health, energy balance and ability to fight infections.

Adolescence is the period of life between about 11 and 21 years age. The timing of puberty and rates of growth vary greatly. Puberty may begin as early as age 10 for girls. Males age between 9 to 13 years require 2,279 calories / day. Females age between 9 to 13 years require about 2,071 calories / day. Calori needs Jump for both males and females age 14 to 18 years, when growth spurts occur. Males in this age group require 3,152 calories / day. This above mentioned calorie is important to give the good performance in studies.

Another important fact is the exercise and which will help to maintain the sleep, nutrition and educational performance in the static state. Aerobic exercise, including jogging, swimming, cycling, walking, gardening and dancing have been proved to reduce anxiety and depression. These improvements in mood are proposed to be caused by exercise – induced increase in blood circulation to the brain and by an influence on the hypothalamic – pituitary – adrenal (HPA) axis and due to the physiological reactivity to stress. This physiological influence is probably mediated by the communication of the HPA axis with several regions of the brain, including the limbic system, which controls motivation and mood. The hippocampus, which plays an important part in memory formation as well as in mood and motivation.

Thirty minutes of exercise of moderate intensity, such as brisk walking for 3 days a week is sufficient for theses health benefits. Moreover, these 30 minutes need not to be continuous, three 10 minutes walks are believed to be as equally useful as one 30 minute walk.

I would like to finally stress as to express the good performance in the education, we have the good health as good nutritional status, adequate sleep and adequate exercise and wish the students to get the marvelous performance in the education.

I am happy to give this short article as an old student of Royal Education centre and proudly giving my thanks to my teachers and parents who has made me to this stage.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு நகரங்களின் மீதான பாடல்



சைவப்புலவர்
கு. றஜீபன் M.A.
கலாச்சார உத்தியோகத்தர்
கிளிநொச்சி

## பாடல் 01

கற்களால் ஆனது ஆதி நகரம்
பூக்களைச் சூடி இலைகளை உடுத்தியவர்களால்
வேல்கொண்டு காவல் செய்யப்பட்டது
அப்போதும் தேவேந்திரர்கள்
மன்னர்களோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்
விளைச்சல் நிலங்களை விரிவுபடுத்த
நகரங்களில் மாடங்கள் எழுந்தன
யாகத் தூண்களின் எண்ணிக்கையில்
மன்னர்கள் வரம் பெற்றார்கள்
நடுகற்கள்
வீரத்தின் குறியிடமாய் ஆக்கப்பட்டது
குடைவலம் வருதலும் வாள்வலம் வருதலும்
அப்போதைய ஆண்மையை நிரூபித்தன
மன்னர்கள்
புனிதர்களாக்கப்பட்டார்கள்
நகரங்களில் கோட்டைகள் எழுந்தன
அந்தப்புரங்களில் கலவிகள் நிகழ்ந்தன
வாள்முனையில் வசதிகள் பெருக்கப்பட்டது
நகரங்கள் விரிவாகின
தீப்பந்தங்களால் தெருக்கள் ஒளி பெற்றன
எமது முந்தைய நகரம் கற்களால் ஆனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் 02

எனது நகரம்
நெருப்பை சுவாசிக்கத் தொடங்கிய
காலத்திலிருந்து
குறட்டை ஒலிகளும் கேட்காத
இரவுகள் விழித்திருந்தன
மலர்களும் சுபிக்காத அழகில்
நனைந்து கொண்டிருந்தது
எனது முந்தைய நகரம்
மின்குமிழ்கள் எரியாத
மண்ணெண்ணெய் விளக்குகள் தொங்கிய
கம்பங்களால் சிரித்திருந்தது
எனது நகரம் அப்போது
அவர்களால் ஆளப்பட்டது.

## பாடல் 03

எனது நகரங்களில் இருந்து
கடைசி உண்மைகளும்
வெளியேறிக் கொண்டிருக்கின்றன
இப்போது எனது நகரம்
கட்டடங்களால் நிறைந்திருக்கிறது
வர்ணங்களால்
கவர்ச்சி ஒழுகி இருக்கிறது
துயரம் நிறைந்த கற்கள் அகற்றப்பட்டு
ஒளியூட்டப்பட்ட கற்களால் ஆனது நகரம்
எனது நகரத்தில்
நூலகம் எரியூட்டப்பட்டதற்கான
அடையாளங்களும் குறிப்புகளும்
காணாமல் போயுள்ளன
இன்றைய எனது நகரத்தில்
எல்லாமே கிடைக்கின்றன
மது
மாது
போதைவஸ்து
வன்முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைக் கையில் வைத்திருப்பவர் யார்?
## உணர்வழியியல்
## (Anaesthesia பற்றிய சில விளக்கங்கள்)




இ. அகிலன்
வைத்திய அதிகாரி
மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.


**உணர்வழியியல் (Anaesthesia) என்றால் என்ன?**

உணர்வழியியல் (Anaesthesia) என்பது சத்திரச் சிகிச்சைக்கு நோயாளியை தயார்படுத்தலும் சந்திரசிகிச்சையின் போது வலி தெரியாமல் இருப்பதற்காகவும் மருத்துவத்துறையில் உருவாக்கப்பட்ட பிரபலமான ஒரு துறையாகும்.

**வரலாறு (History)**

சத்திர சிகிச்சையானது புராதன காலங்களில் மிகவும் பிரபலமடையாத ஒரு துறையாக இருந்தது. இது குறிப்பாக கல்வி அறிவு அற்ற மக்களின் தொழிலாகவே இருந்தது. குறிப்பாக முடி திருத்தும் தொழிலாளிகளே பண்டைய காலத்தில் சத்திரசிகிச்சையையும் மேற்கொண்டு இருந்தனர். அப்போதைய நிலையில் ஒருவருக்கு சிறிய சத்திரசிகிச்சை செய்ய வேண்டுமானால் குறைந்தது பத்து பேராவது இணைந்து நோயாளியை தாங்கிப்பிடிப்பர். ஏனெனில் சத்திரசிகிச்சையின் போது ஏற்படும் வலியினை இல்லாதொழிப்பதற்கான வழிமுறைகள் அக்காலத்தில் விருத்தியடையாமல் இருந்தது. மேற்கூறப்பட்ட காரணங்களினால் சத்திர சிகிச்சைத் துறை அக்காலத்தில் பெரிதாக முன்னேற்றம் அடையவில்லை. ஆயினும் பண்டைய சுமேனியர், மற்றும் மொசபத்தேமியஸ் நாகரிக மக்கள் வலியைப் போக்க மதுசாரம் (alcohol) மற்றும் சில மூலிகைகளைப் பயன்படுத்தியமைக்கு ஆதாரங்கள் உள்ளன. "Anaesthesia" என்ற சொல்லானது கிரேக்க மொழியில் இருந்து ஆயிரத்து எண்ணூறாம் ஆண்டின் நடுப்பகுதியில் வருவிக்கப்பட்டது. அதற்குப் பின்னரான காலப்பகுதியிலேயே இத்துறை வளர்ச்சியடையத் தொடங்கியது.

**உணர்வழியியல் துறையில் மேற்கொள்ளப்படுபவை யாவை?**

பொதுவாக உணர்வழியியல் துறையில் மேற்கொள்பவற்றை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. சத்திர சிகிச்சைக்கு முன்னான பகுதி (Pre operative Assesment)
2. சத்திரசகிச்சையின் போதான செயற்பாடுகள் (Intru operative)
3. சத்திரசிகிச்சையின் பின்னான பகுதி (Post operative period)

இங்கு முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட சத்திர சிகிச்சைக்கு முன்னான பகுதியில் சத்திரசிகிச்சைக்கு தயாராகும் நோயாளி அந்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திர சிகிச்சையினால் ஏற்படப்போகும் அழுத்த நிலையை (Stress) தாங்கக்கூடியவரா என் பதனை உணர்வழியியல் வைத்தியர் கணிப் பிடுவர். சில நோய்நிலையியலை கட்டுப் பாட்டுக்கு கொண்டுவர வேண்டும். உதாரண மாக சலரோக நோயாளியின் குருதியில் உள்ள சீனியின் அளவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னரே அவர் சத்திரசிகிச்சைக்கு அனுமதிக்கப்படுவார்.

மேலும் உணர்வழியியல் துறையில் சத்திர சிகிச்சையின்போது மேற்கொள்ளப்படும் பகுதியே பிரதானமாகக் காணப்படுகிறது. மிகவும் முக்கியமான செயற்பாடொன்று இங்கு வைத்தியரினால் மேற்கொள்ளப்படுகிறது. அதாவது பல சத்திர சிகிச்சைகளுக்கு நோயாளி யின் சுவாச அசைவுகளை நிறுத்த வேண்டிய தேவையேற்படும். அச்சந்தர்ப்பத்தில் நோயா ளிக்கு செயற்கையான சுவாசம் Ventilators எனப்படும் கருவியினால் மேற்கொள்ளப்படும் ஒரு நோயாளியின் சுவாசத்தினை நிறுத்து வதற்கு பிரத்தியோகமான மருந்துகள் இன்று மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படுகின்றன.

## Regional Anaesthesia என்றால் என்ன?

இப்பொழுது உணர்வழியியல் துறையில் சத்திரசிகிச்சைக்குத் தேவையான இடத்தை மட்டும் விறைக்கச் செய்யும் Regional Anaesthesia பிரபலபடைந்து வருகின்றது. இங்கு நோயாளி சத்திரசிகிச்சை நடைபெறு வதை அறிந்திருப்பார். ஆனால் சத்திர சிகிச்சை யின் வலியைப் பூரணமாக அவர் உணரமாட் டார். தற்போது சத்திரசிகிச்சை மூலம் குழந்தை பிரசவிக்கும் cessarion முறை இந்த Regional Anaesthesia மூலம் செய்யப் படுகிறது.

மேலும் நரம்புக் கணத்தாக்கத்தினைத் தடைசெய்து குறிப்பிட்ட இடத்தினை விறைக்கச் செய்யும் Nerve block என்னும் முறையும் இப்போது பிரபலமடைந்து வருகின்றது. மிகவும் துல்லியமாக ultra sound scan முறைமூலம் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### வலி நிவாரணி.

உணர்வழியியல் துறையில் நோயாளி யின் சத்திர சிகிச்சையின் போதோ அல்லது அதன் பின்னர் ஏற்படும் வலியை (Pain) போக்குதல் பிரதான பங்கு வகிக்கிறது. இதற்காக பல்வேறு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு நோயாளி ஒருவரை எவ்வளவு குறைவாக வலியை உணராமல் செய்கிறோமோ அவ்வள வுக்கு சத்திரசிகிச்சையின் தரம் உணரப்படும் மற்றும் சத்திரசிகிச்சையின் பின்னான காயம் ஆறுதலிலும் point relieve பெரும் தாக்கம் செலுத்துகிறது.

இறப்பிற்கு பின்னர் ஒரு மனிதனிற்கு உயிர் கொடுப்பதற்கு மருத்துவத்துறையில் இன்னும் இடம் தரவில்லை. ஆனால் ஒரு மனிதனின் இறப்பை மனித்தியாலங்களாலோ அல்லது நாட்களாலோ தள்ளிப்போட மருத்துவத் துறையில் அதிலும் குறிப்பாக உள்ளக வைத் தியப்பிரிவு (ICU) உதவுகிறது. ஒருமனிதனின் சுவாசம் நின்றாலும் செயற்கைச் சுவாசம் மூலம் மனிதனின் சுவாசத்தை நீடிக்கப் பண்ணுவதற்கு Anaesthesia துறை வழிவகுக்கிறது. எனவே தான் "உயிரைக் கையில் வைத்திருப்பவர்" என ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்குள் றோயல் என்றும்.....



எழில் சுபாரத்தினம்
ஆசிரியர்
கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை

பரந்தனில் உதயமான
எங்கள் அன்னை
கிளிநொச்சியில் நிலைபதித்து
25வது அகவை தனில்
காவியங்கள் பல கொண்ட
சரித்திர நாயகியாக
ஆலமரம் போல் வளர்ந்துள்ளாள்.

தனக்கென ஒரு கொள்கை
அதற்கென ஒரு பாதை
பயணங்களில் பல பெருமை
கொண்ட அன்னை
எங்கள் றோயல் அன்னை

வெள்ளி விழா நாயகி - இவள்
மண்ணில் தவழ்ந்த குழந்தைகள் - நாம்
பற்பல துறைகளில்
அதில் பல நிலைகளில்
பயணிக்கின்றோம் இன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான எம் ஆசிரியர்கள்
அரிய நல் பொக்கிசங்கள்
அவர்களின் நல்வழிகள் - இன்று
நல்வாழ்வின் புத்தகங்கள்
மறப்போமா?
காலத்தின் கோலத்தால்
இழந்த நம் ஆசானான
நாதன் சார், சசி சேர்

கல்வி நிலையம்
இவளே எங்கள் கல்லூரித்தாய்
சகல நல் விடயங்கள் கற்கும்
பல்கலைக்கழகமும் இவளே
நிறைகள் சொல்ல
இவளுக்கு நிகர் எவருமில்லை……

பண்பாட்டு விழுமியங்கள்
சிதறாத கல்வி நிலையம்
தனக்கென புகழினை
நிலைநாட்டிய கல்வி நிலையம்

சாதனைகள் பல குவிக்கும்
முத்தான மாணவர்களின்
எதிர்காலம் எழில் பெற
நல்வழி நல்கிடும் - எம்
அன்பான ஆசிரியர்களின்
ஆயுட்காலம் நீண்டு செல்ல
புகழ் மிகுந்து றோயல் சிலிர்க்க
இறைவனை வேண்டிநிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேசைப் பந்தாட்டப் பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்கள்



மென்பந்து கிரிக்கட் பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தைமிகு விஞ்ஞான வளர்ச்சியும் சமூக வலைத்தளங்களும்....



ச. ஜஜீவன்
வைத்திய அதிகாரி
மாவட்ட வைத்தியசாலை
கிளிநொச்சி

உலகின் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய கருத்துக்களை பரிமாறிக் கொள்ள, சமூக வலைத் தளங்கள் ஏதுவாகிறது. எழுச்சி மிகு இளைய சமுதாயத்தை தாங்கி, இன்றைய விந்தைமிகு விஞ்ஞான உலகம் புதிதாய் உருவெடுத்துள்ளது. இருந்த போதிலும், இந்த சமூக வலைத் தளங்கள் இளைய தலைமுறை யினர் மத்தியில் ஏற்படுத்தி யிருக்கும் தாக்கங்கள் "மதில் மேல் பூனையாக" பல எழுச்சிகளையும், பல வீழ்ச்சிகளையும், தாக்கங்களையும் தன்ன கத்தே கொண்டு உலா வருகிறது.

பேஸ் புக், டுவிட்டர், ஆர்குட், மை ஸ்பேஸ் மற்றும் கூகுளின் முன்னோடி சமூக வலைத் தளங்களின் மூலமாக, இளைஞர்களின் சிறப்பான பல ஆக்கங்களுக்கு அங்கீகாரம் மிக எளிதாக கிடைக்கிறது. இந்த தளங்களின் மூலம் இளைஞர்களின் உள்ளார்ந்த திறமைகள் வெளிக்கொணரப்படுவது மட்டுமல்லாமல் அவர்களுக்கு தங்கள் உலகளாவிய நட்பு வட்டாரங்களால் இடப்படும் குறியீடுகள், மற்றும் விமர்சனங்கள் போன்ற ஊக்க மருந்துகளால், இன்றைய இளைய தலைமுறையினர் பலரை பிரபலமானவர்களின் பட்டியலில் இடம் பெற செய்கிறது.

மிகக் குறைந்த பொருட் செலவில் தன்னுடைய மேம்படுத்தப்பட்ட புகைப்படத்தை, செய்வது வெளியிடுவதன் மூலம், இந்த பரந்த போட்டி நிறைந்த உலகில் "நானும் இளவரசன்" என்ற குதூகலிப்பில் இளைய தலை முறை யினர் பட்டாளத்தை தன் பக்கம் படையெடுக்க வைத்திருக்கிறது. உலகத்தின் அசைவுகளை, விரல் நுனியில் அசைபோட, சமூக வலைத் தளங்களின் வீரியமிக்க பயன்பாடு பெரிதும் உதவி புரிகிறது.

அரசாங்க போட்டித் தேர்வுகளை எதிர் கொள்ளும் மாணவ சமுதாயத்திற்கு, மிகப் பெரிய அறிவுக் களஞ்சியமாக, ஆசானாக, இந்த சமூக வலைத்தளங்கள் செயல்படுகிறது. சமீபத்திய முக்கிய நிகழ்வுகள், பொது அறிவு, கணித தீர்வுகள் என இளைய சமுதாயத்தினரால் சிறப்பாக அலசப்படுகிறது. இன்னும் இளைஞர களின் அறிவுப்புயல் மூலம் தீர்க்க இயலாத பெரிய பிரச்சனைகள்கூட, இந்த சமூக வலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளங்களில், சிறப்பான முறையில் விமர்சிக்கப் பட்டு, பெரும் புரட்சிகளை உண்டுபண்ணி இருப்பது கண்கூடு. அமெரிக்க இளைஞர்களின் 'வால் ஸ்ட்ரீட் முற்றுகை போராட்டம்' இந்திய அள விலான கறுப்புப் பணம் மற்றும் ஊழலுக்கு எதிரான போராட்டங்கள் இந்த சமூக வலை தளங்கள் மூலம் கருத்துக்களால், விமர்சனங் களால் அலசப்பட்டு, அதன் நிரந்தர தீர்வுகள் புது வடிவம் பெற்று வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

முகவரிகளை தொலைத்த நாம், அத்தனை நண்பர்களையும், மொத்தமாக, பூட்டிய அறைக்குள் இருந்து கொண்டே உலகம் முழுதும் வலம் வந்து, தேடி கண்டுபிடித்துவிட்ட களிப்பின் தாக்கம் அத்தனையும் முதுமையை எட்டிப் பிடிக்க காத்திருக்கும் இளைஞர்களின் முகத்தில் கூட பிரகாசமாக தோன்றுகிறது.

'காலம் பொன் போன்றது' என்று சொல்லு வார்கள். அவ்வாறு விலை மதிக்கமுடியாத பொன்னான நேரங்களை சமூக வலை தளங் களில் கணக்கின்றி செலவழிக்கும் நம் இளைய சமுதாயம் மைதான விளையாட்டுக்களையும், இயற்கையை ரசிக்கும் தன்மையையும் அடியோடு மறந்தே விட்டது. எட்டு வயதுக்கும் குறைவான நம் எதிர் கால தூண்கள் கூட, தினமும் ஆறுமணி நேரங்கள் இந்த சமூக வலை தளங்களில் வீழ்ந்து கிடப்பது அவர்களின் பள்ளிக் கல்விக்கு கொடுக்கும் முக்கியத்து வத்தை வெகுவாக குறைத்து வருகிறது.

சமூக வலை தளங்களின் தாக்கத்தால் மனதளவில் அடிமைகளாக சிக்கித் தவிக்கும் இளைஞர்களின் மனநிலை மற்றும் உடல் கூறுகளின் பாதிப்புகள் அதிகமானதாக மனோ தத்துவ நிபுணர்களும், நரம்பியல் வல்லுனர் களும் ஒரு அதிர்ச்சி தகவலை அண்மையில் வெளியிட்டுள்ளனர். பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் அதிக நேரம் இவ்வலைத் தளங்களில் நேரம் செலவழிப்பதால் மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். பேஸ்புக் பாவனையில் ஈடுபடும் பாடசாலை மாணவர் களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. போதிய விழிப்புணர்வின்மை காரணமாக பேஸ்புக்கில் தான்தோன்றித்தனமாக செயற்படும் போது ஏற்படும் பின்விளைவுகளை தாங்க முடியாதவர்களாக அவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகின்றார்கள். கணனியுகப் போரை கட்டுக்குள் கொண்டு வர முயற்ச்சிகள் மேற் கொள்ள வேண்டும்.

சமூக வலை தளங்களில் வலம் வரும் பெரும்பாலான இளைய தலைமுறையினர் ஒன்றுக்கும் மேற்பட்ட வலை தள கணக்குகளை வெவ்வேறு பெயர்களில் திறந்து, உண்மைக்கு புறம்பான சுய விளம்பரங்கள் செய்து பிறரை ஏமாற்றுவதுடன், அதன் சிறப்பான நோக்கத்தை சீரழித்தும் வருகின்றனர். இதனால் அறிமுகம் இல்லாதவர்கள் கூட விஷமிகளின் தொந் தரவுக்கு ஆளாகின்றனர். சமீப காலங்களில் "சைபர் கிரிமினல்" குற்ற வழக்குகளில் கைது செய்யப்படவோரில் பெரும்பாலோர் இளைஞர் களாக இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எமது நாட்டில் ஒரு பெண், பல இளைஞர்களை ஏமாற்றி பணம் பறித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ஆகவே இந்த வலை தளங்களின் மூலம் இளைய தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையினர் அறிந்தோ, அறியாமலோ ஒரு இரகசிய சமுதாய வட்டத்தினை உருவாக்கி அதனுள் சர்வ சுதந்திரமாக வலம் வருகின்றனர். இதன் தாக்கத்தால் பெற்றோர்கள் கூட, சமூக வலை தளங்களை பயன்படுத்தும் தங்கள் பிள்ளைகளை கண்காணிப்பது என்பது மிகக் கடினமானதாகவே இருந்து வருகிறது.

சமீப காலங்களில், தீவிரவாத விசக் கிருமிகள் செழித்து வளர மிகச் சரியான தளமாக இருந்து வருவது மிகுந்த வருத்தத்திற்குரியது. தங்களுடைய அபாயத் திட்டங்களை ஓரிடத்தில் இருந்து கொண்டே உலகமயமாக்கும் தீவிரவாத சக்திகளின் தொலை தொடர்பு சாதனமாகவும் திகழ்கிறது. "மூளைச் சலவை" செய்யப்படும் தீவிரவாதிகள் உலகத்திற்கே மாபெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகின்றனர்.

இலவச ஆபாச காட்சிகளும், அழையா விருந்தாளியாக கூடவே பரவலாக்கப்பட்டிருக்கிறது என்பது நாம் யாவரும் அறிந்த கூடுதல் தகவல். தற்போது சமூக வலை தளங்களில் வலம் வரும் சில சமூக விரோத காமுகர்கள், இளையவர்களின் பாலுணர்ச்சியை தூண்டும் புகைப் படங்களை, ஒலி ஒளி காட்சிகளை பகிர்வு செய்து வருகின்றனர். இது போன்ற ஆபாசங்கள் மற்றும் தீவிரவாதங்களின் அணைக்கட்டாக சமூக வலை தளங்கள் இளைய தலைமுறையினர் மத்தியல் தவறான தாக்கத்தையும் உருவாக்கி இருக்கிறது.

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது பழமொழி. ஆகவே நம் இளைய சமுதாயம் அறிவார்ந்த விசயங்களை பகிர்ந்து கொள்வதில் எந்த தவறும் கிடையாது. ஆனால் அதற்கு கூட அடிமையாவது என்பது ஆபத்தானது. இந்த சமூக வலை தளங்களை இளைய தலைமுறையினரை மிகச் சரியான வழிகளில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பிரதி பலனான ஆக்கமும், அழிவும் அவர்கள் கைளி லேயே இருக்கிறது. நெருப்பின் முன் வைத்த பஞ்சு கருகி விடுவதைப் போல அழிவின் தாக்க மாக சமூக வலை தளங்கள் உருவெடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அண்மைக் காலமாக பேஸ்புக் என்ற வார்த்தை இலங்கையில் பெரிதும் பேசப்படும் சொல்லாகவும் சர்ச்சைக்குரிய தலைப்பாகவும் மாறியிருக்கிறது. குழந்தையின் பாதுகாப்பில் நீங்கள் உண்மையான அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்றாலும் துரதிர்ஷ்டவசமாக அதை எப்போதும் செயல்படுத்த முடியவில்லை என்பதும் எங்களுக்குப் புரிகிறது. ஆனால் அவர்கள் சுய பாதுகாப்பு நடத்தையை வளர்த்துக் கொள்ளத் தேவையான தகவல்களையும் திறன்களையும் நீங்கள் அவர்களுக்கு வழங்க முடியும்.

கிளிநொச்சி றோயல் கல்வி நிலையம் என்று டைப் செய்தவுடனேயே, எந்த ஊரில? எந்த இடத்தில? எந்த நாட்டில்? இருக்கிறது என்பதையும், நீங்கள் இப்போது இருக்கும் இடத்திலிருந்து அந்த ஊருக்கு எவ்வளவு தொலைவு?, எந்தப் பாதையில் செல்ல வேண்டும்? என்பன உள்ளிட்ட எல்லாத் தகவல்களையும் விரல் சொடுக்கும் நேரத்தில் பெற்றுவிட முடிகிறது அந்த ஊரில் குறிப்பிட்ட ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபரின் வீடு எந்த இடத்தில் இருக்கிறது என்பதைக்கூட கண்டுபிடித்து விடமுடியும்.

இதற்கெல்லாம் எப்போதாவது பணம் கொடுத்திருக்கிறீர்களா? இதையெல்லாம் நமக்கு ஏன் இலவசமாக சேவை செய்ய வேண்டும் என்கிற கேள்வி எப்போதாவது உதித்திருக் கிறதா? இல்லையென்றால், நீங்கள் நம்பியி ருக்கும் நிறுவனங்கள் இன்றுவரை உங்களைத் தான் விற்று வந்திருக்கின்றன. பணம் கொடுக்காமல் கிடைக்கிறது என்பதற்காக எதையாவது பயன்படுத்தினால், அங்கு விற்கப்படும் பொருளே நீங்களாகத்தான் இருப்பீர்கள் என்பது பொருளாதார நிபுணர் ஒருவர் கூறியிருக்கும் அருமையான வாசகம்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.

மேன்மை தரும் ஒழுக்கத்தை அடைய இன்றைய தலை முறையினரை அன்றாடம் நல்ல பழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.

தத்துவஞானி அரிஸ்டாட்லின் "நீ என்பது உன் எண்ணங்களே! என்பதற்கமைய" உயர்ந்த எண்ணங்கள் உயர்ந்த செயல்களாகின்றன. உயர்ந்த செயல்களால் உயர்ந்த சமூகங்கள் உருவாகின்றன. ஒருவரால் நல்ல எண்ணங் களே அவரது வாழ்க்கை விதியை நல்லபடியாக உருவாக்குகின்றது.

விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தை எமது விவேகத்தால் அணுகி எமது பண்பாடு பாரம் பரியம் கலாச்சாரத்தைப் பேணி உலக வலையமைப்பில் எம்மை நாம் அடையாளப் படுத்த வேண்டும். மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுமா? என்ற அவதானம் எந்த நேரமும் எமது நெஞ்சின் மூச்சுக்காற்றாக வேண்டும். நோயற்ற நீண்ட வாழ்வே உலகின் சிறந்த செல்வம் என்பதற்கமைய விஞ்ஞான வளர்ச்சி யின் வேகம் இளையவர்களை அடிமையாக்கி உடல் உள ஆரோக்கியத்தை இழக்கச் செய்யும் என்பதால் எதையும் செய்வதற்கு முன் பல தடவை சிந்திப்பதும் அனுபவமிக்க பெரியோரது ஆசியைப் பெற்றும் செயல்படுமா? எமது இளையோர் சமூகம்.

ஒரு மனிதனை தாக்கும் மிகப்பெரிய ஆயுதம் மௌனம்.
வெற்றியாளனுக்கு இலக்கு தான் முக்கியம் அதில் வரும் இடைஞ்சல் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரமா? மனிதனா? உயர்திணை



திருமதி சுலோஜினி சிவபாலன்
ஆசிரியர்
கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை

"மக்கடேவர் நரக ருயர்திணை-மற்றுயிர் உள்ளவும் அல்லவும் அஃறிணை" என இலக்கண ஆசிரியர்கள் வரையறுகின்றார்கள். இவ்வகையில் பகுத்து ஆராய்ந்து அறியும் அறிவுள்ள மக்கள், தேவர், நரகர் ஆகிய மூவகையினருமே உயர்திணை எனவும் ஏனைய உயிருள்ளனவும், உயிரற்றனவுமாகிய அனைத்தும் அஃறிணை என இலக்கண நூல்கள் எடுத்தியம்புகின்றன. இதனை புதிய கோணத்தில் நோக்குவோமானால் மனிதன் மனிதனுக்கு உதவுவதைவிட மரம் மனிதனுக்கு உதவுவதை நாம் கண்கூடாகக் காண முடிகின்றது.

மண்ணில் வேரூன்றி, மாநிலத்தில் நிழல்பரப்பி சாலையின் இருமராங்கிலும் நிற்கும் மராங்கள் மலர் சொரிந்து மனிதரின், பயணத்தை ஆசீர்வதிக்கின்றது கொழுத்தும் வெயிலுக்கும் குடைபிடிக்கும் மரங்களை வழி நடந்த களைப்பால் சோர்வடையும் போது தாய்ப்பாசத் தோடு தம் அடியில் அரவணைக்கும் மரங்கள். இத்தகு மாண்பு கொண்ட மரங்களை உயா திணை என்பதா? அஃறிணை? என்பதா?

மனிதனின் வாழ்க்கைப் பயணத்தில் மரங்களின் வகிபங்கைப்பாருங்கள் அவனது குழந்தைப்பருவத்தில் தொட்டிலாகி, நடைபழகும் பருவத்தில் நடைவண்டியாகி, பள்ளிப் பருவத்தில் ஏடுகளாகி, திருமணப்பருவத்தில் கட்டிலாகி, கிழப்பருவத்தில் ஊன்றுகோலாகி இறந்த பின்னர் பாடையாகி பிணம் வைத்த சிறையிலும் விட்டுப்பிரிய மனமின்றி உடன் கட்டையும் ஏறி சாம்பலோ சாம்பலாகி மனிதனுக் காகவே தம்மை முற்றிலும் அர்ப்பணம் செய்யும் மரங்கள் உயர்திணையா? அஃறிணையா? சிந்தித்துப்பாருங்கள் இது மட்டுமா?

மரங்களின் உதவியை எண்ணிப் பாருங்கள், தாகத்தால் வரும் மனிதனுக்கு பானம் தந்து தாகம் தீர்க்கின்றது. பசிக்கு உணவு அளித்து உடுக்க உடையாகி, வசிக்க வீடாகி நோய்க்கும் நொடிக்கும் மருந்தாகி, அவன் பயணத்திற்கு சக்கரங்களாகி வேலைகள் செய்யும் போது கைகளுக்கு கைகளாகி ஏன் அவனது சுவாசத்திற்குச் சாற்றைச் சலித்துக் கொடுத்து அவனுக்காக மேகங்களைக் கெஞ்சிப் பிச்சைகேட்டு மழையை வேடா்யுக மனிதனல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான யுகமனிதன் கூட உயிர் வாழ்ந்திருப்பானா? இந்த அழகில் மனிதன் உயர்திணையாம் மரங்கள் அஃறிணையாம்.

மனிதர்கள் கோபமிகுதியால் மனிதர்களைப் பார்த்து "மரமே" "மரம் மாதிரி நிற்கிறாய்" என்றால் மனிதன் கோபித்துக்கொள்கின்றான். ஆனால் கோபித்துக் கொள்ள வேண்டியது மரம் தான் ஏனெனில் மனிதன் மரமாக முடியுமா? மனிதனுக்கும் மரத்திற்கும் எவ்வளவு வேறுபாடுகள்.

மனிதன் தன்னை "மண்ணின் மைந்தன்" என்று சொல்லிக்கொள்கின்றான் ஆனால் உண்மையில் மண்ணின் மைந்தர்கள் மரங்களே மனிதர்கள் அல்லர் ஏனென்று கேட்கின்றீர்களா? "மண் மனிதனுக்கு புதைகுழி" "மரத்துக்கோ கருவறை" எனவே மரத்தின் தோற்றத்திற்குக் காரணமாக மண் உள்ளதால் மண்ணின் மைந்தர்கள் மரங்களே என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மனிதர்களுக்குள் ஒரே ஒரு பிடி, ஒரே ஒரு சீதக்காகி. மரங்களில் எல்லாமே சிபிகள் எல்லாமே சீதக்காதிகள் மரம் கொடுப்பதற்காகவே கைகளை நீட்டுகின்றது மனிதன் வாங்குவதற்காகக் கைகளை நீட்டுகின்றான். மரம் அத்தனை கைகளாலும் கொடுக்கின்றது. ஆனால் மனிதனோ வலக்கையால் கொடுப்பதை இடக்கையால் வாங்கிக் கொள்கின்றான். மரம் வானத்தை நோக்கிய வளர்கிறது மனிதன் புழுதியிலேயே புரளுகின்றான். மனிதனுக்கு மரமாகத்தான் முடியவில்லை மரங்களைப் படைக்கவாவது மனிதனுக்கு தெரிகிறதா. இந்தவகையில் மனிதரை வாழ வைக்கும் மாண்பு கொண்ட மரங்களை அ.ஃறிணை என்பதா? உயிர்திணை என்பதா? நீங்களே சொல்லுங்கள்.

உனது இன்பத்திற்காக அடுத்தவனைத் துயரப்படுத்துவாயானால் நீயும் ஒரு நாள் துயரப்பட வேண்டியது நியதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் தந்த மனித வாழ்வு




செல்வி சி. சஜீபா
மாணவி
க.பொ.த. உயர்தரம்


அண்டம் உண்டாகி ஆண்டுகள் உருண்டோடி தொன்மை தொலைந்து புதுமை புகுந்து மாற்றங்கள் மாநிலம் இன்றொரு பொற்காலத்திலே இம் மாற்றங்கள் புதிதாக ஏற்பட்டதொன்றல்ல 20 ஆண்டுகள் கடந்து இன்று வேகமாக வீறுநடை பயிலுபவனவாக இன்றைய மிலேனிய யுகத்து மனிதன் மார்பு தட்டி எழுச்சியுடன் இயங்கிக் கொண்டிருக்கும் 21ம் நூற்றாண்டில் தடம்பதித்துக் கொண்டிருக் கின்றோம்.

அன்று விலங்குகளுடன் விலங்குகளாக தம்மை யார் என்று தெரியாது தம்மை மறந்து ஆடையற்று நாடோடியாக நடை பயின்றான். கலை உணர்ச்சியின் வெளிப்பாடாக ஓவியம் வரைந்தான். பின் இலை, மரப்பட்டை, விலங்குகளின் தோல்கள் கொண்டு ஆடை களை ஆக்கினான். பின் கல், மரம், எலும்பு ஆயுதமாக்கி வேட்டையாடினான். சிக்கிமுக்கிக் கற்களை உரசுவதன் மூலம் நெருப்பை கண்டுபிடித்தான் பச்சை உணவை இச்சையுடன் உண்ட மனிதன் அன்றிலிருந்து உணவை சமைத்து உண்ண தொடங்கினான். அன்று வளர்ந்த தொழிநுட்பம் தான் சமையல் பின் விவசாயம் செய்தான். உலோகங்களை கண்டறிந்து ஆபரணம், பாத்திரம், ஆயுதம் செய்தான். இவ்வாறாக மனிதனின் இலகு வாழ்க்கைப் பயணம் ஆரம்பமானது.

ஆனால் இன்று ஒரு குழந்தை பிறந்தது முதல் அது வளர்ந்து மூப்படைந்து இறக்கும் வரை அதன் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் அது பயன்படுத்தும் ஒவ்வொரு கருவிகளிலும் விஞ்ஞானம் கலந்திருக்கிறது. அதாவது விஞ்ஞானமே ஒரு மனிதனை இன்று ஆளு கிறது. அந்த வகையில் கருவிகளை நாம் இயக்குகின்றோமோ அல்லது கருவிகள் நம்மை இயக்குகின்றனவோ எனும் அளவிற்கு இயந்திரங்களின் அடிமைகளாக மனிதர்கள் மாறி வருகின்றனர்.

வீட்டில் ஆடை துவைப்பது, வீட்டை சுத்தம் செய்வது என ஆரம்பித்து அருகில் உள்ள கடைக்கு போகவும் மோட்டார் சைக்கிள், சிறிய கணக்குப் போட Calculater, கணனி, காற்று வாங்க; மின்விசிறி, AC, மாடிப்படியேற Lift என




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு அசைவும் இயந்திரங்களின் உதவியால் மட்டுமே செய்ய முடியும் எனும் அளவிற்கு மாறிவிட்டது. இதில் மின்னணு இயந்திரங்களான கணனி, தொலைக்காட்சி, தொலைபேசி என்பவை பெரும்பங்கு வகிக்கின்றன. இதன் மூலம் செய்திப் பரிமாற்றம் விரைவாக, சிக்கனமாக நடக்க முடிகிறது. இவை நவீன விஞ்ஞானம் பெற்றெடுத்தஅருமைக் குழந்தைகள்.

அதிகாலையில் கண்விழிக்க உதவும் கட்டில் (High Voltage Ejector Bed) அதாவது காலையில் எழும்ப வேண்டிய நேரத்தை குறிப்பிட்டால் அது எம்மை சரியான நேரத்திற்கு எழுப்பி விடக் கூடியது. இவ்வாறு துயிலெழுவது கூட நாமே செய்வதில்லை எனும் அளவுக்கு மிகவும் அசௌகரியமான விந்தை மிகு உலகில் வாழ்ந்து கொண்டு வருகிறோம் என்றால் அதற்கு முதுகெலும்பாய் விளங்குவது நவீன தொழில்நுட்ப வளர்ச்சி இன்று அண்டத்தையே சுருக்கி விட்டது. வன்னியில் நடப்பதை வத்திக்கானில் பார்க்கலாம். தமிழ் நாட்டில் நடப்பதை தாய்வானில் பார்க்கலாம்.

இணையம் என்பது இன்று கண்டது காணாதது காணக்கூடாதது எல்லாவற்றையும் கணப்பொழுதில் கண்ணெதிரே காட்டுகின்றது. அந்தரங்கங்கள் பல அம்பலமாகின்றது அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. பழைய கற்பனைகள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள் எல்லாம் இன்று நனவாகி, நடைமுறைக்கு வந்துவிட்டன. இன்று பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் நடப்பவற்றை சில வினாடிகளில் அறிகின்றோம். பரிசோதனைக் குழாய் மூலம் பிள்ளை பிறக்கிறது. தாய்ப்பால் இல்லாமல் தரணியில் வாழ்கிறார்கள்.

தற்காலத்தில் விஞ்ஞானத்தின் புதிய பரிமாணமாக நனோ தொழில்நுட்பம் எழுந்துள்ளது. ஒரு நனோ துணிக்கை ஒரு தலைமுடியின் கனத்தை பத்தாயிரம் அல்லது நூறாயிரம் மடங்கு மெலிதாக்கினால் என்ன அளவு இருக்குமோ அந்த அளவு சிறியது. இத்தொழில்நுட்பம் உயிரியல், வேதியல், இயற்பியல், மின்னியல், மருத்துவம் பொறியியல் போன்ற பல துறைகளில் பங்களிப்பு செய்கிறது.

உதாரணமாக மருத்துவ துறையில் நுண்ணிய அளவிலான ரோபோ, சென்சர்கள், கமரா மற்றும் இதா சாதனங்கள் என்பவற்றைக் கண்டறிந்து மருத்துவ துறைகளில் பயன்படுத்துவது உடலை துளையிடாமல் சிகிச்சையளிப்பது, நோயாளி உடலின் உட்புறத்தை பாதுகாத்து சிகிச்சை அளிப்பது புற்று நோய்க்கு சிகிச்சையளிப்பது, மூப்பை ஏற்படுத்தும் கலங்கள் கண்டறியப்பட்டு அவை மாற்றியமைக்கப் படுவதால் தோற்றத்தில் மாற்றம் ஏற்படாமல் பேணல் போன்றவற்றிலும் விவசாயதுறையில் விதைகளினுள் காபன் குழாய்களை கலந்து விதைக்க அவை சாதாரண விதைகளை விட வேகமாக முளைவிட்டு வளர்கிறது. நனோ துணிக்கைகள் மண், நீர், வளியுடன் சேர்வது ஆபத்தான விளைவுகளையும் தருகிறது. புற்றுநோய்க்கும் வழிகோலுகிறது.

மனிதனின் இரகசிய ஆயுதமே விஞ்ஞானம்தான். அறிவியலை பயன்படுத்தி அகிலத்தையே கைக்குள் கொண்டு வந்துள்ள மனிதன் இன்று மரணதேவனுக்கே டாட்டா காட்டும் நிலைக்கு முன்னேறியுள்ளான். எதிர்காலத்தில் மனிதனுக்கு இயற்கை மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையாம். நோய், நொடியின்றி 1000 ஆண்டுகள் அமரக்களமாக வாழமுடியுமாம். அத்துடன் தலையை அகற்றி வேறு உடம்பில் பொருத்தும் சிகிச்சையும் நடைபெற இருக்கிற தாம். அத்தோடு குளோனிங் முறை மூலம் புதிய உயிரினங்களை ஆக்க தொடங்கிவிட்டான். Eg:- ஆடு, பன்றி, நாய், பூனை. இந்த முறை மூலம் மருந்தால் குணப்படுத்த முடியாத நோய்களாகிய சக்கரை வியாதி, பாலியல் நோய்கள், எயிட்ஸ், புற்று நோய், சித்த சுவாதீனம், நரம்பியல் நோய்களுக்கு சிகிச்சை யளித்து குணப்படுத்தல் சாத்தியம் என கண்டறி யப்பட்டது.

மனித கரு உருவாகும் வேளை ஆணின் நிறமூர்த்தம் ஒன்றும் பெண்ணின் நிறமூர்த்தம் ஒன்றும் இணைந்து ஆரம்பத்தில் ஒரு கலம் மட்டுமே தோன்றும். பின் அது இழையுருப்பிரிவடைந்து எண்ணிக்கையில் பெருகி இழையங்கள் தோன்றி, அங்கங்களாகி இறுதியில் குழந்தை வடிவம் பெறுகிறது. இவ்வாறு கரு வளர்ச்சியின் முதல் கட்டத்தில் உறுப்புக்கள் தோன்ற முன் கலங்களை பிரித்து எடுத்து பொருத்தமான நிபந்தனைகளின் கீழ் ஆய்வு கூடத்தில் வைத்து வளர்த்து அவற்றைத் தனித்தனி உறுப்புக்களாக விருத்தியடைய செய்கின்றனர். இதன்போது பாதிப்படைந்த மரபணுக்களை உடலில் இருந்து பிரித்து அகற்றிவிட்டு அதற்கு பதிலாக குளோனிங் மூலம் உருவாக்கிய கலங்கள் பொருத்தப் படுகிறது. இதன் மூலம் கொடிய நோய்கள் மட்டுமல்ல வாய் பேச முடியாதவர்கள். கட்புல னற்றோர், செவிப்புலனற்றோர், ஊனமுற்றோர் கூட தமது குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வாய்ப்பும் ஏற்பட போவதாக தெரிவிக்கின்றனர் விஞ்ஞானிகள்.

அத்துடன் ரோபோக்களின் கண்டுபிடிப்பும் விஞ்ஞானத்தின் புதிய பரிணாமம் ரோபோக்கள் ஒரு doctor போல ஸ்ரெதஸ்கோப் வைத்து பார்ப்பது B.P பரிசோதிப்பது நமது கண்ணைத் திறந்து பார்ப்பது, வாய்க்குள் ஒளி அடித்துப் பார்ப்பது போன்ற வேலைகளை செய்ய உதவி வந்தன. இப்போது ரோபோக்களின் உதவியுடன் சிறுநீரக அறுவை சிகிச்சையை நடாத்தி வெற்றியும் கண்டுள்ளனர்.

தொழில்நுட்ப வளர்ச்சி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக முன்னேற்றமடைந்து வருகிறது. அந்த வகையில் இதயம் பழுதடைந்தவர்களுக்கு செயற்கை இதயத்தை மாற்றீடு செய்யும் சத்திர சிகிச்சை, செயற்கை கண் மாற்றீடு செய்யும் சத்திர சிகிச்சை, மனித மூளை போன்று செயற்பட கூடிய Super Computer தயாரிப்பு முயற்சி, உலகம் தினமும் பரபரப்பாக இயங்க உதவும் மோட்டார் வாகனங்களின் கண்டு பிடிப்பு, மொழி தெரியாத ஊர்களுக்கு செல்லும் போது அம்மொழியை இணைய வசதி இல்லாமலே எமது மொழியாக மாற்றிக் காட்டும் world lense கண்டுபிடிப்பு போன்ற பல துறைகளிலும் பல்வேறு கண்டுபிடிப்புக்களை கூறலாம்.

நவீன விஞ்ஞானத்தின் பரிணாம வளர்ச்சி மண்ணையும் தாண்டி விண்ணைத் தொட ஆரம்பித்துவிட்டது. அந்த வகையில் தற்போது நிலவில் கீறல் விழுந்துள்ளதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டபிடித்துள்ளனர். அவ்வாறு விண்ணில் நடக்கும் சிறு மாற்றத்தையும் அறிய முடிகிறது. அதன் பயனாக வேற்று கிரகங்களில் வாழ மனிதன் தனக்கென இடம் பிடிக்கின்றான்.

இருப்பினும் மனிதன் இன்று விஞ்ஞானத்தில் கொடைகளை தவறான வழியிலும் பயன்படுத்தி வருகின்றான். உதாரணமாக அணுகுண்டு ஐதரசன் குண்டு, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளின் தயாரிப்பை குறிப்பிடலாம். இதனால் சந்ததி சந்ததியாக கடத்தப்படக் கூடிய தீராத நோய்கள் ஏற்பட காரணமாகிறது. பல லட்சம் மனிதர்களின் உயிரை காவு கொள்கிறது. இதனால் சமநிலை குலைவுகளிற்கும், நிலை குலைவுகளிற்கும், திடீர் திடீர் காலநிலை மாற்றங்களுக்கும் ஆணிவேராய் திகழ்கிறது இன்றைய விஞ்ஞானம்.

இதன் விளைவு இன்று பூனைக் கண்ணுடன் மனிதன் பிறக்கின்றான். மனிதக் கண்ணுடன் பூனை பிறக்கிறது. மூன்று கால் மூன்று கையுடன் குழந்தை பிறக்கிறது. கை, கால் இல்லாத முடமாகவும் பிறக்கிறது. தவறி ஒழுங்காக பிறந்த குழந்தையும் தொழில் நுட்பத்தின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு Video games, இணையம், தொலைக்காட்சி, கைத்தொலைபேசி பொன்ற வழிகளில் தனது பொன்னான நேரத்தை செலவிடுகிறது. இவ்வாறு விஞ்ஞானம் அளித்த வாழ்வு ஒரு புறமிருக்க அதை தவறாக பயன்படுத்தி எமது வாழ்வை நாமே அழித்துக் கொண்டிருக்கின்றோம்.

நவீன விஞ்ஞான உலகில் கருவிகள் பற்றிய அறிவு இல்லாதவன் அதை பயன்படுத்தி கொள்ளாதவன் மூடன். அதில் சிக்கிக் கொண்டவன். அடிமை திறமையாக பயன்படுத்தி கொள்பவன் அறிவாளி. இதில் நீ மூடனா? அடிமையா? அறிவாளியா? என்பதை முடிவு செய்ய வேண்டியது ஒவ்வொரு மனிதனுமே ஆகும்.

நிகழ் காலத்தில் கவனம் எடுத்துக்கொள்
எதிர்காலம் தன்னைத்தானே கவனித்துக் கொள்ளும்.

*– பொன்மொழிகள் –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதத்தின் வளர்ச்சியும் அதில் தமிழரும் பங்கு



குமார் கீர்த்தனன்
பொறியியல் துறை மாணவன்
பேராதனைப் பல்கலைக்கழகம்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

திருக்குறள் -

என திருவள்ளுவர் இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே கணிதத்தின் முக்கியத்துவத்தை பறைசாற்றியுள்ளார். தென் அமெரிக்காவில் இருந்த பழைமை வாய்ந்த "மாயா" இன மக்களினால் பயன்படுத்தப்பட்ட எண்முறை கணிதம் என்பது வணிகத்தில் எண்களுக்கிடையிலான தொடர்பை அறிவதிலும், நிலத்தை அளப்பதிலும் அண்டவியல் நிகழ்வுகளை வருவதுரைப்பதிலும் மனிதனுக்கு இருந்த கணித்தலின் தேவைகள் காரணமாக எழுந்த ஓர் அறிவியல் பிரிவாகும். இத்தேவைகள் பின்வரும் நான்கு பெரிய கணிதப்பிரிவுகளை பிரதிபடுத்துகின்றன.

1. அளவு (Quantity) – எண் கணிதம்
2. அமைப்பு (Structure) - இயற்கணிதம்
3. வெளி (space) – வடிவவியல்
4. மாற்றம் (Change) – நுண்கணிதம்

கணிதம் என்பது எண்களை வைத்துக் கொண்டு உண்டாக்கப்பட்ட கணிப்பியலே அல்லது வடிவங்களை வைத்துக்கொண்டு உண்டாக்கப்பட்ட வடிவியலே அல்லது எண்களுக்கு பதிலாக குறிப்பீடுகளை வழங்கி அவைகளை எண்கள் போல் கணிப்பு செய்யும் இயற்கணிதமே கணிதத்தின் இயல்பு என ஆரம்பகாலத்தில் கருதப்பட்டது. ஆனால் கணிதம் இவற்றையெல்லாம் தாண்டி கணிதம் இல்லாமல் இன்று வேறு எந்த துறையும் முன்னேறமுடியாது என்று சொல்லுமளவிற்கு பரந்துபட்டு காணப்படுகிறது.

கணித வரலாற்றில் தமிழருக்கு என்று ஒரு முதன்மை இடம் உண்டு பழைய கால தமிழ் இலக்கியங்கள் அல்லது பாடல்கள் தமிழ் புலவர்களின் கணித அறிவினை பறைசாற்றுகின்றது. திருக்குறளை எடுத்து நோக்குவோமாயின் திருக்குறளில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எண், பத்து கோடி ஆகிய எண்கள் தொகையீடுகள் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றைவிட பலாப்பழத்தை வெட்டாமல் அதிலுள்ள சுளைகளின் எண்ணிக்கையை காண பழம்பெரும் கணித நூலான கணக் கதிகாரத்தில் "பலாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுளையறிய வேண்டு திரேல்" எனத் தொடங்கும் பாடலிலும் பூசணிக் காயினை உடைக்காமல் அதிலுள்ள விதை களின் எண்ணிக்கைகாண "கீற்றெண்ணி முத்தித்துக் கீழாறினால்..." எனத் தொடங்கும் பாடலிலும் கூறப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கமுறையை பயன்படுத்தி தமிழ் புலவர்கள் பல சிலேடைப் பாடல்களை பாடியுள்ளனர் உதாரணமாக ஔவையார் "அவ இலட்சணம்" என்பதை சிலேடையாக 'எட்டே கால் லட்சணம்' என பாடியுள்ளார். தமிழில் "அ" என்ற எழுத்து "எட்டு" என்ற இலக்கத்தையும் "வ" என்ற எழுத்து கால் பங்கை (¼) குறிக்கும் அகவே 'எட்டேகால்" என்பது 'அவ' என்றாகிறது. இவை பழைய காலங்களிலே தமிழில் இலக்க முறைமை பயன்படுத்தப்பட்டமையும் கணிதத் தின் பிரயோகம் காணப்பட்டமையையும் பறை சாற்றுகிறது.

## தமிழ் இலக்கமுறைமை

| தமிழ் இலக்கம் | அரேபிய இலக்கம் | சொல் |
|---|---|---|
| க | 1 | ஒன்று |
| உ | 2 | இரண்டு |
| ங | 3 | மூன்று |
| ச | 4 | நான்கு |
| ரு | 5 | ஐந்து |

இவ்வகையில் தமிழ் இலக்கமுறைமை காணப்பட்டது உலகிற்கு **"க, உ, ங ,ச, ரு (1,2,3.........)"** எனும் எண் வடிவங்களை வழங்கியது தமிழ்மொழியே ஆகும். தமிழர் களிடமிருந்தே 1,2,3,4.......... எனும் எண்கள் அரேபியர் மற்றும் பெனிசிய வணிகர்களின் வாயிலாக உலகம் முழுவதும் பரவியுள்ளன.

தமிழ் எண்ணுருக்களில் பூச்சியத்திற்கு குறியீடு காணப்படவில்லை. எண்களை எழுது வதில் இடமதிப்பு திட்டத்தையும் பூச்சியம் என்ற கருத்தையும் உருவாக்கி கணித குறியீட்டு முறைக்கு அடிகோலிட்டவர்கள் இந்திய கணித வியலாளர்களான **"ஆரியப்பட்டா, பிரம்மகுப்தா"** என்பவர்களாவார்.

வேத கணிதம் பற்றி நோக்குவோ மாயின் இது மிக வேகமான கணக்கீட்டு முறையாகும். இம்முறை மூலம் சிக்கலான கணக்குகளுக்கு எளிதாக தீர்வு காணமுடியும் வேதக் கணிதத்தின் தந்தை எனப்போற்றப்படும் **"ஸ்ரீ பாரதி கிருஷ்ணா தீர்த்த சுவாமி"** என்பவரால் 16 முதன்மை சூத்திரங்களும் 13 துணைச் சூத்திரங்களும் உருவாக்கப்பட்டது. இவற்றின் மூலமாக கூட்டல், கழித்தல் பெருக்கல், வகுத்தல், வர்க்கம், வர்க்கமூலம் கனமூலம், சிக்கலெண், நுண்கணிதம், இருபடிச்சமன்பாடு, பைதகரஸ் தேற்றம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போலோனியல் தேற்றம் போன்ற பல கணித செய்கைகளை மிகக்குறுகிய நேரத்தில் விடை காணமுடியும்.

கணிதத்துறையில் தமிழரின் பங்கை உலகிற்கு எடுத்தியம்பிய பல தமிழ் கணித மேதைகளில் மிக முக்கியமானவர் **சீனிவாச ராமானுஜன்** ஆவார். இவர் சிறுவயதிலேயே யாருடைய உதவியும் இல்லாமல் வியப்பூட்டும் விதத்தில் கணிதத்தின் அடிப்படையான ஆழ் உண்மைகளை கண்டுணர்ந்தார். குறுகிய காலப்பகுதியில் அண்ணளவாக 3900 புதுக்கணித தேற்றங்களை கண்டுபிடித்தார் இவர் **'பை(Pi)'** குறியின் மதிப்பை துல்லியமாக கணக்கிட நூதன முறையில் பல வழிகளை வகுத்தார். இவ்வாறாக தமிழரின் பங்களிப்பு கணிதத்துறையில் அமைந்தது.

இவ்வாறாக தற்போதைய கணிதத்தின் வளர்ச்சியை தெரிந்து கொள்ள கணித வியலாளர்கள் பலரின் வரலாறுகளே தக்க சான்றுகளாகும் ராமானுஜர், நியூட்டன், காஸ், கோஷி, கெ்யலி போன்ற நூற்றுக் கணக்கான வர்களின் பங்கு கொண்டு உருவாக்கப்பட்ட கணிதமே இன்றை கணிதமாகும்.

ஏமாறாது இருக்க வேண்டுமானால் நீ முதியோரின் அனுபவத்தை கேட்டுத் தெரிந்து கொள்.
வீண் பேச்சிலும் அரட்டையிலும் ஈடுபடாதே. அவை உன கவனத்தை திருப்பிவிடும்.
மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளும் அல்ல இடையூறுகளும் துன்பங்களும் தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கை நோக்கிய பயணம்.....



சிவபாலன் பவித்திரன்
க.பொ.த. சாதாரண தர
மாணவன்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பார்கள். இந்த அரிதான மானிடப்பிறவியை எடுத்த நாம் இப்பூவுலகிலே எதையும் சாதிக்காது எதிர்கால தலைமுறைக்காக எதையும் கொடுக்காது இலக்கற்ற வெறும் சடங்களாக வாழ்ந்து மடிவது என்பது எமது பிறவிக்கே அர்த்தமற்றது அர்த்தமான மானிடவாழ்விற்கு இலக்கு தேவை. எமது இலக்கின் எல்லை இமயம் நோக்கியதாய் இருக்கவேண்டும்.

குதலை மொழிபேசி குதூகலிக்கும் காலங்கடந்து அறிவு, தெளிவு பெறும் வயதில் இருந்து பெரும்பாலும் பெற்றோரின் எதிர்பார்ப்பே எமது இலக்காக அமைகிறது. சாதாரணமாக மனிதமனாங்களின் இலட்சியப் போக்கானது வைத்தியர், பொறியியலாளர், சட்டத்தரணி, ஆசிரியர் என்றவாறு அமைகிறது. இலக்குகளை நிறைவேற்ற இருக்கின்ற எங்களுக்கும் பெற்றோரின் எதிர்பார்ப்புகள் பொருத்தப்பாடுடையனவாய் அமைகின்றனவா? எம்மால் அவ் இலக்குகளை அடைய முடியுமா? என்றெல்லாம் சிந்தித்தே எமது இலக்கை நோக்கிய பயணத்த நாம் ஆரம்பிக்க வேண்டும்.

நாம் வெறுமனே பெற்றோர்களின் தூண்டுதல்களுக்காகவோ, அயலவர்களின் உந்துதல்களுக்காகவோ எமது இலட்சியப் பாதையை முன்னெடுக்காது எமக்கு விரும்பிய துறையில் விரும்பிய பாதையில் வெறியுடன் முன்னெடுக்கும் போது அது வெற்றியைத் தருவதாய் அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பெற்றோரின் விருப்புக்காக அசட்டுப்புன்னகையுடன் அவர்களுக்காகவே அசைகிற எமது நாட்களை விடுத்து, எமது சீரிய சிந்தனையுடன் இலக்கை அடைவதற்காக முயல வேண்டும். எமது இலக்கை நோக்கிய பயணத்திலேயே நினைப்பாய் நிஜமாய், வேட்கையாய், பசியாய், பைத்தியமாய் ஈடுபடும் போது நிச்சயம் வெற்றி கிட்டும்.

எனினும் சிலர் மட்டுமே தமது இலக்கை எட்டுகிறார்கள் ஏனையோர் வழிதவறிச் செல்கிறார்களா? அல்லாவிடில் அவர்களுக்கு ஏற்படுகின்ற தடைகள் தான் என்ன? சவால்கள் தான் என்ன? என நோக்க வேண்டிய கட்டாயத் தில் நான் இருக்கிறேன். இன்றைய சினிமாவை யதார்த்தமாக்கி சந்தோசமாகவே அதற்குள் புகுந்து விடுகிறார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் என்றும் கூறலாம். இன்றைய இளஞ் சமுதாயத்தினர் தம் கல்வி எனும் அடிக்கல் லாகிய இலட்சிய நோக்கை விடுத்து காதலை வாழ்வில் இலட்சியமாய் எண்ணி பள்ளிப் பருவத்தில் துள்ளும் உள்ளங்களுக்கு ஏற்றாற் போல் தீனிபோடும் சினிமாவும், தற்கால உலக போக்குகளும் உண்மையென நம்பி கல்வியில் நலிவுற்று காதலில் பொலிவுற்று மாயவுலகில் மகிழ்ந்து மயங்கி அதுவே நியமென ஏமாந்தது, மடமையென எண்ணி, சுயவுணர்வு பெற்ற போது, கல்வியின் காலம் கடந்தது கண்டு கண்ணீர் விடுவது நம்மில் பலர் காணும் ஒன்றாகும். இதுவே ஒரு பெருந்தடையாக அமைந்து விடுகிறது.

இது மட்டுமன்றி சினிமாக்களில் அனை வராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களே மது அருந்துகிறார்கள் என்றெண்ணி அதனை உண்மையென நம்பி மக்களை மாக்களாக்கும் மது எனும் மாயைக்கு அடிமைப்பட்டு விடு கிறார்கள். தமது எதிர்கால உலகையே கேள்விக் குறியாக்கிவிட்டு சமூகத்தால் ஒதுக்கப்பட்டு சுபீட்சமான வாழ்வை சின்னாபின்னமாக்கி விட்டு அலைந்து திரிகிறார்கள். கூடவே புகைத் தலையும் கைக்கொண்டு பாசமாக வாழ்வதை விடுத்து ஆபாசமாக சுற்றித்திரிகின்ற இளஞ் சமுதாயத்தையுமே நாம் காண்கிறோம். இவ் இளஞ்சமுதாயத்தின் இழிநிலையை எண்ணி புதுக்கவிதையாளன் **ஒருவன் பின்வருமாறு வருந்திப்பாடுகிறான். "சின்னஞ் சிறு செல்லாம் சிகரெட்டு பிடிக்குது சித்தப்பாமார் கிட்ட தீப்பெட்டி கேட்குது"** என்று பாடுவது எம்மில் சிலர்க்கும் அவமரியாதையையே உண்டுபண்ணுகிறது.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க இவ்வாறான தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து தம் கல்வியை முற்றாக்கி விட்டாலும் இன்றைய சூழ்நிலையில் இலக்குகளை அடையகூடிய சாத்தியப்பாடு குறைவாகவே உள்ளது. தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் அழிந்தொழிந்த இலக்குகள் ஒருபுறம் இருக்க, பல்கலைக்கழகத்தால் வெளி யேற்றப்பட்ட எத்தனையோ வேலையில்லாப் பட்டதாரிகள் என இலக்குகளை அடைய எத் தனிக்கின்ற எத்தனையோ பேருக்கு நாட்டுச் சூழ்நிலை கூட தடையாக அமைந்துவிடுகிறது. ஒட்டுமொத்தமாக இளைஞர்கள் தெருக்களில் பெட்டிக்கடையில் நிற்போராகவும் காமவெறியர் களாகவும் மதுப் பிரியர்களாகவுமே இருந்து வருவதென்பதும் கவலைக்குரியதே.

இவற்றையெல்லாம் கடந்து மனிதன் என்ற ரீதியில் சவால்களை எதிர்நோக்கி கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான இலக்கு நோக்கிய பயணத்தை எட்டிப்பிடித்து எதிர்கால சந்ததிக்கு முன்மாதிரியாக வாழ வேண்டியது எம் கடமையாகும். ஆகவே நாம் நேரிய பாதையிலே சீரிய குணங்கொண்டவராக இம்மி யும் பின்னோக்காது இலக்குகளை நோக்கி முன்னோக்கி முனைந்து செல்ல வேண்டும்.

மனிதா! நீ புறப்படு புதிய பாதை தேடி, படைத்திடு உனக்கென வரலாறு, பயன்பெறட்டும் நாளைய தலைமுறை, படிக்கல்லாகட்டும் உன்வாழ்க்கை புலரட்டும் புதிய சரித்திரங்கள் மகிழட்டும் மானிடம் துலங்கட்டும் இலக்குகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலகில் மாணவர்களின் பங்கு



ச. சுரேன்
(MBA.B.Com IISI(UK)
பழைய மாணவன்

புத்தாக்கம் (Creativity) கண்டுபிடிப்பு (Innocation) ஆகிய இரு வார்த்தைகளே இன்றைய உலகில் நாள்தோறும் ஒரு புதிய படைப்போ அல்லது புதிய கண்டுபிடிப்போ தோன்றிய வண்ணமே உள்ளன. எதிர் காலத்தை நிர்ணயிக்கும் அளப்பெரும் சக்தியாக விளங்கும் மாணவ தலைமுறை நவீன உலகிற்கு தன் சேவையை ஆற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் எமது மாணவ சமுதாயம் கடந்த காலங்களில் பலசோதனை களைக் கடந்து சாதனை படைத்த சமூகம் ஆகும். மாறி வரும் சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களுக்கு ஏற்ப மாணவ சமுதாயம் புதிய பரிமாணத்தை அடைவது அவசியமானதொன்றாகும்.

## சமூகத்தில் மாணவர் பங்கு

இன்றைய இலங்கை அந்நிய தேசங்களின் பண்பாடு சமூக வழக்கங்களுடன் கலந்து செயற்படும் சமுதாயமாக மாறி வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எவனொரு வன் தன் மொழியையும் பண்பாட்டையும் மறந்து செயற்படுகின்றானோ அவன் தன் அழிவிற்குத் தானே வித்திடுகிறான் என்பது அப்பட்டமான உண்மை எனவே மாணவ சமுதாயம் தன் தாய் மொழியையும் தனக்கே உரித்தான பண்பாட்டை யும் பின்பற்றுவது இன்றியமையாத பண்பாகும் மாற்றமென்பது அவசியமே ஆனால் அந்த மாற்றம் எம் முகவரியை அழிக்கும் மாற்றமாக இருந்தால் அந்த மாற்றத்தைத் தவிர்ப்பது நல்லது எனவே மாணவ சமுதாயம் அன்னத்தைப்போல் நல்லதை மட்டும் உள்வாங்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

## பொருளாதாரத்தில் மாணவர் பங்கு

"உலகமயமாதல்" இன்றைய நவீன உலகின் தாரக மந்திரம் 'நமக்காக நாம்' என்ற நிலை மாறி 'உலகத்திற்காக நாம்' என்ற நிலைதான் "உலகமயமாக்கல்" தாராளவாத பொருளாதார கொள்கையினை எமது நாடு பின்பற்றுகிறது. அதனால் அந்நிய முதலீடு அதிகரித்து எமது மூலவளங்கள் இலகுவாக நாடு கடத்தப்படு கின்றது.

இந்நிலையில் மாணவர், பங்கு என்ன? என்ற வினா என்னில் எழுந்தது. அதற்கு விடையாக நாமனைவரும் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவர்களாக உருவெடுப்போம் தொழிலாளி என்ற நிலையினை மாற்றி சிறுதொழில் என்றாலும் அதற்கு முதலாளியாக மாறுவோம். எங்கள் வளங்களை நாமே பயன்படுத்தி வளர்ந்த நாடுகளுக்கு சவாலாக விளங்க வேண்டும். அதற்கு மாணவ சமுதாயம் பெறும் பாடங்களைப் படித்து புள்ளிகளை எடுப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளமல் புதிய கண்டுபடிப்புகளில் ஈடுபடுதல் வேண்டும். சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் சிறு குழந்தை களால் உற்பத்தி செய்யப்படும் விளையாட்டுப் பொருட்களை நாம் பல ஆயிரம் ரூபாய்களைச் செலுத்தி வாங்கும் துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம். அவர்களால் செய்யமுடியுமெனில் ஏன் எம்மால் செய்ய முடியாது? என்ற வினா ஒவ்வொரு மாணவன் மனத்திலும் எழ வேண்டும். அப்போதுதான் எமது நாடு பொருளா தாரத்தில் வளர்ச்சியடையும்.

**கலாச்சாரத்தில் மாணவர் பங்கு**

"தீமையைக் கண்டு பொங்கியெழு" என்பார்கள் அவ்வகையான தீமைகளைத் தகர்ந்தெழும் சக்தியாக மாணவ சமுதாயம் எழுச்சி பெறல் வேண்டும். இனம், மதம், மொழியால் வேறுபட்டவர்களல்ல மாணவர்கள். 'மாணவன்' என்ற தாரக மந்திரத்துடன் தர்மத்தை ஆதரிக்க வேண்டும் இன்று போதைவஸ்து மற்றும் மது போன்ற தீய பழக்கவழக்கங்களால் மாணவ சமுதாயம் சீரழிந்து வருவதாக அறிக்கைகள் கூறுகின்றன. ஒரு மாணவன் தன் சக மாண வனிடம் தவறான பழக்கத்தை இனங்கண்டால் அதைச் சம்பந்தப்பட்டவர் களுக்குத் தெரிவிப்பது தலையாய கடமையாகும்

இவ்வாறு சமூக, பொருளாதார, கலாசார நிலைமைகளில் மாணவ சமுதாயம் இணைந்து செயற்பட்டால் எதிர்காலம் என்பது எல்லோருக் கும் ஒளிமயமானதாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை

"புத்தகங்களைக் கையில் ஏந்தும் மாணவனே! புத்தாக்கம் படைக்கவா! புதிய உலகில் உன் பெயர், புத்தம் புதிதாய் மலர்ந்த மலர்களாய் என்றும் மங்காப்புகழுடன் வாழ்வாங்கு வாழ்வாய்!

கோழையும் வீரனாவான் தன் உரிமைகள் பறிபோகும்போது
நாட்டை ஆளுபவனை விடத் தன் நாவை அடக்குபவனே பெரியவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நிர்வாக சேவை



திருமதி உ. சிவகாமி (SLAS)
உதவி பிரதேச செயலர்
(கரைச்சி)

இலங்கையை பொறுத்தவரையில் பொதுச் சேவையின் வரலாறும் சேவை எல்லைகளும் மிகப்பாரியதாக காணப்படுகின்றது. பொதுச் சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற கொள்கைகளை செயலாளரின் அனுமதியுடன் அதன் பிரதி பலன்களை மக்களுக்கு சென்றடையக்கூடிய வகையில் அமுல்படுத்தி வருகின்றது.

இலங்கைப் பொதுச்சேவையின் ஆரம்பமாக 1796ம் ஆண்டு காணப்படுகின்றது. அக்காலப் பகுதியில் இலங்கையின் கரையோர பிரதேசங்கள் பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியின் கீழ் வந்ததன் பின்னர் அப்பிரதேசங்களின் நிர்வாக நடவடிக்கைகளும் கட்டுப்பாடுகளும் மதுரையில் அமைந்திருந்த கிழக்கிந்திய வர்த்தக கம்பனி (East India company) அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனாலும் இவ்வாறான நடவடிக்கைகளின் போது காணப்பட்ட நடைமுறை சிக்கல்கள் காரணமாக முதன்முறையாக 1802ம் ஆண்டு இலங்கையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கென அலுவலர்கள் சிலர் பிரித்தானியாவினால் நியமனம் செய்யப்பட்டனர்.

இது இந்நாட்டின் சிவில் சேவைக்கான ஆரம்பமாக இருந்ததுடன் பின்னர் இந்த சேவையானது பிரித்தானிய சிவில் சேவையை அடிப்படையாக கொண்டு 1833ம் ஆண்டில் இலங்கை சிவில் சேவை (ceylon civil service - (CCS) என பெயரிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1963ம் ஆண்டு அப்போது காணப்பட்ட பிராந்திய வருமான நிர்வாக அலுவலர் சேவையையும் உள்ளடக்கி இலங்கை நிர்வாக சேவையென (Ceylon Administrative Service - (CAS) பெயரிடப்பட்டது. பின்னர் 1972ம் ஆண்டு இலங்கை குடியரசாக பிரகடணம் செய்யப்பட்டதனை தொடர்ந்து இலங்கை நிர்வாக சேவையென (Sri Lanka Administrative Servies - SLAS) அழைக்கப்பட்டு வருகின்றது.

இதன் பின்னர் 13 வரையான நாடளாவிய சேவைகளுடன் இணைந்த சேவைகள் மற்றும் ஏனைய உபசேவைகளாக பல்வேறு சேவைகளும் இணைந்ததாக இலங்கையின் பொதுச் சேவை இயங்கி வருகின்றது. இவ்வாறான பல சேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து காணப்படுகின்றபோதும் இலங்கை நிர்வாக சேவையே முதற் தரமான சிவில் சேவையாக காணப்படுகின்றது.

குறிப்பாக இலங்கையின் ஆட்சி நிர்வாகத்தினை முன்னெடுத்து செல்வதில் இலங்கை நிர்வாக சேவையினரின் பங்களிப்பு முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் காணப்படுகின்றது. அதாவது நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரில் ஆரம்பித்து அனைத்து அமைச்சுக்களினதும் மற்றும் மாகாண சபைகள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளுராட்சி மன்றங்களினதும் நிர்வாகத்திற் காகவும் அவற்றை நிர்வகிப்பதற்காகவும் நிர்வாக சேவையை சேர்ந்த அதிகாரிகளே நியமிக்கப்படுவதுண்டு. இவைதவிர விசேட ஆணைக் குழுக்களுக்கான நியமனங்கள் செய்யப்படும் போதும் நிர்வாக சேவை அதிகாரி களுக்கே முன்னுரிமை வழங்கப்படுவதும் உண்டு.

இவ்வாறான தனித்துவம் பெற்ற இலங்கை நிர்வாக சேவைக்காக இரண்டு வழி முறைகளில் அதிகாரிகள் தெரிவு செய்யப்படுவர். அதாவது திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் தெரிவு செய்யப்படுவதுண்டு. திறந்த போட்டிப் பரீட்சை எனப்படும் போது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்பினை பூர்த்தி செய்த முப்பது வயதிற்குட்பட்டவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும். அதுபோல மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எனும் போது ஏற்கனவே அரச சேவைகளில் பணிபுரிபவர்கள் விண்ணப்பிக்க முடியும். பின்னர் மேற்கொள்ளப்படும் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுபவர்கள் இலங்கை நிர்வாக சேவைக்குள் உட்சேர்க்கப்படுவார்கள்.

இவ்வாறு உட்சேர்க்கப்படுபவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் உள்ளக பயிற்சி மற்றும் வெளியக பயிற்சி என்பவற்றுடன் பல்வேறுபட்ட பயிற்சிகளை பெறுவதன் மூலம் எந்தவொரு சவால்களையும் இலகுவாக எதிர்கொள்வதற்கு ஏற்ப தயார்படுத்தப்படுகின்றனர். இதன் பின்னரே மேற்குறித்த அலுவலகங்களில் கடமைக்காக நியமிக்கப்படுகின்றனர். நிர்வாக சேவையினை பொறுத்த வரையில் அவர்களது சேவைக்காலம், சேவைமூப்பு மற்றும் அனுபவ அடிப்படையில் நான்கு தரத்தினராக வகுக்கப்பட்டுள்ளனர். நிர்வாக சேவை அலுவலகர்களுக்காக அவர்களின் சேவையின்போது நிறைவேற்றப்பட வேண்டிய கடைப்பாடுகளை குறிப்பிட்டு சேவைப் பிரமாண குறிப்பு காணப்படுகின்றது. இது காலத்திற்கு காலம் திருத்தத்திற்கு உட்படுத்தப் படுவதுண்டு.

பொதுவாக இலங்கை நிர்வாக சேவையில் உள்ளவர்களே நாட்டின் மக்களுடன் நேரடியாக பணிபுரியும் பிரிவினராக காணப்படுகின்றனர். குறிப்பாக பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் நாட்டு மக்களின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதுடன் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரிமை கொடுத்து செயற்பட்டும் வருகின்றார்கள்.

நாட்டினுடைய தேசிய கொள்கை களை இயற்றுவதிலும், அபிவிருத்தி கொள்கை களை திட்மிடுவதிலும் முக்கிய பங்கினை நிர்வாக சேவை அதிகாரிகளே வகித்து வருகின் றார்கள். அத்துடன் நிர்வாக சேவையினருக்கு சமூகத்திலும் மிகப்பெரும் கௌரவமும் வழங்கப் பட்டு வருவதனை யாராலும் மறுதலிக்க முடியாது. இவ்வாறு பலவழிகளிலும் முன் னுரிமையும் முக்கியத்துவமும் பெற்றுள்ள இலங்கை நிர்வாக சேவை யானது இலங்கை யில் காணப்படும் அனைத்து சிவில் சேவை களிலும் முதன்மையானதாக விளங்குவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

## சிந்திக்க வைத்த சிந்தனைத் துளிகள்

1. அனர்த்தமான நேரத்திலும் சிரிக்கக்கூடிய உள்ளம் உறுதியானது.
2. நாம் சொல்லும் அடுத்த வசனம் ஒருவனையும் மாற்றலாம். இந்த உலகத்தையும் மாற்றலாம்,
3. இதயம் திறந்த தொடர்பாடலைப் பொறுத்தவரையில் எதிரிகளே இல்லை எனலாம்.
4. நீ உன்னை முக்கியமானவன் எனக் கருதிக்கொள். அப்படியெனில் உன்னைவிட உனது பங்கை வகிக்கக்கூடியவன் எவனும் இல்லை.
5. சிரிக்கின்ற முகமும், கருணையுள்ளமும் இருட்டான இடத்தை வெளிச்சமாக்க வல்லது.
6. தடிகள், கற்கள் எம்மைக் காயப்படுத்தும். ஆனால் எங்கள் அனுமதியின்றி எங்கள் உள்ளத்தை யாராலும் காயப்படுத்த முடியாது.
7. பெருமைக்குரிய செயல்களை ஒருவன் செய்வானாயின் அவன் இறந்த பின்னரும் வாழ்ந்து கொண்டிருப்பான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COSMETIC DENTISTRY – GET A SPARKLING SMILE



**Dr. (Ms) U. Sivaparamsothy**
S.L.MC. Reg. No 2288
Colombo

**Did you know .....**
about 45% of aduts are unhappy with the appearance of their teeth?



Your teeth are important. A winning smile is one of the first thing people notice and healthy teeth are essential to overall well being and confidence. Who wouldn't want to have a good set of pearly white teeth? Everybody loves a bright, white smile.

Unfortunately, as we age our teeth tend to darken and as the enamel wears off, it reveals the yellow colour of the tooth's core material. Normal wear and tear also produces cracks in the enamel that gradually fill up with stains and debris, food, tobacco, coffee and tea as well as certain types of drugs.

**What are the treatment options available in dentistry to overcome these situations?**

**1. Tooth whitening (bleaching)**

Tooth whitening products can lighten most stains caused by age, tobacco, coffee and tea. There are some other methods available to whiten the teeth in current period like custom fit tray bleaching, whitening strips, whitening tooth paste, laser bleaching.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. Dental bonding

Dental bonding is a great and affordable way to repair imperfect teeth and even change their shape and colour. Dentist use a resin or durable plastic material which they paint directly on a patients teeth. A laser light is then used to harden the material which literally bonds to the teeth.




## 3. Dental veneers and crowns

A long lasting, but more costly way to improve your smile is to get dental veneers. Veneers are essentially caps custom made to fit over your teeth to correct major cosmetic problems like chipped teeth, severely discoloured teeth. Porcelain crowns are the best option for badly damaged teeth.




Veneers



Before and after crown treatment.

## 4. Orthodontic treatments

By far the most common reason for seeking orthodontic care is to improve the appearance of the teeth and face. Many malocclusions are associated with unsightly appearance teeth. This will help in straightening of crooked teeth followed by improvement in appearance.







## 5. Gingivectomy (crown lengthening)

Having a 'gummy smile' can cause a person to be very self – conscious about their appearance. Getting a gum lift is the same as getting a face lift if a person is not happy with their wrinkles or saggy eyelids; it is simply a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cosmetic procedure to improve the appearance and thus, the self confidence.





The above mentioned procedures are some of the new techniques employed for smile designing in dentistry. My purpose of choosing this topic was to appraise you all about the plethora of advancements that dentistry has to offer to increase the aesthetic value of your face.

Also I would like to take this opportunity to express my heartfelt gratitude to my beloved teachers and my esteemed institution without whom any success in my life wouldn't have been possible. This institution has been instrumental in shaping my future and for that I would like to convey my deepest regards to my institution for giving me an opportunity and a wonderful environment to study here. Good school and teachers are blessing in one's life and I'm extremely fortunate and proud to be a part of this institution .... whatever I'm today, I totally owe it to my institute and teachers.

| | | |
|---|---|---|
| T - Tact | - | சாமர்த்தியம் |
| E - Education | - | கல்வியறிவு |
| A - Ability | - | திறமை |
| C - Character | - | நன்நடத்தை |
| H - Health | - | ஆரோக்கியம் |
| E - Enthysiasm | - | ஊக்கம் |
| R - Regularity | - | ஒழுங்குமுறை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத மேதை அப்துல்கலாம்






"இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்....... இவர் போல யாரென்று ஊர் சொல்லிட வேண்டும்..... என்ற கவிஞர் கண்ணதாசனின் வரிகளுக்கு இலக்கணமாக திகழ்ந்த இளைஞர்களின் இதயம் கவர்ந்தவர் ஏழ்மையில் பிறந்து, எளிய மனிதராய் வாழ்ந்து, தாம் பெற்ற கல்வியின் ஆற்றலால் உலகம் போற்றும் விஞ்ஞானியாக உயர்ந்தவர் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஆவுல் பகீர் ஜெய்னுலாபுதீன் அப்துல்கலாம் . தாய்மொழியாம் தமிழ்மொழிப் பற்றுடையவர். கவிஞரும் சிறந்த மேதையுமாவார். தம் அன்பால், பண்பால் இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராகத் தெரிவாகி எல்லோரும் வியக்கும்படி பணி செய்த பெருமைக்குரியவர் அப்துல்கலாம். "இலட்சியக் கனவு காணுங்கள்" என்று இளைய சமுதாயத்தை தட்டியெழுப்பிய உத்தமர் இவர். இனம், மதம், மொழி, சாதி வேறுபாடுகளையும் செல்வர் - ஏழை - படித்தவர் - பாமரர் - பெரியவர் - இளைஞர் என்ற வேறுபாடுகளையும மீறி அனைவராலும் மதித்துப் போற்றப்பட்ட மாமனிதர்.

சிலரைப் பார்க்கும்பேர்து சாதிக்கலாம் என்று தோன்றுகிறது. சிலரைப் பார்க்கும்போது சாதித்த விதத்தை, அவர்கள் நமக்குக் போதிக்கலாமே என்று கேட்கத் தோன்றுகிறது. அப்துல்கலாம் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் "கலாம் ஐயா போல் சாதிக்கலாம்" என்ற எண்ணம் நமக்குள்ளும் வருகிறது. சோதனைகளையும் சாதனைகளாக மாற்றிக் காட்டியவர் கலாம். எந்தவொரு விடயத்தையும் நேர் மறையான எண்ணத்துடன், புதிய கோணத்தில் பார்க்கும் ஆற்றல் கொண்டவர் அவர். கலாமின் மறைவு உலகம் முழுவதிலுமுள்ள பலரின் இதயங்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. காலம் காகிதத்தை கிழிப்பதாய் நினைத்து ஒரு கவிதையைக் கிழித்துவிட்டது.

தமிழகத்தின் ராமேஸ்வரம் தீவில், 1931ம் ஆண்டு அக்டோபர் 15ம் திகதி பிறந்தவர் அப்துல் கலாம். படகை வாடகைக்கு விடும் தொழில் செய்த ஜெய்னுலாபுதீன் மரைக்காரர் ஆஷியம்மாவின் அருமை மகனாகப் பிறந்த ஏ.பி.ஜெ. அப்துல்கலாம், குழந்தை நாட்களை வறுமையில் கழித்தார். தந்தையின் குறைந்த வருமானம் குடும்பச் செலவுக்கு போதாதபோது அப்துல்கலாம், வீடு வீடாகச் செய்தித்தாள் விநியோகித்து தன் தந்தைக்கு உதவினார். பின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றோயல் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் தரம் 10 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோயல் கல்வி நிலையத்தில் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தர மாணவர்களின் பிரிவு உபசாரத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில் அதே செய்தித்தாளில் தான் தலைப்புச் செய்தியாய் மாறப்போகிறோம் என்று தெரியாமல் தந்தையோடு அதிகாலையில் எழுந்து வழிபாட்டிற்குச் செல்லும்போது ரம்யமான நீலத்திரைக் கடல்மீது பறந்து செல்லும் பறவைகளை வியப்போடு பார்த்திருக்கிறார். அந்தப் பறவைகள் பறப்பதைப்போல் பறக்கும் வவிமானங்களைத் தயாரிக்கும் படிப்பை படிக்க வேண்டும் என்ற எண்ணம் அப்பள்ளி நாட்களிலே கலாமிற்கிருந்தது.

விழிகளில் விளக்கை கொண்டவரின் பாதை என்ன இருட்டாகவா இருக்கும்! திருச்சியில் உள்ள தூய வளனார் கல்லூரியில் சேர்ந்து சிறப்பாகப் பயின்று, 1954ம் ஆண்டு இளம் அறிவியல் இயற்பியல் பட்டம் பெற்றார். அடுத்த ஆண்டுகளில் அவர் கண்ட கனவு நனவானது. எம். ஐ.டி.எனும் தொழில் நுட்பக் கல்வி நிலையத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றார். எம்.ஐ. டி. யில் அப்துல்கலாம் பயின்று கொண்டிருந்தபோது அவரது தந்தையின் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தகவல் வந்தது. ஊருக்குப் போவதற்குப் பணம் இல்லை. பலரிடம் கேட்டுப் பார்த்தார். யாரும் பண தரவில்லை. இறுதியாய், எம். ஐ. டி. யில் அவர் முதல் வருடம் நன்றாய்ப் படித்ததற்காக அந்நிறுவனம் அளித்த பரிசான விலையுயர்ந்த நூலைச் சென்னையில் உள்ள மூர்மார்க்கெட்டில் இருந்த பழைய நூல்களை வாங்கும் கடையில் கண்ணீரோடு விற்பனைக்குத் தந்தார்.

முதல்- பக்கத்தில் கலாமின் பெயர் இருந்ததை கண்ட கடைக்காரர், "அன்புப் பரிசாகக் கல்வி நிறுவனம் இந்நூலை இப்போது விற்க வேண்டிய அவசியம் என்ன தம்பி? என்று கேட்டார். "ராமேஸ்வரத்திலுள்ள என அன்புத் தந்தையாருக்கு உடல்நிலை சரியில்லை, அவரை உடனே நான் பார்க்க வேண்டும் என்னிடம் பேருந்துக் கட்டணத்திற் குக் கூடப் பணமில்லை, அதனால் தான் எனக்குக் கிடைத்த பரிசு நூலை நான் விற்க வேண்டிய இக்கட்டான சூழல் வந்தது" என்று கலாம் கூற அக்கடைக்காரரின் கண்களில் கண்ணீர். "தம்பி உன் புத்தகத்தை நீ விற்க வேண்டாம்....உன பயணச் செலவுக்கான பணத்தை நான் தருகிறேன், நீ ஊருக்கு போய் வந்து நான் தந்த பணத்தை திரும்பத் தரலாம்" என்று பணம் தந்து அனுப்பி வைக்கிறார். பிற்காலத்தில் அந்தப் புத்தகக் கடைக்காரரை ஒரு தொலைக்காட்சி பேட்டியில் நினைவு கூர்ந்து நெகிழ்வோடு கூறினார் கலாம். வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்து நன்றி மறவாப் பண்பின் புகலிடமாய் அப்துல்கலாம் திகழ்கிறார்.

இந்திய விண்வெளித்துறை, அணு ஆயுதம், அணுச் சக்தித்திட்டம் ஆகியவற்றில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியதாகும். விண்வெளித் தொழில்நுட்பத்திலும் அது தொடர்பான ஆய்விலும் உலக அரங்கில் பெருமைமிக்க ஓரிடத்தை இந்தியாவிற்குப் பெற்றுக் கொடுத்தார். தனது அளப்பரிய சாதனைகள் மூலம் உலக நாடுகள் அனைத்தையும் இந்தியாவைத் திரும்பிப் பார்க்க வைத்தவர் அவர். பாதுகாப்புத் தொழில்நுட்பங்களில் இந்தியா தன்னிறைவுடன் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். அமெரிக்க செயற்கைக் கோள்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு பொக்ரான் அணு ஆயுதச்சோனைகளை 1998 மே 11ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதி வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். இதன் விளைவாக உலக அரசியலில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. 1950களில் தொடங்கி 2000ம் ஆண்டு வரை இந்தியாவை ஒரு வல்லரசாக அமெரிக்கா கருதவில்லை.

ஆனால் அணு ஆயுதச் சோதனைக்குப் பிறகு அமெரிக்காவின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. விண்வெளித் துறையில் மட்டுமல்லாமல் அணுசக்தித் துறையிலும் முத்திரை பதித்தார். நாட்டின் பாதுகாப்பு குறித்த ஆய்வுகள் எதிரிகளைக் கொல்வதற்காக மட்டுமல்ல. மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காகவும் இருக்க வேண்டும். என்று எண்ணினார். எனவே தான் இருதயநோய் நிபுணரான சோமராஜ என்பவருடன் இணைந்து சுருங்கிய இரத்தக் குழாயை மீண்டும் சுருங்காமல் தடுக்கும் உலோகச் சுருளைக் கண்டுபிடித்தார். ஏவுகணைக்குப் பயன்படுத்தப்படும் கனம் குறைந்த உலோகத்தினால் இது ஆக்கப்பட்டதாகும்.

இரண்டரை இலட்ச ரூபாய்க்கு மேல் இரந்து உலோகச் சுருள் 10 ஆயிரம் ரூபாய்க்கு கிடைக்க வழிவகுத்தவர் கலாம். கை, கால், ஊனமுற்றவர்களுக்குப் பயன்படுத்தப்படும் செயற்கை கருவிகள் மெல்லிய உலோகத்தினால் செய்யப்பட வேண்டும் எனக் கருதினார். அவ்வாறே செய்து குறைந்த விலையில் மக்களுக்குச் கிடைக்கச் செய்து மாற்றுத் திறனாளிகளின் மனதில் இடம் பிடித்தார். விஞ்ஞானிகள் குறித்து அறிவதற்கு மக்கள் அவ்வளவாக விரும்புவதில்லை. அப்படியே இருந்தாலும், அவர்களது சாதனைகளைப் பற்றிய செய்திகள் ஊடகங்களில் வரும் போது மட்டுமே அறிவார்கள். ஆனால் கடைக்கொடியில் உள்ள ஓர் ஊரில் பிறந்து நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்தது நம்ப முடியாத ஒன்றாகும்.

குழந்தைகள்மீது பேரன்பு கொண்ட மகத்தான தலைவராய் கலாம் நிகழ்ந்தார். எங்கே சென்றாலும் குழந்தைகளைச் சந்திப்பதையும் அவர்களை உற்சாகப்படுத்துவதையும் கடமையாகக் கொண்டார். மக்களை நேசித்த கலைரசனை அவர் உடன் பிறந்த பண்பு. தன்மனதில் உதித்த எண்ணங்களை அழகு கவிதைகளாய் வடிப்பதில் கைதேர்ந்தவர். இனிய இசைக்கலைஞர், வீணை வாசிப்பதில் வல்லவர். அவர் ஏவிய ஏவுகணைகளைப் போல் அவர் எண்ணங்களும் உயரப் பறக்கவே செய்கின்றன. கலாமிடமிருந்து நாம் கற்க வேண்டிய பாடம், "செய்வன திருந்தச் செய்" என்பதாகும். ஜனாதிபதியாய் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தாரோ அதைவிட அண்ணாமலைப் பல்கலையில் பேராசிரியராக மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைந்தார். தொடர்ந்து கற்பதிலும் கற்பிப்பதிலும் அவருக்கு நிகர் அவர் தான். அவர் பொன்மொழிகள் மகாகவி பாரதியாரின் உறுதியை நமக்கு நினைவுபடுத்தும், "நீ கடவுளின் குழந்தை என்பதால் உனக்கு என்ன நடந்தாலும் அதையெல்லாம் விட நீ சிறந்தவன், உயர்ந்தவன் என்ற உறுதி வேண்டும். இன்னல்களும் பிரச்சனைகளும் நாம் வளர்ச்சி அடைவதற்காக கடவுள் வழங்கும் வாய்ப்புகள் என்று ரத்தின வரிகளை நம்பிக்கையோடு சொல்கிறார் கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கனவு காணுங்கள், கனவு காணுங்கள்!" என்று அறைகூவி நிற்கும் அப்துல்கலாமின் வார்த்தைகள் என்றும் எம் செவிகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. அவரது அற்புதமான முன்னேற்றத்திற்கு காரணம் அவரது நற்பண்புகளான எளிமை, கனவு, திறமை, ஆய்வு, நாட்டுப்பற்று என்பனதான். ஜாதி, மதம், மொழி அனைத்து வேறுபாடு களையும் கடந்து உலகில் பலரின் மனம் கவர்ந்த நாயகனாக கலாம் திகழ்வதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று அவரது தன்னம்பிக்கை யாகும். மனதை சோர்வடையச் செய்யும் எதிர் மறை வார்த்தைகளுக்கு அர்த்தம் கண்டவர் கலாம். ஆங்கிலத்தில் தோல்வி, முடிவு, இல்லை (FAIL, END, NO) என்ற வார்த்தைகளுக்கு புதிய விளக்கம் அளித்தவர் கலாம்.

FAIL : first attempt in learning
கற்றுக் கொள்வதற்கான முதல் வாய்ப்பு
END : effort never dies
முயற்சிகள் ஒரு போதும் தோற்கடிப்பதில்லை
NO : next opportunity
அடுத்த வாய்ப்பு

இது போன்ற பல தன்னம்பிக்கை தரும் கருத்துக் களை அவர்தான் எழுதிய புத்தகங்களில் மட்டுமல்லாமல் பேச்சிலும் செயல்களிலும் வெளிப்படுத்தியவர். இதனாலேயே இளைஞர் கள் பலரும் கலாமை தங்களின் வழிகாட்டியாக, இணையில்லா தலைவராக போற்றுகின்றனர்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக
அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று"

என செகம்புகழும் திருவள்ளுவர் கூறிய குறள் மொழி, அப்துல்கலாமின் வரலாற்றுக்கு இலக்கணம் வகுத்து விட்டது! அறிஞர் அப்துல் கலாமின் அற்புதமான ஆற்றலாம் தமிழினமே இன்று பெருமை கொள்கிறது. அவரைப் பொன்று ஒப்பற் மாமனிதர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது நாம் பெற்ற பெறும் பேறு.

"படிக் கலாம் உழைக் கலாம்
முயற்சிக் கலாம் நீயும்ஆ கலாம்
அப்துல் கலாம்"

இன்னாரைப்போல் வாழ வேண்டும் என நாம் நினைப்பதைவிட
நம்மை போல் வாழ வேண்டும என பிறர்
எண்ணும் அளவிற்கு நாம் வாழ்ந்து காட்டுவதே சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தில் மரவழிபாடு



திரு. செ. சிவஞானம்
B.A.Hons H.C Spl
ஆசிரியர்

மனித நாகரீகம் தோன்றி வளர்ச்சியடையத் தொடங்கிய காலத்தில் இருந்து பண்பாட்டு மரபுகள் செல்வாக்குப் பெறத்தொடங்கின. பண் பாட்டு மரபுகளின் பிரதான அலகாக சமயவழி பாடுகள் அமைந்திருக்கின்றன. இந்துசமயத்தில் இயற்கை வழிபாடு பிரதான இடம் வகிக்கின்றது. இயற்கையே வடிவானவன் இறைவனின் இந்த இறைவனை இயற்கையில் கண்டுவழிபடுவது மிகப்பொருத்தமாகும்.

கடலும் நதியும் மணலும் மலையும், நிலமும் வானமும் எல்லாமே இயற்கை வழிபாட்டில் முக்கியம் பெற்றன. இயற்கைகள் அச்சமூட்டுவன என்பதனாலும் அவையே உயிர்வாழ்விற்கு அவசியமானவை என்பதனா லும் ஆதிமனிதன் அவற்றை வழிபாடு செய்தான் தாவரங்களில் உயிர் வாழ்விற்கான ஊட்டங்கள் இருப்பதுபோல கடவுள் சக்தியும் உண்டு என இந்துக்கள் நம்பினர். இதனை பின்னணியாக கொண்டே மரதேவதை வழிபாடும் இந்து சமயத்தில் செல்வாக்குப்பெற்றது.

இந்துக்களின் முதல் நாகரிககாலமான சிந்துவெளி காலத்திலே திராவிடர்களுடைய வழிபாட்டு முறையில் மர வணக்கம், மர தேவதைகள் என்பன காணப்பட்டுள்ளமைக்கு நிறைவான ஆதாரங்கள் உண்டு. சிந்துவெளி இலட் சினைகள் சிலவற்றில் திருவுடைய மரங்களாக அரசு - வேம்பு ஆகியவை விளங்கி யுள்ளன. அரசமரமொன்றின் கொம்பொன்றினி டையே இரு கொம்புகளையுடைய பெண் தெய்வமொன்று நிற்கின்றது. அதனை கொப் புடைய வேறு தெய்வமொன்று வணங்குவது போலவும் காணப்பட்டது.

மேலும் மனித தலையை உடைய ஆடொன்று அந்த மங்கள வினையைப் பார்ப்பது போன்றும் கூந்தலைப் பின்னிவிட்ட ஏழு பெண்கள் அந்தப்பெண் தெய்வத்திற்கு திருப் பணி செய்த காத்திருப்பதுபோலவும் நிற்கின் றனர். வேறொரு இலட்சினையில் கொம்புடைய மரத்தெய்வத்திற்கும் புலிக்கும் இடையில் போராட்டம் நடைபெறுவது போலவும் காட்சி யுள்ளது.

இன்னுமொரு முத்திரையில் வேப்பமரத் தடியில் மேடையமைக்கப்பட்டு இருப்பதும் மரக்கிளைகளுக்கிடையில் ஒருபெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடை யின்றி நிற்பதும் ஆடையணிந்த ஒரு பெண் அதனை வழிபட்டு நிற்பதுமான காட்சிகள் காணப்படுகின்றன. இதன் மூலம் புனிதப் பொருந்திய மரங்கள் தெய்வாம்சம் பொருந்திய தெய்வங்களுக்கு சமமாக வழிபடப்பட்டதை உணரப்படுகின்றது இன்றை இந்துக்களும் மர தேவதை வழிபாடுகளில் நம்பிக்கை கொண்ட வர்களாக விளங்குகின்றனர். அதனால்தான்.

துளசி

அகத்தி

வேப்பமரம்

ஆலமரம்

அரசமரம்

போன்றவற்றிற்கு இந்துக்கள் இன்றும் முக்கியத் துவம் கொடுத்து வருகின்றனர். சிந்து வெளியில் கிடைக்கப்பட்ட வேறறொரு முத்திரையில் கருவுற்றநிலையில் ஒரு பெண்ணும் அவளது கருப்பையிலிருந்து செடியொன்று உயிர்ப்பது போலவும் காணப்படுகின்றது. உலகமும் உயிர்களும் பெண்ணில் இருந்து படைக்கப் படுவதை இச்செய்தி உணர்த்துகின்றது.

வேத நாகரிகத்தில் யாகசாலைகள் மரங் களின் கீழும் மலையடிவாரங்களிலும் அமைக்கப் பட்டதாக தெரிகின்றது. இங்குள்ள தேவஞானம் -தேவகிருகம் என்பன மரங்களினால் அமைக்கப பட்டதாக தெரிகின்றது. "எந்த மரத்தை வெட்டி பயன்படுத்தி விண்ணும் மண்ணும் நிறைந்த இவ்வுலகைக் கண்டேன்" என இருக்கு வேதப் பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

ஆகமங்களில் ஆலயக்கட்டுமானங் களுக்கு தெய்வாம்சம் பொருந்திய மரங்கள் பயன்படுத்தப்பட்டன. ஆலய விஷேடங்களில் தலவிருட்சம் தனியம்சமாக அமைந்தது கருங்காலி, வேம்பு, பலாசு, மருது, மலை வேம்பு, நாகவேம்பு, ஆலம் விழுதுகள் என்பன பற்றி ஆகமங்களும் சிற்பசாத்திரங்களும் குறிப்பிடுகின்றன கருக்காலி கொடிமரத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

புராண இதிகாசங்களில் இந்தியாவில் புனித தலங்களின் செல்வாக்குடன் தலவிருட் சங்கள் பிரபல்யமாயின தலவிருட்சங்களின் பெருமைகளை நாயன்மார்கள் தமது தேவாரப் பாடல்களிலும் முன்வைத்தனர். "கல்லால மரநிழலில் வில்லார் அருளிய..." என திருஞான சம்பந்தர் குறிப்பிடுகின்றார். திருவாசகத்தில் குருந்தமரத்தின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய பல நன்மைகளை மரத்தி னால் ஆதி மனிதன் பெற்றான். இதனால் மரங்களின் மீது பக்தி ஏற்பட்டு வழிபாடு உருவா யிற்று என்று கொள்வதே பொருத்தமானது. எனினும் இந்துக்களிடம் காணப்பட்ட மரவழி பாட்டு நம்பிக்கை ஏனைய மக்களிடம் இடம்பெறவில்லை என்பதனையும் இவ்விடத் தில் குறிப்பிடுவது பொருத்தமானது. இந்துகள் கடவுளின் அடையாளமாக மரத்தை கருதி னார்கள்.

எனவே மரத்தை வழிபட்டால் கடவுள் அருள் கிட்டும் என நம்புதல், மரங்களில் பேய் பிசாசு உறைவதாக நம்புதல், உரிய மரங்களை வழிபட்டால் பேய் பிடிக்காது எனவும் பேய் பிடித்திருந்தால் விட்டுப்போய்விடும் எனவும் நம்புதல், நோய்களுக்கு மருந்தாகும் என நம்புதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் இவ்வழிபாட்டை மேற்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் அரசமரம், ஆலமரம், வேப்பமரம், கடம்பு மரம், வாகை மரம், வில்வமரம், கொன்றை மரம் ஆகிய மரங்கள் தமிழர் பண்டுதொட்டு வணங்கிவரும் மரங் களாகும். இவற்றை விட அக்கோயில்களில் இடம் பெற்றுள்ள தல விருட்சங்களையும் வணங்கு வார். இவற்றுள் ஆலமரம், அரசமரம், வேப்ப மரம் என்பன தலையானவை.

ஆலமரம், மிகப்பரந்த வளர்வதும் நன்கு தழைத்திருப்பதும் எளிதில் சாயாததும் மேலும் பரந்து நிழல் தருவதாக அமைவதும் பண்டைய நாட்களில் ஊர்ச்சபைகள் பெரும்பாலும் இம் மரத்தடியில் தான் கூடும் இம்மரம் மக்களைப் பெரிதும் கவர்ந்ததனால் இம்மரத்தை இறைமை யுடன் தொடர்புபடுத்தினர். சிவனை "ஆலமர்ச் செல்வன்" என கலித்தொகையும் திருமுரு காற்றுப்படையும் கூறுகின்றன. நீண்ட விழுது களை கொண்ட ஆலமரத்திற்கு உயிர்ப்பலி கொடுத்து விழா கொண்டாடப்பட்டுள்ளது.

காக்கைகள், பலியிடப்பட்ட உணவுப் பொருட்களை எடுத்து தின்கின்றன. இச் செய்தி நற்றினையில் இடம் பெற்றுள்ளது. அக நானூற் றில் பொதுமக்கள் கூடும் பொதியில் ஆலமரம் ஒன்று நிற்கின்றது. அது கடவுள் மரம் நாள் தோறும் பூசைகள் பெற்று வந்த மரம் தற்போது ஊர்மக்கள் இல்லை அப்பாழூரில் நிற்கும் ஆலமரத்திற்கு நாட்பூசை இல்லை பலி இல்லை என்ற விடயம் கூறப்பெற்றுள்ளது.

வேப்பமர வழிபாடும் தமிழரிடம் பல நூறு ஆண்டுகளாக இருந்து வருகிறது. வேப்ப மரத்தை மருந்து மரம் என்பர். வேப்பமரத்தின் இலை, பூ, பழம், விதை, மரப்பட்டை, மரம் ஆகிய அனைத்தும் மக்களுக்கு மருந்துப் பொரு ளாக தலைமுறை தலைமுறையாக இருந்து வருகின்றன. இம் மரத்திலே காளி உறைவதாக வும் கருதப்படுகிறது.

காளி கோயில்கள் அனைத்தும் தல விருட்சமாக வேப்பமரத்தையே கொண்டிருக்கும் காளியை வழிபட வருவோர் வேப்பிலைக் கொத்தோ, வேப்பிலை மாலையோ அணிவித்து வழிபடுவர். அம்மை நோய் வந்தால் வேப்பிலை யைப் பரப்பி அதில் நோய் கண்டவரை படுக்க வைப்பதுடன் தம்வீட்டு வாசலில் வேப்பிலையை சொருகி வைப்பர். தம் வீடுகளின் தலைவாயிலில் வேப்பமரத்தினால் நிலை செய்து அமைப்பர்.

வேப்பிலை வாசலில் இருந்தால் பேய் பிசாசு அண்டாது என்பது நம்பிக்கை வேப்ப மரத்தை வீடு தோறும் வளர்க்க வேண்டும் என்ற நம்பிக்கை பொதுவாக தமிழரிடம் இன்றும் காணப்படுகிறது. சிறந்த கிருமிநாசினியும் பூச்சி கொல்லியுமான வேம்பு சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க உதவுகின்றது.

அரச மரத்தை கடவுள் மரமாக போற்று கின்ற சங்க இலக்கியச் சான்றுகள் இல்லை ஆனால் தற்காலத்திலே அரச மரம் இல்லாத ஊரில்லை, குளமில்லை, ஆற்றங்கரையில்லை அரச மரங்களின் கீழ் பிள்ளையார் சிலை அல்லது நாகச்சிலை நடப்பட்டு மக்களால் வழிபடப்படு கின்றன.

பகவத்கீதையில் கிருஷ்ணன் "மரங் களுள் நான் அரச மரமாக இருக்கின்றேன்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்றார். எனவே மகாபாரத காலத்தில் அரசமரம் புகழ் எய்தி விட்டதாக தெரிகிறது. அரசமரம் பழங்காலத்து அரச சின்னமாகவும் மதச்சின்னமாகவும் கருதப்பட்டு வந்தது. மொஹஞ்சதாரோ முத்திரையில் அரசமர வழிபாடு பௌத்தமதம் சார்ந்த மன்னர்களாலும் துறவிகளாலும் பரப்பப்பட்டது. போதிமரம் என்பது பௌத்த சமயத்தில் அரசமரத்தை குறிக்கும் அதன் அடியில் ஞானம் பெற்றதனால் புத்த பெருமான் போதி சத்துவர் எனப்பட்டார். அதேவேளை தமிழகத்தில் அரசமர வழிபாடு பௌத்த மதத்தினராலேயே பரப்பப்பட்டிருக் கலாம். காலகதியில் பௌத்தமதம் செல்வாக்கு இழந்தபின் அரச மரங்களின் கீழ் பிள்ளையார் வழிபாடு இடம் பெற்றிருக்கலாம்.

பாலைமரம் காளியின் தலவிருட்சம், காளி, பூசைக்குரிய பந்தற்கால்கள், மரக்கால்கள் முதலான அனைத்துப் பொருட்களும் பாலை மரத்திலிருந்துதான் செய்யப்படும். இம் மரத்தை தெய்வப்பாலை என்றும் வலியப்பாலை என்றும் குறிப்பார். கொற்றவைக்கு வாகைமரமும் உரியதாகக் கொள்ளப்பட்டது என்பதற்கு "கடவுள் வாகை" என்ற பதிற்றுப்பத்து வரி சான்றாக உள்ளது . கொற்றவை வெற்றித்தெய்வம் என்ப தால் மறவர்கள் போரில் வெற்றி பெற்ற போதுவெற்றியின் அடையாளமாக வாகைப் பூவை சூடினார்.

கடம்பமரமும் கடவுள் மரமாகக் கருதப் பட்டது. இதில் உறையும் தெய்வம் முருகனாகக் கொள்ளப்பட்டது என மக்கள் கருதினார்கள். கடம்பமரத்துக் கடவுளை வழிபட்டால் அக்கடவுள் கொடியோரை விரட்டும், விலக்கும் அத்தகைய கடவுள் நிலைபெற்ற கடம்பமரம் என குறுந்தொகை சித்தரிக்கின்றது. மேலும் கடம்பமரத்தடியில் நடுகல்கள் வைக்கப்பட்டு அவற்றின் மீது வீர மறவர் தம் பெயரும் பெருமையும் பொறிக்கப்படுவது வழக்கம். இக்கற்களிலும் கடம்ப மரத்திலும் கடவுளர் எழுந்தருளி இருப்பதாகவே கருதினர். முருகனுக்கு "கடம்பன்" என்று பெயரும் இவ்வாறே தோன்றியது.

வேங்கை மரம் வயல்களை ஒட்டி வளர்ந்திருக்கும் வேங்கை மரக்கடவுளை வணங்கினால் வயல்கள் விளையும் அவை காக்கப்பெறும் என்ற நம்பிக்கையும் உண்டு "எரிபொருள் வேங்கைக் கடவுள் காக்கும் குருகார் களனி" என்ற குறிப்பு நற்றிணையில் இடம் பெற்றுள்ளமை நோக்கற்பாலது. மேலும் வேங்கைமரம் பூக்கத் தொடங்கும் வளர்பிறைக் காலம் திருமண முகூர்த்த நாளாக கருதப்பட்டது. வேங்கை மர நிழலில் வேங்கை முற்றத்தில் திருமணம் செய்வது மங்கலமாக எண்ணப் பட்டது. "மன்றல் வேங்கைக் கீழ் இருந்து மணம் நயந்தனன்" என்ற செய்தியை கலித்தொகை யினால் அறியக்கூடியதாய் உள்ளது. தமிழகத் தில் கண்ணகி சமாதி பெற்றதும் ஒரு வேங்கை மரத்தின் கீழாகும்.

பௌத்த சமயம் இலங்கையில் செல் வாக்கு பெறமுன்னர் யக்ஷன் வழிபாடும் நாக வழிபாடும் நிலவியதற்கு பாளி இலக்கியங்களும் மகாவம்சக் குறிப்புக்களும் ஆதாரமாக உள்ளது யக்ஷ வழிபாட்டு மரபோடு இணைந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுதான் மரவழிபாடு மகாவம்சத்தில் நேரடியாக வழிகாட்டிற்கு உரிய மரங்களாக பனையும் ஆலும் குறிக்கப்படுகின்றன. அத்துடன் வனங்கள் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

இவற்றை நோக்கும்போது பௌத்தம் இலங்கைக்கு வரும் முன் இவ்வனங்களும் வழிபாட்டிற்குரிய புனித இடங்களாக விளங்கியிருக்கலாம். கடம்பவனம் வழிபாட்டிற்குரிய வனமாக குறிப்பிடப்படுகின்றது. இவ்வனத்தில் மகேஜ என்ற ஜக்ஷ கடவுளின் கோயில் இருந்ததுடன் இக்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தூபராம விகாரையும் அமைந்திருந்தாக மகாவம்சம் கூறுகிறது. இந்நூலில் வரும் குறிப்புகள் இவ் வனத்தின் புனிதத் தன்மையை புலப்படுத்துவதாக உள்ளது. கடம்பவனத்தின் மற்றுமொது பெயராக ஜோதிவனம் அமைந்திருந்தது போல் தெரிகின்றது.

மகாவம்சத்தில் குறிக்கப்படும் மற்றொரு வனம் மகாமேகவனம் இவ்வனம் பௌத்த சங்கத்திற்கு அன்பளிப்புச்செய்யப்பட்டதோடு அரசமரக்கிளையையும் இங்குதான் நடப்பட்டு வணங்கப்பட்டது. பௌதம புத்தர் இலங்கைக்கான தனது இரண்டாவது விஜயத்தின் போது நாகதீபத்தில் தனது விஜயத்தின் ஞாபகார்த்தமாக ராஜத்தான மரமொன்றை நாட்டிச் சென்றதாக மகாவம்சம் குறிக்கிறது. மரவழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்களின் வழிபாட்டு தேவையை பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனக் கொள்ள முடியும்.

இந்நாட்டிற்கு பௌத்தமத வருகையோடு அரசமரக்கிளையையும் ஆலமரக்கிளையையும் கொண்டு வந்ததாக மகாவம்சக் குறிப்பு ஒன்று உள்ளது அரசமரம் பௌத்த மத சின்னமாகக் கருதப்பட்டதால் அதன் வழிபாட்டை இலங்கை முழுவதும் பரப்ப வேண்டிய அவசியம் இருந்தது. இதனால் அரசமரக் கிளைநாட்டும் வைபவத்திற்கு (கதரகம கதிர்காமம்) சந்தனகாமப் பிரபுக்களும் தீவில் வசித்த மக்களும் அழைக்கப்பட்டு மரம் நாட்டு விழா சிறப்பாக நடைபெற்றதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றனது.

அந்நியர்களின் வருகையோடு இலங்கையில் சைவ மக்களிடத்தில் நாட்டார் தெய்வ வழிபாடுகள் செல்வாக்குப் பெறத் தொடங்கின. அதனூடாக குலதெய்வ வழிபாட்டில் மரவழிபாடு செல்வாக்குப் பெற்றது. வேம்பு, பாலை, இத்தி, ஆல், கொக்கட்டி, புளி, நாவல் ஆகிய மரங்கள் நாட்டுப்புறவழிபாடுகளில் செல்வாக்குப்பெற்றன அவை பெரிதும் அம்மன்வழிபாட்டுடன் நெருக்கமாகியிருந்தன.

இந்திமாத்தாள்
வேப்பிலைக்காரி
சந்தணநாச்சியார்
வாகை நாச்சியார்

என்ற ஊர்வழக்குகள் மரவழிபாட்டை அம்மன் வழிபாட்டுடன் இணைத்துக்கொண்டன. வேப்பமரத்தில் பல்வேறு மருத்துவக் குணாங்கள் இருப்பதாகக்கருதி ஈழத்து சைவமக்கள் வேப்ப மரத்தினை சமய சட்பிரதாயங்களில் பெரிதும் மதித்தனர். கோயில கட்டிட வேலைகளுக்கும் வீடுகளில் பூசை அறைகளுக்கும் நிலை கதவு என்பனவற்றிற்கு வேப்பமரத்தைப் பயன்படுத்துவது வழக்கமாகியது.

மேலும் துளசி, முள்முருங்கை, மாவிலங்கம் முதலியனவும் சமய வழிபாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் முக்கியம் பெற்றன வீடுகளில் துளசி மாடம் அமைப்பதும் சைவ மரபு. துளசி செடி வணக்கத்துக்குரியது மட்டுமல்லாமல் துளசி சிவ வழிபாட்டிலும் முக்கியம் பெற்றது. சைவ சமயப் பண்பாட்டில் முள்முருங்கை புராண காலத்தி லிருந்து முக்கியம் பெற்று வருகின்றது. திருமண நாளில் "கன்னிக்கால்" நாட்டுவதற்கு முள்முருங்கையைப் பயன்படுத்துகின்றனர். இதற்கு சமய ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாக வும் விளக்கம் கூறப்படுகின்றது.

இந்திரர் கௌதமுனிவரின் சாபம் பெற்று குஸ்ட்ட நோயினால் இளமை அழகினை இழந்து பின் தவவலிமையினால் நோய் நீங்கினார். அந்த நோயின் மறுக்களை நினைவூட்டுவதாக முள் முருங்கையில் அமைப்புக் காணப்படுகின்றது. கௌதம முனிவரின் மனைவி அதனால் முனிவரின் சாபத்தை பெற வேண்டியதாயிற்று. எனவே திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளுகின்ற ஆண்மகன் (மருமகன்) இந்திரனைப் போன்று இருக்கக் கூடாது என்பதை நினைவூட்டுவதாக முருங்கை மரத்தை கன்னிக் காலாக நடுவது வழக்கமாகியது.

பொதுவாக சைவ சமயக்கிரியைகளின் போது ஓமத் தீயினை எரிப்பதற்கு புனித மரங் களின் சிறு கிளைகள் பயன்படுத்தப்படும் இதனை 'சமித்துக்கள்' என்று கூறுவார். இதற்கு பிலா, வேம்பு, மா, எருக்கலை, அரசு, மாவிலங்கம் போன்றவற்றின் சுள்ளிகள் பயன் படுத்தப்படும் இவற்றை விட ஆலயக் கட்டுமானங் களுக்கும் தேர், சப்பறம், கொடி மரம், விக்கிரகம் கடவுளின் வாகனங்கள் ஆகியவற்றை உரு வாக்குவதற்கு

ஆலமரம்

மருதைமரம்

கருங்காலிமரம்

பலாசு தேக்கு

ஆலமரத்தின் விழுதுகள்

என்பன ஸ்தபதி களினால் தெரிவு செய்யப் பட்டன. கருங்காலி கொடிமரத்திற்கும் மருது தேர்ச் சில்லுகளை செய்வதற்கும் தேக்கு கதவு மற்றும் செதுக்கு வேலைகளுக்கும் பயன்படுத்தப் பட்டன. ஆலம் விழுதுகளில் செய்யப்படும் உருளைகள் தெய்வங்களை வாகனங்களில் காவிச் செல்லுவதற்குப் பயன்படுத்தப்படு கின்றன. இவை ஏனைய மரங்களைவிட களம் குறைந்து காணப்படுவதே இதற்கு முக்கிய காரணம்.

தனிமரம் அன்றி ஒரு நெடும்புதரோ ஒரு காடோ கூட புனித இடமாக கருதப்பட்டு வழிபடப் பட்டதை தமிழ் நூல்களில் காணக் கூடியதாக உள்ளது. மதுரையின் பழையபெயர் "கடம்ப வனம்" என்றும் சிதம்பரத்தின் முன்னயை பெயர் தில்லை வனம் என்றும் சிறப்பிக்கப் படுவதை நோக்கமுடியும். அகத்தியர் அகத்திய மலையில் இருந்து தமிழ் வளர்த்த இடம் அகத்தியஸ் தாபனம் என்றும் சிறப்பிக்கப்படு கின்றது. மேலும்.

திண்டிவனம்

திருப்புண்கூர்

திருக்குற்றாலம்

திருவிடைமருதூர்

திருவேற்காடு

திருப்பூவனம்

திருப்பாதிரிப்புலியூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியனவும் திருக்கச்சி ஏகம்பம், புன்னை வனம், ஆற்காடு, திருவாலங்காடு, திருமுல்லை வாயில் ஆகிய இடங்களும் தமிழ்நாட்டில் சமயச் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. இவ்வூர்கள் காடு அல்லது மரம் என்பனவற்றால் பெயர் பெற்றிருப்பதும் இவை இறைவனின் தலங்களாக விளங்குவதும் கவனிக்கத்தக்க தாகும்.

இயற்கையோடு இணைந்ததாக மனித வாழ்க்கை அமைந்திருப்பது தவிர்க்கமுடியாத தொன்றாகும். பூர்வீக சமுதாயம் அனைத்திலும் வழிபாடு இருந்தது மனிதனின் அடிப்படை தேவைகள் பலவும் மரங்களினால் பூர்த்தி செய்யப்பட்டன உணவு, உடை, உறையுள் என்பன காய்கனிகளும், தாவரதானியங்களும் உணவாகின, புராதன மனிதனுக்கு மரமே வீடாகவும் இருந்தது. பண்டய மனிதன் வேட்டையாடி உண்பதற்கு வில்லு, அம்பு, வேல் என்பன மரங்களில் இருந்து பெறப்பட்டன. இவைகளும் மரப்பட்டைகளும் உடையாகப் பயன்பட்டன. உணவினை சமைத்து உண் பதற்கு மரங்கள் எரிபொருளாகப் பயன்பட்டன.

புராதன இதிகாசகாலத்தில் முனிவர் களின் வாழ்விடமாகவும் ஆச்சிரமங்களை அமைப்பதற்கும் மரங்களும், காடுகளும் பயன்பட்டன. தெய்வாம்சப் பொருந்திய மரங்கள் உயிர்வாழ்வதற்கான மூலிகைகளாகவும் விளங்கின. சஞ்சீவினி மரத்தின் ஆற்றல் பற்றி இராாயணம் கூறுகின்றது. பஞ்சபாண்ட வர்கள் வனவாசம் செய்த காலத்தில் பல மரங்களை வழிபட்டனர் என அறிய முடிகின்றது. சீதை இலங்கையில் "சியாமா" என்ற மரத்தை வழிபட்டமைக்கும் ஆதாரங்களுண்டு புத்த பெருமான் போதி மரத்திலும் மணிவாசகர் குருந்த மரத்திலும் ஞானம் பெற்றனர்.

முன்னைய காலங்களில் ஊர்மக்கள் தம் சபைகளைக் கூட்டும் இடமாகவும் நீதியை வழங்கும் இடமாகவும் மரங்கள் அமைந் திருந்தன. நாடகம் நடிப்பதற்கும் திருவிழாக்கள் செய்வதற்கும் மர நிழல்களைப் பயன்படுத்தினர், புனித மரங்களில் தேவதைகள் உறைந்து வாழும் என்பதனால் மரங்கள் கோவில் களாகவும் விளங்கின. இதன் பின்னணியிலே தான் "மர தேவதை" வழிபாடும் இந்து சமயத்தில் செல்வாக்குப்பெற்றது. ஊர் மக்கள் மத்தியில் பயிலப்பட்டுவந்த மன்றம், முற்றம், பொதியில் போன்றவை பெரும்பாலும் மரநிழல்களில் அமைந்தவை ஆலமுற்றம் பற்றி அகநானூறும் வாகைமன்றம், வன்னிமன்றம், பற்றிப் புறநானூறும் குறிப்பிடுகின்றது. மன்ற வேம்பு எனும் பதம் புறநானூறில் இடம்பெறுகிறது. "புன்னை மரநிழல் சாய் வேந்து மன்றம் என வரும் சிலப்பதிகாரக் கூற்றின்படி அரண்மனை களுடன் புன்னை மரம் தொடர்புபடுத்தப்பட் டிருப்பதை காணலாம். நாகபாம்பின் தோசம் பிடித்தவர்கள் கன்னிமரத்திற்கு பால் ஊற்றும் வழக்கத்தையும் கொண்டிருந்தனர்.

ஆலமரம், அரசமரம், நாகமரம் என்பன வற்றில் நாகபாம்பு, வாழும் என்றும் நம்பிக்கை யில் இம்மரங்களும் வழிபாட்டில் முக்கியம் பெற்றன. குறிப்பாக இலங்கையிலும் தமிழ நாட்டிலும் நிலவுகின்ற தம்பிரான் வழிபாடுகளில் இந்தநடைமுறைகள் காணப்படுகின்றது. வில்வ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தில் காசு நேர்ந்து கட்டுவதும் புதிதாக மாடு ஆடு கன்று ஈன்றால் முதல் பாலை கறந்து வேம்புமரத்தின் அடியில் ஊற்றிவிடுவதும் கிராமப்புற மக்களின் சமய நம்பிக்கையாகும்.

ஆகம நடைமுறைகளில் திருக்கோயில் வழிபாடுகளுடன் மிகவும் நெருக்கமாக அமைந்தவையாக "தலவிருட்சங்கள்" உள்ளன தமிழ் நாட்டில் ஆரம்பகாலங்களில் மரங்களின் அடியிலே கோயில் வழிபாடு தொடங்கப்பெற்றது. அதாவது புனிதமான ஒரு மரத்தின் அடியில் தெய்வங் களின் அம்சங்களில் ஒன்றினை நாட்டிவைத்து வழிபட்டனர். பின்னர் அவ் விடத்தில் அமைந்த கோயில்களுக்கு அம் மரங்கள் தலவிருட்சங்களாக அமையப்பெற்றன. இவ்வாறு நோக்குகையில் முதலில் மரமே தெய்வம் என்று கருதப்பட்டது. பின்னர் மரத்தில் தெய்வம் வருவதாக கருதப்பட்டது. அதன் பின் மரத்தின் அடியில் தெய்வத்தை பிரதிஸ்டை செய்து வழிபடப்பட்டது. பின் தெய்வத்தின் இருப்பிடம் மரம் என்ற நிலைமாறி தெய்வ இருப்பிற்காக தனியே கோயில்கள் கட்டப்பட்ட நிலையில் அவை தலவிருட்சங்களாக விளங்கப் பெற்றன.

தலவிருட்சங்கள் கடவுளைப் போன்றே மக்களால் வணங்கப்படுகின்றன. கோவில் மூலவர் தம்பிரசாதங்களுடன் ஒன்றாக கருதப்பட்டு மரத்தின் நிலை வழங்கப்படுகின்றது. மக்கள் தம் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டுத் துணிமுடிச்சுக்களை இம்மரத்தின் கிளைகளில் கட்டிவிடுகின்றனர். அதனால் நினைத்தகாரியம் நடைபெறும் என்று நம்பினர். குழந்தை இல்லாதோர் குழந்தைவரம் வேண்டி பொம்மைத் தொட்டில்களை மரக்கிளைகளில் கட்டி தொங்கவிடுவர்.

இந்நிய நாட்டில் பன்னூறு ஆலயங்களுக்கு வகைகூறமுடியாதமரங்கள் தலவிருட்சங்களாக அமைந்திருக்கின்றன. அந்த வகையில் தமிழ்நாட்டின் பெருங்கோயில்களுக்கு வேங்கை மரம், குருந்தமரம், புங்கைமரம், கடம்பமரம், இந்திமரம், தில்லைமரம், வாகைமரம், அரச மரம், கொங்கைமரம், மாமரம் என்பன தலவிருட் சங்களாக அமைந்துள்ளன. எமது நாட்டைப் பொறுத்தவரையில் பெருங் கோயில்களுக்கும் பின்வரும் மரங்கள் தல விருட்சங்களாக அமைந்திருக்கின்றன.

- திருக்கேதீஸ்வரம் - வன்னி மரம்
- திருக்கோணேஸ்வரம் - ஆலமரம்
- மாவிட்டபுரம் - காஞ்சி மரம்
- நகுலேஸ்வரம் - ஆலமரம்
- நயினாதீவு - வன்னிமரம்
- முன்னேஸ்வரம் - வெள்ளரசுமரம்
- நல்லூர் - வன்னி மரம்
- கதிர்காமம் - வில்வமரம்
- வற்றாப்பழை - வேப்பமரம்
- இந்திரவேலாயுதர் ஆலயம் - வெள்ளைநாவல் மரம்
- பொன்னம்பல வானேஸ்வரம் - மாதுளைமரம்
- மண்டூர் முருகன் - தில்லை மரம்
- துர்க்கை அம்மன் - இலுப்பை மரம்
- வல்லிபுர ஆழ்வார் - மருத மரம்
- மாமாங்கேஸ்வரம் - குருந்த மரம்
- கொக்கட்டிசோலை தான்தோன்றீஸ்வரம் - கொக்கட்டி மரம்
- ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரம் - கொன்றை மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலதெய்வ வழிபாட்டுமுறைகள் செல்வாக்குப் பெற்றுள்ள எமது நாட்டில் மரங்களைப் பின்னணியாக கொண்ட வழிபாட்டுமுறைகள் நீண்டகாலமாக செல்வாக்குப் பெற்று வருகின்றன. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களிலும் வன்னி, யாழ்குடாநாடு என்பவற்றிலும் மரவடி வழிபாடுகள் முக்கியம் பெற்றுள்ளன. வன்னி நாச்சியார் வழிபாட்டுமுறை புனிய மரத்துடன் இணைந்து காணப்படுகின்றது.

போர்த்துக்கேயர்கள் இலங்கையை ஆண்டகாலத்தில் தமது கணவன்மார் மதவாதிகளால் கொலை செய்யப்பட்ட நிலையில் அவர்களுடைய மனைவிமார்களாகிய ஏழு குலமரபுப பெண்கள் தமது கற்பொழுக்கம் காரணமாக அலரி விதையை அரைத்து உண்டு தற்கொலை செய்து கொண்டதாகவும் அதனையொட்டி வருடம் ஒருமுறை அப்பெண்களை ஏழுமரத்தின் கீழ் நினைவு கூர்ந்து விளக்கு வைத்து வழிபட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது அத்துடன் இவ்வாறான "வன்னிநாச்சியார் ஆலயமொன்று யாழ் வடமராட்சி பொலி கண்டி என்ற இடத்தில் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக "மரவழிபாடு" சைவசமயத்தில் பல்வேறு நிலைகளில் முக்கியம் பெற்று வந்துள்ளது. பண்டைத்தமிழர்களின் வாழ்வோடும் ஆதித்திராவிடர்களின் சமய உணர்வுகளோடும் மரவழிபாடு இணைந்து காணப்படுவதால் மரவழிபாட்டின் பரிமாணமாக மர தேவதை வழிபாடும் நிலைபெற்றுள்ளது.


**உஷாத்துணை நூல்கள்**

1. வியத்தகு இந்தியா - A.L பஷாம்
2. இந்துநாகரிகம் - கலாநிதி க. சொக்கலிங்கம்
3. ஈழமும் இந்து மதமும் - கலாநிதி சி.க. சிற்றம்பலம்
4. ஆரியர் ஆதிவரலாறுப் பண்பாடும் - வி. சிவசாமி
5. இந்துக்கலைக்களஞ்சியம் - பதினொராம் தொகுதி (ம- மௌ) இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
6. இந்துநாகரிகம் க.பொ.த உயர்தர வழிகாட்டி நூல் வெளியீடு அகில இலங்கை இந்துமாமன்றம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவும் உடலும்



சாரங்கி அமிர்தலிங்கம்
வயம்பு பல்கலைக்கழகம்
கொழும்பு

மனித வாழ்க்கைக்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவது உணவு; உணவு என்று நோக்கும்போது அது போசணை என்றே பொருள்படும். மனிதனுடைய ஆரோக்கியத்துக்கு தேவையான போசணை அவனுடைய வயதுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளது. குழந்தை (Infant), சிறுவர்கள் (Child), பெரியவர்கள் (adults), மூத்தவர்கள் (Elders)

குழந்தைப் பருவம் என்று சொல்லப்படும் வயது எல்லை பிறப்பு முதல் 12 மாதங்களாகும். குழந்தைகளுக்கு வேண்டிய போசணையை உரிய அளவில் கொடுப்பது மிகமிக அத்தியாவசியமானதும் அவசியமானதுமான பொறுப்பாகும். ஏனெனில் இவ்வயது எல்லையில் அவர்கள் 200% உடல் எடை அதிகரிப்பு 55% உடல் உயர அதிகரிப்பையும் 40% தலையின் சுற்றளவு அதிகரிப்பும் மற்றும் இருமடங்கு மூளை விரித்தியும் அடைகின்றனர்.

குழந்தைகளுக்கான போசணையின் மிக முக்கிய அங்கம் தாய்பாலூட்டல் ஆகும். குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே ஊட்டல் வேண்டும். தாய்ப்பால் மூலமாக குழந்தைகள் தமக்கு தேவையான பிறபொருளெதிரிகளை பெற்றுக் கொள்கின்றனர். இது மட்டுமல்லாது ஓர் தாய்க்கும் குழந்தைக்குமான நல்லுறவும் விருத்தியடைகிறது. முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் தவிர வேறு உணவுகளோ உப்பு சேர்ந்த பானங்களோ அல்லது தூய நீரோ கொடுக்கக் கூடாது. குழந்தையின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் தாய்ப்பால் மட்டுமே போதுமானது.

ஆறு மாதத்தின் பின்பு தாய்ப்பாலுடன் நிரப்பு உணவுகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக மசித்து சோறு, மரக்கறிகள், இரும்புச்சத்து நிறைந்த பச்சை இலைகள், மீன், முட்டை போன்ற புரதச்சத்து மிகுந்த உணவுகளை சேர்த்து உணவு அளிக்க வேண்டும். ஓர் குழந்தைக்கு ஒரு வயது முடியும் வரை பழரசம், தேன், கடலை மற்றும் கொழுப்பு குறைவான பால் போன்ற உணவுகளை கொடுப்பதை தவிர்க்க வேண்டும்.

ஒரு வயதின் பின் 12 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு வழக்கமாக உண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண உணவுகளை வழங்கலாம். இவ் வயதிலுள்ள சிறுவர்கள் உணவு உண்பதை விரும்பமாட்டார்கள். இவ்வயதினர் முன்பள்ளி, பாடசாலை சொல்வதனால் உணவில் போதியளவு கவனம் கொள்ளமாட்டர்கள். எனவே பெற்றோர்கள் பிள்ளைகளின் போசணையில் அதிக அக்கறை எடுக்க வேண்டும். 1 - 2 வயதுவரையான பிள்ளைகளுக்கு கல்சியம் நிறைந்த உணவு அவசியமாகும். ஏனெனில் இவ்வயதிலே பல், என்பு வலுவடையும். இதற்கு மேலதிகமாக விற்றமின், கனியுப்பு உயர்ந்தளவிலுள்ள உணவு அவசியம்.

12 - 19 வயதாகும் போது (teenage) இளைஞர் யுவதிகள் தமது உடல் கட்டமைப்பு, எடை அழகு என்பவற்றிலே அதிகம் கவனம் கொள்வார்கள். எனவே போசணை கொண்ட உணவுகளை உண்பதை தவறி விடுகின்றார்கள். இவ்வாறாக உணவு உண்ணாமல் நாட்களை கடத்துவதால் இரைப்பை அழற்சி போன்ற நோய்கள் வர வாய்ப்பு உள்ளது. எனவே உணவு உட்கொள்ளும் நேரம் தாழ்த்தாமல் உணவு உட்கொள்ள வேண்டும். அதிகளவு புரதம் நிறைந்த உணவுகளை நாளாந்தம் சேர்த்துக் கொள்ள வேண்டும். கல்சியம், விற்றமின், மிகையான கொழுப்பு, பால் மற்றும் கீரை வகைகளை சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வயதிலுள்ள இளைஞர்கள் மென்பானங்களையும் விரைவு உணவுகளையும் உண்பதையே விரும்புவார்கள். ஆனால் இவ்வுணவுகளில் மிகையான கொழுப்பு உள்ளதால் இயன்றளவு இவ்வுணவுப் பழக்கத்தை தவிர்ப்பது நல்லது. முறையான உணவுப் பழக்கம் இல்லாவிடின் உடை எடை மிகையாக அதிகரிக்கும். (Obesity)

19 - 50 வயதானவர்களை பெரியவர்கள் (Adults) என அழைக்கலாம். இவ்வயதுப் பிரிவினர் கட்டுப்பாடான உணவுப் பழக்கத்தை கொண்டிருக்க வேண்டும். கொழுப்பு, உப்பு, சீனி உணவுகளை உண்பதை குறைக்க வேண்டும். அதிகளவு பழங்கள், மரக்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். உணவுப் பழக்கத்திற்கு மேலதிகமாக நாளாந்த உடற்பயிற்சியும் மிக அவசியம்.

50 வயதிற்கு மேற்பட்டோரை முதியவர்கள் (Elders) என வகைப்படுத்தலாம். இவ்முதுமை நிலையின் போது அதிகளவான கலோரி கொண்ட உணவுகளை தவிர்க்க வேண்டும். கலோரி மட்டுமல்லாது கொழுப்பு, சீனி கொண்ட உணவுகளை உண்பதையும் தவிர்த்துக் கொள்வது சிறந்தது. ஆனால் நிறைந்த போசணை உள்ள உணவை குறைவான கலோரியில் உண்ணலாம். உள்ளெடுக்கும் உணவு கூடிய போசணையும் குறைவான அளவிலும் இருக்க வேண்டும். எளிதில் சமிபாடடையும் உணவுகள், நார்பொருள் உள்ள மரக்கறிகள், பழங்கள், தானியங்கள் போன்றன அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வது உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் நாள்தோறும் 3.7$l$ நீர் பருகுவது அவர்களது உடல் ஆரோக்கியத் திற்கு நல்லது. இதே போல் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் 2.7$l$ நீர் பருக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வயது | கலோரி | புரதம் | பழங்கள் | காய்கறி | தானியங்கள் | பால் |
|---|---|---|---|---|---|---|
| 2 - 3 | 1000 - 1400 | 2 - 4 ounce | 1 - 1.5 cup | 1 - 1.5 cup | 3-5 ounce | 2-2.5 cup |
| 4 - 8 ஆண் பெண் | 1200 - 1800 | 3 - 5 ounce | 1 - 1.5 cup | 1.5 - 2.5 cup | 4 - 6 ounce | 2.5 - 3 cup |
| 9 - 13 பெண் | 1400 - 2000 | 4 - 6 | 1.5 - 2 | 1.5 - 3 | 5 - 7 ounce | 2.5 - 3 cup |
| ஆண் | 1600 - 2600 | 5 - 6.5 | 1.5 - 2 | 2 - 3.5 | 5 - 9 ounce | 3 cup |
| 14 - 18 பெண் | 1800 - 2400 | 5 - 6.5 | 1.5 - 2 | 2.5 - 3 | 6 - 8 | 3 cup |
| ஆண் | 2000 - 3200 | 5.5 - 7 | 2 - 2.5 | 2.5 - 4 | 6 - 10 | 3 cup |
| 19 - 50 வயது | 8700 kJ | 50g | 1.5 - 2 | 2 - 3 | 310g | 2 cup |

50 வயதிற்கு மேற்பட்டவர்கள் கட்டுப்பாடான உணவையே உண்ண வேண்டும். சாதாரணமாக கொழுப்பு, உப்பு, சீனி குறைவான உணவை உள்ளெடுத்தல் நல்லது. இவர்களது நாளாந்த உணவானது அவர்களின் உடல் பருமன், நோய் அறிகுறி மற்றும் தொழில் போன்வற்றின் அடிப்படையில் வேறுபடும் உணவை அளவிற்கு அதிகமாக உண்ணும் போது அதுவும் ஓர் வகையில் உடலுக்கு நஞ்சாகும். எனவே உணவுக்கட்டுப்பாடு உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்த வழியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத்தின் போக்கு



ஜெ. சத்திய தரண்யா
க.பொ.த உயர்தர மாணவி

மனிதன் இப்பூவுலகில் தேகாரோக்கியத் துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழவேண்டும் எனில் நோய் நொடி இன்றி சுகதேகியாக இருத் தல் அவசியமாகும். அந்த வகையில் மனிதனின் வாழ்க்கையோடு இணைந்த அவனது வாழ்வில் அளப்பரிய செல்வாக்கைச் செலுத்தும் காரணியாக மருத்துவத்துறை விளங்குகின்றது.

முதலில் "மருத்துவம்" என்றால் என்ன? என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, மருத்துவம் என்பது நோய்களை கண்டறியும், குணப்படுத்தும் மற்றும் கட்டுப் படுத்தும் ஒரு விஞ்ஞானக் கலை எனப் பொருள்படும். இதில் பல பிரிவுகள் காணப்படுகின்றன. உயிரணுவியல், நுண்ணு யிரியல், மரபணுவியல், உயிர்வேதியல், உயிர் இயற்பியல், மருந்தியல் என்பன அவற்றுள் சிலவாகும்.

இக்கலவையானது இன்று நேற்று ஆரம்ப மாகியதன்று. மாறாக மானிடன் நாகரிகமடையத் தொடங்கிய காலம் முதலான பல நூற்றாண்டு கால பழமையையும் வரலாற்றையும் கொண்ட துறையாக இது விளங்குகின்றது. ஆரம்ப காலத்தில் இயற்கையோடு ஒன்றித்து மூலிகை களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பாரம் பரிய மருத்துவ முறையானது உலகளாவிய ரீதியில் பல பிரதேசங்களிலும் பரந்து காணப் பட்டது அந்தவகையில், கிரேக்கம், பபிலோனியா, இத்தாலி, சீனா, பிரான்ஸ் இந்தியா போன்றன குறிப்பிடத்தக்க பிரதேசங்களாகும். எனினும் மனித நாகரிகம் வளர்ச்சியடையும் போது தொழில் நுட்பங்களின் செல்வாக்கின்காரணமாக புதுப்புது நோங்கள் தோன்றியதனால் அவற்றை கட்டுப் படுத்துவதற்காக மருத்துவத்துறையும் விருத்தி பெற வேண்டியதாயிற்று.

அந்த வகையில் மருத்துவத்துறையின் வளர்ச்சியில் அனேக ஆய்வாளர்களும், விஞ் ஞானிகளும் மற்றும் மருத்துவர்களும் பங்கெடுத் தனர். இவர்களில் முதன்மையானவரும் முக்கிய மானவருமாக கருதப்படுபவர் கிரேக்க தத்துவ ஞானியும் ஆய்வாளருமாகிய ஹிப்போ கிரட்டீஸ் ஆவார். இவரின் காலம் மருத்துவத் துறையின் எழுச்சியின் பொற்காலமாக அமைந்தது. ஏனெனில் இவர் மருத்துவம் தொடர்பாக பல் வேறு ஆய்வுகளை மேற்கொண்டு அது தொடர் பான ஆராய்ச்சி நூல்கள் பலவற்றையும் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிட்டார். இந்நூல்கள் தற்காலத்தில் பின்பற்றப் படும் மருத்துவ முறைகளிற்கும் அடிப்படையாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதுமட்டுமல்லாது இவர் மருத்துவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள், நடை முறைகள் தொடர்பாகவும் கொள்கைகளை வெளி யிட்டார். இக்கொள்கைகளே இன்றும் கூட மருத் துவத்துறையினுள் பிரவேசிக்கும் ஒவ்வொரு மருத்துவனதும் உறுதி மொழிகளாக பின்பற்றப் பட்டன. அத்துடன் இவரது காலத் திலேயே முதன் முறையாக இத்தாலியில் நவீன மருத் துவப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வாறு மருத்துவம் நவீன யுகத்தை நோக்கிப் பயணிப்பதற்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்த பெருமை இவரையே சாரும், ஆதலால் இவரை 'நவீன மருத்துவத்தின் தந்தையாக' அனை வரும் போற்றுகின்றார்கள்.

இவரின் வழிகாட்டலில் தொடங்கிய மருத்துவத்தின் பயணமானது பல தடைகளைக் கடந்து சாதனைபுரிந்து தொடர்ந்தும் வளர்ச்சி யடைந்து வருகின்றது. அந்தவகையில் கிட்டத் தட்ட பண்ணிரண்டாம் நூற்றாண்டளவில் சத்திரசிகிச்சை செய்யும் முறை பிரசித்தி பெற்றது. அக்காலப்பகுதியில் குறைந்தளவு தொழில் நுட்பமே காணப்பட்டதால் சாதாரண முறை யிலேயே சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. எனினும் தொழில் நுட்பங்கள் உயர்வடையும் போது சத்திரசிகிச்சை செய்யும் முறையும் காலத்துக்காலம் வளர்ச்சி கண்டது. பல்வேறு சத்திர சிகிச்சை உபகரணங்களும் தொழில்நுட்ப யுத்திகளும் கண்டறியப்பட்டன. அந்த ரீதியில் Micro technology சத்திர சிகிச்சை முறை Remorte சத்திரசிகிச்சை தொழில்நுட்பம் என்பன காலப்போக்கில் உதயமாகின. அத்துடன் 2007ம் ஆண்டளவில் செயற்கை எந்திரன்கள் எனப்படும் Robot மூலம் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சைத் தொழில் நுட்பம் கண்டறியப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும் நடை முறை பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வில்லை.

இதற்கு அடுத்தபடியாக மருத்துவத்துறை யின் வளர்ச்சியில் 'நுண்ணுயிரியல்" எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது என்பதனை ஆராய்ந்து பார்க்கலாம். "நுண்ணுயிரியல்" என்பது வெற்றுக் கண்ணுக்குப் புலப்படாத மிக நுண்ணிய அங்கிகள் தொடர்பான உயிரியல்க் கல்வி எனப் பொருள்படும். இந்த நுண்ணு யிர்கள் தொடர்பான ஆய்வுக்கு அத்திவாரமாக அமைந்தது ஒளிநுணுக்குக்காட்டி, இலத்திரன் நுணுக்குக் காட்டிகளின் கண்டுபடிப்புக்களாகும்.

முதன் முதலில் "அன்ரன் வான் லியுவான் கூக்" என்பவரே பக்ரீரியா முதலிய நுண்ணங்கிகளை நுணுக்குக்காட்டியில் அவதானித்தார். இதனைத் தொடர்ந்தே நுண்ணங்கிகள் தொடர்பான ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு அவற்றால் உண்டாகும் நோய்கள் தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் நுண்ணங்கித் தொற்றுகளுக் கெதிரான வக்சீன்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த வகையில் "அலக்சாண்டர் பிளமிங்" என்பரே முதன் முதலில் பங்கசுகளுக்கெதிரான "பென்சிலியம் நொட்டேற்றம்" என்னும் நுண்ணுயிர் கொல்லியை கண்டு பிடித்தார். இதன் மூலம் மருத்துவத்துறையில் எதிர்பார்க்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத அளப்பரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து மருத்துவத்துறையில் பல கருவிகளும் கண்டுபிடிப்புக்களும் உருவாகத் தொடங்கின பொதுவாக மருத்துவம் என்றாலே அனைவருக்கும் ஞாபகம் வரும் கருவி உடல் ஒலிபெருக்கியாகும். ஏனெனில் மருத்துவனது அடையாளமே இக்கருவிதான். இதன் மூலமே நோய்களுக்கான அறிகுறிகள் சிலவற்றை கண்டறிகின்றார்கள். இது மட்டுமல்லாது இன்னும் பல கருவிகளும் மருத்துவனுக்கு தோழ் கொடுக்கும் தோழனாக விளங்குகின்றன. மருத்துவனால் இனங்காணமுடியாத நோய்களை இனங்காண்பதில் அவை முக்கிய பங்காற்றுகின்றன. அந்த வரிசையில் இதயக் கோளாறுகளையும் இதயம் தொடர்பான குறைபாடுகளையும் இனங்காண்பதில் அளப்பரிய செல்வாக்கைச் செலுத்தும் கருவியாக E.C.G இயந்திரம் விளங்குகின்றது. இது கிட்டத்தட்ட 1860ம் ஆண்டளவில் வில்லியம் எந்தோவென் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது இதன் மூலம் மருத்துவத்துறை பாரிய எழுச்சி கண்டது.

இதனைத் தொடர்ந்து உடலக முறிவுகளையும் குறைபாடுகளையும் இனம் காணத் தக்கதாக x-ray நிழற்படக்கருவி கண்டுபிடிக்கப் பட்டது. இதனை சேர் வில்லியம் ரொஞ்சன் என்பவரே 1985ம் ஆண்டு கண்டுபிடித்தார். இவர் முதன் முதலாக தனது மனைவியின் கைகளையே X –ray இயந்திரம் மூலம் நிழற்படமாக அவதானித்தார் என்பதுவும் குறிப்பிடத் தக்கதாகும். இதன் பின்னர் X-ray கருவியின் வினைத்திறனை விட பலமடங்கு வினைத் திறனுடைய கருவியான கழியொலி அலகிடலி (C.T.Scanner) கண்டுபடிக்கப்பட்டது. இது மருத்துவர்கள் இனங்காணச் சிரமப்படும் பல நோய்களையும் இலகுவில் கண்டறிந்து மருத்துவத்துறையின் உச்ச வளர்ச்சிக்கு வித்திட்ட கருவியாக திகழ்கின்றது. இவை யாவும் மருத்துவத்துறையின் வளர்ச்சிப்பாதையின் மைல் கற்களாக அமைந்தன.

இது மட்டுமல்லாது நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் மருத்துவர்களும் தமது அதீத அறிவைப் பயன்படுத்தி மருத்துவத்துறையில் புதுப்புது அத்தியாயங்களை தோற்றுவித்தனர். முதலாம் உலகப் போரின் போது பல வீரர்கள் காயமடைந்த வேளை அதிக குருதி வெளியேறிய காரணத்தால் இவர்கள் மரணத்தை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இதன் காரணமாக மருத்துவர்கள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டதன் பிரதிபலனாக குருதி மாற்றீட்டு முறை கண்டறியப்பட்டது. இதன் மூலம் காயமடைந்த வீரர்கள் குருதியினங்கள் அறியப்பட்டு ஒத்த குருதியினமுள்ள சுகதேகி ஒருவருடைய குருதியை அவர்களிற்கு மாற்றீடு செய்து அவர்களுக்கு புத்துயிர்ப்பு வழங்கப்பட்டது.

அதுமட்டுமல்லாது குருதி மாற்றீடு முறை ஆரம்பிக்கப்பட்டு சரியாக மூன்று நூற்றாண்டுகளின் பின்னர் உடலங்கங்களை மாற்றீடு செய்யும் முறை கண்டறியப்பட்டது. அந்த வகையில் தோல், இதயம், இதயவால்வுகள், சிறுநீரகம், ஈரல், சுவாசப்பை என்பன குறிப்பிடத்தக்க அங்கங்களாகும். இவற்றில் இதய மாற்றீடே மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமானமானதும் ஆபத்து மிகுந்ததுமாகும். எனி னும் 1922ம் ஆண்டு முதன் முறையாக "கிறிஸ்ரியன் பேனாட்" என்பவரே இதய மாற்று சத்திரசிகிச்சையை மேற்கொண்டு அதில் வெற்றி பெற்றதன் மூலம் மருத்துவத் துறையில் புதிய தொரு சரித்திரம் படைத்தார். அத்துடன் 1954ம் ஆண்டு ஜோசப் முரே என்பவரால் சிறுநீரக மாற்றீட்டு சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது.

இவற்றையெல்லாம் விட மருத்துவர்களது அற்புதப்படைப்பால் உருவாகிய அளப்பரிய புரட்சியாக கருதப்படுவது செயற்கையங்கங் களின் உருவாக்கமாகும். ஆரம்ப காலத்தில் கை, கால், இழந்தவர்களுக்காக செயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட கை, கால் என்பன பொருத்தப்பட்டன. ஆனால் இவை உடற்தொழிற் பாட்டுடன் ஒத்திசைய முடியாதவையாக காணப் பட்டன. எனினும் காலப்போக்கில் உடற்றொழிற் பாட்டுடன் இயைபாகக் கூடியதாக இதயம், முதலிய அங்கங்கள் உருவாக்கப்பட்டன. அத்துடன் நுண்ணுயிரியல் மூலம் பரம்பரை யலகு பொறியியலைப் பயன்படுத்தி செயற்கை யான முறையில் தயாரிக்கப்பட்ட கலங்களும் (Cell) தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றை விட மருத்துவத்துறையில் தனது ஆதிக்கத்தைச் செலுத்தும் பிரதான காரணியாக இரசாயனப் பதார்த்தத்தை நாம் கூற முடியும். ஏனெனில் நவீன மருத்துவமானது இரசாயனப் பதார்த்தங்களிலேயே பெரிதும் சார்ந்துள்ளது. மருந்து வில்லைகள், தடுப் பூசிகள், தொற்றுநீக்கிகள் ஆய்வு கூட இரசாயனப் பதார்த்தங்கள் என்பவை அவற்றிற் சிலவாகும். இவற்றின் பாவனை நாளுக்கு நாள் அதிகரிப்ப துடன் வினைத்திறனும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

இவை யாவும் மருத்துவத்துறையில் நடந்தேறிய நடைபெறுகின்ற புரட்சிகளாயினும் எதிர் காலத்தில் மருத்துவத்துறையில் ஏற்படப் போகும் மாற்றங்கள் பற்றியும் நாம் எதிர்வு கூறமுடியும். அந்த வகையில் எதிர்காலத்தில் மருத்துவத்துறையில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தப்போகும் காரணியாக நானோ தொழில் நுட்பத்தை கூறமுடியும். நனோத்தொழில்நுட்ப மானது உலகின் அனைத்து துறைகளையும் ஆட்சி செய்யப் போகும் அற்புத கண்டு பிடிப்பு என்பது யாவரும் அறிந்ததே ஆயினும் மருத்துவத் துறையில் எவ்வகையில் செல் வாக்குச் செலுத்தப் போகின்றது என்பதை ஒரு சிலரே அறிந்திருக்கக் கூடும்.

அந்த வகையில் மருத்துவத்தில் நனோத் தொழில்நுட்பம் எவ்வாறு பங்களிப்புச் செய்யும் என்பதனை சற்று நோக்குவோமானால் நனோத் தொழில் நுட்பத்தை மருத்துவத்துறையில் பிரயோகிக்கும் போது அம் மருத்துவ முறை யானது "நனோ மருத்துவம்" என அழைக்கப் படும் இம் மருத்துவ முறையில் நனோ துணிக்கைகளே முக்கிய இடத்தை வகிக்கும் இவை அதீத வினைத்திறனுடையவையாகவும் நோய் அறிகுறிகளை இலகுவில் இனங்காணக் கூடியவையாகவும் காணப்படும் அத்துடன் மருந்து வில்லைத் தயாரிப்பு விநியோகம் என்பவற்றிலும் இது தன் ஆதிக்கத்தைச் செலுத் தும் இவற்றை விட இத்தொழிநுட்பத்தின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும் அதி உன்னத பலன் புற்றுநோய்ச் சிகிச்சையாகும். ஏனெனில் ஏனைய கலம், இழையங்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு புற்று நோய்க் கலங்களில் மட்டும் சிகிச்சை மேற் கொள்ள இத்தொழில்நுட்பம் பங்களிப்புச் செய்யும். இவ்வாறு ஒரு புறம் மருத்துவத்துறையானது தொடர்ச்சியாக வளர்ந்து வருகையில் அதற்குப் போட்டியாக மறுபுறம் வினோதமான நோய் களும் தற்காலத்தில் தலைவிரித்தாடு கின்றன. அந்த வரிசையில் எயிட்ஸ், ஆஸ்த்மா, டெங்கு, போலியோ, சிலவகை புற்றுநோய்கள், மூளை தொடர்பான சிக்கலான நோய்கள் திடீர் வைரசு தொற்றுக்கள், பரம்பரையலகு விகாரம் என்பன அவற்றுட் பிரதானமானவையாகும்.

எயிட்ஸ் என்பது ஒரு பாலியல் நோயா கும். இது HIV வைரசினால் ஏற்படுகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இந்நோய் பாரியதொரு சுகாதாரப் பிரச்சனையாக விளங்குகின்றது. அத்துடன் போலியோ நோய் கூட ஒரு வைரசுத் தொற்றாகும். அந்நோய் காரணமாக 1940 -1950 காலப்பகுதியில் அனேகமக்கள் இறக்க நேரிட்டதுடன் உடற் குறைபாடுகளையும் எதிர்கொள்ள வேண்டிய தாயிற்று ! எனினும் போலியோ வக்சீன் கண்டு பிடிக்கப்பட்டதனால் இதன் அச்சுறுத்தல் குறைக்கப்பட்டது ஆனாலும் குழந்தைப் பருவத்தில் போலியோ வக்சீனை பயன்படுத்தாது விடின் அதனால் ஏற்படும் ஆபத்தை மட்டுப் படுத்த இயலாத காரியமாகும்.

இவற்றை விட வினோதமான நோயாக புற்றுநோய் திகழ்கின்றது. உண்மையில் எயிட்ஸ், மலேரியா, கசம் முதலிய நோய்களைக் காட்டிலும் அதிகளவான மக்கள் புற்றுநோய் காரணமாக மரணிக்கின்றனர். 2008ல் மட்டும் உலகளாவிய ரீதியில் கிட்டத்தட்ட 7.6 மில்லியன் மக்கள் மரணத்தை தழுவினார்கள் அவ்வருடம் புற்றுநோய் காரணமாக இறப்பு வீதம் 13% ஆக காணப்பட்டது. எனினும் இந்நூற்றுவீதமானது 2030ம் ஆண்டளவில் 80% ஆக அதிகரிக்கக் கூடும் என உலக சுகாதார தாபனம் எதிர்வு கூறியுள்ளது.

அந்நோய்களுடன் பரம்பரையலகு விகாரங்களும் கட்டுப்படுத்தப்படாத குறைபாடு களாக அமைகின்றன. இவற்றில் புரோஜிரியா எனப்படும் குறைபாடு குறிப்பிடத்தக்கதாகும். இந்நோய் மிக அரிதாகவே ஏற்படுகின்றது. குழந்தைகள் பிறக்கும் பொழுதே 18- 24 மாத வயதுடையவர்கள் போன்று தென்படுவார்கள் சிறுவயதிலேயே வயதானவர்களின் தோற்றத் தைப் பெறுவார்கள் அவர்களுடைய கலங்களும் குறுகிய காலங்களில் முதுமை யடைந்துவிடும். இந்நோயானது 8 மில்லியனில் ஒரு குழந்தைக்கே ஏற்படினும் குணப்படுத்துவது என்பது இயலாத விடயமாகும்.

இவ்வாறு கொடூரமான நோய்கள் உலகளாகிய ரீதியில் காணப்பட்ட போதிலும் அவற்றை முற்றுமுழுதாக இல்லாது ஒழிப்பதில் மருத்துவ சமூகம் போராடி வருகின்றது. எனினும் இவற்றை மட்டுப்படுத்துவது என்பது இயலாததாகவே, அமைந்துள்ளது. ஆனால் இன்னும் சில தசாப்தங்கள் கடக்கும் முன்பு இவற்றிற்கும் சரியானதொரு தீர்வை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றோயல் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் தரம் 07 மாணவர்கள்



றோயல் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் தரம் 09 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் எட்டி விடுவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை மற்றும் இன்னும் சில நூற்றாண்டுகளில் மனிதனுக்கு இறப்பு என்பதே இல்லை என்று கூறுமளவிற்கான அதிசயங்கள் கூட நிகழலாம்.

எது எவ்வாறு இருப்பினும் மருத்துவத்தின் செல்வாக்கினால் மனித வாழ்வு சௌகரியம் மிகுந்ததாகவும் ஆரோக்கியமானதாகவும் மாற்றப்படுகின்றது. அத்துடன் மனிதன் நீண்ட ஆயுளுடன் வாழவும் வழிசமைக்கின்றது. எனவே மருத்துவத்துறையின் வளர்ச்சியில் பங்கெடுத்தோரையும் நோயாளிகளுக்காக அரும்பாடுபடும் மருத்துவர்களையும் நாம் என்றென்றும் போற்ற வேண்டும் அது மட்டுமல்லாது எதிர்கால தலைவர்களாகிய நாமும் இத்துறையை விருத்தி செய்வதில் பங்கெடுத்து நோயற்ற உன்னத சமூகத்தை உருவாகக் வேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

## கல்வியறிவு

பணம், பதவி, இவற்றினால் உண்டாகும் ஆவணம் அவை
நம்மை விட்டுப் போனவுடனேயே மறைந்துவிடும்.
ஆனால் நான் பல சாஸ்திரங்கள் கற்றவன்.
நிறைய நூல்களை மனனம் செய்தவன் என்று
கல்வியறிவின் மூலம் வரும் அகங்காரம்
இறைவனது பெருங்கருணையால் மட்டுமே அழியும்.

- ஸ்ரீராமகிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனோ தொழில்நுட்பம்



மஜூரநாயகம் ஷானுஜா
பொறியியல் துறை
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

"பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்
எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்"

இவ்வாறு மனிதனின் கண்டுபிடிப்புக்கள் எண்ணற்று விளங்குகின்ற இவ்வுலகில், மனிதனின் நவீன கண்டுபிடிப்பாக "நனோ" தொழில்நுட்பத்தை குறிப்பிடலாம். நனோ தொழில் நுட்பமே இன்று அறிவியல் உலகில் அதிகம் பேசப்படும் பொருளாக அமைகின்றது.

நனோ என்பது ஓர் அளவீட்டு அலகு கிரேக்க மொழியில் 'மிகச்சிறிய' என்பது அதன் பொருள் அதாவது மில்லியனில் ஒரு பங்கு நனோ ஆகும். நனோ அளவில் உள்ள துணிக்கைகளைக் கொண்டு நவீன மனிதனின் தேவைகளை நிவர்த்தி செய்ய செயற்கையாக வடிவமைக்கப்பட்ட இயந்திரக் கட்டமைப்பே நனோ தொழில்நுட்பமாகும். இதுவரையில் இயற்கை நிலையில் பார்த்து வந்த இயல்புகளை விடவும் புதுமையான இயல்புகளை நனோ அளவு மூலக்கூகூறுகள் வெளிப்படுத்துவதால் நனோ தொழில்நுட்பம் விஞ்ஞானத்தின் விந்தையாக அனைவராலும் பேசப்படுகின்றது.

சூரியக்கதிர்ப்புக் கண்ணாடி நாக ஒட்சைட் டுக்களின் நனோ மூலக்கூறுகளைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. அவை ஏனைய சூரியக் கதிர்ப்பு கண்ணாடிகளிலும் நீடித்த வினைத் திறன் மிக்க செயற்பாடுகளை வெளிப படுத்துகின்றது. மழைக்கவசம், விளையாட்டு ஆடைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றின் தயாரிப்பிலும் நனோ தொழில் நுட்பம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அது அழுக்குகள் ஒட்டிக்கொள்வதை தவிர்ப்பதோடு, விரைவில் உலரக்கூடிய, அதிக காலம் நீடித்து உழைக்கக்கூடிய தன்மைகளையும் வெளிப் படுத்துகின்றது.

2002ம் ஆண்டு மென்பந்து (Tennis) மட்டைகள் உற்பத்தியில் காபன் நனோ குழாயிகளை (Corbon nanotube) அறிமுகப் படுத்தி பாரமற்ற அதேநேரம் வலிமையான மென்பந்து மட்டைகளை உருவாக்கியதோடு நனோ தொழில்நுட்பத்தின் மூலம் பந்தின் மீள்தன்மையையும் அதிகரித்து மென்பந்து உலகில் மிகப்பெரிய சாதனையை படைத்தது இந்த நனோ தொழில்நுட்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொழில் நுட்பத்தை எடுத்துக கொண்டால் இன்று கணிணியில் காணப்படும் நுண்செயலிகளினுள் (micro process or) பெரும்பாலும் உபயோகிக்கப்படுவது நனோ இழைகளும் (nano wire) நனோ குழாய்களுமே ஆகும். மருத்துவத்துறையை எடுத்து நோக்கின், பொன்னாலான நனோக் கோல்களின் மூலம் புற்றுநோய்க் கலங்களுக்கு நேரடியாக மருந்தை விநியோகிக்கவும் வெப்பப் படுத்தி அவற்றைக் கொல்லவும் முடியும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி உடலூற் குள் செலுத்தி நோய்களைக் கண்டறியும் நனோ றோபோக்களை உருவாக்கும் முயற்சிகளும் தொடர்ந்தவாறுதான் உள்ளன.

எனினும் இந்த நனோ துணிக்கைகளின் அசாதாரண செயற்பாடுகள் சிலவேளைகளில் ஆபத்து வாய்ந்தவனவாக மாறிவிடுகின்றன. ஏனெனில் இத்துணிக்கைகளில் சில நச்சுத் தன்மை கொண்டனவாகவும், எளிதில் அழிக்க முடியாதனவாகவும் மாற்றம் அடைந்து விடுகின்றன. அத்துடன் மிகச்சிறிய அத் துணிக்கைகள் இலகுவில் இரத்தத்துடன் கலந்து இரத்த முளைத் தடுப்புச்சவ்வினை சுலபமாகக் கடந்து மூளைக்குள் பிரவேசித்து நரம்புத் தொகுதியை பாதிப்படையச் செய்யும் வல்லமை வாய்ந்தவையாக அமைந்து விடக்கூடிய அபாயமும் உள்ளது. மாசடைந்த வளியையும் நீரையும் அணுக்கழிவுகளையும் வடிகட்டி சுத்திகரிக்க உதவும் நனோ தொழில்நுட்பத் தொழற்சாலைகள் இன்று நனோ துகள்களை சூழலுக்கு வெளிவிட்டு சூழலை மாசடையச் செய்யும் முதல்களாக மாறிவருகின்றன. இதையடுத்து சர்வதேச நாடுகள் நனோ தொழில்நுட்பத்தை தவிர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த வண்ணம் உள்ளன. இவற்றைக் கருத்திற்கொண்டு இன்று நனோ தொழில்நுட்பத்தை ஒழுங்குபடுத்தவும் செயல்படுத்தவும் சட்டநியமங்களை வகுக்கவும் பல நிறுவனங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

நனோ தொழில்நுட்பத்தின் நன்மை தீமைகளைப் பகுத்தாராயும் போது நன்மைகளே அதிகமாகக் காணப்படுவதால் நனோ தொழில் நுட்பமானது மனிதவாழ்விற்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று கூறினால் மிகையாகாது.

பணக்காரனாய் சாக வேண்டும் என்பதற்காய் வறுமையில் வாழ்வது வடிகட்டிய முட்டாள்த்தனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலங்களின் அரவணைப்பு



செல்வி ம. ஸிந்துஜா
மருத்துவ பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

யுத்தக் கொடுமைகள் நித்தம் சுமந்து....
இடம்பெயர்ந்து... இடம்பெயர்ந்து...
ஏதிலிகளாய் மாணவர்கள் இன்னலுற்றகாலம்
இடம்பெயர்ந்த அகதிகளின் இருப்பிடமாகி...
பள்ளிக்கூடங்கள் பரிதவித்த காலம்
கல்விப் பயிர் வளர்க்க பள்ளி ஆசிரியர்கள்
படாத பாடுகள் பட்ட காலம்
அப்படி நாம் அல்லலுற்ற காலத்தில்
அன்புக்கரம் நீட்டி எமை அரவணைத்து - எம்
கற்றல் இடைவெளியைக் காத்திரமாய் நிரப்பி
அறிவுப் பசி தீர்த்த அன்னையே!
எப்படி மறப்போம் உன்னை - நீ
இருபத்தைந்தாம் அகவை காணும் இந்நாளில்
கல்விக்கடலில் பயணம் செய்யும்
மாணவப் படகுகள் கரையேற உதவிடும்
கலங்கரை விளக்காய் எந்நாளும்
வழிகாட்ட வாழ்த்துகின்றேன்
பத்துப் பாடங்களிலும் A தரச் சித்தி பெற்றிட வேண்டும் என்ற
என் பள்ளிக் கனவுகளுக்கு உரமூட்டி நனவாக்கிய
ஆசிரியர்களையும் நிர்வாகி அவர்களையும்
நீடுழிகாலம் நிறைவாக வாழ்கவென வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நவீன மயப்படுத்தலின் அவசியமும் அவசரமும்



ம. கேசவன்
கட்டிட இயல்பீடம்
மொறட்டுவ பல்கலைக்கழகம்

நாளுக்கு நாள் ஏன் நாளிகைக்கு நாளிகை மாறிக் கொண்டிருக்கும் சிந்தனை வீச்சுக்களும் நவீன மயப்படுத்தப்பட்ட உலக உருவாக்கலுக்குமாக அறிவியல் யுகத்தில் வாழத் தலைப்பட்டிருக்கும் நாம் இன்று புதுமை நோக்கிய தேடலிற்குள் நுழைந்திருக்கின்றோம்.

விரைந்து மாறிக் கொண்டிருக்கும் சிந்தனைச் சிதறல்களின் விளைவுகள் நவீனமான புதிய தலைமுறை உருவாக்கத் திற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. இதற்கு கல்வி மாத்திரம் அப்பாற்பட்டதல்ல. அதாவது "நவீன மயப்படுத்தல்" என்கின்ற செயலொழுங்கு கல்வித் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

இங்கு "நவீன மயப்படுத்தல்" என்பது தொடர்பில் நோக்குங்கால் வினைத்திறன் வாய்ந்த சீரிய சமூகத்தை கட்டியெழுப்பும் பொருட்டு மாற்றங்களுக்குத் தம்மை ஈடு கொடுத்தவாறு காலங் காலமாகப் பின்பற்றப் பட்டு வந்த பழையனவெல்லாம் கழிந்து அதி நவீனத்துவ செயலூக்க சிந்தனைகளுக் கேற்ப புதியன புகுந்து புதியனவற்றை நடப்புக்குக் கொண்டு வருதல் நவீன மயப்படுத்தல் என்று வரையறை செய்யமுடியும்.

அவ்வாறே கல்வி நவீன மயப்படுத்தல் என்பது கல்வி முறைமையில் புதிய பல மாற்றங் களை புத்தாக்க சிந்தனை விருத்தியைக் கொண்டுவந்து அம்மாற்றங்கள் மாணவர் களுக்கு செவ்வனே புகுத்தப்பட்டு அதனூடாக வினைத்திறன் மிக்க இளைய தலைமுறையை உருவாக்கல் மற்றும் உலகிற்கு அறிமுகம் செய்தல் போன்ற நோக்கங்களை மையப்படுத்தி கல்வியில் மற்றும் கல்வி முறையில் புதிய விட யங்களை உள்வாங்கலைக் குறிப்பிடலாம். இவ்வாறு நவீன மயப்படுத்தலால் எதிர்பார்க்கப் படும் நோக்குகளும், இலக்குகளும் எட்டப்பட முடிவதனால் கல்வி நவீன மயப்படுத்தல் என்ற எண்ணக்கரு (Educational Modification) உலக நாடுகளில் அண்மைய காலங்களில் வேரூன்றி இருப்பதைக் காணமுடிகின்றது.

கல்வி நவீனமயப்படுத்தல் என்ற சிந்தனை எண்ணக்கரு வலுப் பெற்றிருப்பதற் கான தேவைப்பாட்டினை ஆராயுமிடத்து மின்னல் வேகத்தில் மின்னியல் உலகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்து வரும் புதிய மாற்றங்களும் அறிவியல் யுகத்தின் புதிய சிந்தனைகளும் ஏனைய எல்லாத் துறைகளிலும் தன் தாக்கத் தைச் செலுத்தியது போல் கல்வித் துறையிலும் தன் தனித்துவத்தைத் தடம்பதிக்கத் தவறிய தில்லை. எனவேதான் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் மாற்றங்களுக்குள் தன்னையும் இணைத்துக் கொள்வதற்காக கல்வித்துறையும் தன்னுள் மாற்றங்களை ஏற்கத் தயாரானது. இதன் ஒட்டுமொத்த விளைவுதான் கல்வியில் நவீனமயப்படுத்தலின் அத்தியாவசியம் உணரப் பட்டு அதற்கான நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் திட்டங்கள் பல தீட்டப்பட்டபடி உள்ளன.

கல்வி நவீனமயப்படுத்தலின் சிந்தனை யின் முதலாவது நோக்கு எழுந்ததன் காரணம் பூகோளமயமாக்கல் (globalization) என்ற காரணிதான். உலகமே சுருங்கி ஒரு கிராமம் போல் உள்ளங்கையில் வரக் காரணமாய் இருந்த இணையத்தின் ஊடுருவல் மற்றும் அதன் பயன்பாடு தான் இன்று கல்வி உலகும் சுருங்கி வீட்டுக் கணனிக்குள் வரக் காரணமாயிற்று எனலாம். இப்பூகோள மயமாக்கலின் விளைவால் இன்று கல்வி நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயக் கடப்பாட்டிற்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. ஏனெனில் மாற்றத்திற்கு ஈடுகொடுக்காத எதுவும் காலநீரோட்டத்தின் பிடியில் சிக்கிச் சிதைந்து சின்னாபின்னப்பட்டுப் போகும் என்கின்ற உண்மையை கல்வித் துறையும் உணர்ந்த தனால் தான் தன் நிலைபேறை உறுதிப்படுத்து வதற்காக நவீன மயமாதலை தன்னுள் வாங்கும் நிலையில் கல்வி உள்ளது.

உலகின் தற்காலப் போக்குக்கு தக்க வகையில் தன்னை மாற்றிக் கொள்ளுவது மட்டுமல்லாமல் பயனுறுதி (efffectiveness) மிக்க சமுதாயமாகத் தளம் கல்வியிலேயே தங்கியுள்ளதால் நவீனமயப்படுத்தல் கல்வியைப் பொறுத்தமட்டில் இன்று தேவைப்பாடு உடைய ஒன்றுதான் என்பது யாவராலும் மறுக்கப்படு வதற்கில்லை. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற மேற்கத்தேய நாடுகள் பலவற்றில் கல்வி நவனமயப்படுத்தல் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டாலும் இலங்கை, இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளாகச் சொல்லப்படும் ஆசிய வலய நாடுகளில் இது பாரியதொரு சிக்கல் நிலைமையையே காட்டு கின்றது. ஏனெனில் நமது நாட்டைப் பொறுத்த மட்டில் இலவசக் கல்வி முறை அரசினால் நடைமுறைப்படுத்தப்படுவதனால் மாணவர்கள் வளங்களை வீண் விரயம் செய்யும் போக் கினையும் அவதானிக்க முடிகின்றது. ஆகை யால் இங்கு கல்வி, வினைத்திறன் மிக்கதான மனித வளத்தின் Human Resource உருவாக்கத்திற்குக் காரணமாகாது கல்வி விரயத்திற்கே அதிகளவில் காரணமாய் அமைந்து விடுவது வேதனைக்குரியது.

கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி என்ற வரப்பிரசாதங்கள் எல்லாம் கொடுத்து சிறந்த சமூகத்தை அதாவது உலக சந்தையில் விலைபோகக் கூடிய மனித வளத்தை உரு வாக்குவதில் ஒரு நாடு தோற்றுப் போகிறது என்றால் அது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய விடயம் தான். இதனால்த் தான் சம காலத்து அரசாங்கம் கூட கல்வி தொடர்பான மாற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கள், கொள்கைகளை முன்மொழிந்த வண்ணம் உள்ளனர். இலங்கை போன்ற நாடுகளில் ஒட்டுமொத்தமாக பொருளாதார ரீதியில் பாரியளவு செலவீனத்தை கல்விக்காக அரசு ஏற்றுக் கொண்ட போதிலும் வினைத்திறன் மிக்க மனித வளத்தை உருவாக்க முடியாததால் கல்வி நவீனமயப்படுத்தப்படுவதின் அவசியம் உணரப்பட்டு தற்போது நாடளாவிய ரீதியில் அதனை நடைமுறைப்படுத்தும் போக்கு துரிதகதியில் செயற்படுவதைக் காண முடிகின் றது. இங்கும் நம்மிடையே அறிவுடைய மூளைசாலிகள் இருக்கின்றார்கள். ஆயினும் அவர்கள் வெறுமனே "சான்றிதழிடப்பட்ட அறிவை எல்லையாகக் கொண்டவர்கள்". அறிவியல், தொழில்நுட்பம் போன்ற பல்வகைத் துறைகளிலும் சர்வதேசத் தளத்தில் தம்மை இனம்காட்டிச் செயற்படுபவர்கள் மிகவும் அரி தாகவே காணப்படுவது வேதனைக்குரிய விடயம் தான்.

இப்படியான நடைமுறைசார் குறைகளை அரசும், கல்வியாளர்களும், கல்வியியல் சார் திட்டமிடலாளர்களும் உணர்ந்து கொண்ட தனால் எமது கல்வித் திட்டத்தில் எங்கேயோ பிழைகள், குறைகள் இருப்பதனை நன்குணர்ந்து கல்வியை நவீனமயப்படுத்தல் எனும் பிரவாகத் துள் உள்வாங்கி உலகசந்தையில் விலைபோகக் கூடிய தரமான மனித வளத்தை உருவாக்கு வதில் உலக நாடுகளின் ஆதரவோடு அங்கீகாரம் மிக்க செயற்றிட்டங்கள் பலவற்றை வகுத்தவாறு உள்ளனர். இதனது ஓர் அம்சம் தான் தற்காலத்தில் நம்நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற சட்டம். அதாவது ஆங்கிலக் கல்வியையும், தகவல் தொடர்பாடல் தொழி நுட்பக் கல்வியையும் கட்டாயப் பாடத் தெரிவுகள் ஆக்கியமை.

இதை விடுத்து 2013 ஆம் ஆண்டில் முதன்முதலாக உயர்தர மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் என்ற தொரு பாடப் பிரிவினை அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்தப்படுகின்றமையானது இலங்கையிலும் கல்விசார் நவீனமயப் படுத்தல்கள் இடம்பெற்று வருகின்றமையை உறுதி செய்கின்றதல்லவா?

உயிரியல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம் போன்ற வாழ்க்கைக்கும் தற்கால அறிவியல் யுகத்திற்கும் பொருத்தப்பாடுடைய புதிய கல்விமுறை அறிமுகம் குறித்த தொழில் நுட்ப பாடப் பிரிவில் அமைவதால் சுயதொழில் மேற்கொள்ளக் கூடியதும், திறனுறுதி மிக்கது மான மாணவ சமூகம் கண்முன்னே இப்போது உருவாகிக் கொண்டிருப்பதால் நாட்டில் வேலை யற்றிருப்போர் எண்ணிக்கை குறைக்கப்படு வதிலும், சுயவேலை ஒன்றைத் தாமே உருவாக்கிக் கொள்வதுடன் பொருளாதார ரீதியில் செயற்றிறன் மிக்கவர்களாக நாட்டிற்கு வருமானத்தை ஈட்டித்தரக் கூடியதுமான புதிய தொரு தலைமுறையைத் தோற்றுவிப்பதில் இந்த கல்வி நவீனமயப்படுத்தல் சிந்தனை வெற்றி பெற்றுள்ளது எனலாம். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல" என்ற கூற்றுக்கு இணங்க சமகாலத்திற்குப் பொருத்த மானவற்றை பொருத்தப்பாடு உடைய வகையில் உள்வாங்குவதால் புதியவற்றை இணைத்துக் கொண்டு பழையவற்றின் குறைகளைப் புறந் தள்ளி விட்டு புதுமை உலகில் பிரவேசிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது சில நடைமுறைசார் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியது தவிர்க்கப்பட முடியாதவை தான்.

நவீனமயப்படுத்தல் என்ற பெயரில் கல்வியில் சில மேலைத்தேய பாணிகளை உட்புகுத்தும்போது அவை காலத்திற்கும் சூழலுக்கும் பொருத்தமுடையனவாய் அமைய வேண்டும். சில காலத்திற்குப் பொருந்துவன வாயினும் சூழலுக்கு ஏற்புடையதற்றதாகிவிடும். இவ்விடத்தில் நான் கூறவிளைவது யாதெனில் மேலைத்தேய கல்வி முறைகளான 3E, 5E, 6E போன்றவை சில ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில் பொருத்தப்பாடற்றவையாக உள்ளமை கவனிக்கப்பட வேண்டியதொன்றா கும். ஏனெனில் இத்தகைய கல்விமுறைகள் பெரும்பாலும் குழுச் செயற்பாடுகள் சார்ந்தவை யாகவே காணப்படுகின்றன. மேலைத்தேய நாடொன்றின் ஆசிரியர் ஒருவரை எடுத்துக் கொண்டால் அவருக்கு ஆகக்கூடியது இருபது மாணவர்கள் மட்டில் தான் இருப்பார்கள்.

ஆனால் அதேநேரம் கீழைத்தேசத்தில் ஆசிரியராக இருக்கக்கூடிய ஒருவருக்கு ஆகக் குறைந்தது நாற்பது மாணவர்கள் இருப்பார்கள். எனவே தான் கூடிய மாணவ எண்ணிக்கை உள்ள வகுப்பு ஒன்றில் இது போன்ற குழுச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும்போது ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாகக் கவனித்து அவர்களின் திறன்களை மேம்படுத்து வதற்கு ஆசிரியருக்கு கடினமானதாக இருக்கும். இதையே மேலைத் தேசத்தில் எடுத்து நோக் கினால் தனி மாணவ ஆளுமை விருத்தியில் ஆசிரியரின் வகிபங்கு அதிகமாக இருப்பதனால் அங்கு தனிமனித ஆளுமைத் திறன் மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்புவது என்பது இலகு வாக இருக்கின்றது. எனவேதான் எமது நாட்டிற்கும் அதேநேரம் நம் சூழலுக்கும் இசைவான வகையில் தரமுயர்த்தக்கூடிய செயற்றிட்டங்களாயினும் அவை எமக்கு ஏற்புடையதா? என்பதை ஆராய்ந்ததன் பிற்பாடே அமுலாக்கத்தில் ஈடுபட வேண்டியது அவசிய மாகும்.

உலகின் சமூக, பொருளாதார, அரசியல், தொழில்நுட்ப, விஞ்ஞானத் துறைகளில் நவீன மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்ற ஒரு நிலையிலேயே இன்றைய தலைமுறை யினராகிய நாம் வாழ்ந்து கொண்டிருக் கின்றோம்.

**கல்வி நவீனமயப்படுத்தலில் உலகமய மாக்கலின் பங்கு**

அறிவுமயச் சமூகத்தின் மேம்பட்ட மாறுபடும் சூழலில் இளம்சமுதாயத்தினர் மிக வேகமாகச் சவால்களுக்கு முகம் கொடுப்பதற் கான தன்னம்பிக்கை உடையவர்களாக இருப்பதற்கு வெறுமனே அறிவுரையை மாத்திரம் வழங்குகின்ற கல்விச் செயற்பாடுகள் போதுமானதல்ல. ஆகவே தான் இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு அறிவினையும், தகவல்களையும் கல்வியை ஊடகமாகப் பயன்படுத்தி வழங்குவதற்குப் பதிலாக விமர்சன ரீதியாகவும், சுயமாகவும், ஆக்கத்திறனாகவும் எவ்வாறு கற்கவேண்டும் என்பதற்குத் தேவை யான கற்றல் தேர்ச்சிகளை மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் விருத்தி செய்வதற்கு முன்னுரிமை யளிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு உலகமயமாக்கல் செயன் முறையை எடுத்து நோக்கும்போது உலக ளாவிய முன்னேற்றத்திற்குப் பொருத்த முடையதான போக்கினை அதிகரிக்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் ஆய்வு என்பவற் றிற்காக உலகின் பல்வேறு பாகங்களில் இருந்து சிறந்த அறிவு சார்ந்த வளங்கள், உதவிகள் மற்றும் முயற்சிகளை ஒன்று திரட்டுதல் கல்விசார் உலகமயமாக்கலின் பிரதான பண்பாக கருதப்படுகின்றது. இத்தகைய கல்வியில் காணப் படும் நவீனத்துவப் போக்குகளாக பின்வருவன வற்றைக் குறிப்பிட முடியும்.

நாடுகளுக்கு இடையிலும், சமூகங்களுக் கிடையிலும், தனிநபர்களுக்கு இடையிலும்

01. வலையமைப்பு கற்றல் ( Web Based Learning)
02. வழிவரு கற்றல் (E Learning)
03. சர்வதேச விஜயங்கள்
04. கற்றலிலும் ஆய்விலும் வலையமைப்புக் களைப் பயன்படுத்தல்
05. குழுவாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் கற்றலிலும், கற்பித்தலிலும் சர்வதேச பங்குதாரர்களை சர்வதேச ரீதியாகவும் பரிமாற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

மேற் போன்றவற்றை இன்றைய கல்வி யல் உலகமயமாக்கலுக்கான உதாரணங் களாகக் குறிப்பிடலாம். புதிய கல்வி முறையில் கற்றல் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல், சமூக, பொருளாதார, தொழில்நுட்ப உலகமயமாக்கலின் புதிய கலைத்திட்ட உள்ளடக்க விருத்தியானது முக்கியத்துவம் பெறுகின்ற ஒன்றாகவும் அவசியப்பாடு உடைய தாகவும் காணப்படுகின்றது.

கல்வி நவீனமயப்படுத்தலில் உலக மயமாக்கலின் பங்கினை ஆராயுமிடத்து இன்றை சூழலில் மாணவர்கள் இருந்த இடத்திலேயே ஆசிரியரின் துணையின்றி கணனி மூலமாகக் கல்வியைக் கற்றுக் கொள்வதுடன் இணையத் தொடர்பின் (online) வாயிலாகப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதுடன் பெறுபேறுகளையும் உடனுக்குடனேயே அறிந்தும் கொள்கின்றனர்.

கூடவே பாடசாலைக் கல்வி முறைக்கு உட்பட்ட மாணவனாயினும் சரி பல்கலைக்கழக கல்வியைத் தொடரும் மாணவர்களாயினும் சரி வீட்டில் இருந்தவாறே தமக்கான கணிப்பீடுகள், செயற்றிட்டங்களைச் செய்து மின்னஞ்சல் (Email) வாயிலாக குறித்த ஆசிரியருக்கு சமர்ப்பித்துக் கொள்ள முடிகின்றது. மேலும் இன்று சகல பாடத்திட்டங்களும் கணனிமயப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டிருப்பதனால் மாணவர் களில் கற்கும் ஆர்வமானது தூண்டப்படுவதுடன் அதனோடிணைந்து மாணவர்கள் ஏனைய மொழிகளையும் கற்கும் வாய்ப்பும், தொழிநுட்ப அறிவையும் ஏககாலத்திலேயே பெற்றுக் கொள்ளவும் முடிவதானது பேரறிகை மிக்க சமூக உருவாக்கலுக்கு வழிசமைத்துக் கொடுத்திருக் கின்றது.

நவீன சமூகம் எதிர்கொள்ளும் புதிய சவால்களை எதிர்கொள்ளக் கூடிய உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலுள்ள பிரசைகளாக மாணவர்களை உருவாக்குவது கல்விக்குரிய முக்கிய கடமை எனக் கல்வியியலாளர்களால் சுட்டிக் காட்டப்படு வதால் அறிவுப் பொருளாதாரத்தை பொறுத்த மட்டில் கல்வி ஒரு முக்கிய உற்பத்திக் காரணியாக (factor of production) கருதப்படுகின்றது. ஆகையால் மாணவர்களின் அறிவாற்றலை பேரறிகை (Mega cognition) என்ற ஓர் உயரிய நிலையில் வளர்த்தெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

பேரறிகை என்பது ஒருவர் தனது செயற்றிறன் சார்ந்த அறிவைக் குறிப்பிட்டதொரு சூழ்நிலைக்குப் பொருந்தும் வகையில் சரியான முறையில் முடிவெடுத்து செயலூக்கத்துடன் விரைவாகச் செயலாற்றும் ஓர் உயர் ஆற்றல் என்று குறிப்பிடலாம்.

**கல்வி நவீனமயப்படுத்தலில் அறிவுசார் பொருளாதாரத்தின் தாக்கம்**

இன்றைய நவீன கல்வி உலகில் அதிகம் எதிர்பார்க்கப்பவது மென்திறன்களைத் தான் (soft skills) அறிவு சார்ந்த கல்விக்கும் மேலாக திறன் மற்றும் மனப்பாங்கு சார்ந்த கல்வியைத் தான் இந்த சமுதாயம் எதிர்பார்க் கிறது. இதுவும் கல்வியில் நவீனத்துவம் அவசியம் என்பதற்கு உந்துதலாக அமைந்தது எனலாம்.

அறிவுப் பொருளாதாரக் கட்டமைப்பினை நோக்குமிடத்து அங்கு மாணவர்கள் பல்வேறு ஆற்றல்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த விதத்தில் எந்தவொரு நாட்டின் பொருளாதாரமும் உயர் வளர்ச்சி இலக்கை அடையும் பொருட்டு பொருளாதாரத்தை மறு சீரமைப்புக்கு உட்படுத்தும் பட்சத்தில் அவை அறிவுசார் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது அவசிய மாகிறது.

நாட்டு மக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பன அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல், உருவாக்குதல், பரப்புதல் மற்றும் அறிவைத் திறம்படப் பயன்படுத்துவதன் மூலம் நீண்ட காலத்தில் நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துதல் என அறிவுசார் பொருளாதாரத்தை விவரிக்க முடியும். இது வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கை வகிப்பதுடன் இதில் தொழிநுட்பம் (Technology) மற்றும் மனித மூலதனம் (Human Capital) ஆகியன அதிகளவில் உபயோகிக்கப்படுகின்றது.

உலக வங்கியின் அறிவுசார் பொருளா தாரக் கட்டமைப்பானது பொருளாதாரம் மற்றும் நிறுவன ஆட்சி, புத்தாக்கம், தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு மற்றும் படித்த மக்கள் தொகை ஆகிய நான்கு தூண்கள் மீதும் கவனம் செலுத்தப்படுவதுடன் இவையே வெற்றிகரமான அறிவுசார் பொருளாதாரத்திற்கு மிகவும் அவசியமான காரணிகளென அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

தொழிநுட்பம் செறிவாக அமையும் அறிவுசார் பொருளாதாரத்தில் ஈடுபடுவதற் காகவும் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர் களைக் கவர்வதற்காகவும் உயர் திறன் படைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த மனிதவளம் அவசியமாவதுடன் குறிப்பாக தொழிநுட்பத்தில் நிபுணத்துவம் வாய்ந்த மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் தராதரங்கள் உடையவர்களின் தேவையுமே அதிகமாகக் காணப்படுகின்றது.

அறிவியல், பொறியியல் மற்றும் தொழி நுட்ப விடயங்களில் பிரயோக ரீதியிலான கல்வியை வழங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்கள் என்பவற்றை அதிகரிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் இவ்விடயப் பரப்பில் கல்வி கற்கும் மாணவர் களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் திறன்களில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய துடன் தொழிற்சந்தையின் தேவைக்கேற்றவாறு தரம் வாய்ந்த கல்விக் கொள்கைகளை வகுப்பதனூடே அறிவுசார் பொருளாதாரத்திற்கு ஏற்ற தொழிற்படையை உருவாக்க முடியும் என்பதனூடாக மீண்டுமொருமுறை கல்வி மறுசீரமைப்புககான தேவைப்பாடு இங்கு கோடிடப்பட்டுக் காட்டப்படுகின்றது.

இதற்கமைவாக நாட்டில் கல்வி சீர்திருத் தங்களை ஏற்படுத்துவதற்காக அதிக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப் பானது அறிவுசார் பொருளாதாரத்திற்கு அடிப்படையான வளமாக அமைவதுடன் உலகம் முழுவதும் அறிவின் பரிமாற்றத்தை அதிகரிக் கிறது. எனவே தான் தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பை தரமுயர்த்துதல் மற்றும் விரி வாக்குதலில் அரசாங்கம் மற்றும் தனியார் துறையின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

நவீனமயப்படுத்தப்படும் கல்வியால் என்னென்ன நலன்களைப் பெறமுடிகின்றது என்று ஆராயும்போதே அதன் மற்றைய பக்கத்தையும் அறிந்திருத்தல் அவசியமாகிறது எவ்வாறெனின் கல்வி நவீனமயப்படுத்தலில் ஆசிரியர் மாணவருக்கான உறவில் விரிசல் தோன்றுவதுடன் மட்டுமல்லாது ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் ஒரு இடைவெளி யொன்றினையும் அது ஏற்படுத்தி விடுவது தொடர்பான வாதங்களும் முன்வைக்கப்படு கின்றன. காரணம் குடும்பம், சமூகம், சூழல் என்பன மாணவனின் கருத்து ஒழுங்கமைப்பில் ஒரு காரணியாக இருப்பினும் அவை ஒரு பகுதியாகவே நோக்கப்படுகின்றது.

பெரும்பாலான வாழ்க்கைக்குத் தேவை யான வாழ்க்கைத் தேர்ச்சியுடைய கல்வியை நூலோடு இணைந்த வகையில் ஆசிரியர் மூலமே ஒரு மாணவனால் பெற்றுக் கொள்ள முடிகின்றது. ஆயினும் தற்போதைய சூழலில் கணனியின் அறிவுப் பசிக்குத் தீனிபோடக்கூடிய பல விடயங்கள் இருக்கின்றன. ஆசிரியரின் துணையின்றியே விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட புதிய கல்வி சார்ந்த, அறிவை வழங்கக்கூடிய ஒலி, ஒளி சார்ந்த பல்வேறு செய்முறைக் கோப்புக்கள், காணொளிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவை போன்ற நடவடிக்கைகள் கல்வி நவீனமயப்படுத்தலில் குருவிற்கான வகிபாகத் தினைச் சற்று குறைத்து மதிப்பிட வழிகோலி யுள்ளன. இதன் மூலம் தனித்து அறிவை மட்டும் பெற்று வாழ்க்கையில் தோற்றுவிடக் கூடிய சமுதாய உருவாக்கத்திற்கு இது வித்திடலாமென்ற அச்சமும் நிலவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் மூலமாக நல்ல அறிவை மட்டும் பெற்றுக் கொள்ள முடியுமே தவிர நல்லறிவுரை களை, மனப்பாங்கு சார் விழுமியப் பண்புகளை பெற்றுக் கொள்ள முடியாது. கூடவே இணையப் பாவனையையும் இக்கற்றலில் மாணவர்கள் கைக் கொள்வதால் அவர்கள் நல்ல விடயங் களுக்காக மட்டுமே அதனைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதிலும் உறுதிபட உடன் பட்டுக் கொள்ளமுடியாது. அது ஒவ்வொருவரும் தமக்குக் கிடைக்கின்றதான வளங்களை அதிஉயர்வான நிலையில் சிறந்த நோக்கத் திற்காக பயன்படுத்துவது (Highest and Best Use) என்பதைப் பொறுத்தே அமைந்துள்ளது.

எது எவ்வாறாயினும் கல்வி நவீன மயப்படுத்தலைப் பொறுத்த வரையில் பொருளா தார அபிவிருத்திக்கான குழு (Committee of Economic Development - 2006) மாணவர்கள் தனித்து புத்தக அறிவனைக் கொண்டவர்களாக அலலாது சர்வதேசம் எதிர்பார்த்து நிற்கும் தொழில்சார் திறன்கள் உடையவர்களாக உருவாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்தமைக்கு ஏற்பவும் இன்றைய உலகின் எதிர்பார்ப்புகளுக்கமை வாகவும் நிச்சயமாகக் கல்வி நவீனமயப்படுத்தும் பட்சத்தில் தான் இவ்வாறு சாத்தியமான ஒரு நிலையை கட்டியெழுப்ப முடியுமாக இருந்தால் அரசிடமிருந்து கல்வியையும் இலவசமாகப் பெற்று, எவ்வித சுயமுயற்சிகளுமின்றி அரசிடமிருந்தே வேலையையும் எதிர்பார்க்கும் அதாவது உடை நலுங்கா உத்தியோகத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இன்றைய காலத்தைப் பொறுத்த வரையில் நவீனமயப் படுத்தப்பட்ட கல்வி முறைமை அவசியமானது மட்டுமன்றி அவசரமானதுமாகவே நோக்கப்படு கின்றது.

திருத்தக் கூடியவற்றைத் திருத்தும் தைரியமும்
திருத்த முடியாதவற்றை ஏற்றுக் கொள்ளும்
மனப் பக்குவத்தையும் – இவ்விரண்டிற்கும் உள்ள
வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளும் அறிவையும் எனக்கு அருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The importance of the English language in today's world



MR. P. MATHANRAJ
English Teacher
Kn/ Vaddakachchi M.V

Language is our primary source of communication it is the method through which we share our ideas and thoughts and it separates us from animals and makes us humans.

There are thousands of languages in this world .Countries have their own national languages in addition to a variety of local languages spoken and understood by their people in different regions. Some languages are spoken by millions of people, others by only a few thousand, one such widely spoken language is English.

There are several factors that make the English language essential to communication in our current time. First of all, it is the most common foreign language, in order to get in touch on an international level speaking, it will help us communicate with people from countries all over the world.

The other reason for why we should learn English is that it is the medium of instruction at most of the universities in Sri Lanka as well as around the world. It helps students find a high quality jobs in future. High quality jobs need good understanding ability and speaking in English. The students who know English is able to be more efficient in their jobs because they can use the information from foreign sources and web sites.

English is the language of science, aviation, computers, diplomacy and tourism. knowing English increases our chances of getting a good job in a multinational company within our home country or finding work abroad. English is also the language of the media industry. If we speak English we won't need to rely on translations and subtitles any more to enjoy our books, songs, films and Tv shows. It is also the language of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

internet. Many websites are written in English so, we will be able to understand them and to take part in forums and discussions. Did you know that 55% of the world's web pages are written in English?

English is the dominant business language and it has become almost a necessity for people workforce. Research from all over the world shows that cross border business communication is most often conducted In English

When travel to different countries, English is often the most common "bridge" language. English is able to connect people from many different countries and cultures more so than other languages

In some countries, speaking English fluently is highly regarded and sought after. This means that there are not many people that do speak English well and when they do; they stand out. When we learn to speak English fluently, we may find that other people think highly of us and our English speaking skill.

Therefore it is a must that we all must understand the importance of the English Language and start learning it since English has been the common world – wide language for many years, and it will be even in the future. If we want to follow trends, new gadgets and technology, modernization of the developing world, we have to know English whatever age we are in.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்புற்று நோய்க்கான புதிய அணுகுமுறை



சின்னத்துரை எழில்வேள்
பல்மருத்துவர்

உடலிலுள்ள சில கலங்கள் கட்டுப்பாடற்ற முறையில் தொடர்ச்சியாக கலப்பிரிவடைந்து அயலிலுள்ள இழையங்களுக்குப் பரவி உடற் செயற்பாட்டினை பாதிப்படையச் செய்தல் புற்றுநோய் எனக்கூறலாம். புற்றுநோயானது உடலில் ஏற்படுகின்ற இடம், நோயின் தன்மை, நோயின் வீரியத்தினைப் பொறுத்து வேறுபட்ட பெயரினால் குறிப்பிடப்படுகின்றது. இந்த வகையில் வாய்ப்புற்றுநோய் வாயின் பல பகுதிகளில் ஏற்படுகின்றது. நாக்கின் மேற்புறம் மற்றும் கீழ்ப்புறம், உதடு, கன்னங்களின் உட்பகுதி, முரசு, அண்ணம், வாயின் அடித்தளம், உள் நாக்கு மற்றும் உமிழ்நீர்ச்சுரப்பிகள் ஆகியவை இவற்றில் அடங்குகின்றன. வாய்ப்புற்றுநோய் ஆனது தலை மற்றும் கழுத்துப் பகுதி புற்று நோய்களுக்குள் அடங்குவதால் அதற்கான சிகிச்சை முறை தலை மற்றும் கழுத்துப் பகுதி புற்றுநோய்களுக்கு ஒத்ததாகக் காணப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் உடலில் ஏற்படுகின்ற புற்றுநோய்களில் வாய்ப்புற்றுநோய் ஆனது ஆறாவது இடத்தில் காணப்படுகின்றது. அத்துடன் வாய்ப்புற்றுநோயினால் பாதிக்கப்படுவோரில் 2/3 பங்கினர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே உள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரை, தேசிய புற்றுநோய் மதிப்பீடு 2007இற்கு அமைய இலங்கையில் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரில் பெரும்பாலானோர் வாய்ப்புற்று நோயினால் பாதிக்கப்படுகின்றனர். ஆண்களில் ஏற்படுகின்ற புற்றுநோய்களில் முதலாவதாகவும் பெண்களில் ஏற்படுகின்ற புற்றுநோய்களில் ஏழாவதாகவும் வாய்ப்புற்றுநோய் காணப்படு கின்றது. இலங்கையில் சராசரியாக தினமும் 2-3 பேர் வாய்ப்புற்றுநோய் காரணமாக உயிரிழக்கின்றனர்.

### வாய்ப்புற்றுநோய்க்கான காரணிகள்

உலகின் தெற்காசியா, தென்கிழக்காசியா மற்றும் வேறு சில பாகங்களிலும் வெற்றிலை மெல்லும் பழக்கம் காணப்படுகின்றது. வெற்றிலையுடன் பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு போன்றன சேர்த்து மெல்லப்படுகின்றது. வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கான பிரதான காரணி வெற்றிலை மெல்லும் பழக்கமாகும். ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு தடவை வெற்றிலை பாவிக்கின்றார். எவ்வளவு வெற்றிலை பாவிக்கின்றார். வெற்றிலையை வாயில் வைத்திருக்கும் நேரம் மற்றும் உறங்கும் போது வாயில் வைத்திருத்தல் போன்றன புற்றுநோய் உருவாதலை தீர்மானிக் கின்றன.

அத்துடன் புகைபிடித்தல், அதீத மதுபானப் பாவனை போன்றனவும் வாய்ப்புற்றுநோயை உருவாக்குகின்றது. புகைபிடிக்காத ஒருவரை விட புகைப்பிடிப்பவருக்கு வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியம் ஆறு மடங்கு ஆகும். அதுபோல் வெற்றிலை மெல்லுதல், புகைத்த லுடன் மதுபானம் பாவிப்பவர்கட்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பினை (synergistic effect) 100% ஆக்குகின்றது.

நூற்றுக்கணக்கான வகைகளைக் கொண்ட HPV எனும் வைரஸ் நுண்ணங்கி தொற்றுக்கு உள்ளானவர்களில் புண்களை உருவாக்குகின்றன. இவற்றில் சில வகைகள் மட்டும் வாய்ப்புற்றுநோயை உண்டாக்குவது கண்டறியப்பட்டுள்ளது. குளிர்வலைய நாடுகளி லுள்ளவர்கட்கு அதீத சூரியஒளித் தாக்கத்திற்கு உள்ளாகும் போது உதட்டில் புற்றுநோய் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. இவ்விரு காரணிகளும் மிகக் குறைவான அளவிலேயே வாய்ப்புற்றுநோய் உருவாகு வதற்கு காரணமாகின்றன.

### வாய்ப்புற்றுநோய்க்கான அறிகுறிகள்

வீக்கங்கள், கட்டிகள், உதடு முரசு மற்றும் வாயின வேறு பகுதிகளில் உண்டாகும் சொரசொரப்பான மேற்பரப்புக்கள், முகம், கழுத்து மற்றும் வாயில் ஏற்படும் இரண்டு வாரங் களுக்குள் ஆறாத புண்கள், அவ்வாறான புண்கள் மெதுவாக தாக்குப்படுவதன் மூலம் இரத்தக்கசிவினை ஏற்படுத்தலாம். இவை வாய்ப்புற்று நோய்க்கான பொதுவான அறிகுறி களாகும். வாயில் ஏற்படும் வெள்ளை, சிவப்பு, வெள்ளை கலந்த சிவப்பு நிறத்திட்டுக்கள் வாய்ப்புற்று நோய்க்கான ஆரம்பகால அறிகுறி களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

பின்வருவன வாய்ப்புற்றுநோயின் பொதுவான முறைப்பாடுகளாக கருதப்படு கின்றன முகம், வாய் மற்றும் கழுத்தில் ஏற்படக்கூடிய வலிகள், விறைப்புக்கள், உணர்வுகள் இல்லாமை, திடீரென பற்கள் ஆடுதல், பற்கள் அல்லது செயற்கைப் பற்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதில் ஏற்படும் மாற்றங்கள் உணவை மெல்லுதல், விழுங்கு தல் பேசுதல், நாக்கு மற்றும் தாடையை அசைத் தல் ஆகியவற்றில் ஏற்படுகின்ற சிரமங்கள், வித்தியாசமான முறையில் குரல் மாறுதல், மற்றும் நீண்ட கால தொண்டை அரிப்புக்கள்.

### நோய் கண்டறிதல்

பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் உடற் பகுதியில் இருந்து ஒரு பகுதி இழையத்துண்டு வெட்டி எடுக்கப்பட்டு (Biopsy) இழையவியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் நுணுக்குக் காட்டியின் உதவியோடு உருப்பெருக்க அளவில் பார்க்கப்படும் கலங்களில் காணப்படும் வித்தி யாசங்களில் இருந்து பாதிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் பகுதியில் புற்றுநோய் இருப்பது உறுதிப்படுத்தப்படும் அத்துடன் X- கதிர்ப்படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ஸ்கான் (CT & MRI) செயன்முறைகள் மூலம் பாதிக்கப்பட்ட இடத்தையும் பாதிப்பின் அளவையும் துல்லியமாக கணிப்பிட உதவு கின்றது.

**சிகிச்சை முறைகள்**

வாய்ப்புற்றுநோயானது ஆரம்பத்தில் சிறு புள்ளியாக உருவெடுத்து காலம் செல்லச் செல்ல அயல் இழையங்களுக்கு, நிணநீர்க் கணுக் களுக்கு பரவலடைந்து பாதிப்பினை அதிகமாக்கு கிறது. புற்றுநோயின் அளவு, அயல் இழையங் களுக்கு பரவியுள்ளமை. மற்றும் நிணநீர்க் கணுக்களுக்கான பரவலின் அடிப்படையில் வாய்ப்புற்றுநோய் கட்டிகள் வகைப்படுத்தப்படும், இத்தரப்படுத்தலுக்கு அமைவாகவும், தீவிரத் தன்மைக்கு ஏற்பவும் சிகிச்சை முறைகள் தீர்மானிக்கப்படும் சத்திரசிகிச்சை (surgical treatment) கதிர் வீச்சு (Radiotheraphy), மருந்துகளை அடிப்படையாகக் கொண்ட (Chemotherapy) சிகிச்சை முறை அல்லது மேற்கூறியவற்றின் ஒரு கூட்டுச் செயற்பாடு வாய்ப்புற்றுநோய்க்கு சிகிச்சையாக வழங்கப்படு கின்றது.

சாதாரணமாக புற்றுநோயினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சத்திரசிகிச்சையினை மேற் கொள்ளும் போது பாதிக்கப்பட்ட பகுதி வெட்டி அகற்றப்படும் இதனால் உண்டாகின்ற பாதிப்புக் களான முகத்தின் அழகு கெடுதல், உடற்தொழிற் பாடுகளான விழுங்குதல் சுவாசித்தல், பேசுதல் போன்றவற்றை சரியாகச் செய்ய முடியாது ஏற்படும் இதனைச் சீர் செய்ய உடலின் அயற் பாகங்களினூடாக (reconstruction) பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான சத்திர சகிச்சை மேற்கொள்ளப்படும்.

வாய்ப்புற்றுநோயானது ஆரம்ப கட்டங் களில் குணப்படுத்துதல் இலகுவானதாகும். நாட்பட்ட புற்றுநோய்க் கட்டிகளை குணப்படுத்து வது மிகவும் கடினமானதாகும். அத்துடன் மீண்டும் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு மிக அதிகம். வெற்றிலை மெல்லுதல் புகைப்பிடித்தல், மதுபானம் பாவித்தல் போன்ற தேவையற்ற பழக்கவழக்கங்களை உடைய வர்கள் குறைந்தது ஆறுமாதங்களுக்கு ஒரு தடவையேனும் பல் மருத்துவரினது சோதனைக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் ஆரம்ப கட்டங் களிலேயே நோயைக் குணப்படுத்திக் கொள்ள லாம். அத்துடன் மேற்குறிப்பிட்ட தேவையற்ற பழக்கவழக்கங்களை கைவிட்டு ஆரோக்கிய மான பழக்கவழக்கங்களை பழகுவதன் மூலம் நல்ல ஆரோக்கியமான சமுதாயமாக வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்து மாணவனின் முதல் நகரத்து பயணம்




**மு. தமிழ்ச்செல்வன்**
ஊடகவியலாளர்


**1995ம்** ஆண்டு கிராமத்திலிருந்து நகரத்தை நோக்கி கல்விக்கான அவனது முதல் பயணம் அது.

தனது ஒன்பதாம் ஆண்டு வரைக்கும் தனியே பாடசாலைக் கல்வியை மட்டும் நம்பி கற்று வந்த ஒரு கிராமத்து மாணவன் தனியார் கல்வி நிலையத்தை நோக்கி நகரத்திற்கு வருகிறான்.

எப்பொழுதும் வெட்கப்படுகின்ற சுபாவமும், எதற்கும் முன்வராத கூச்சம் என கிராமத்திற் குரிய மனநிலைகளுடன் கிளிநொச்சி டிப்போ வீதியில் (2009 இற்கு முன் பயண அனுமதி வழங்குகின்ற அலுவலகம் இருந்து இடத்தில்) இயங்கிய றோயல் கல்வி நிலையத்திற்கான அந்தப்பயணம் அவனது வாழ்க்கையிலும் ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்றே கூறலாம்.

அப்பொழுது அவனுக்கு க.பொ.த. உயர்தரம் படிப்பதே பெரும் இலக்காக இருந்தது கிளிநொச்சியில் ஒரு கிராமத்து மாணவனுக்கு 1995இல் உயர்தரம் படிப்பதே பெரும் சாதனையாக கருதிய காலம். இவனுக்கும் அதுவே இலட்சியமாகவும் இருந்தது. எனவே பல தனியார் கல்வி நிலையங்கள் அப்போது கிளிநொச்சியில் இயங்கிய போது றோயல் கல்வி நிலையத்தை தெரிவு செய்வதற்கு அவனுக்கு இருந்த ஒரே காரணம் க.பொ.த சாதாரண தரத்தில் கணித பாடத்தில் "S" என்ற பேறுபேற்றையாவது பெற்று உயர்தரத்திற்கு சென்று விட வேண்டும் என்பதே.

அந்த நாட்களிலும் றோயல் கல்வி நிலையம் பற்றி கிராமத்து மாணவர்களும் அறியும் அளவுக்கு அதன் சிறப்பு காணப்பட்டது. றோயலின் சிறப்பு என்பது அங்கு கணிதம் பாடம் கற்பித்தவரும் கல்வி நிலையத்தின் இயக்குநருமான ஆசிரியர் குமார் அவர்களின் சிறப்பாகவே கருதப்பட்டது. இது அன்று அவனால் மட்டுமல்ல பலராலும் இவ்வாறே கருதப்பட்டது. எனவே இதன் அர்த்தம் என்பது குமார் சேரை தவிர ஏனைய அங்கு கற்பித்த ஆசிரியர்கள் திறமையற்றவர்கள் என்று அர்த்தமல்ல அக்காலத்தில் அங்கு கற்பித்த அனைத்து ஆசிரியர்களும் சிறந்த ஆளுமைமிக்க ஆசிரியர்கள். தனியார் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களை பொறுத்த வரை இலாபம் நோக்கம் இருந்தாலும் அன்றைய அவனின் அனுபவத்தில் றோயலை பொறுத்தவரை தங்களின் பெயர் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக சிறந்த கல்வியை வழங்க வேண்டும் என்பதனை முதன்மையாக கருதி நல்ல ஆசிரியர் குழாமை கொண்டு சிறந்த கல்வியை வழங்கினார்கள்.

கணித பாடம் என்பது மிக மிக முக்கிய மான பாடம் என்பதாலும் அதில் சித்தியடைந்தால் தான் உயர்தரத்திற்கு செல்ல முடியும் என்பதாலும் மாணவர்கள் கணித பாடத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். கடின மான பாடம் எனக் கருத்தியவர்களுக்கு அந்த பாடத்தை இலகுவாக விளங்கப்படுத்தக் கூடிய அளவுக்கு ஆளுமை உள்ள ஆசிரியர்களை தேடினார்கள் அந்த தேடலுக்கு அப்போது அந்தக் கிராமத்து மாணவனுக்கு மட்டுமல்ல நகரத்து மாணவர்களுக்கும் குமார் சேர் என்ற பெயர் உச்சரிக்கப்படும்.

ஒரு கடினமான பாடத்தை எவ்வாறு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று விளங்கப்படுத்த வேண்டும் என்பதற்கு குமார் சேர் ஒரு நல்ல உதாரணம் பல மாணவர்கள் பாடசாலைக்கு லீவு போட்டாலும் றோயல் ரீயூசனுக்கு லீவு போடுவதனை விரும்ப மாட்டார்கள் அதிலும் கணித பாடம் உள்ள நாட்களில் அதிகமான மாணவர்களை வகுப்பறையில் காண முடியும். கணித பாடத்தில் சித்தியடையாமல் திருப்பி (Repeat) படிக்கின்ற மாணவர்கள் பெரும்பாலும் கணித பாடத்திற்க் றோயல் கல்வி நிலையத்தை தெரிவு செய்வதே அதிகளவாக இருந்தது.

வெறுமனே ஒரு தனியார் கல்வி நிலையம் இலாப நோக்கத்திற்கு கல்வி கற்பிப்பதனை நோக்காக கொண்டு அல்லாமல் தனது கல்வி நிலையத்திற்கு வருகின்ற மாணவர்கள் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக றோயல் கல்வி நிலையத்தில் இறுக்கமான நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டன. இது ஒரு நல்லொழுக்க முள்ள மாணவர் சமூகத்தை உருவாக்குவதில் பாடசாலைகளுடன் சேர்ந்து தனியார் கல்வி நிலையத்தின் பங்களிப்பாகவும் காணப்பட்டது.

நகரத்தை நோக்கிய அவனது கல்விக் கான பயணத்தில் கல்வியை மட்டுமல்ல பொது ஆளுமையையும் கற்றுக்கொண்ட அவன் சில மாதங்களிலேயே தன்னிடம் இருந்த கிராமத்து இயல்புகளை மாற்றிக்கொள்ளும் அளவுக்கு மாற்றப்பட்டிருந்தான் இது அவனின் வெற்றிக்குப் அப்பால் றோயல் கல்வி நிறுவனத்தின் வெற்றியே!

இந்த மாணவன் மட்டுமல்ல பல ஆயிரக் கணக்கான மாணவர்கள் இன்று சமூகத்தில் பத்தோடு பதினொன்றாக அன்றி திருந்திக் கொண்டு இருப்பார்கள் என்றே கூற வேண்டும் இவ்வாறு றோயல் கல்வி நிலையத்தின் சிறப்புகளை கூறிக்கொண்டே போகலாம். தனியார் துறையில் போட்டி மிக்க இவ்வுலகில் றோயல் கல்வி நிலையம் இன்றும் தனித் துவமாக நிலைத்து நின்று இயங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதே அதன் சிறப்பாக அமைக்கிறது. வெள்ளி விழா காணும் அளவுக்கு றோயலின் வெற்றி உயர்ந்திருக்கிறது. வெறுமனே இருபதைந்து ஆண்டுகள் கடந்து ஓடவில்லை பல சாதனைகள் வெற்றிகள் தடைகள் என்பவற்றை கடந்து 25 ஆவது வருடத்தில் நிமிர்ந்து நிற்கிறது என்றால் அது அதற்கே உரிய சிறப்பாகும்.

றோயல் கல்வி நிலையத்தின் இயக்குநர் ஆசிரியர் குமார் அவர்களின் கடின உழைப்பும் ஆளுமையும் றோயலின் வெற்றிக்கு வித்திட்டிருக்கிறது. அன்று ஊற்றுப்புலம் எனும் நான்கு பக்கமும் காடுகளால் சூழப்பட்ட அந்த கிராமத்திலிருந்து எட்டு கிலோ மீற்றர் நகரத்திற்கு கல்விக்காக தனது முதல் பயணத்தை ஆரம்பித்த அந்த மாணவன் தனது இலக்கில் வெற்றி பெறுகின்றான். அது தான் க.பொ.த சாதாரண தரத்தில் கணித பாடத்தில் சித்தி பெறுவது. அன்று அவன் றோயலுக்கு சென்றிருக்காதுவிட்டால் உயர் தரத்திற்கு சென்றிருக்க மாட்டான்.

அன்று அந்த கிராமத்து மாணவன் இன்று ஒரு ஊடகவியலாளனாக இக்கல்வி நிலையத்தின் வெள்ளி விழா மலருக்கு தனது பதிவுகளை எழுவதில் மகிழ்ச்சி அடைக்கிறான். என்றும் தனது வாழ்நாளில் தனது வளர்ச்சியில் பங்காற்றிய மறக்க முடியாத நன்றிக்குரிய மனிதர்கள் மற்றும் நிறுவனாங்கள் வரிசையில் றோயல் கல்வி நிலையமும் அவனின் மனத்தில் இருந்து கொண்டேயிருக்கும்.

நித்தமும் பயந்து கொண்டிருப்பதை விட
ஆட்டத்தை ஒரு முறை தைரியமாக எதிர்பார்ப்பதே நல்லது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றோயல் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் தரம் 06 மாணவர்கள்



றோயல் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் தரம் 08 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமைப்படும் சிறுவர்கள்



செல்வி அனுசியா யோகராசா B.A.
கரைச்சி பிரதேச சபை

கருவிலே உருவாகி
மழலையாய் வெளிவந்து
மன்றங் காணத் துடிக்கும்
மழலைச் செல்வங்கள் தான் சிறுவர்கள்.

மனதிலே ஆசைகள் பல கொண்டு
எதிர்காலக் கனவுகளை நிலைநிறுத்தி
பார்போற்ற ஆளவேண்டும்
பாரினையும் ஆள வேண்டும் என்றும்
வாழத் துடிக்கும் உள்ளங்கள் தான் சிறுவர்கள்.

இன்று!
முறைகெட்டு தறிகெட்டு
வாழ்க்கையைப் பலியிட்டு
வாழ்ந்துகொண்டிருக்கும் மாயமென்ன

புத்தகம் கைக்கொண்டு
புத்தியைத் தீட்டவென்று
பள்ளி செல்ல ஆசைப்பட்டவர்கள் இன்று
புத்தகமும் கையிலில்லை
புத்தியையும் தீட்டவில்லை
புழுதிமண்டி வீதியால் திரிவதென்ன

பணத்துக்கும் பகட்டுக்கும்
பாழாய்ப் போன உழைப்புக்கும்
சிறுவர்களை ஏலத்தில் விற்கும்
மனிதர்கள் வாழுமட்டும்
சிறுவர்கள் சிற்றடிமைகள் தான்
பணத்துக்கு ஏலம் போகும் பலிக்கடாக்கள் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் பல உரிமைகள்
இருக்கென்று சொன்னாலும்
அனுபவிக்கும் சிறார்களின்
உள்ளங்கள் சொல்லுமா?

பிறக்கும் போது பெயர் பெறும் உரிமை
பிறந்து விட்டால் சமுதாயத்தில் உரிமை
ஓடினால் உரிமை, பாடினால் உரிமை
நாட்டைப் பற்றி கதைக்கவும் உரிமை
பல உரிமைகளைச் சட்டங்கள் சொல்லும்

ஆனால்!
சிறுவர்கள் பற்றி மனித சமுதாயம் போடும்
திட்டங்களை வெல்லுமா
இந்தச் சட்டங்கள்.

புத்தகங்கள் கொண்டு செல்லும்
புத்திமிக்க சிறுவன் கையில்
கச்சானைக் கொடுத்து
கடைத்தெருவுக்கு அனுப்பிவைத்தால்
அவன் எதிர்காலமெங்கே
அவன் ஈடேற்றமெங்கே.

கல்லுடைக்கும் தொழில் செய்தும்
கடை வீதியால் நடந்து சென்றும்
அவன் உடல் உருகிப் போனால்
அவன் எதிர்காலமெங்கே
அவன் ஈடேற்றமெங்கே

ஒவ்வொரு மனிதனும் உண்மையாய்
உணருமட்டும்
ஒவ்வொரு சிறுவனும் சிற்றடிமைதான் சீரழிவுதான்
இது மாறி வரும் போது தான்
மனிதம் மாண்பு பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் வளர்ச்சியினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம்



திரு. வே. ஜெயக்குமார்
விஞ்ஞான ஆசிரியர்
றோயல் கல்வி நிலையம்

**வி**ஞ்ஞான வளர்ச்சி நமது கலாச்சாரத்தின் மான்பையும் மதிப்பையும் கெடுத்துக் கொண்டு வருகிறது. இன்றைய அதி நவீன சூழ்நிலைகளில் அதில் உள்ள நன்மைகளை அதிகரித்துக் கொள்வதை விட அனாகரிகமான செயல்களை சித்தரிப்பதில் மதி மயங்கி தங்களின் காலத்தையும் நேரத்தையும், ஏன் தங்களின் எதிர் காலத்தையுமே அழித்துக் கொள்கின்றனர் இன்றைய இளம் பருவத்தினர்.

ஊடகங்களின் தாக்கம் ஒரு புறம், குடும்பத்தினர் தரும் அதிக சுதந்திரம் மறுபுறம். இவற்றுக்கிடையே இறை நம்பிக்கை மங்கிப் போய்க் கொண்டிருப்பது பலருக்கு இன்னும் புரியாமலே இருக்கிறது. என்பதை நினைவு கூர்ந்து எனது கட்டுரையை ஆரம்பிக்கின்றேன்.

"நிலா நிலா ஓடி வா நில்லாமல் ஓடி வா" என்று பூமியில் இருந்து கொண்டு பிள்ளைக்கு சோறூட்டிய காலம் முடிந்து நிலவில் இருந்து கொண்டு பூமி பூமி ஓடி வா....... என்று பாடிய காலத்தையும் தாண்டி விஞ்ஞான வளர்ச்சி புயல் வேகத்தில் சென்று கொண்டிருக்கின்றது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன் நனோ தொழிநுட்பவியல் பெரிதா பேசப்பட்டது ஆனால் நனோ தொழிநுட்பவியல் முறை கூட வரவர பழைய தாகிவிட்டது. அறிவியல் என்பது காலத்தக்கு காலம் மாற்றங்களோடு வளர்ந்து கொண்டு போகும் ஒன்றென்பது விஞ்ஞானி களின் கூற்று அது உண்மையாகக் கூட இருக்கலாம்.

அறிவியலின் கண்டுபிடிப்புகள் மனித குலத்தின் உயிர்காக்கும் தேவைகளை அவ்வப்போது பூர்த்தி செய்து வருகின்றன. இதை யாரும் மறுக்கமுடியாது. உதாரணமாக 2004ம் ஆண்டு சுனாமிக்கும் முற்பட்ட காலங்களில் பல நூற்றாண்டுகளாக சுனாமியின் தாக்கம் இருந்திருப்பதற்கான அதிர்ச்சி தகவலின் படி, கோடிக்கணக்கான மக்கள் பலியாகியிருக்கலாம் என்ற யூகங்களுக்கு இடம் தந்தது. ஆயினும் 2006க்குப் பிறகு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் சுனாமி ஏற்படப்போகும் வாய்ப்பை முன்னதாக அறிந்து கொண்டு பல உயிர்களைக் காக்கும் யுக்திகளை நாம் பெற்று விட்டோம். இதற்கு கதிரியக்கக் ஆய்வுகள் முக்கிய பங்காற்றுகின்றன. எவ்வளவு அதிர்வெண் கொண்ட பூகம்பங்கள் இதற்கு முன் ஏற்பட்டது என்பதை துள்ளியமாக அறிந்து இனி எப்படி அது போன்ற இயற்கைப் அனர்த்தங்களில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பித்துக் கொள்ளலாம் என்பனவற்றை விஞ்ஞானம் தான் நமக்குச் சொல்லித் தருகிறது. இது போன்ற மனித உயிர் காக்கும் பல கண்டு பிடிப்புகளுக்கு அறிவியல் வளர்ச்சி என்பதை எவராலும் மறுக்கமுடியாது. அப்படியானால் அறிவியல் வளர்ச்சி நமக்கு பாதகமானதா? சரியாக முறையான வகையில் பயன்படுத்தும் நெறிகளை மீறிடும் போது, அவை ஆக்க சக்தியாக முடியாது.... அழிக்கும் சக்தியே.

முந்தய காலத்தில் தகவல் பரிமாற்றம் என்பது கட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருந்தது. நாட்டு மக்கள் எதையெல்லாம் கேட்க வேண்டும் என செய்திகளை பிரித்து மக்களுக்குச் சென்றடைய அரசாங்கம் தகவல் துறையின் மூலம் ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் அறிவியல் வளர்ச்சி எனும் பார்வையில் தொடர்புத்துறை முன்னேற்றம் அடைந்து விட்ட இந்நாட்களில் நல்லதை விட தீயன பற்றிய செய்திகளை தடுக்கும் சந்தர்ப்பங்கள் இன்று அரசாங்கத்துக்கு கூட இல்லை எனும் நிலை யாகி விட்டது. இதைத்தான் நாம் கவனமுடன் கையாள வேண்டும். நமது இளைஞர்கள் மிக மிக விழிப்புடன் செயல்படக்கூடிய சூழ்நிலை இன்று உருவாகி விட்டது. புதுமையை விளக்கிக் கொள்ளுதலில் தவறு நேரும் போது அது அவர்களின் வாழ்க்கையே பாதிக்கிறது. தற்போது சினிமா, தொலைக்காட்சி, யூ டியூப் என மிக எளிதில் மக்களுக்கு கிட்டிவிடுகிறது. அதில் ...ள்ள தேவையற்ற விடயங்களே அதிகம் ...லை போகின்றது. அதன் தாக்கம் மக்களை சீரழிக்கிறது.

விஞ்ஞான வளர்ச்சி என நாம் பின்பற்றும் அதிக சுதந்திரத்தையே கண்டுபிடிப்புகள் இயந்திரங்களாகவோ, தொடர்புத்துறை நுணுக் கங்களாகவோ இருப்பதில் தவறொன்றுமில்லை. ஆயினும் செயல்படுத்தப்படும் போது அது நமது ஒழுக்க நிலையை அசைத்துப் பார்த்தால் அந்த வளர்ச்சி பாதகத்தையே செய்யும்.

சவாலான பல சூழ்நிலைகளில் இன் றைய இளைஞர் தங்களை ஈடுபடுத்திக் கொண் டிருப்பதனால் அவர்களாகவே திருந்தி வெளி வராவிடில் மற்றவர் உதவி என்பது குறிப்பிடும் படி எங்கிருந்தும் வரப்போவதில்லை என்பது என்பது இப்போது நம் கண் முன்னே காட்சியாக தெரிகிறது. அனைவரும் சுயநலத்திலேயே நாட்டமுடன் செயல்படுவதால் இளையோருக் கான உதவிகள் அவர்களைத் தேடி வரப்போவ தில்லை. இது நிச்சயம் தாங்களே தங்களை உயர்த்திக் கொண்டால் தான் உண்டு. அதில் ஒன்று தான் கணினி மற்றும் கைபேசி தொடர்பான ஒழுக்கநிலை.... தவறெனப்படு வதை தவிர்க்கும் மனப்பக்குவம்.... இதில் பெற்றோர்களின் பங்கும் நிறையவே இருக் கிறது. பிள்ளைகள் கேட்கிறார்களே என புத்தம் புதுவகையான கைபேசிகளை வாங்கித் தரு கிறார்கள். பலருக்கு அவற்றின் விலை பற்றிய கவலையே இல்லை. அப்படி வாங்கித்தரும் பெற்றோர் அவ்வப்போது பிள்ளைகளின் கைபேசி மெமரி கார்டுகளை வாங்கி திடீர் பரிசோதனை செய்தாலே இன்றைய இளை யோரின் அவல நிலை தெரியத் தொடங்கி விடும்.

ஆகவேதான் சொல்லுகின்றேன், அறிவியல் வளர்ச்சி சில நேரங்களில் எதிர்மாறான அசம்பாவிதங்களுக்கும் காரணமாகிறது என்று இதற்கு முடிவு என்ன தான்?

**நான் அறிவியல் வளர்ச்சிக்கு எதிராகப் பேசுபவன அல்ல.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LIKE US ON FACE BOOK




திரு. வே. ஜெயக்குமார்
விஞ்ஞான ஆசிரியர்
றோயல் கல்வி நிலையம்


முகநூல் முதன்முதலில் கேம்பிரிஜ், மாசசூசெட்ஸ் நிறுவனத்தினால் 04 - பெப்ரவரி - 2004 திகதி நிறுவப்பட்டது. இதன் தலைமையம் தற்போது கலிபோனியாவின் ஆல்டோ வில் அமைந்துள்ளது. ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவர். மார்க் சக்கர்பர்க் தன் நண்பர்களான எடுடாரோ சாவ்ரின், டஸ்டின் மாஸ்கோவிட் போன்ற ஹார்வர்ட் நண்பர்களுடன் தொடங்கினார். இவர்களே பேஸ்புக்கின் முதலாவது நண்பர்களாவர் பிறகு ஐவி லீக், ஸ்டான்போர்டு பல்கலைக்கழக மாணவர்களும் முகநூலில் சேர்ந்தனர். பின்னர் அப்பிள், மைக்ரோசாஃப்ட் நிறுவன ஊழியர்களும் முகநூலில் சேர்ந்தனர்.

இன்றைய பேஸ்புக்கில் 13 வயதிற்கும் மேற்பட்டவர்களே சேரலாம். அலெக்சா நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி இணையம் முழுவதிலும் பேஸ்புக் தான் இரண்டாவது மிகப் பிரபலமான இணையத்தளமாகும். இந்தியாவில் இந்திய தகவல் தொழில்நுட்ப சட்டம் மற்றும் இந்திய ஒப்பந்த சட்டம் ஆகியவை 18 வயதுக்குட்பட்டவர்கள் பேஸ்புக் முதலான சமூக வலைத்தளங்களில் உறுப்பினராவதை ஏற்பதில்லை. இது சிறார் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒன்று.

முகநூல் உபயோகிப்பாளர்கள் தங்களுடைய புகைப்படம், சொந்த விருப்பங்கள், தொடர்புகொள்ளும் விபரம் போன்ற தகவல் களைக் கோப்புகளாக இத்தளத்தில் பதிவு செய்யலாம். தான் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்ட தகவல்களை யாரெல்லாம் அறிந்து கொண்டார்கள், யாரெல்லாம் தன்னைப் பற்றிய தகவல்களைத் தேடினார்கள் என்று அறிந்து கட்டுப்படுத்தலாம். 200 புகைப்படங்கள் வரை ஒரு அல்பத்தில் சேகரிக்கும் வசதியும் உண்டு. முகநூல் மூலம் நண்பர்களுக்கு 1 டொலர் செலவில் பரிசுகளை முக்கியத் தகவல்களுடன் அனுப்பலாம்.

இந்த இணையதளம் "உலகின் சிறந்த 100 இணையத்தளங்களுள்" ஒன்று என்ற விருதை பி.சி. நாளிதழ் மூலம் 2007ல் வென்றது. 2008 "மக்கள் குரல் விருது" கிடைத்துள்ளது. 2010ல் சிலிக்கன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கில் உள்ள நிறுவனங்களில் சிறந்த படைப்புக்கான விருதைப் பெற்றுள்ளது.

அமெரிக்கா, இந்தோனேசியா, இந்தியா, ஐக்கிய ராஜ்ஜியம், துருக்கி, பிரேசில், மெக்ஸிகோ, பிலிப்பைன்ஸ், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் முகநூல் பயன்பாட்டில் முதல் 10 இடங்களைப் பெறுகின்றன.

சீனா, வியட்னாம், ஈரான், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான், சிரியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இந்த இணையதளம் இஸ்லாமியத்துக்கு எதிரானது, மத வேற்றுமையை ஏற்படுத்தக்கூடியது என்று தடை செய்துள்ளனர். சில பிரிட்டிஷ் கம்பெனிகளில் வேலை நேரத்தில் முகநூல் இணையதளம் பார்ப்பதற்கு தடை விதித்துள்ளனர். அழையா விருந்தாளிகளால் சில அசம்பாவித சம்பவங்கள் ஏற்பட்டதால் ஜேர்மனியில் முகநூலைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. வியாபாரிகளும், நிறுவனங்களும் தங்களுடைய பொருள்களை மக்களிடம் அறிமுகப்படுத்தும் வழியாக முகநூலைக் கருதுகின்றனர்.

ஒரே எண்ணம், விருப்பம் உடையவர்களை ஒன்றிணைக்கும் தளமாக உள்ளது. பிரிந்து போன குடும்பங்கள் இந்த முகநூல் மூலம் ஒன்று சேர்ந்த நிகழ்வுகளும் உண்டு. சிலர் நண்பர்கள், உறவினர்களிடம் தொடர்பு கொள்ளும் தளமாகக் கருதினாலும், வேறு சிலர் நேரடித் தொடர்பு இல்லாததால் முகநூல் மூலம் சமூகக் குற்றங்கள் நடக்க வாய்ப்பு இருப்பதாகக் கருதுகின்றனர்.

முகநூல் பக்கத்தில் சில சமூக விரோதிகளின் தொந்தரவுகளைத் தவிர்க்க என்ற உதவி பக்கத்தை நாடலாம்.

தமக்கு வேண்டாத நட்பை நீக்க ("Unfriend") என குறிப்பிடலாம்.மற்றும் எவரின் செய்தியும் வேண்டாம் என்றால் (block) என்ற விருப்ப பகுதியை கவனத்தில் கொண்டு தடை ஏற்படுத்த முடியும்.

2011 எகிப்திய புரட்சியில் இந்த இணையதளம் முக்கியப் பங்கு வகித்ததால், ஒரு எகிப்தியத் தம்பதியர் தம் குழந்தைக்கு பேஸ்புக் என்று பெயரிட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

2012 ஆம் வருடம் அமெரிக்காவின் ஒரு பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு ஆய்விற்காக, முகநூலின் 700,000 பயனர்களுக்கு அவர்களுக்குத் தெரியாமலேயே சில குறிப்பிட்ட தகவல்கள் மற்றும் பதிவுகள் முகநூல் நிறுவனத்தாலேயே (Face book) வழங்கப் பட்டு, பயனர்களின் எதிர்வினைகள் மற்றும் மனநிலை மாற்றங்கள் கண்காணிக்கப்பட்டன. கிட்டத்தட்ட 700, 000 பயனர்கள் இவ்வாறு எதிர்மறையான தரவுகள் தந்து பரிசோதிக் கப்பட்டனர்.

தரப்படும் தரவுகள் மூலம் முகநூல் பயனர்களைத் தாங்கள் எதிர்பார்க்கும் விதத்தில் செயல்பட வைக்க முடிகிறதா என்ற இவ்வாய்வு அமெரிக்காவின் National Academy of Sciences நடத்தியது இந்த வகையான நடவடிக்கை (emotional manipulation)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் பயனர்களிடையே தங்கள் மன நிலையை உருவாக்கும் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நடவடிக்கை என்பதால் கோபத்தையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியது.

மொத்த முகநூல் உறுப்பினர்களில் எட்டு கோடி பேர் போலியான பெயர்களில் செயல் படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இலங்கை காவல்துறை போலீஸ் கமிஷனர் அலுவலகத் திற்கு மாதத்திற்கு குறைந்தது பத்து புகார்கள் முகநூல் மோசடி தொடர்பானவையாக வரு கின்றன. 2013 ஆம் ஆண்டு தனது பயனர் களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் புகைப் படங்களை விளம்பரத்திற்கு பயன்படுத்தி யதையடுத்து தொடரப்பட்ட வழக்கில் முகநூல் நிறுவனம் பலருக்கு நஷ்டஈடு வழங்கவேண்டிய நிலையும் வந்தது.

இன்றைய உலகில் பொழுதுபோக்கு அம்சமாக பேனா நண்பர்கள் போய் பேஸ்புக் நண்பர்கள் வந்துவிட்டார்கள் அதிக நல்ல நண்பர்களையும் குறைந்த கெட்ட நண்பர்களை யும் கொண்டுள்ளதாக கருதி பேஸ்புக் பயன்படுத்தும் ஆண்களை விட பெண்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டியது அவசியம் காரணம் ஒரு மணிநேரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களின் ஆபாச படங்கள் இணையதளத்தில் பதிவேற்றப்படு கின்றது. இதனை ஒரு மணி நேரத்தில் 5000ற்கும் மேற்பட்டவர்கள் பார்கின்றனர் என புள்ளிவிபரம் சொல்லுகின்றது. இதனை கண்ட கேள்விபட்ட பெண்களின் தற்கொலை அதிகரித்து வருகின்றது. தமது அறிவியல் தொழில்நுட்பத்தை தவறாக பயன்படுத்தும் வஞ்சகர்களால் புற்றுநோய் போல் பெண்களின் வாழ்கையை அழித்துக்கொண்டு வருகின்றது.

ஹோட்டலில் தங்கும் போதும் கடைகளில் உடைகளை மாற்றும் போதும் பாட்டிகளில் கலந்துகொள்ளும் போதும் பெண்கள் கவனமாக இருக்க வேண்டும் சில படங்களை கமராவில் பதிவேற்றி delete செய்த பின்பும் அதனை மீண்டும் எடுக்கும் வசதி தொழில்நுட்பத்தில் வந்துவிட்டது. இன்றைய சூழ்நிலையில் பெண்கள் பாதுகாப்பாக வாழ்வது என்பது கடினமான காரியமாய்விட்டதென்பது தமது துரதிஸ்டம்.

பேஸ்புக்கில் பெண்களின் ஆபாச படங்களை ஏற்றுவது எவ்வளவு கேவலமான செயலோ அதே போன்று அதனை தேடிபார்பது அதை விட கேவலமான செயலே ஏனென்றாள் பெண்கள் என்பவர்கள் வலையத் தளங்களில் தேடி பார்க்க வேற்றுக்கிரக வாசிகள் அல்ல அவர்கள் நமது தங்கை, அக்கா, தோழி, மனைவி மற்றும் எம்மை பெற்றெடுத்த தாய் இவர்களின் அந்தரங்களையே நாம் எட்டிப்பாாக் கின்றோம் என்பதை நாம் மறந்துவிட கூடாது.

பேஸ்புக் நண்பர்களுக்காக அன்புடன்

**வே. ஜெயகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியங்களில் தாலாட்டுப் பாடல்கள்



சு. லோகஸ்வரன்
B.A.(Hons), Tamil Spl (Jaffna) PGDE
(Dis.Gold Medal)

## அறிமுகம்

எந்த மொழி பேசும் மக்கட் கூட்டத்தினரிடையேயும் தொன்றுதொட்டே தாலாட்டுப் பாடல்கள் செல்வாக்குப் பெற்று வருவது தவிர்க்கவியலாததாகும். தாய்மையும், அதன் உள்ளத்துணர்வுகளும் உலகில் இருக்கும் வரை உணர்ச்சியும் உயிரோட்டமும் நிறைந்த இசைபாடல் வடிவமான தாலாட்டும் நிலைகொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. தாலாட்டுப் பாடல்களின் ஊடாக குழந்தையை தூங்க வைக்கும் முயற்சி மாத்திரமன்றி குழந்தைக்கும் ஏனைய உறவினர்கட்கும் இடையேயான உறவின் நெருக்கமும் புரிய வைக்கப்படுவதை நாம் உணரலாம். இத்தகைய குடும்ப உறவு நிலைகளினூடாகப் பல்வேறு மனவுணர்ச்சிகளின் வெளிப்பாடுகளை இனங்காண முடியும். தொட்டிலிற் கிடக்கும் குழந்தை மீது ஏற்றிப்பாடப்படும் பாடல்களின் செய்திகள் சமூக முழுமைக்கும் பொதுமைப் படுத்தப்படுவதையும் நாம் அவதானிக்க வியலுகிறது.

தாய்மை உணர்ச்சியின் வெளிப்பாடாகத் தாலாட்டு மலருவதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. தாயின் நாவினது அசைவினால் பிறக்கும் தாலாட்டுப்பாடல்கள் "தாய்மையானது உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசாகும்" என டாக்டர் சு. சக்திவேல் மிகப் பொருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். "தால்" என்பது நாக்கைக் குறிக்கும் தமிழ் சொல். தால் + ஆட்டு = தாலாட்டு எனப் பொருள் கொள்ளப்படுவதினூடாகத் தாயின் நாவினசைவினால் வெளிப்படும் பாட்டு என்பதை அறிந்து கொள்ளலாம். தாலாட்டு, தாராட்டு, தாலேலோ, ஓலாட்டு, போராட்டு, ராராட்டு, ஆராட்டு, தொட்டிலாட்டு, திருத்தாலாட்டு, லாலாட்டு, ஆரோராப்பாட்டு, தொட்டப்பாட்டு என்றவாறு பல பெயர்களால் பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் "தாலாட்டு" அழைக்கப்படுகின்றது.

"தாலாட்டு" என்பது நாவினை அசைத்தலுக்குப் பெயராகிப் பின் நாவிலிருந்து தோன்றிய ஒலிக்குப் பெயராகிப் பின்னர் அவ்வொலியின் மூலம் தோன்றும் பாடலுக்குப் பெயராகி (இருமடியாகு பெயர்) வந்துள்ளது" இவ்வாறு டாக்டர் சக்திவேல் மேலும் குறிப்பிடுகின்றமை கருதத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையாள மொழியில் "தாராட்டு" எனவும், தெலுங்கில் "ஊஞ்சோதி" எனவும், கன்னடத்தில் "ஜோகுல" எனவும், தாலாட்டுப் பாடல்கள் வழங்கப்படுகின்றன. மேலும் தாலாட்டுப் பாடல்களைக் கருப்பொருளாகக் கொண்டு இடைக்காலத்தில் எழுந்த தமிழிலக் கியங்கள் "தாராட்டு" என்று குறிப்பிடப்பட்டுள்ளன. பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் "தாலேலோ" என்று அழைத்துள்ளன. தாலாட்டுப் படல்களின் தரத்தினையும் சிறப்பையும்

1) நாட்டுப் பாடல்கள்
2) திரைப்படப் பாடல்கள்
3) தமிழிலக்கியங்கள்

வாயிலாக நோக்கமுடிவதாயினும் இச் சிறுகட்டுரை இலக்கியங்களில் தாலாட்டுப் பாடல்களை தேட முனைகின்றது.

தொன்மையும், பொருண்மையும் நிறைந்த தமிழிலக்கிய நூல்களில் தாலாட்டு பாடல்களும் அவ்வப்போது இடம்பெறத் தவற வில்லை. மனித வாழ்வியலின் முக்கிய கூறான குழந்தைப் பருவமும் அதற்குரிய தாலாட்டும் காலந்தோறும் இலக்கியங்களில் பெருமைப்படுத் தப்பட்டே வந்துள்ளதை அவதானிக்கலாம்.

**தொல்காப்பியம், பரிபாடல்**

"குழவி மருங்கினும் கிழவதாகும்"
(தொல்காப்பியம் - புறத்திணை - 82)

"கண்படை கண்ணிய கண்படை நிலையும்" (தொல்காப்பியம்)

இவ்வாறு காலத்தால் முந்திய தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் தாலாட்டை, குழந்தை துயில் கொள்வதற்குரியதாக இலக் கணம் கூறி அறிமுகஞ் செய்து வைத்துள்ளது. "பரிபாடல்" என்னும் சங்க இலக்கிய நூலானது "வரைவழி வாலருவி வாதாலாட்ட" (6 - 52) என்று குறிப்பிடுகின்றது.

**பக்தி இலக்கியங்கள்**

தமிழிலக்கியப் பரம்பரியத்தில் கண்ண னைக் குழந்தையாக கருதித்தூங்க வைப்பதற் காகப் பெரியாழ்வார் பாடிய தாலாட்டு பாடல்களே முன்னோடி முயற்சியாகக் கருதப்படுகின்றது. எனவே கி.பி 6 ஆம் நூற்றாண்டுக்குப் பிந்திய காலத்திலேயே தமிழிலக்கியத்தில் "தாலாட்டு" என்னும் இலக்கிய வடிவம் தோற்றம் பெற்றது எனலாம். பெரியாழ்வார் கண்ணனைத் தொட்டிலிலிட்டு,

"மாணிக்கங்கட்டி வயிரம் இடைக்கட்டி
ஆணிப்பொன்னாற்செய்த வண்ணச்சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேலோ"

என்கிறார். குலசேகர ஆழ்வார் இராமனைக் குழந்தையாகப் பாவித்து தாலாட்டுகிறார். " பால் நினைந்தூட்டும்" என்பது திருவாசகம் தரும் செய்தியாகும்.

"காவிரிநல் நதிபாயும் கனகபுரத்தென்
கருமணியே
ஏவரி வெம் சிலை வலவா இராகவனே
தாலேலோ"

எனக் குலசேகர ஆழ்வார் தாலாட்டுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு
வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்
- செம்பொன்சேர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கன்னி நன் மாமதில் படைசூழ் கனகபுரத்தென்
கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே
தாலேலோ!"

என்பது குலசேகர ஆழ்வாரின் பக்தி தோய்ந்த தாலாட்டுப் பாடல்களில் ஒன்றாகும்.

இறையனார் களவியலுரை, தேவாரப் பதிகங்கள், முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம், விறலிவிடுதூது முதலிய இலக்கியங்களிலும் தாலாட்டுப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. பெருங்கதை, சூளாமணி ஆகிய காவியங்களில் தாலாட்டினை "ஓலுறுத்தல்" என்னும் சொல்லினாற் குறிப்பிடுவதைக் காணலாம்.

**பிள்ளைத்தமிழ் பிரபந்தம்**

நாயக்கர் காலந்தொட்டு (கி.பி 14 - 18 நூற்றாண்டு) "தாலாட்டு" என்பது ஒரு வகைப் பிரபந்தமான நிலையை எய்துவதாயிற்று. பிள்ளைத் தமிழ் இலக்கியம் எழுந்த போது அவற்றிலிடம் பெறும் பத்துப் பருவங்களில் தாலாட்டுப் பருவமும் "தாலப்பருவம்" என்ற பெயரில் ஒன்றாக விளங்கி முக்கியத்துவம் பெறலாயிற்று. மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்பன குமரகுருபரசுவாமிகள் இயற்றியவைகளாகும். சோழர் காலத்தில் ஒட்டக்கூத்தரால் பாடப்பட்ட குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் என்பதே இத்தகைய இலக்கியங்களில் முன்னோடி எனலாம்.

பாரதியார் காலத்திற்குப் பின்னர் சிற்றிலக்கிய நிலையில் "தாலப்பருவம்" பிள்ளைத்தமிழில் பாடப்பட்ட நிலைமாறியது. தனிப்பாடல் நிலைக்குத் தாலாட்டுச் சென்று விட்டது. இருப்பினும் இன்றும் மரபு தழுவிய பல்வேறு பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் கடவுளர் பற்றியதாகவும் தனிமனிதர் பற்றியதாகவும் எழத்தான் செய்கின்றன. பெரும்பாலான தாலாட்டுப் பாடல்கள் குறுகிய அடிகளைக் கொண்டதாகவே இன்று அமைகின்றன. தாலாட்டுப் பாடல்களுக்கு அடிவரையறை இல்லை.

**கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம், சீவகசிந்தாமணி, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்**

"சேலுண்ட ஒண்கணாரில் திரிகின்ற
செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய
மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுன்னிக் கனைப்பச்
சோர்ந்த
பாலுண்டு துலப்பச்சைத் தேரைதா லாட்டும்
பண்ணை"

எனக் கம்பராமாயணம் காட்டும் கற்பனை வளமிக்கதாகும்.

"இரியல் மகளி ரிலைஞெமலு ளீன்ற
வரியினஞ் செங்காற் குழவி - அரையிரவின்
ஊமன்பா ராட்ட வுறங்கிற்றே செம்பியன்றன்
நாமம்பா ராட்டாதார் நாடு"

(முத்தொள்ளாயிரம் - 77)

போர் தொடங்கிற்று. பெண்கள் எல்லோரும் ஊர்ப்புறத்திலுள்ள சோலை முதலிய இடங்களிலே போய் மறைந்தார்கள். கருவுற்ற மகளிரும் போய்த் தங்கியிருந்தார்கள். அங்கே அவர்கள் ஈன்ற குழந்தைகள் இலைச் சருகின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் கிடந்து அழுகின்றன. அப்போது கூகை குழறுகின்றது. அந்த ஒலியைக் கேட்டுக் கொண்டே குழந்தைகள் தூங்கி விட்டன என்கிறார் முத்தொள்ளாயிர ஆசிரியர். இதே போன்றதாகச் சீவகசிந்தாமணியில் சுடுகாட்டில் இடம்பெறும் சீவகனின் பிறப்புப் பற்றிக் கூறிவந்த திருத்தக்கதேவர் "முடவாய் ஒலி முடிவாக" எனத்தொடங்கும் பாடலிலே "கூகை பரிந்து தாலாட்ட" என்கிறார்.

"சாலி வயிற்றமிழ் வேளா ரடிகேள் தாலோ
தாலேலோ
சங்கத் தமிழரின் தலைமைப்புலவா தாலோ
தாலேலோ"

என்பது குமரகுருபரர் தீட்டும் முத்துக்குமார சுவாமிப் பிள்ளைத் தமிழ்த் தாலாட்டாகும்.

பிந்திய காலப் பாடல்கள்

பிந்திய கால தமிழ் இலக்கியங்களில் மாத்திரமன்றி 20 ஆம் நூற்றாண்டுப் புலவர்கள், கவிஞர்கள் பலராலுங்கூடத் தாலாட்டுப் பாடல்கள் பல இயற்றப்பட்டுள்ளன.

"சின்ன மலர் வாய் சிரித்தபடி பால குடித்தாய்
கன்னலின் சாறே கனிரசமே கண்ணுறங்கு"
(பாரதிதாசன்)

"முல்லை நறுமலரோ முருக விழ்க்குந்
தாமரையோ
மல்லிகைப் பூவோ மரக் கொழுந்தோ
சண்பகமோ"
(கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை)

"சீராரும் காவேரித் தேவி திருவருளால்
வாராமல் வந்துதித்த மாமணியே கண்ணுறங்கு"
(நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கப்பிள்ளை)

இவ்வாறு தமிழிலக்கியச் செல்நெறியில் தாலாட்டுப் பாடல்கள் தொடர்ந்து வந்த வண்ணமேயுள்ளன. சீர்காழி சிற்றம்பல அடிகள், தத்துவராயர், திருவேங்கடநாதர், வெள்ளியம்பல வாணத்தம்பிரான், சிவப்பிரகாச சுவாமிகள், ஈசுரமுனியாப்பிள்ளை, யாழ்ப் பாணம் வ. நா. கணேசபண்டிதர், மகாவித்து வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, உ.வே.சாமி நாதய்யர், அழ.வள்ளியப்பா, கவிஞர் அம்பி, வித்துவான் வேந்தனார், நாவலியூர் சோம சுந்தரப்புலவர் போன்ற பலரும் தாலாட்டுப் பாடல்கள் தந்துள்ளனர். கவிஞர் கண்ண தாசனின் "காமராஜர் தாலாட்டு" என்னும் நூலும் வெளிவந்துள்ளது.

"மதுரை அழகரோ மாமதுரைச் சொக்கரோ!
திருமால் அழகரோ நான்சேவிக்க வந்த
கண்ணோ!
சேவற் கொடியோனோ திருமால் மருகோனோ!
பார்வதியாள் பெற்றெடுத்த பன்னிருகை
வேலனோ"

என்பது தாலாட்டின் ஒரு வகையை எமக்குக் காட்டுகின்றது. தெய்வ வடிவங்களாகக் குழந்தை இங்கு கருதப்படுகிறது. "ஏட்டில் எழுதாத கவிதைகள்" என்ற நூலில் அன்னகாமு இதனை எடுத்துக் காட்டியுள்ளார். இருப்பினும் இத்தகைய பாடல்களும் இன்று நூல் வடிவில் இடங் கொண்டு இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுள்ளன என்பது உண்மையேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரக் கலையும் வாழ்வியலும்



நா. ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்
கிளி/கிளிநொச்சி ம.வி.

கலை என்பது உணர்வுகளின் வெளிப்பாடு மனித திறனில் வெளிவந்தவை. அது உண்மையை வெளிப்படுத்துவதுடன் பிறருக்கு அவ் உண்மையை ஊட்டும் பெருமை உடையது சித்திரம், சிற்பக் கலைகளில் இவற்றை நன்கு உணரலாம் கலை என்ற எல்லை இல்லை அது சுதந்திர வெளிப்பாடுகள் கல் அது வெறுமை அதனை செதுக்கி உயிர்கொடுக்கும் போது இரசனை பிறக்கும்.

சித்திரம் உலகில் ஒரு அடையாள மொழி, ஊமைமொழி, உணர்வின் மொழி இவை மனித உலகில் புதைந்துகிடக்கும் உண்மைகளை கிழறி வீரிட்டு வெளிச்சத்திற்கு கொட்டிவிடும் இன்றைய நவீன உலகில் சித்திரக்கலை அழிந்து கொண்டு வருகின்றது இன்றைய மாணவ சமுதாயம் கூட கலைகளை கசக்கி எறிகின்றது. பெருமையாக உயர்தரத்தில் Maths Bioscince commers படிக்கப்போகிற எங்களுக்கு ஏன் கலைப் பாடங்கள் என்று அக்கறை காட்டாது பெருமாப்பு கொள்கிற சமூகமாக மாறிவிட்டது. காரணம் நவீன வளர்ச்சி என எண்ணுகின்றனர். எங்கு சென்றாலும் மைல் கல் எமது கண்ணுக்கு தெரிவது போல சித்திரமும் பெருமையாக பேசும் பாடங்களுக்கு முன்னால் நின்று சிரிக்கின்றது. Bio Scinceல் அதிகமாக கற்கப்போகிற பாடங்களினூடாக தான் medical, acaltiy, Engineer படித்துக் கொள்ளும் ஒவ்வொரு மாணவனுக்கு சித்திரம் அவனுடன் கூடவே இருக்கிறது என்பதனை முற்கூட்டியே அறிந்து கொள்வானானால் அவன் கலைகளை இரசனையுடன் கற்றுக்கொள்ளும் விருப்பம் அவனிடத்தே வந்துவிடுகின்றது.

ஒவ்வொரு குடும்பம் மகிழ்ச்சியின் இல்லம் என பறைசாட்டுகிறது. கவிஞகளின் வரிகள் இதுபோலவே குடும்ப பிள்ளைகள் இரசனை விருத்தியுடன் வாழ்வதற்கு அவனிடத்தே கலைகள் வாழ்வில் உந்துசக்தியாக அமைய வேண்டும்

புராதன காலம் தொட்டே மனிதவாழ்வில் மொழியாக விளங்கியது சித்திரக்கலையாகும். இவர் மொழியினை மனிதன் தான்வாழ்ந்த குகைகளின் சுவர்களிலும் கற்பாறைகளிலும் வரைந்து மொழியாக பேசியதாக வரலாறு சொல்கின்றது. உலகில் ஐரோப்பாவின் பிரான்ஸ், ஸ்பானியா நாடுகளில் முதல் மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைந்த சித்திரங்கள் அல்ராமீரா, லாஸ்கோ குகைகளில் காணப்படுகின்றது. இக்குகைச் சித்திரங்களின் மூலம் வேட்டையாடிய மனிதன் தான் கண்டுவந்த மிருகங்களையும் பயன் படுத்திய ஆயுதங்களையும் வரைந்து மற்ற வருக்கு மொழியாக விளக்கினான். இவ்வாறு இலங்கையிலும் பாகியன்கல, தந்திரிமல பகுதி களில் வாழ்ந்த மனிதன் பேசிய மொழிகள் சித்திரமாக வரைந்துள்ளான். மனிதன் பிறந்து பேசிய மொழி இன்று சமூகத்தில் பெரும் துணையாக உள்ளது ஆனால் அதனை மனிதன் மறுத்துதான் பயன்படுத்துகின்றான், அத்துடன் தன்னை அறியாமலும் பயன்படுத்து வது உண்மையே.

இன்றைய மனித நவீன வளர்ச்சியில் மனிதன் எதை கண்டு பிடித்தாலும் அதன் வடிவம் சித்திரக்கலையே கல்லிலே கலை வண்ணம் கண்டாய்" அன்று கவிஞனின் பொன்வாக்குகள் இன்று கல் இயற்கை, செயற்கை ஊடகமாக பயன்பட்டு பல இரசனை பொருந்திய அழகுக் கலையாக பரிணமித் துள்ளது. என்ன தான் காலம் கலியுகமானாலும் கலைகள் அழியாது மனிதனுடன் தொடர்ந்து வருகின்றது இது ஜதார்த்தம் மனித சமூகவியல் வாழ்விலும் சித்திரம் உலா வருகின்றது. இன்று நவீன பாணிகளில் இல்லங்கள் வளர்ச்சி பெற்றுக் கொண்டு செல்ல அவற்றை அழகுபடுத்தும் மாதிரிகளும் வளர்ந்து கொண்டே செல்கின்றது "எம்பக்க விகாரையின் மரச்செதுக்கு பாணி இன்று எமது மரவேலைப்பாடுகளுக்கு கைகொடுத்து துணையாகின்றது. இவை போலவே எக்கலையும் மனிதனுக்கும் அவனது வாழ்வியலுக்கும் கருங்கல் போன்று பலமானது இதை உணர்ந்து கலையை நேசித்து அதனுடன் இணைந்து வாழ்வோம்.

சுயநலம் என்பது ஒரு குறுகிய குடிசை போன்றது.
பொது நலன் மாபெரும் அரண்மனையை போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்கலையின் வளர்ச்சி



கோபிகா கங்கேஸ்வரன்
க.பொ.த. சாதாரண தர மாணவி

தொன்மையும் முதன்மையும் பெற்ற தமிழ்மொழி "முத்'தமிழ்" எனச் சிறப்பாகக் கூறப்படுகின்றது. இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் சேர்ந்து முத்தமிழ் ஆகின்றது. உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் இயல், இசை, நாடகம் ஆகியவை தனித்து செயற்படும்போது இம்மூன்றும் இணைந்து செயற்படும் சிறப்பு தமிழ்மொழிக்கு மாத்திரம் உண்டு. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனப் போற்றப்படும் முத்தமிழின் நடுவில் நிற்பது இசைத்தமிழாகும். மனித சமுதாயத்தின் முதல் மொழியே ஓசை எனும் ஒலியாகும். அதுவே இசையாய் மலர்ந்தது. உலகிலுள்ள 64 ஆய கலைகளுள் மக்கள் இதயம் கவர்ந்த இன்பக்கலை இசைக் கலையாகும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பைந்தமிழில் பண்ணிசை பாடி இன்புற்ற வர்கள் தமிழர்கள். இவர்கள் பண்படுத்திய பண் ணிசையே காலவோட்டத்தில் தென்னிந்தியா எங்கும் பரவியது. கர்நாடக இசையென அழைக்கப் பெற்றது.

**சங்ககால இசை**

"யாழோர் தன்னை இன்குரல் இனவண்டு
அருவி முடிவின் பாட்டொடு ஓராங்கு
மெல்ல மெல்ல இசைக்கும் சாரல்"

தமிழ் மக்களின் இயற்கையினின்று இசையை யும் கருவிகளையும் உருவாக்கிக் கொண்டனர். தும்பியின் ஓசையிலிருந்து குழலும், வண்டி னங்கள் சிறகடிக்கப்படுதலிருந்து யாழும், அருவி ஓசையிலிருந்து முழவுக் கருவியும் சங்க காலத் தில் உருவானதாக பல்வேறு உருவானதாக பல்வேறு இலக்கியச் சான்றுகள் உணர்த்து கின்றன. இவ்வொலிகளின் இனிமையைக் கண்டு சங்கத் தமிழன் சுவைத்துள்ளான்.

"பறையிசையருவி" என்ற தொடர் அருவி ஒலி பறையின் இசையை ஒத்தது என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அக்கால இசைக் கருவிகளில் முன்னையது "குழல்'" ஆகும். மூங்கிலில் வண்டு துளையிடுவதும் அதன் வழி காற்றுப் புகுந்து ஒலிக்கும்போது எழும் இனிய ஒலியைக் கண்டு மனிதன் குழலமைந்'து இசையெழுப்பி னான். இயற்கையான இசைக்கருவியாக சங்கு காணப்பட்டது. தாளம் எனும் சொல் சங்க கால பரிபாடலிலே முதன் முதலாக குறிப்பிடுவதாகக் கூறப்படுகின்றது.

இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் இசையள விற்கு வேறெந்த துறையும் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கண்டதில்லை. தமிழகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலம் முதல் இசை வளர்ச்சியடைந்து வந் ள்ளது. சங்க இலக்கியங்கள், சங்க மருவிய இலக்கியங்கள் என்பவற்றிலும் சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுக்களிலும் இசையின் சிறப்பினைக் காணமுடிகின்றது. தமிழர்களின் ஆன்மீகப் பண்பாடு இசையுடன் இணைந்த பண்பாடாகவே மேலெழுந்துள்ளது. உலக இசை முறைகளிலேயே சிறந்தது தமிழரினதேயாகும். இதுவே உலகத் தலைமை இசை. சங்க காலத்தில் தமிழரின் இசை அறிகை "இன்னிசை" மரபை தோற்றுவித்தது. அதனோடு இணைந்த பண்ணும் இராகமும் இறையின்பத்தைப் புரிந்து கொள்ளும் அழகியல் வாயில்களாகின. பக்தியின் நெறியின் வழி விண்டெழுந்த தெய்வீகப் பிரவாகம் இசையின் விசைபட்டு நிறைந்தது.

## கி.பி. 5ம் நூற்றாண்டு வரை இசைக்கலை

இசை சாமகானத்திலிருந்து பிறந்து இராவணனாதியோரால் சிவன் கேட்கும்படியாக இசைக்கப் பெற்றது. பின்பு இலக்கண இலக்கியத்தில் சிறந்து இருந்தது. பரதருக்கு முன் கிராம மூர்ச்சனை, ஜதி அமைப்பில் வேதப் பாக்கள் அளவு படுத்தப்பட்டு இசைக்கப்பட்டன. பின்னர் இராக வளர்ச்சி ஏற்பட்டது. கி.பி 5ம் நூற்றாண்டில் மதங்கரால் இராக ஆலாபனம் திடநிலை அடைந்தது. அக்காலத்திலேயே இராகம் ஜாதி எனப்பட்டது.

## கி.பி. 7ம், 8ம் நூற்றாண்டுகளில் இசைக்கலை

தமிழ்நாடு கலைவளம் பெற்று விளங்கிய காலம் பல்லவராட்சிக் காலத்திற்குட்பட்டதாகும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்திப் பயிர் வளர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். நாயன்மார்களது தேவாரப் பாடல்களும் ஆழ்வார் களது திவ்விய பிரபந்தப் பாடல்களும் இசை வடிவாகவே காணப்பட்டன. சங்க காலத்தில் உலகியல் சார்ந்ததாக இருந்த இசை பல்லவர் காலத்தில் பக்தி நெறி சார்ந்ததாக மாற்றம் பெற்றது. 6ம் நூற்றாண்டு காலமானது இசையின் இருண்ட காலமாக காணப்பட்டபோதி லும் காரைக்காலம்மையார் தனது பதிகங்களில் பயன்படுத்திய பண்களான இந்தளம், நௌவளம் பண்கள் பிற்காலத்தில், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தரும் தமிழோடிசை பாடல் மறந்தறியாத நாவுக் கரசரும் சுந்தரரும் பண்ணமைக்க முடிந்தது. மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்களும் கோயில்களில் ஒலித்தன. "நௌவளப்பண்" ஆனது மல்லாரி வாசிக்கவும் இசைக் கச்சேரி களின் ஆரம்பத்தில் பாடுவதற்கு ஏற்றதுமான பண்ணாகவும் கருதப்படுவது சிறப்பம்சமாகும். மேலும் காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிக 9வது பாடலில் ஸ்வரங்களின் பழங் காலப் பெயர்களையும் சில இசைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டதை காணலாம். திருஞான சம்பந்தரது தேவாரப் பாடல்களைப் பண்ணொன்ற யாழில் வாசித்துப் பெருமை பெற் றார் திருநீலகண்ட யாழ்ப்பாணர். இவையெல் லாம் இக்காலத்தில் இசை பெற்றிருந்த உன்னத நிலையைக் காட்டுகின்றது.

நாட்டுப் பாடல் மரபுகளைத் தழுவிச் சமய குரவர்கள் பாடிய பதிகங்களும் திருவாசகத்தி லுள்ள திருவம்மானை, திருவெம்பாவை, திருப் பொன்னூஞ்சல், திருச்சாழல் போன்றவையும் மக்களிடையே பக்தி நெறி வளர்ச்சியில் உருப் பெற இசைக்கலையே மூலகாரணமாய் அமைந்தது.

சுருங்கக் கூறின் கி.பி. 7ம், 8ம் நூற்றாண்டு களில் இந்தியாவில் கலைவளம் சமயத்தோடு இசையும் சேர்ந்து வளர்ந்தது. பிற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைநூல்கள் பல உருவாக தூண்டுதல் பிறந்தது. பண்ணொன்ற இசைபாடும் அடியவர் கூட்டம் பெருகியது எனலாம்.

## 14ம், 15ம் நூற்றாண்டுகளில் இசை வளர்ச்சி

இக்கால கட்டங்களிலேயே சங்கீதமானது கர்நாடக சங்கீதம். ஹிந்துஸ்தானி சங்கீதம் என இரு பிரிவுகள் ஏற்படலாயின. இக்காலத்தில் வாழ்ந்த லோசனகவி "ராஜதரங்கிணி" "ராக சங்கீத சங்கிரகம்" எனும் இருநூல்களை இயற்றினார். ஸ்ரீசைத்தன்யர் சங்கீர்த்தன நெறியை முன்னெடுத்துச் சென்றார்.

25ம் நூற்றாண்டில் வாழ்ந்த தாளப்பாக்கம் சின்னையாவும் அவர் முன்னோரும் தெலுங்கு மொழியல் சுமார் 20 000 கீர்த்தனைகளும் பல உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகளும் இயற்றிப் பஜனைப் பத்திக்கு வழிவகுத்தனர். இதன் காரணமாகவே தாளப்பாக்கம் சின்னையா பத்ததியின் தந்தையெனப் போற்றப்படுகின்றார். வடஇந்திய இசை வளர்ச்சியில் மகாபாகவதர்கள் முக்கியத்துவம் பெற்றனர். தாளப்பாக்கம் அன்னம்மாச்சாரியாரின் (1408 - 1503) காலத்திலேயே சங்கீர்த்தனங்களில் முதன் முதலில் பல்லவி, சரணம் எனும் அங்கங்களைக் காண முடிந்தது. இதனைத் தொடர்ந்து புரந்தரதாசரின் கிருதிகளிலும் அனுபல்லவிகளை எனும் புதிய அங்கம் இடம்பெறுவதைக் காண்கின்றோம். புரந்தரதாஸர் கர்நாடக சங்கீதத்துக்கு "ஆதிகுரு" எனப் போற்றப்படுகின்றார். இவர் வட, தென் இந்திய சங்கீதத்தை இணைத்துப் புதிய சங்கீத மரபை அமைக்க முயற்சித்தார்.

15ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில்ட சந்தப் பாவலர் பெருமான் எனப் போற்றப்படும் அருணகிரிநாதர் தமிழ்மொழியிலும் ஆயிரக் கணக்கான திருப்புகழ் பாடல்களை இயற்றி ஓசை நயம், சொற்செறிவு, தாளவிரிவு, பொருள் நுட்பம் ஆகியவற்றில் சிறந்து விளங்கியது. அதிகம் வழக்கில் இல்லாத அநேக தாளங்களை இவர் பாடியுள்ளார். இதனாலேயே இவரை இசை உலகானது "சந்தாப் பாவலர் பெருமான்" என போற்றுகின்றது. இவரது பாடல்களில் 35 தாளம், 175 தாளம், 108 தாளம் ஆகிய தாளங்களின் அமைப்புக்கள் யாவற்றையும் காணலாம். அருணகிரிநாதரோ இந்திய சங்கீதத்தில் உள்ள பல தாளங்களை அழிந்து போகாமல் பாதுகாத்த பெருமைக்குரியவராவார். கி. பி. 14, 15ம் நூற்றாண்டுகளில் தென்னக இசையினை வளப் படுத்திய இயலிசை மேதையரில் இவர் சிறப்பிடம் பெறுகின்றார். இன்றும் இவரது பாடல்கள் இசையரங்குகளிலும் நாட்டியரங்குகளிலும் கதா காலாட்சேபம், பஜனை நிகழ்ச்சிகளிலும், பயிலப் பட்டு வருகின்றதென்றால் 14ம் 15ம் நூற்றாண்டு களில் நிலவிய இசை கலாசாரப் பின்னணியே இதற்கு அடித்தளமிட்டது எனத் துணிந்து கூறலாம்.

## 17ம், 18ம் நூற்றாண்டுகளில் இந்திய இசை கலாசாரம்.

### (இசைத்துறையின் பொற்காலம்)

இவ் நூற்றாண்டு காலங்களிலே புதுமலர்ச்சி பெற்றது எனவே கூறலாம். லஷ்யத்திற்கு தக்க லஷணம் அமைதலே முறை என்ற அடிப்படையில் கி.பி. 1550 ல் ராமாமாத்தையரால் ஸ்வரமேளகலாதிதி எனும் சமஸ்கிருத கிரந்தத்தை வெளியிட்டார். சங்கீதக் கலை தொடர்பாக அக் காலத்தில் நிலவிய சந்தேகங்களை நீக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் இது அமைந்தது. கி.பி. 1635 இல் வேங்கடமகியின் - சதுர்தண்டிப் பிரகாசிகை துளஜா மகாராஜாவின் - சங்கீத சாராம்ருததுத் ஓர் அரிய படைப்பாக இருப்பினும் இவற்றில் மேளங்களுக்கான பெயர்கள் கொடுக்கப்பட்டதால் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்து 18ம் நூற்றாண்டில் கோவிந்தாச்சாரியாரால் இயற்றப் பெற்ற சங்கீரக கூடாமணி எனும் சமஸ்கிருத நூலே தற்போது பயன்படுத்தும் 72 மேளங் களைக் கொண்ட கனகாங்கி - ரக்னாங்கி மேளப் பெயர்த் தொகுதியாகும்.

18ம் நூற்றாண்டு கர்நாடக இசை வளர்ச்சி யில் பெரியதோர் திருப்புமுனையாக மிளிர்கிறது. இந்நூற்றாண்டில்தான் சங்கீத மும்மூர்த்தி களான

1. சியாமா சாஸ்திரிகள் (கி.பி. 1762 - 1827)
2. ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் (கி.பி. 1767 - 1846)
3. முத்துஸ்வதமி தீட்சிதர் (கி.பி. 1776 - 1835)

ஆகியோர் வாழ்ந்தனர். இவ்நூற்றாண்டினன் பிற்பகுதி "இசையின் பொற்காலம்" சங்கீதமும் மூர்த்திகளின் அரும்பணிகளினால்தான் என்றால் அது மிகையாகாது.

சீர்காழி அருணாச்சலக் கவிராயர், பைடால குருமூர்த்தி சாஸ்திரி, தானவர்ணமார்க்கதரிசி - பக்சிமிரியம் ஆதியப்பையர் போன்றோர் கீதம், கீர்த்தனை, இசைநாடகம் போன்ற பல இசை வகைகளை அறிமுப்படுத்தினர். ஆதியப்பரே இராகம் - பல்லவி பாடும் முறையில் ஓர் ஒழுங்கினை உண்டாக்கினார்.

சங்கீத மும்மூர்த்திகள் பல அபூர்வ தாளங் களையும் இராகங்களையும் வழக்கத்தில் கொண்டு வந்துள்ளனர். இவற்றை இசைஉலகு இன்று வரை நன்றியுடன் போற்றிப் பாராட்டப்படு கின்றது. தியாகராஜர் தெலுங்கிலும் தீட்ஷிதர் வடமொழியிலும் சியாமா சாஸ்திரிகள் தெலுங்கு, வடமொழி, தமிழ் ஆகிய 3 மொழிகளிலும் உருப்படிகள் இயற்றினர். இவர்கள் இராகங் களை எந்த அளவிற்கு கையாள முடியுமோ அந்த அளவிற்கு இசைத்துறையில் கையாண்டு அழியாப்புகழ் பெற்றுள்ளனர். இதனாலேயே இவர்கள் வாழ்ந்த காலத்தை இசைத்துறையின் பொற்காலம் எனப் போற்றி பூரிப்படைகின்றோம்.

## 20ம் நூற்றாண்டில் இந்தியா

சங்கீத மும்மூர்த்திகளின் பின்னர் இசை வல்லார்களும் மன்னர்களும் தங்கள் பெரு முயற்சியினால் அதன் வளர்ச்சியைப் பேணிக் காக்க முற்பட்டனர். திருவாங்கூர் மன்னன் ஸ்வாதித் திருநாள் மகராஜா, கவிக்குஞ்சர பாரதி, கோபாலகிருஷ்ண பாரதியார், மாயூரம் வேதநாயகபிள்ளை போன்றோரின் இசைப்பணி போற்றத்தக்கதாகும்.

20ம் நூற்றாண்டு தமிழிசை இயக்கம் பரவிய காலம் ஆகும். இக்காலத்தில் சாதாரண மக்களும் விரும்பிப் பாடத்தக்க இசைப் பாடல்கள், பல உருவாகின. மகாகவி சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, கல்கி கிருஷ்ணமூர்த்தி, பொ. தூரன் ஆகியோர் இப்பாடல்களை இயற்றினார். அண்ணாமலைச் செட்டியார் பாடிய காவடிச் சிந்துக்கள், இசை உலகில் புதியதோர் வரவாகக் கருதப்பட்டது. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் யாழ். நூல் 20ம் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற ஒப்பற்ற இசை நூலாகும். பேராசிரியர் P. சாம்பமூர்த்தி அவர்கள் இசைநூல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழிக்கு மொழி பெயர்த்தனர். இவரது பெரு முயற்சியினால் கல்விப் பாடநெறியில் இசை ஒரு பாடமாகப் புகுத்தப்பட்டது. இதன் பேறாக மாணவர்கள் மத்தியிலும் இசை பயிலும் ஆர்வம் பெருகியது. இசை கற்கும் மாணவர் பரம்பரை ஒன்று உருவாக வழி பிறந்தது. தமிழிசை வளர்ச்சிக்கு துணை புரிந்தோரில் பாவநாசம் சிவனும் ஒருவர். இவரேதான் திரைப்படங்கள் மூலம் பாடி நடித்து இசைப்பாடல்கள் பலவற்றை அமைத்துக் கொடுத்து திரைப்படம் மூலம் கர்நாடக இசையை பாமர மக்களிடையே பரப்பி வெற்றி கண்டார். பிற்காலத்தில் இதுவே சினிமாவில் இடம்பிடித்தது.

## 21ம் நூற்றாண்டில் இசையின் ஓர் பார்வை

பாவநாசம் சிவன் திரைப்படம் மூலம் கர்நாடக இசையை வளர்த்ததை தொடர்ந்து இந் நூற்றாண்டில் பல இசை மேதைகள் இசையை வளர்த்துக் கொண்டு வருகின்றனர்.

இசைக்குயில் என்றழைக்கப்படும் M.S. சுப்புலட்சுமி தமிழிசையை உலகறியச் செய்தார். "சங்கீத கலாநிதி" என்ற பட்டத்தை முதன் முதலில் பெற்ற பெண்மனி இவரேயாவார்.

திரைப்படத்தின் மூலம் இசையை வளர்த்த வர்களில் குறிப்பிடத்தக்கவர்களான சின்னக் குயில் சித்திரா, K.V. மகாதேவன், M.S விஸ்வநாதன், இளையராஜா, A.R. ரகுமான், உன்னிகிருஷ்ணன் போன்றோரை குறிப்பிடலாம்.

தற்காலத்தில் இசை அறிகை "இன்னிசை" (Melody) மரபைத் தோற்றுவிக்கின்றது. அதனோடு இசைந்த வாழ்வும் நகர்கின்றது. பழந் தமிழர் போற்றி வளம் செய்த இன்னிசைக் கலையை தென்னகத்தின் அயல் மாநிலத்தோர் மட்டுமன்றி ஈழம்வாழ் தமிழரும் பக்குவமாகப் பேணி வளம் செய்துள்ளார். இலங்கைக்கு இதிகாச காலம் முதல் உயரிய இசைப் பாரம்பரியம் உண்டென்பது புலனாகும்.

வட இலங்கையில் இசைக்கலை வளர்ச்சி யைப் பேணும் நோக்குடன் 1931இல் வட இலங்கை சங்கீத சபை உதயமானது. இதன் தோற்றம் இசையார்வலர்களுக்குப் பெரு மகிழ்வை அளித்தது. 1972ல் இலங்கை அரசுப் பாடசாலை பாடவிதானத்தில் சங்கீதத்தை ஒரு பாடமாகச் சேர்த்துக் கொண்டது. அழகியற் கல்வியில் இசை ஒரு கட்டாய பாடமாகச் சேர்க்கப் பட்டதன் பேறாக இசை பயில்வோர் தொகை அதி கரித்து வருகிறது. இறைக் கழகங்களும் இசைப் பயிற்றுநரும் பெருகி வருகின்றனர்.

20ம், 21ம் நூற்றாண்டுகளில் மெல்லிசை மற்றும் தன்னிசை இந்தியா - இலங்கையில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. வானொலி, இசை நாடகம், இசைத்தட்டு, தொலைக்காட்சி, இசைச் சஞ்சிகைகள், இசை மாநாடுகள், சங்கீத சபாக்கள் முதலியவற்றால் இசைவெள்ளம் பெறுகின்றது. இந்தியா - இலங்கையில் பல இசைக் கலைஞர்கள் தோற்றம் பெற்று வருகின்றனர்.

சுருங்கக் கூறின் இக்கால கட்டங்களில் இலங்கையைப் பொறுத்து வரையில் இசைக் கலையின் பொற்காலமாகத் திகழ்கின்றது எனலாம். இலங்கை கலைஞர்கள் பலர் இன்று உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று இசைக் கச்சேரிகள் செய்கின்றனர். இதன் மூலம் இலங்கையின் இசைவளம் உலகமெல்லாம் பேசப்படும் உன்னத நிலை உருவாகி வருகின்றது.

"இசைக்கசையாதோர் எவரும் உளரோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனக் கலையின் வெளிப்பாடு



கு. கீர்த்தனா
(தரம் 11 மாணவி)

றோயல் கல்வி கூடத்தின் மாணவி யாக பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் ஆடற்கலைகளின் பல்வேறுபட்ட வகைகளில் நடனமாடி - பாராட்டுகளையும் பரிசில்களையும்' பெற்றுக்கொள்ள எனக்கு வழிகாட்டிய றோயல் கல்விக் கூடத்தில் 25வது வெற்றி விழாவிலே, ஆடற்கலையின் தோற்றம் பற்றியும் அதன் சிறப்பம்சங்கள் பற்றியும் நான் தெரிந்து கொண்ட விடயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

பரத நாட்டியமானது தென்னிந்தியாவிற் குரியதும் சிறப்பாக கூறினால் தமிழ் நாட்டிற்குரியது மான நடனமாகும் என்பது நாம் அறிந்த விடயமே ஆகும். இக்கலை வடிவம் 2000 ஆண்டுக்கு முன்னதாகவே தமிழ் நாட்டில் தோன்றியதே தொண்மை வாய்ந்த நாட்டியக் கலை வெளிநாடுகளிலும் குறிப்பாக இந்தியா விலும் தற்காலத்தில் மிகவும் ஆவலாக வரவேற்கப்படுகிறது.

புராதன காலத்தில் வைஸ்ணவ மனுவின் ஆட்சியுடன் திரோதயுகம் தோன்றிய யுகத்தில் தர்மம் ஒழிந்து அதர்மங்களாக காமம், கொலை, கொள்ளை என்கிற பாவச் செயல்கள் தலைதூக்கிய காலப்பகுதியில் தர்மத்தை நிலைநாட்டும் தேவர்களும் கந்தவர்களும் இணைந்து பிரமனிடம் சென்று தமது பொழுது போக்கிற்காகவும் நாட்டின் நன்மைக்காகவும் பார்த்து கேட்டு இரசிக்கக்கூடியதாகவுள்ள ஒன்றை உருவாக்கி தரவேண்டும் என்று கூறியதற்கிணங்க படைக்கும் தொழிலை செய்யும் பிரமனால் உருவாக்கப்பட்ட நான்கு வேதங்களான இருக்கு, யசூர், சாம, அதர்வண ஆகியவற்றுடன் 5வது வேதமாக நாட்டியக் கலையை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்தார். இவ் 5வது வேத நாட்டியகலையை கந்தர்வ வேதம் என்றும் செப்பலாம். பரதத்தை பிரமன் பரதமுனிவருக்கு கற்பிக்க பரதமுனிவரே இவ்வுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார் என நடன கலை விற்பன்னர் கள் கூறிகின்றனர்.

பரத முனிவரால் அறிமுகப்படுத்தப்பட்ட நாட்டியக் கலை பரத என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. இதில் ப - பாவத்தையும், ர - இராகத்தையும், த - தாளத்தையும் குறிக்கிறது. பாவம் என்பது உணர்ச்சி, இராகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது இசை, தாளம் என்பது நாட்டியம் உச்ச வெளிப்பாடு என்பவற்றை கொண்டு காணப் படுகிறது. இவையே நடன இலச்சணங்கள் ஆகும். ஆடற்கலை செவ்விய ஆடல் வகைகளில் ஒன்றாக காணப்படுவதுடன் 36000 பாக்களை யும் கொண்டு நிரம்பியுள்ளது. இதனை சின்னமேளம், தாசி ஆட்டம், கூத்து, சதிர் என்று பல பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. ஆனால் இந்நடனம் 70 ஆண்டுகளாக "பரத நாட்டியம்" எனும் பெயரால் அழைக்கப்பட்டு வந்ததாக கூறலாம். பரதம் தமிழ் நாட்டு கோவில்களில் தேவதாசி பெண்களால் ஆடிய சதிராட்டத்தின் நெறிமுறைப்படுத்தப்பட்ட வடிவமே ஆகும். தற்போது நாங்கள் நுண்கலை கல்வி துறையை சார்ந்ததாக பயில்கின்றோம்.

மேலும் பரதத்தின் உருப்படிகள் மூன்று வகையாக காணப்படுகின்றன. நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பனவாகும். இதில் நிருத்த உருப்படி அபிநயமின்றி சரீரத்தினால் ஆடறபடுவதாகும். இங்கு தாளத்திற்கும் லயத்திற்கும் முக்கியத்துவம் வழங்கப்படும். அலாரிப்பும், ஜதீஸ்வரம் ஆகியன இவற்றின் உதாரணங்களாக கொள்ளலாம். அடுத்து நிருத்திய உருப்படி பாவத்தினை முகத்தினாலும் கண்களாலும் வெளி கொண்டு வருவதும் கருத்தை புலப்படுத்துவதுமாகும். இதற்கு உதாரணங்களாக சப்தம், பதம், வர்ணம் ஆகியன இறுதியாக நாட்டிய உருப்படி ரஸ அபிநயம், பாவ அபிநயம் என்பவற்றை தத்துரூபமாக காட்டுவதாகும். இவ் நாட்டியத்தை பொதுவாக ஆண்களே பெண்களின் வேடம் தரித்து நடித்து வந்தனர். ஆனால் தற்காலத்தில் பெண்களும் சேர்ந்து நடிக்கின்றனர். சில சமயங்களில் பெண்களே ஆண்களின் வேடம் தாங்கி நடிக்கின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக மகாபாரதம், இராமாயணம் ஆகும்.

மேலும் பரதநடனம் 120 அடவுகளை கொண்டதாகவும் இவ்வடவு உடல் அசைவு கை முத்திரையை கொண்டதாகவும் காணப்படு கிறது. தற்போது 80 அடவுகளே நடைமுறையில் உள்ளன. சிதம்பரம் மேலக்கடம்பூர் ஆலயத்தில் உள்ள சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன. இவ் ஆடற்கலைக்கு பாடல், நட்டு வாங்கம், இசைக்கருவி என்பன பகுதிகளாக காணப்படுகின்றனர். பல சிறப்பம்சங்களை கொண்ட பரதநாட்டியத்திற்கு மேலும் சிறப்பை ஊட்டுவதாக விளங்குவது பரத நாட்டிய ஆதி தெய்வமான சைவ முழுமுதற் கடவுளாக சிவன் விளங்குகிறார். இவர் நடராயர் வடிவத்தில் தாண்டவத்தை ஆடியவராக சித்தரிக்கப்படுகிறது. சந்தோசத்தின் உட்சவத்தில் ஆடும் நடனம் ஆனந்த தாண்டவமாகவும் அழிக்கும் கடவுளாக அவர் ஆடும் நடனமாக ருத்ர தாண்டவமும் விளங்குகிறது. இவ்வாறாக சிவன் ஐந்தொழில் களுக்குமாக 108 தாண்டவங்களை ஆடினார். அத்தோடு உலக தாயான பார்வதியாலும் மென்மையான அசைவுகள் குலைவுகள் பதங்கள் கூடிய லாஸ்சியம் ஆடப்பட்டதாக நடன விற்பன்னர்கள் கூறுகின்றனர்.

சிறப்பு மிக்க புனித கலையான பரதத்தை 19ம் நூற்றாண்டில் காலத்தின் அழிவுக் கரங்களி லிருந்து பாதுகாப்பளித்தவர்களாக இந்தியாவில் பிரபல்யமானவர்களாக விளங்கியவர்கள் நுகமணிதேவி, பத்மசுப்பிரமணியம், அனிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்னம், மல்லிகாசரகி, பாலாசரஸ்வதி, மீனாச்சி சுந்தரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவா்.

மேலும் 9ம் நூற்றாண்டு தொடக்கம் 12ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் சோழர் காலமும் இதேபோல் இக்காலத்திற்கு முன்னதான பல்லவர், பாண்டிய காலமும் நடனக் கலையில் சிறப்புற்ற காலமாகும். இதனை தொடர்ந்து இதிகாசங்களான மகா பாரதம், இராமாயணம் என்பவற்றிலும் நடனக் கலை மேலும் வளர்ச்சியடைந்ததை அவதானிக்க முடியும். இத்துடன் 18ம் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து 21ம் நூற்றாண்டு தற்போது வரை திரைப்படங் களிலும் பரத நாட்டியக்கலை இடம்பெறுவதை நாம் அவதானிக்கலாம். பரத நாட்டியத்தின் வளர்ச்சியை கட்டிகாக்கும் பங்களிப்பை தற்காலத்தில் திரைப்படங்களே ஆற்றிவருகிறது. என்பதைப் பகிர்ந்து கொள்வதில் பெருமை அடைகின்ற வேளை இலை மறைகாயாக இருக்கின்ற நடனக்கலையை வளர்க்கும் றோயல் கல்விக்கூட இயக்குனர் அவர்கட்கும் என் இதயம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு நடனக் கலையில் எனக்குள்ள ஆர்வத்தையும் திறமையையும் கண்டு எனக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வரும் அப்பா - அம்மா - சிநேகிதா் - ஆசிரியர்கள் - மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் என் இதயம் நிறைந்த நன்றியை இவ்வெள்ளி மலர் ஊடாக தெரிவித்து விடை பெறுகின்றேன்.

மனம் நம்பிக்கையை இழப்பது மரம் வேரை இழப்பது போன்றது.
வீழ்வது வெட்கமல்ல ஆனால் வீழ்ந்து கிடப்பது வெட்ககரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடற்கலை நாட்டியக்கலை



பொ. திருச்செல்வன்
கலைஞர்

ஆயகலைகள் 64. இதில் நிருத்தம் என்னும் நாட்டியக்கலையும் ஒன்று. தெய்வீகக்கலை எனப் போற்றப்பட்டு நீண்ட நெடுவாண்டாய்ப் பேணப்பட்ட உயர்கலை ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் கூத்தப் பெருமானை நினைந்து அவன் துள்ளிக்குதித்து அசைந்து, பாய்ந்து ஆடும் ஆடலை அதன் பொருளை வடிவமைத்து கண்ணில் கருத்தில் இனிக்கும் ஒளியாக்கினர். அணுவின் இயக்கம் தொடங்கும் நிலை அணுநர்த்தனம், உலகின் இயங்கலுக்கும், வாழ்வுக்கும், மறைவுக்கும் இந்த அணுவின் அசைவே ஆதாரம் என விஞ்ஞானம் பேசுகின்றது. மெய்ஞ்ஞான வேதம் சொல்கின்றது.

கூத்தப்பெருமான் துள்ளிக்குதித்து, ஆனந்த தாண்டவநர்தனம் புரியும்போது அண்ட சராசரங்கள் தோன்றி உயிர் இனங்கள் பெருகி ஆக்கல், காத்தல், மறைத்தல் தொடர்கின்றன என்று இங்கே உலகின் இயக்கம் அணுவின் ஆனந்த நடம்புரிதலைக் கொண்ட ஒன்று என விஞ்ஞானம் படம் பிடித்துக் காட்டுகின்றது. யாவிலும் அணுவில் அணுவாய்ப்பரவிய சக்தி அணு. அதுவே சிவம். அதன் செயலே பரந்து நிறைந்த சக்தி. இவ்வுண்மையைச் சித்திரமாய்ச் சிலையாய், உண்மைப் பொருளாய் வழங்குவது நர்தனம் செய்யும் நடன இராயன் கூத்தப் பெருமான் நிலை. எம்முன்னோர் என்றோ கண்ட அவ்வுண்மையை இன்று கண்ட விஞ்ஞானம் அதற்கு தலை வணங்கு கின்றது. இதுவே சிவதாண்டவத் தத்துவம்.

இதை உளத்தில் ஊன்றி புறத்தில் விளைவாக்கும் போது உள்ளுணர்வின் உந்துதலால் ஏற்படும் பயனே நாட்டிய நயம். இங்கு நாட்டியம், நடனம், நர்த்தனம், நிருத்தம், ஆடல் எனப் பெயர்கள் பல. இவை பரதம், குச்சுப்புடி, மோகினி ஆட்டம் என பலவாய் விரியும். இங்கு உடலும் அவை தரும் கருத்தூன்றிய அசைவும் பஞ்சபுலங்கள் வழி வரும் நவரசங்களும் உடல் செறிந்து விரல்களில் முத்திரைகளாய் ஒளிரும் போது கனன்று வரும் ஆற்றலும் நளின நயமும் பலகோடி உணர்வின்பம். காண்போர் விழி வழி புகுந்து உளத்தில் சஞ்சீவியாய் நிறைந்து சிரஞ்சீவியாய் வாழ்பவை. முத்திரைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றோயல் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் தரம் 11 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர் மகிழ்வர். நோய், பிணி, மூப்பு, பாவம், அறும், உடல் வலுவுடன் நிலைக்கும். நரம்பு, நரம்பு மையங்கள் மீதும் அழுத்தமான உணர்வு சார்ந்த நம்பிக்கை நிலைத்தபோது சுவாசம் ஒழுங்கு பெறும். ஒரு தோற்றத்தை நடனத்தில் உருவாக்கி அதன் அசையா நிலையை காணமுடியும்.

இவ்வளப்பெரும் உண்மையினை அதன் கருத்தூன்றி உயர்கலையாய்க் கற்கும் இலக்குடன் பற்றுடன் பயின்று உடலையே நளினமாய் வடித்து நின்றாலும், இருந்தாலும், சென்றாலும், துயின்றாலும், விழித்தாலும், அசைந்தாலும், மோனம் செய்தாலும் நாட்டியமே என நளினம் பேசும் பரதம்.

- சாதிக்க நினைப்பவன் மட்டுமே அதிகமாக சோதிக்கப்படுகிறான். பிறரை அதிகமாக நேசிப்பவன் மட்டுமே அதிகமாக காயப்படுகின்றான்.
- முடியாது என்று நீங்கள் செல்வதையெல்லாம் யாரோ ஒருவன்..... எங்கோ செய்து கொண்டுதான் இருக்கிறான்.
- அறிவைவிட தைரியத்தினால் தான் பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளைநீக்கத்துக்கான அரங்க ஆற்றுகைகள்
## (ஓர் பட்டறிவுக் குறிப்பு)



அ. சத்தியானந்தன்
ஆசிரியர்
கிளி/கிளிநொச்சி ம.ம.வி

இன்று இப்பிரபஞ்சத்தை மூடி செய்மதித் தொடர்பூடகங்களே பெரும் பூதங்களாக உலகை ஆக்கிரமித்து நிற்கின்றன. மாற்றத்தைத் தேடி கருதுவதில் தகவல்களை ஆள்பவர் உலகை ஆள்பவராகிறார்.

மின்னனு தகவல்யுக ஊடகங்கள் அரசியல், பொருளாதார, பண்பாட்டு ரீதியாக மக்களுடன் கொள்ளும் உளவியல் ரீதியான உறவுகள் தொடர்பூடக வன்முறையாக உருப்பெற்று வருவதனை சமூகவியலாளர்கள் முன் எச்சரிக்கை செய்கின்றனர். ஊடகங்கள் பற்றிய அரசியல் தெளிவும். அதன் பன்முகத் தாக்கம் பற்றிய விழிப்புணர்வும் மூன்றாம் உலக மக்களாகிய எமக்கு இன்னும் அவசியமானது. ஏனெனில் மக்களின் மனவெளியில் இடையீடு செய்யும் இந்த எதிர்மறை ஊடகப்பண்பாடு தனித்துவமான இனக்குழுமங்கள் தமது தேசிய அடையாளத்தைப் பேணுவதற்கு சவாலாகி விடுவதுண்டு.

ஊடக ஆதிக்கத்துக்கு எதிராக மீள ஒழுங்கமைக்கப்பட்டு வரும் பண்பாட்டுப் போரில், மக்களுடனான நேரடி அரசியல் இடையீட்டில் மக்கள் எழுச்சியில் அரங்கச் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அதிகமான சாத்தியப் பாடுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பது நிதர்சன மாகும். அறுபதுகளின் இறுதியில் தென் அமெரிக்க நாடுகளில் தளைநீக்கத்துக்கான போராட்டங்கள் நிகழத் தொடங்கிய போது இப்போராட்டங்கள் ஒடுங்குமுறையாளருக்கு எதிராக அரசியல், பொருளாதார, பண்பாட்டு ரீதியாக ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சியாய் முன்னெடுக்கப்பட்டது. கென்யா நாட்டின் பண்பாட்டுப் புரட்சியாளர் கூறி வா தியாங்கோ வின் நாடாக மற்றும் கலையாக்க செயற்பாடுகள் மக்களை அணிதிரட்டியது. கூறியினுடைய நாடகங்கள் "பண்பாட்டு வெடிகுண்டு" என வர்ணிக்கப்பட்டது. அது ஆட்சியாளருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்தது. அவரது சிலுவை யில் தொங்கும் சாத்தான். பேனா முனைகள், கத்திகள் போன்ற எழுத்தாயுதங்கள் இதற்கு சான்று பகிர்கின்றன.

நடைபெற்ற தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அதன் கருத்து நிலைப்பட்ட செயன்முறையையும் பேராசிரியர் கா. சிவத்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தளைநீக்கத்துக்கான போரட்டம் (Liberation strugglc) எனக் குறிப்பிட்டு எழுதியதை இங்கு சுட்டிக் காட்டலாம்.

ரஷ்யப் புரட்சி நிகழ்ந்த காலங்களில் மேயர் கோல்ட் உருவாக்கிய அரங்கு அப்புரட்சிக்கு உதவியது. பிரித்தானியருக்கு எதிரான இந்தியப் போராட்டத்தில் IPTA இந்திய மக்கள் அரங்கக் குழுவினரின் நாடக முயற்சிகள் பரவலாகப் பேசப்பட்டது. பிலிப்பைன்சில் அதினோவின் ஏகாதிபத்திய சார்பை முறியடிப்பதற்கு அம் மக்களிடம் செயல்பட்ட PETA (பிலிப்பைன்ஸ் அரங்கப் பயிற்சி நிறுவனம்) இன் அரங்க நடவடிக்கைகளின் பங்கு மிகவும் காத்திரமானதாகப் பதியப்பட்டுள்ளது. ஒகஸ்தாமோ வால் உருவாக்கிய ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு, விவாத அரங்கு, கட்புலனாக்க அரங்குகளின் புதிய பரிமாணமாகவே மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

ஈழத்து அரங்கச் சூழலில் தளைநீக்கத் துக்கான இயக்க வெளியில் அரங்கை, அரங்கச் செயற்பாடுகளை தாக்க வன்மையான சாதன மாக கையாளும் செயல் வீரராகவும் முன்னோடி யாகவும் கலாநிதி க. சிதம்பரநாதனை நாம் காணமுடியும்.

வன்னியின் பகைப்புலத்தில் குறிப்பாக கிளிநொச்சியில் கடந்த காலங்களில் மிக ஆரோக்கியமான அரங்கப் பண்பாட்டுச் சூழல் ஒன்று நிலவியது என்பதை யாரும் மறுக்க முடியாது. தளைநீக்கத்துக்கான சமூக மாற்றத்துக் கான அக்கால அரங்க ஆற்றுகைகள் மக்கள் மத்தியில் பெரும் மதிப்பைப் பெற்றிருந்தது. நெருக்கடிகள் மிகுந்த வாழ்வுச் சூழலில் மக்கள் பண்பாட்டு ஊடகமான அரங்குடன் வலுவான தொடர்பைப் பேணினர்.

அந்த வகையில் நா. யோகேந்திரநாதன், எஸ்.பொ.ரகு, செ. விந்தன், புதுவை அன்பன், பாலா மாஸ்டர் போன்ற மூத்த அரங்கவியலாளர் களின் பணிகள் மகத்தானவை. இவர்களின் அரங்கச் செயற்பாடுகள் ஆய்வுக்குட் படுத்தி பதியப்பட வேண்டியவை ஆகும்.

இவர்களைத் தொடர்ந்து அன்பரசி, விஜயசேகரன் சத்தியானந்தன், வேழ மாலிகிதன், பொன் காந்தன் போன்றோரும் அரங்கச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

தளைநீக்கத்துக்கான போராட்டம் மையம் கொண்டிருந்த வன்னிப் பெருநிலப் பரப்பு வெளிகளுக்குள் தெருவெளி அரங்காக, விவாத அரங்காக, செய்தி அரங்காக, கவிதா நிகழ்வு களாக, அரங்க அறிக்கை நிகழ்வுகளாக பல வேறு வடிவங்களுடாக நிகழ்த்தப்பட்டு வந்தது. அப்போது நாடகப் போட்டிகளுக்கும் குறை வில்லை. சமகால அரசியல் மாற்றங்கள், தளைநீக்கப் போராட்டக் கருத்துருவாக்கங் களைப் பரப்புரை செய்தல், மக்களை அணி திரட்டுதல், தகவல் பரிமாற்றுதல், ஆற்றுப்படுத்து தல் போன்ற பல பணிகளை அரங்குகளே வலு கச்சிதமாய் செய்து முடித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெருவெளி அரங்கச் செயற்பாடுகள்

அரங்கு என்பது வெறும் தகவல் பரிமாற்றத்துக்கான ஒரு ஊடக செயற்பாடு மட்டுமல்ல அதற்கும் அப்பாலும் அரங்கச் செயலாளிகள் மக்களின் மனவெளியில் இடையீடு செய்வதனூடாக அவர்களை செயலூக்கத்துக்கு தூண்ட வேண்டும். உணர்வுடன் ஊட்ட வேண்டும். அரங்க ஆற்றுகை நிகழ்த்தப்பட்ட இடத்தில் இருந்து வாழ்க்கையும் தொடரப்பட வேண்டும். இத்தகைய இரு வழித்தொடர்பும் உணவும் வலுப்பெறும் அரங்க வடிவமே தெருவெளி அரங்காகும். எமது சூழலில் நா. யோகேந்திர நாதன் மூத்த படைப்பாளி இவருடைய வீதி நாடகம் தமிழக வீதி அரங்கில் செயற்படும் நா. முத்துசாமியின் வடிவத்தை ஒத்தது. ஜனரஞ்சகத்தன்மை வாய்ந்த நிகழ்கலையாக நிகழ்ந்தது. இவரது அர்ப்பணிப்பும் தொடர் முயற்சியும் இன்றும் வெற்றிடமாகவே உள்ளது.

அடுத்து நெருக்கடி மிகுந்த போர்ச்சூழலில் பிறப்பெடுத்த அரங்கப்படைப்பு புதுமை அன்பனின் தெரு வெளி அரங்க ஆற்றுகைகள். போரின் அவலத்தை வதையை நெஞ்சை உருக்கும் உண்மைச் சம்பவங்களை காட்சிப் படிமங்களாய் நிகழ்த்துவார். ஒடுக்குவோருக்கு எதிரான குரலாக அது முற்றுப்பெறும். பார்வையாளர் எப்போதும் உணர்ச்சிக் கொந்தளிப்புடன் விறைப்பான மனநிலைச் சூழலுக்கு உள்வாங்கப்படுவார்கள். இவரது "கரைதேடும் ஓடங்கள்", "குருத்தோலைகள்" போன்று தெருவெளி அரங்க செயற்பாடுகள் வடக்கு கிழக்கின் சகல பிரதேச வெளிகளிலும் நிகழ்த்தப்பட்டது. சாவினைச் சுமக்கும் எதிர் காலம் / இந்த சந்ததிக்கு ஏன் இந்த துயர்கோலம் / பாவம் அறியாத சமுதாயம் / இந்த பாவத்தைச் சுமப்பது என்ன நியாயம்? அவரது நாடகப் பாடலின் வரிகள் இப்போதும் ஒரு காலத் துயராக ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

## நெஞ்சக்கரங்கள் - நவீன நாடகம் - ஓர் மனப்பதிவு

1996இல் கிளிநொச்சி நகரம் சூனியப் பிரதேசமானது. அக்கரையான், வன்னேரி, ஆணைவிழுத்தான், ஜெயபுரம் மல்லாவி என இம் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்த காலம் "ஜயசிக்குறு" இராணுவ நடவடிக்கை ஆரம்பமான காலம்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி அக்கரையானில் இயங்கியது. உயர்தர வகுப்பு மாணவர்களின் தயாரிப்பில் அ. சத்தியானந்தனின் நெறியாள்கையில் அறிக்கை செய்யப்பட்ட நாடகம்.

பாரம்பரிய சமூகத்தின் கூட்டு வாழ்க்கையும் குதூகலமும் கோரமாகக் குலைக்கப் படுகிறது. மக்கள் வேரும் வேரடி மண்ணோடும் பிடுங்கியெறியப்பட்டு இடம் பெயர்கின்றனர். இடப்பெயர்வு அவலம் - குறிப்பாக வன்னிக் காடுகளுக்குள் படும் துயரங்கள் - வறுமையின் கொடூரப் பிடிக்குள் போரின் வக்கிரத்துள் வதைபடும் கணங்களை இவற்றினால் மனம் சோர்ந்து போய் வாழ்க்கையை வெறுத்து விரக்தியின் விளிம்புக்கு சென்று மீள்கின்றனர். எனினும் இந் நிர்க்கதியான நிலைமைக்கான மூல காரணத்தைத் தேடுவதோடு நிறைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துயரப்பாதையை" உடைத்து வாழ வேண்டும் என்ற முனைப்போடு வாழ்வின் மீது உறுதியான பற்றுதலோடு மரணத்துள் வாழப் புறப்படுதலே அரங்கச் செய்தியாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்பட்ட நாடகமே நெஞ்சக் கரங்கள் ஆகும்.

நாடக மாந்தர் அனைவரும் "வகை மாதிரிப்" பாத்திரங்களாக சித்தரிக்கப்பட்டு சம்பவங்களைப் பொதுமையாக்கி காட்சிப் படிமங்களாக நிகழ்த்திக் காட்டினர். வீடு வாசல் உடமை இழந்ததின் பின்னர் வறுமை தலைவிரித்தாட நிவாரணத்துக்காக மக்கள் தவம் கிடப்பதும் வரிசையில் நின்று முண்டியடிப்பதும் உணவுப் பொருட்கள் கிள்ளித் தெளிக்கையில் மக்களின் நடத்தைகள் நக்கல் நளினங்களோடுகேலிப்படுத்தல் பண்பு விரவி வர சித்தரிக்கப்பட்டது. ஒரு காலத்தின் பாடுகளை பதிவு செய்த நாடகம் நெஞ்சக்கரம் என்பதால் இந்நாடக செயற்பாட்டில் பங்கு கொண்ட பலர் இன்னும் இக்கலை அனுபவத்தை மறக்காமல் அசைபோடுவதுண்டு போர்ச் சூழலின் கொடூரங்களுக்கு மத்தியிலும் ஆரோக்கியமான அரங்கப் பண்பாட்டுச் சூழல் ஒன்று நிலவியது நினைக்க மனம் ஆறுதலடைகிறது.

இன்று எம் மத்தியில் நாடக முயற்சிகளில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டுள்ள போதிலும் வெற்றிடங்களை இயற்கையும் வரலாறும் ஒரு போதும் விடுவதில்லை என்ற நம்பிக்கையோடு காத்திருப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நட்பும் நம் வாழ்வும்




திருமதி த. சோபனா
பிரதேச செயலகம், கரைச்சி


பூமியிலே யனித்தவுடன்
அன்புடனே அரவணைத்த
அம்மாவின் நட்பு - அது!
பாசமாய் எனை அழைத்து
தோளினிலே சுற்றிவரும் அந்த நாள்
அப்பாவின் நட்பு - அது!
எட்டி அடித்து வைத்து
எட்டடி எடுத்துவைக்க
துணைபுரியும் அந்தநாள்
சகோதரின் நட்பு- அது!

முன்பள்ளி வயதினிலே
மழலைகளாய் நாமிருந்த
அந்தநாள் ஓர் - நட்பு!
ஆரம்பப் பள்ளியிலே
ஆர்வமாய் நான் படிக்க
ஆசானின் நட்பு - அது!
குழந்தைப் பருவமதில்
குதூகலமாய் திரிந்த
அயல்வீட்டுத் தோழமையும்.
ஓர் வகையில் நட்புத்தான்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 5 பரீட்சைக்கு போட்டியுடன் படித்திடவே
கிடைத்திடும் ஓர் - நட்பு !
O/L படிக்கவென்று ஒய்யாரமாய் திரிந்த
அந்த நாள் ஓர் - நட்பு !
கால ஓட்டத்தில் காதலனாய் வந்தவரும்
ஓர் வகையில் நட்புத்தான் !
பள்ளிப்பருவத்தில் உயர்தரம் படிக்கையிலே
உள்ளங்கள் ஒன்றிணைந்து
உண்மையால் உருவாகியது உரிமை நட்பு!
கண்ணிற்கு குளிர்ச்சியென்று கற்பனையில்
எண்ணி நான்
நட்பாய் பழகிடலை!

பல்கலை செல்லவில்லை - எண்றெண்ணி
வாழ்வினிலே சலிக்கவில்லை !
கற்றகல்வி தனைக்கொண்டு
வேலை ஒன்று பெற்றிட்டேன்!
வேலை பார்க்கும் இடத்தினிலே
எமைப்புரிந்து நடந்திட்டால்
அதில் கிடைக்கும் - நல்ல நட்பு !
நட்பினிலே பலவகைகள்
புரிந்து கொண்டால் ஒளிமயமே!

வாழ்க்கைக்கு துணை என்று
வந்தவரும் நட்புத்தான் !
வாழ்வினிலே எமக்குவந்த
குழந்தைகளும் நட்புத்தான் !
வாழ்க்கைவட்டம் சுழல்வதைப்போல்
வாழும் வரைக்கும் நாம்
நட்புடனே வாழ்ந்திடனும்!
எப்படியும் வாழ்ந்திடலாம்
என்றில்லை மனிதவாழ்வு!
இப்படித்தான் வாழ்ந்திடனும்
என்று சொல்லும் - நல்ல நட்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிப் பயன்



திருமதி. ஜெயசுதா விஜயகுமார்
ஆசிரியர்
கிளி/கிளிநொச்சி ம.வி

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்று கூறினார் ஔவையார். பரந்த இவ் உலகிலே கணக்கிட முடியாத அளவில் மனித உயிர்கள் பிறப்பெடுத்துக் கொண்டிருக் கின்ற போதிலும் இப்பிறப்பின் பயன் உணர்ந்த வர்கள் சிலரே. அவர்கள் மட்டுமே உலகம் வாழும் வரை வாழ்பவர்கள். நாம் எங்கிருந்து வந்தோம்? ஏன் இவ்வுலகில் வந்து பிறந்தோம்? எங்கு செல்ல இருக்கின்றோம்? எதுவுமே எமக்குத் தெரியாது. ஆனால் இவ்வுலகையும் எம் உடலையும் நிலையானதாக எண்ணி இறுமாந்து வாழ்ந்து கொண்டிரு க்கின்றோம். பிறவிப் பயன் எதுவென யாரும் சிந்திப்பதில்லை. பிறவிப் பயன் ஒன்று உண்டு என்பதையும் அதனை அடையும் வழியை உணரவும் யாரும் முயல்வதில்லை.

"உன்னையே நீ அறிவாய்" என்று சொன்னார் சோக்கிரட்டிஸ் ஆனால் இன்று உலகைக் காண்பதிலும் பிறரைக் குற்றம் காண்பதிலுமே தன் நேரத்தைச் செலவிடுகின்றது மனித குலம். அது மட்டுமா? சுயநலத்தின் அடிப்படையில் பதவி, பட்டம், பெயர், புகழ், பணம், பகடு என்பவற்றின் மீது அதீத பற்று வைத்து இதனால் ஆசை, கோபம், பொறாமை, காமம் போன்ற உணர்வுகளுக்கு அடிமையாகி தன்னிலை மறந்து தடுமாறி நிற்கின்றது மனித குலம். பிறவிப் பயன் உணரா மாந்தர்க்கு ஏது நேரம்

"தடம் பார்த்து நடப்பவர்கள் மனிதர்கள்
தடம் பதித்து நடப்பவர்கள் மகான்கள்"

இன்று போதைப் பொருளிற்குள் பதுங்கிக் கொண்டு தடம் மாறி நடக்கின்றது மனித கூட்டம். உள்ளம் கையில் உலகைக் கண்டு ஊஞ்சலாடுகின்றது. உல்லாசமாய் உண்மைப் பொருள் உணர மாந்தர்க்கு ஏது நேரம்? இன்று ஓர் கவிஞன் சொன்னான்.

"கள்ளிப் பாலிலிருந்து தப்பிய பெண் பிள்ளைகளை, கற்பழித்துக் கொல்கின்றார்கள்" என்று எவ்வளவு உண்மை பெறுதற்கரிய மனித குலத்தின் பிறவிப் பயன் இதுவா?

அன்று ஆலயங்கள் சில உள்ளே அடியார்கள் கூட்டமோ பல இன்று ஆலயங்கள் பல உள்ளே ஆட்கள் கூட்டமோ சில அன்றைய சமயப் பெரியோர்கள் தம்மை முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு அர்ப்பணித்து தம் பின்னே வரும் சமுதாயத்தையும் நல்வழிப்படுத்தி பிறவிப் பயன் அடைந்தார்கள். ஆனால் இன்று சுயநலனிற்குள் தம்மைப் புதைத்துக் கொண்டு பொது நலம் பேசும் பெரியோர்களே அதிகம்.

மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்
மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்
இறைவன் மனிதனுக்குச் சொன்னது பகவத்கீதை
இவையெல்லாம் நல்வழிநூல்கள் இவற்றின் வழி மறந்து மனிதன் பல நாளாச்சு.

"சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை" சொன்னார் சுவாமி விவேகானந்தர். சுயநலச் சாத்தான்களாகவே மாந்தர்கள் மாறி விட்டனர். சுயநலமற்ற இறைவனைச் சந்திக்க ஏது நேரம்.

உலகிலுள்ள எல்லாவற்றுக்குமே தலைமைத்துவம் என்ற ஒன்று உண்டு. உலகிற்கே தலைமைத்துவமானவன் இறைவன். அவனை வழிபட்டு அவன் பதம் சேர வழிசமைப்பவர் எவரோ அவரே பிறவிப் பயன் பெறுபவர் ஆவார். அவ்வழியானது தூய்மையானது, சுத்தமானது, அழுக்குகள் அற்றது. அதுவே மாந்தரின் புனிதமான வாழ்க்கை முறையாகும். இறைவன் திருவருள் பெற்றவர் பிறவித் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவர். ஏனையோர் பிறவித் துன்பமாகிய கடலுள் ஆழ்ந்து போவர். இதனையே முக்காலமும் உணர்ந்த திருவள்ளுவர்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார், நீந்தார்
இறைவன் அடிசேராதார்" என்று அழகாகவும் ஆழமாகவும் கூறுகின்றார். எனவே சுயநலத்தின் அடிப்படையில் தீய கருமங்களில் ஈடுபட்டு பிறவித் துன்பமாகிய கடலுள் மூழ்கிக் கிடக்காமல் தூய உள்ளத்தோடும், இறை வழிபாட்டோடும் கூடிய நல்ல கருமங்களை ஆற்றி பிறவிப் பயனாகிய இறைபதம் எனும் திருவடிசேர முயல வேண்டும். அதுவே பெறுதற்கரிய பேறு பெற்ற மனிதப் பிறவியின் பெரும் பயனும் ஆகும்.

வெற்றியோ தோல்வியோ விருப்பமுடன் ஏற்றுக் கொள்
தோல்வி கண்டு சிறிதும் கலங்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Leadership



Miss S . ANUSHA
Faculty Of Management.
Studies and Commerce
University Of Jaffna.

## Introduction

Every one manages. We manage our finances, time, careers, and relationship. We tend not to think of these activities as "man aging" or of ourselves as being "managers" nevertheless, they are. These examples of managing or being managers are relatively simple and straight forward, even though we may many find of them fraught with difficulty. It is when the concepts of managing or being a manager are applied to organization that complexity increases – almost always exponentially. At this point it becomes necessary to study and understand the theoretical bases of management.

The development of management as an academic discipline based on a body of knowledge that can be taught is a recent development and is generally attributed to the work of peter.of drucker in the latter half of the $20^{th}$ century.

Managers are persons who are formally appointed to positions of authority in organization. They enable others to do their work and are accountable a higher authority for work results.

## Leadership and Management

- ❖ Leadership and management the difference leadership is different from management, but not for the reason most people think….. Leadership and management are two distinctive and complementary systems of action.
- ❖ Leadership and management: difference most U.S corporations (and schools) are over managed and underled management is about coping with complexity good management brings a degree of order and consistency to key dimensions like the quality and profitability of products. Leadership, by contrast, is about coping with changing Major changes are more and more necessary to service and compete effectively in this new environment. More change always demands more leadership.
- ❖ Leadership and management: The difference these two different functions – coping with complexity and coping with change – shape the characteristic activities of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

management and Leadership. Each system of action involves deciding what needs to be done, creating networks of people and relationship that can accomplish an agenda, and then trying to ensure that those people actually do their job. But each accomplishes these three tasks in different ways.

❖ Some theorists and academicians distinguish manager and leaders. Based on the view that managing is more caretaking and maintaining status quo (transactional)whereas leading I more visionary and dynamic (transformational). That distinction may be more important pedagogically than in practical application, however – especially at the organization is operating level. Senior Managers must ensure deffective current organizational activities and that on organization's future is envisioned, using this vision, the organization can be transformed as needed. as they work to achieve organizational objectives, managers use technical, conceptual, and interpersonal skills. These skills are applied in various proportions. Depending on the manager's task and level in the organizational hieranchy.

❖ A study which showed managers as risk – averse, leaders appeared as risk-seekers, although they are not blind thrill-seekers. When pursuing their vision, they consider it natural to encounter problems and hurdles that must be overcome along the way. The following tables summarizes the above and more features that gives a sense of differences between a leader and being a manager.

| Subject | leader | Manager |
|---|---|---|
| Risk | takes | Minimizes |
| Rules | Breaks | Makes |
| Likes | striving | Action |
| Persuasion | sell | Tell |
| Energy | passion | Control |
| Culture | shapes | Enacts |
| Dynamic | proactive | Reactive |
| Power | Personal charisma | Formal authority |
| Appeal to | heart | Head |
| Decision | facilitates | Makes |
| Seeks | vision | objectives |
| Approach | sets direction | plans details |
| Horizon | Long – term | Short – term |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Have
subordinates Followers

Wants Achievement Results

Exchange Excitement for work Money for work

Style transformational
transactional

Conflict uses avoids

Truth seeks
establishes

Concern what is right Being right

Credit gives Takes

Direction new road
Existing roadsFocus
leading people
managing work

Essence
change
stability

## Effective leadership

Effective leadership means making most of opportunities to learn to lead, whether by observing others, through formal training or through careful evaluation of practical experience.

Effective leaders influence individuals and organizations. Leaders accept responsibility for achieving results and create the necessary environments that contribute to individual and organizational success.

Effective leadership is a shared responsibility for achieving collective / organizational goals regardless of positional or organizational authority; acknowledging that increasing that increasing levels of positional authority yield greater impact in an organization. Leadership is accomplishing together what individuals cannot accomplish alone.

- ATTEMPTED LEADERSHIP is any effort the administrator makes to influence superiors, associates, or subordinates.
- SUCCESSFUL LEADERSHIP is the ability to get others to behave as the administrator intended. The job gets done and the administrator's needs are satisfied, but those of the other people are ignored.
- EFFECTIVE LEADERSHIP is the situation where people perform in accordance with the administrator's intention and find this a path to the satisfaction of their needs.

## The Five Levels of Leadership

### Level 1 – Position

❖ Entry level of leadership

❖ Influence gained by title only

- People who stay at this level get into territorial rights, protocol, tradition and organizational charts.....

Control by authority of position



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Real leadership is:
  - ➢ More than authority
  - ➢ Being the person others will gladly and confidently follow

❖ Boss vs. leader

- The boss drives his workers; the leader · coaches them
- The boss depends upon authority; the leader on goodwill
- The boss inspires fear; the leader inspires enthusiasm
- The boss says "I"; the leader, "we"
- The box fixes the blame for breakdown

**Level 2: Permission**

❖ Foundation of leadership

**"Leadership is getting people to work for you when they are not obligated"**

(Fred Smith)

❖ People don't care how mush you know until they know how much you care.

❖ Leadership begins **with the heart,** not the **head**

➢ People who are unable to build solid, lasting relationships will soon discover that they are unable to sustain long, effective leadership.

**"you can love people without leading them but you cannot lead people without loving them"**

**(Maxwell, J.C)**

## Level 3: Production

❖ The "results level"

❖ Things are beginning to happen

Morale is high

Goals are being realized

❖ The "big mo" – momentum

- Everyone is result – oriented
- Results are the main means for the activity at the first place

❖ In Level 2, "Relationship", people get together to be together

❖ In Level 3, "Results Level", People get together to accomplish a common purpose – result oriented.

**Level 4: People Development**

❖ The "loyalty" level

❖ A leader is great, not because of his or her power, but because of his or her ability to empower others.

Success without a successor is failure.

Loyalty to the leader its highest peak when the follower has personally grown through the mentorship of the leader.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- At Level 2, the follower loves the leader.
- At level 3, the follower admires the leader
- At Level 4, the follower is loyal to the leader

❖ You win people's heart by helping them grow personally

"There is a great man who makes every man feel small. But the real great man is the man who makes every man feels great."

(G.K. Chesterton)

Level 5 : Personhood

Only a lifetime of proven leadership will allow us to attain level 5 and reap the rewards that are eternally satisfied.

Conclusion

Leadership and management are very closely linked or interconnected with each other. We are All leaders! Everyone needs to learn, demonstrate and take responsibility for leadership in their organization. Leaders need to know themselves! Unless you know how to lead yourself, you cannot successfully lead others. Leaders must be CLEAR! And communicate this clarity to those around them as clarity lead to confidence and confident people are effective people.

## Reference


❖ Maxwell,J.C"Developing The Leader Within You".

❖ www.Articlesbase.com

❖ www.Google.Com

❖ www. Wikipedia.Com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வளர்ச்சியில் தனியார் கல்வி நிலையங்களின் பங்கு



அ. பங்கையற்செல்வன்
பிரதி அதிபர்
கிளி/கனகபுரம் ம.வி

இலங்கையின் கல்வி அமைப்பின் இலவச கல்வி முறைமை காரணமாக இந்நாட்டின் கல்வி கற்றோர் வீதம் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு ஈடானதாகவும் ஆசிய அபிவிருத்தி, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் முதன்மையானதாகவும் காணப்படு வதையிட்டு இலங்கையர்கள் அனைவரும் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும். கல்வித்தரம் அதிகரித்ததன் காரணமாக மக்களின் வாழ்க் கைத் தரமும் உயர்ந்து காணப்படுகின்றது. இதனை விடவும் பொருளாதார மேம்பாடு, சமூக மேம்பாடு என்பவற்றின் உயர்விற்கும் கல்வி வளர்ச்சி பெரும் பங்காற்றியுள்ளது. பாடசாலைக் கலைத் திட்டத்தில் பாடங்களைக் கற்பித்து மாணவர்களை ஏட்டுக் கல்வியுடன் மட்டும் நிற்காது ஏனைய திறன்களை வளர்த்துக் கொள்வதற்காக இணைக்கலைத் திட்டங்களும், மறைக் கலைத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இணை, மறை கலைத்திட்டங்கள் மூலமாக மாண வர்கள் பல்துறை ஆற்றல் சார்ந்தவர்களாக வளர்த்தெடுக்கப்படுகின்றனர். பாடசாலையில் நடைமுறை சார் கல்வியோடு, முறைசாராக் கல்வி முறையையும் மாணவர்களின் மேம் பாட்டுக்காக இன்று பாடசாலைகளில் நடை முறைப்படுத்தப்படுகின்றது.

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் இன்று கலைத் திட்ட செயற்பாடுகளுக்கு மிகவும் சவால் நிறைந்தனவாகக் காணப்படுகின்றது. அத்துடன் பல்வேறு துறைசார் பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை அல்லது ஆசிரியரின்மை போன்ற காரணங்களால் தாம் இழந்து போகின்ற கல்வியை எங்கோ ஓர் இடத்தில் மாணவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை இன்று உலக நாடுகளுடன் சரிசமனாக பல்வேறு துறைகளில் சவால்களுக்கு முகம் கொடுக்க வெறுமனே அரச கல்வி நிறுவனங்களை மட்டும் தங்கியிராமல் தனியார் துறையின ரிடமும் கற்க வேண்டிய நிலமை இன்று காணப்படுகின்றது. புதிய உலக ஒழுங்கிற்கு ஏற்ப வேலைக்கான ஆட்களை தயார் செய்யும் பாரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியை தனியார் துறையினரே இன்று செய்து வருகின்றனர். அரசாங்கம் புதிய கல்விக் கொள்கைகளை உடனுக்குடன் நடைமுறைப் படுத்தும் நிலைமை உள்ளது. அரசினுடைய கொள்கை வகுப்புக்கள், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு என்பன காரணமாக புதிய கொள்கை களை உடனுக்குடன் ஏற்படுத்த முடியாத நிலைமை உள்ளது. இதனால் தனியார் துறையை அதிகம் மாணவர்கள் கல்விக்காக வும், உயர் கல்விக்காகவும் நாடுகின்ற நிலைமை இலங்கையில் காணப்படுகின்றது. கல்விக்காக அரசாங்கத்தினால் செய்யப்படும் செலவானது குறைவாக நிறைவாக வழங்க முடியாத நிலைமை காணப்படும்போது அதனை தனியார் துறை வழங்கவும் அதேவேளை உற்பத்தி செய்யப்படும் மனித வளத்தினை உலக சந்தையில் நிரப்பவும் தயாராக இருப்பதால் தனியார் துறையினை கல்விக்காக நாடும் நிலைமை அவதானிக்கப்படுகின்றது. உயர் கல்வியைப் பொறுத்தவரை எமது நாட்டிலுள்ள 13 பல்கலைக்கழகங்கள் மட்டும் எமக்கான தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதனவாக உள்ளன. உயர்தர வகுப்பில் தகைமை பெறும் மாணவர்களில் 12% மான மாணவர்களே பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படு கின்றனர். இதனால் மிகுதி மாணவர்கள் தமது பட்டப்படிப்புக்காக தனியார் துறையினை நாடும் நிலைமை அவதானிக்கப்படுகின்றது.

பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரை இழந்த கல்வியை ஈடு செய்யவும் ஆசிரியர்கள் இல்லாத வெற்றிடங்களை நிரப்பவும் வினைத் திறனுடைய வளவாளர்களைத் தேடிச் செல்கின்ற தன்மையாலும் தனியார் கல்வி நிலையங்களை நாடி மாணவர்கள் செல்வது இன்று தவிர்க்கமுடியாதாகின்றது.

எமது கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை, யாழ்ப்பாணத்திலிருந்து தனி மாவட்டமான காலம் தொட்டு தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு கணிசமாக அள விற்கு இருந்து வந்துள்ளது. சில கல்வி நிறுவனங்கள் தோன்றுவதும் அவை தொடர்ந்து பங்காற்றுவதும், சில தோன்றிய வேகத்திலே மறைந்து பொவதும் நாம் அவ தானித்த ஒன்று அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் தனியார் கல்வி முறைமை அவசியமான தொன்றாக உணரப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல கல்வி நிறுவனங்கள் தொழிற்படினும் சில தமக்குரிய உயரிய பண்புகளுடன் இயங்கி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பங்காற்றி வருகின்றன. இந்த வகையில் "றோயல் கல்வி நிலையம்" கடந்த இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக இந்த மாவட்டத்தில் இடைநிலைக் கல்வி மேம்பாட்டிற்காக அயராது பாடுபட்டு பல்வேறு நெருக்கடிகள், இடப்பெயர்வுகள், இழப்புக்கள் மத்தியில் உயரிய பணியாற்றி இன்று "வெள்ளி விழா" ஆண்டின் கால் பதித்து நிற்பது பெருமைக்கும் மகிழ்வுக்கும். பாராட்டுக்கு முரியது. ஒரு கல்வி நிறுவனம் இந்த மண்ணின் மாணவர்களுக்காக ஓய்வின்றி 25 ஆண்டுகள் பணியாற்றுவது சாதாரண விடயமல்ல இடப் பெயர்வு காலங்களில் எல்லாம் தாம் சென்ற இடங்களில் மாணவர்களின் மேம்பாட்டுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை வழங்கியது என்பது மிகவும் மதித்துப் போற்றக்கூடிய விடயமாகும்.

இந்த றோயல் கல்வி நிலையத்தின் ஸ்தாபகரும் இயக்குநருமான திரு. எஸ். குமார் அவர்களின் அயராத முயற்சியும், அவரது துணைவியாரான ஆசிரியர் திருமதி. குமார் புவனேஸ்வரி அவர்களின் பங்களிப்பும் இந்நிறுவனத்தை தடங்கலின்றி சிறப்பாக பணியாற்ற வைத்திருக்கிறது. இங்கு பணிபுரியும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும் இந்நிறுவனத்திள் கல்விப் பணிக்கு காரணமாக அமைந்து நிற்கிறது. இன்று வெள்ளி விழாக் காணும் இக்கல்வி நிறுவனம் பொன் விழா மூலம் கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் கல்வி உயர்வுக்கு பங்காற்ற வேண்டும் என இப்பிரதேச கல்விச் சமூகம் அலாவி நிற்கிறது.

ஒரு மனிதனை சிந்திப்பது சிறந்தது
இன்னொரு மனிதனை சிந்திக்க வைப்பது அதிலும் சிறந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவைதருமுகிலி






## A Note on the tomb

**(கல்லறைக் குறிப்பு)**

Name - Mr. M. S. Anbuchelvan

(பெயர்) - (திரு. ம. ச. அன்புச்செல்வன்)

Date of Birth (பிறப்பு) 17.07.1969

Married on (திருமணம்) - 09.05.2023

Child :- 01 A female - Name - Auwai tharu muhili

(குழந்தை) - (01 பெண் - பெயர் - ஔவை தரு முகிலி)

- Later part of life is completely for the daughter.

- (பிற்கால வாழ்வு மகளுக்கெனவே அமைந்தது.)

Daughter departed on

(மகளின் பிரிவு) - 12.12.2044

Died on

(அவனின் மரணம்) - 13.12.2044

for him, his life was a great puzzle. He could neither understand it nor solve it. He was also not understood by others. In trying to solve the puzzle he died, leaving the task for others.

அவனது வாழ்வு அவனுக்கே ஒரு பெரும் புதிராயிருந்தது. அது அவனுக்கும் புரியவில்லை. அந்தப் புதிரை அவனால் விடுவித்துக் கொள்ளவும் முடியவில்லை. அவனையும் எவருக்கும் புரியவில்லை. புதிரை விடுவித்துக் கொள்ளும் எத்தனமொன்றின் போது அவன் ஒரு நாள் இறந்து போனான். புதிரை உலகுக்கென விடுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா நாட்களும் ஒரே மாதிரியாகத் தான் புலர்வதாகவும் சரிவதாகவும் அவன் பலமுறை தன் மகளுக்கே கூறியிருக்கிறான். அவனுக்கும் மகளான ஔவைக்கும் இந்தக் கருத்தில் ஒருநாள் கூட ஒற்றுமை இருந்தத தில்லை. ஔவை எல்லா நாட்களும் வெவ் வேறானவை, நாங்கள் எப்படி முயற்சித்தாலும் எல்லா நாட்களிலும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது என்றே நம்பியும் வருபவள். ஔவை இதைப்பற்றிப் பேசும் போது தனது மகளின் பிடிவாதக் குணத்தை மாத்திரமே இரசிப்பவனாக இருந்துள்ளான். ஒரு நாள் கூட தன் புலன்களை அவள் கருத்தில் செலுத்தினான் இல்லை.

தனது அன்பு மகளின் கடிதத்தை ஏழாவது தடவையாகவும் வாசித்து விட்டான்.

முதல் தடவை வாசித்து முடித்தபோது கைதடியை மெல்லத் தொட்டு மகளே உனக்கு என்னோடு அளவுக்கதிகமான விளையாட்டுத் தான். உன்னுடைய குறும்புக் குணங்களுக்கு துடிப்பான சிந்தனைப் பரீட்சைக்கும் என் வயது இடங்கொடுக்குதில்லை. நீயொரு குழந்தை இப்போது இந்த வீட்டின் ஏதாவது ஒரு அறையில் ஒளிந்திருந்து என்னைப் பார்த்துக் கொண் டிருப்பாய் என்பது எனக்குத் தெரிகிறது. என்னிடம் வந்து விடுமகளே. மெதுவாகத் தலையை நிமிர்த்தி யன்னல் கம்பிகள் ஊடாக முன் அறையைப் பார்த்தான் உள்ளே பாதி இருட்டில் ஒன்றும் புலப்படவில்லை. மனதுக்குள் சிரித்துக் கொண்டே பதின் மூன்றாவது தடவையும் கடிதத்தை வாசித்து விட்டிருந்தான். இப்போது அவனுக்குச் சிரிப்பு பறிபோயிருந்தது. ஆனால் தன் மகளிடம் அவன் வைத்திருந்த நம்பிக்கையும் ஔவையிடம் பொதுவாகக் காணப்படும் குறும்புத் தனங்களும் ஒரே நேரத்தில் வற்றிக் கொண்டிருப்பது போல் உணர்ந்தான்.

முகத்தில் கிழட்டுத்தனம் விரிய ஆரம் பித்து விட்டது. உதடுகள் கோணல்மாணலாக நெளிந்து கொண்டிருந்தது. ஒரு புள்ளிபோல் உட்சுருங்கி இமைகள் நரைத்த கண்களில் இருந்து கண்ணீர் சூடாக இறங்கத் தொடங்கி விட்டது. கடிதத்தில் அது பட்டுவிடக்கூடாது என்று பல முறை கண்களைத் துடைத்துக் கொண்டான். கண்ணீரைக் கைகளில் பிசைந்த போது மனம் கிளம்பிற்று. அவனுக்கு கண்ணீர் மணப்பது ஆச்சரியம் தருவதாக இருந்தது. இது உண்மையில்லை ஆனால் உண்மை அல்லாமலும் இல்லை. இரண்டுக்கும் நடுவே வேறொன்றும் இருக்க முடியாது. என் உடலின் அத்தனை துணுக்குகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் அருமை மகளே ஔவைத் தாயே இதோபார் எல்லா இடங்களிலும் என் முன்னே நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய், கண் முன்னே ஓடியோடி ஒளிக்கிறாய், நீ நின்ற உன் வீட்டின் முன் பகுதி நீ இல்லாமலேயே ஒளிர் கிறது.

அதற்குப் பின்னர் அவனால் கடிதத்தை வாசிக்க முடியவில்லை. ஆரம்பத்தில் அர்த்தம் அல்லாமல் இருந்த சொற்கள் கூட இப்போது அர்த்தத்தின் உச்சத்திற்குச் சென்று அவனைப் பிடுங்கித்தின்றன. எழுபத்தைந்து வயதை அவன், இதற்கு முதல் கிழடு தட்டிய வயதாக உணர்ந்ததே இல்லை, ஆனால் இப்போது அதை மோசமாக உணர்ந்தான். எழுந்து நடக்கச் சக்தி அற்றவனாக மாறிப் போனான். கைதடியை இறுகப் பிடித்துக் கொண்டு ஔவை ஔவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று உரக்கக் கத்தினான். சிறிது நேரத்தில் அவள் வந்து விடுவாள் என்று காத்திருந்தான்.

மாலைப்பொழுதில் கூட்டை அடையும் குருவியொன்று திடீரென்று பக்கத்தில் கத்திக் கொண்டு போனபோது ஒளவைதானோ என்று திரும்பினான். கைகள் நடுங்கின. நீண்ட நேரம் கால்களை மடக்கி இருந்ததால் முழங்கால் விறைத்திருந்தது. நீளமாக வளர்த்திருந்த தலைமுடி அவனுக்கு இதுவரை காலமும் அழகாகவே இருந்ததாக நம்பியனான். தந்தையின் மடியில் இருந்தவாறு முடியை அளைந்து கொண்டிருந்த ஒளவை ஒருநாள் அப்பா நீங்கள் காரணமே இல்லாமல் வளர விடுகிறீர்கள். இருந்தாலும் நீங்கள் அழகாகவே இருக்கிறீர்கள். ஒரு வேளை இதை நீங்கள் வெட்டி நீக்கினீர்களானால் இளமையாகத் தோற்றமளிப்பீர்களோ என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது. என்று கூறியிருந்தாள். இன்று தான் அவனுக்கு தனது நீண்ட முடிகள் அழுக்காகவும் தன்னை எவ்வளவு மோசமான அழகற்ற கிழவனாகவும் மாற்றிருப்பதை உணர்ந்தான்.

தன்னுடைய தளர்ந்த உடலை அசைத்து அசைத்து எழுப்பி நின்றான். வீட்டின் ஏதோ ஒரு இடத்தில் மகள் இருக்கிறாள் என்ற எண்ணத்தோடு மகளே மகளே என் அழகிய ஒளவையே நீ இல்லாத எல்லா இடங்களும் நரகத்தின் இருப்பிடம் போல தோற்றம் தருகிறது. உனது குறும்புத் தனத்தக்கு ஒரு அளவே வேண்டாமா? என் முதுமை என்னுடையதல்ல. அது இயற்கையினுடையது. உனக்கும் இது போல் ஒருநாள் இருக்கிறது. அந்த நாட்களை உனக்குப் புரியவைக்க முடியாது. நீ குழந்தை, வேகமான நகரத்தில் வாழ்ந்து கொண்டிருக் கிறாய். உள்ளங்கையில் கோடி உலக அனுபவங்களைக் கண்டு வியக்கிறாய். நீ நினைப்பது தவறு. என்னைப் பிரிந்த நாளொன்று தீர்க்க முடியாத துயரை உன்னிடம் தந்துவிடும். அழுது ஆழுதே நீ களைப்பு அடைந்து விடுவாய். ஐயோ அந்த நாட்கள் உனக்கு வேண்டாம். உனது சரிப்பின் மகத்துவத்தை மிக நெருக்கமாகப் பார்த்த கிழவன் நான். அதில் இழந்து போன எனது எல்லாச் சுதந்திரங்களையும் கண்டேன. கிழவன் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே வீட்டின் எல்லாப் பக்கங்களையும் கூர்ந்து பார்த்தான். அளவுக்கதிகமான தள்ளாட்டம் அவன் நடையில் தெரிந்தது. அப்படியிருந்தும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு வேகமாகத் தான் நடந்தான். ஏதோ ஞாபகம் வரப்பெற்றவனாக பாதி ஓட்டமும் நடையுமாக தாண்டித் தாண்டி வீட்டின் முன்புறம் உள்ள கிணற்றுப்பக்கமாய்ச் சென்றான். நெஞ்சை ஏதோ ஒன்று இறுக்குவது போல இருந்தது. சில விநாடிகள் அவ்விடத்தில் நின்று விட்டு கைத்தடியைக் கிணற்றுக்கட்டில் ஊன்றி வேகமாக கிணற்றை எட்டிப் பார்த்தான். உள்ளே எந்த அசைவும் இல்லாமல் இவன் முகத்தையே காட்டியது தண்ணீர். அவ்வளவு கொடியவனா இந்தக் கிழவன்.....? நெஞ்சு ஒருதரம் வெளித்தள்ளி அடங்கியது.

தன்னுடைய தேவையற்ற சந்தேக மாகவே இதை நினைத்துக் கொண்டான். ஒளவை கோழையல்ல. வாழ்க்கையைத் தானாக முடித்துக் கொள்ளும் அவசரக்காரியு மல்ல, வாழவேண்டும். உலகைத் தாண்டி எல்லா நட்சத்திரங்களிலும் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவேண்டும் என்று துடிக்கும் வேகக் குறும்புக்காரி அவள். நடை தளர்ந்து மீண்டும் திண்ணைக்கே வந்தான் அவன். நம்பவே முடியாமல் இருந்தது அவனுக்கு. ஔவையின் கடிதம் திண்ணையில் சடசடத்துக் கொண் டிருந்தது. கடிதத்தை எடுத்து இறுக அணைத்துக் கொண்டான். தனது மகளை தழுவிக் கொள்ளும் உணர்வு இருந்தது. எத்தனையோ முறை ஔவை நோயால் துவண்டபோது மாத்திரைகள் கொடுக்காத சுகத்தை அவன் மடி கொடுத்திருக்கிறது. வேகமாகக் குணமடைந்து துள்ளி விளையாட ஆரம்பித்து விடுவாள். இருவரும் சிரித்து மகிழ்ச்சியில் திளைக்கத் தொடங்கி விட்டால் ஊரே வேடிக்கை பார்த்து நிற்கும் இப்படியொருநாள் இன்றும் வந்துவிடாதா என்று ஏங்கினான்.

திண்ணையிலிருந்து வெளியுலகை வெறித்துப் பார்த்தான். எல்லா நாட்களும் ஒரே மாதிரி இல்லை என்பது அவனுக்கு புரிய ஆரம்பித்து விட்டது. ஔவை கூறிய எல்லா நாட்களும் வெவ்வேறானவை. நாங்கள் எப்படி முயற்சித்தாலும் ஒரே மாதிரியாக எல்லா நாட்களிலும் இருக்க முடியாது என்று அவள் கூறிய வாக்கு சத்திய வார்த்தை போலப்பட்டது அவனுக்கு. காற்று வீரியம் குறைந்து கவலையுடன் விசிக் கொண்டு இருந்தது. மாலை வெயில் பழுப்பு நிறைந்திருந்தது.

நேற்று மாலை ஔவையும் அவனும் திண்ணையில் அமர்ந்து இருந்து இதே நேரம் உரையாடிக் கொண்டு இருந்தார்கள். இரண்டு குயில்கள் வெவ்வேறு தென்னையில் இருந்து மாறி மாறிப் பாடிக் கொண்டிருந்தன. குயில்களையும் அதன் பாடல்களையும் வெகு அக்கறையாக இரசித்துக் கொண்டிருந்தாள் அவள். இடைநடுவில் தானும் குயிலிலைப் போலக் கத்திப் பார்த்தாள். மேலும் ஒரு குயில் பாடுவது போலவே அவனுக்குக் கேட்டது. அப்படிக் கத்தக்கூடாது, குயில்களுக்கு இது பிடிக்காது என்று சொல்லி வைத்தான். சிறிது நேரம் யோசித்துவிட்டு நாளையும் இந்த குயில்கள் வருமா அப்பா என்று கேட்டாள் ஔவை. வரலாம் வராமலும் போகலாம் என்று சொன்ன கிழவனுக்கு அப்படியானால் நாளை இவைகள் வேறு எங்கையாவது போகக்கூடும் இல்லையா? பார்த்தீர்களா இவை எவ்வளவு சுதந்திரமான வாழ்வை அனுபவிக்கின்றன. எம்மால் இது முடியவில்லைத்தானே என்று சிறு வருத்தத்துடன் கூறியிருந்தாள். இவன் மனதுக்குள் நினைத்துக் கொண்டான். மகளே நீயும் சுதந்திரம் பற்றிச் சிந்திக்கின்றாய். நானும் சுதந்திரம் ஒன்றுக்காக மகுடங்களை இழந்திருக்கிறேன். வார்த்தை ஒன்று தான் ஆனால் அடையும் வழிகள் வெவ்வேறானவை.

அதே தென்னையில் இப்போது குயில் ஒன்றித்து இருந்து அழுது கொண்டிருந்தது. குயிலின் சத்தம் இன்னும் அதிகமாக ஔவையின் நினைவை, வேதனையின் எல்லா நாக்குகளும் ருசித்துக் கொண்டிருந்தன. தூரத்தில் கோயில் மணி ஒலித்துக் கொண்டி ருந்தது. அந்தச் சத்தம் கூட பயங்கரமாக இருந்தது. முடிந்து கொண்டிருக்கும் இந்த மாலை நாள் இதற்கு முன்னரும் அனுபவித் திராத ஒன்று. இனியும் இப்டியொரு மாலைப் பொழுது வந்து விடாது இருக்கும்படி அவன் ஔவையிடம் வேண்டினான். தனது மகளுடன் சேர்ந்திருந்த பல்வேறு பகல்களையும் பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைகளையும், இரவுகளையும் நினைத்து நினைத்து அழுது கொண்டிருக்கத் தொடங்கி விட்டான். அரை மணித்தியாலத்தில் ஐம்பது நாட்களில் பழைய வாழ்க்கை நினைவுகள் தோன்றி மறைந்தன. இந்த நிமிடத்திலேயே இறந்து போகலாம் என்று நினைத்தபோது, நாளை என் மகளை நான் காண்பேன். அப்போது இவையெல்லாம் பொய்யாகும். அவளின் குறும்புத்தனம் மட்டுமே உண்மையாக எஞ்சி நிற்கும் என நம்பினான் கிழவன். சோர்வும், வேதனையும் சேர்ந்து அவனை களைப்பு அடையச் செய்து விட்டன. மூச்சுச் சத்தம் செவிப்பறையில் கேட்டுக் கொண்டிருந்தது. அப்படியே திண்ணையில் சரிந்து கொண்டான். சிந்தனைகள் சுவரில் ஓடும் பல்லிகளை விட வேகமாக ஓடிக் கொண்டிருந்தன. எவ்வளவு நேரம் தூங்கியிருந்தான் எனத்தெரியவில்லை. மீண்டும் கண் விழித்தபோது நன்றாக இருட்டியிருந்தது. தன் காதுகளைக் கூர்மை யாக்கி யாராவது நடக்கும் சத்தம் கேட்காதா என்று தலையைச் சாய்த்தபடி காத்திருந்தான். ஏமாற்றமாக இருந்தது. எல்லாம் முடிந்து விட்டது என்று முணுமுணுத்துக் கொண்டே எழுந்து நின்று இரண்டு கைகளாலும் ஓங்கி ஓங்கி முகத்தில் அறைந்தான். அம்மா ஈஸ்வரி என் குழந்தைக்கு நீ தான் துணை, பாவம் என் மகள். அவளைப் பழிகாரியாக்கி விடாதே என்று தன்னால் முடிந்த மட்டும் கத்திச் சத்தமாகச் சொன்னான். மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டே அறைக்குள் நடந்து சென்று சாமித்தட்டில் இருந்த சிறிய விளக்கைப் பற்ற வைத்தான்.

அப்படியே தலையை சாமித்தட்டில் கவிழ்த்து என்னவெல்லாமோ மன்றாடிவிட்டுத் திரும்பிழயவனுக்கு மூலையில் இருந்த இரும்புப் பெட்டி கண்ணில் பட்டது. வேகமாகச் சென்று அதன் அருகில் அமர்ந்து கொண்டான். கிழவனுக்கு ஏதோ ஒரு விதப் பரபரப்பு தொற்றிக் கொண்டது. அவனுக்கு இது தாயிடம் இருந்து கிடைத்த பெட்டி, தாயைப் பிரிந்த காலங்களில் அவள் நினைவாக இதைப் பாதுகாத்து வைத்தான். அதற்குப் பின்னர் மனைவியிடம் அதைப் பொறுப்புக் கொடுத்திருந்தான். அக்காலங்களில் கொஞ்சம் ஆறுதலாகவே இருந்திருந்திருக்கிறான். பின்னர் மனைவியும் அவனைப் பிரிந்த பின்னர் மீண்டும் இவன் கைக்கே வந்து விட்டது இரும்புப் பெட்டி. ஔவை ஒருநாள் கூட பெட்டியைத் திறந்து பார்த்ததை அவன் கண்டிருக்கவில்லை. ஔவைக்கு இது பழைய இரும்புப் பெட்டியாதலால் இதைக் கண்டாலே வெறுப்பாக இருப்பதாக பல முறை இவனிடம் கூறியிருக்கிறான். இதை வீசி விட்டு புதியதாக ஒன்றை வாங்கித் துலையுங்கள். என்னைச் சுற்றி உள்ள எல்லாமே பழசு தான் என்று அடிக்கடி சத்தம் போடுவாள்.

ஆனால் ஔவையின் பேச்சை ஒருநாள் கூட இவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இன்று மூன்று பேர் நினைவாக கிழவன் பெட்டியை தடவித்தடவித் திறந்தான். உள்ளிருந்து பழமையான வாசம் வீசியது. ஔவையின் குழந்தைக் காலத்து உடைகள் கண்ணில் பட்டன. அப்படியே அள்ளி முகத்தில் அணைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதான். உடைக்குள்ளிருந்து ஔவையின் படம் ஒன்று கீழே விழுந்தது. உடைகளைப் போட்டு விட்டு படத்தைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு மழலைமொழி பேசி கிழவன் அழுதான். கடவுளே எனக்கு யாருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையே. நான் யாரிடம் போவேன். என்னைக் கொன்றுவிடு. எனக்கு மிச்சமாய் எதுவும் வேண்டாம் என்று புலம்பிக் கொண்டே கைத்தடியை எடுத்து சாமிப்படங்களை நோக்கி வீசினான். அது சுவரில் பட்டு விழுந்தபோது அருகில் இருந்த விளக்கெண்ணெய்ப் போத்தல் சரிந்து எண்ணெய் நிலத்தில் படர்ந்தது.

கிழவன் நீண்ட நேரம் அழுது ஓய்ந்த போது பசி வயிற்றைப் பிடுங்கியது. சிறுநீர் கழிக்க வேண்டும் போல இருந்தது. வரண்ட தொண்டைக்கும் நாவிற்கும் ஒரு குவளைத் தண்ணீர் கிடைத்தால் நன்றாக இருக்கும் போல்பட்டது.

திடீரென்று கிழவன் நிமிர்ந்திருந்தான், ஏதோ வைராக்கியம் கொண்டவன் போல உடம்பை முறுக்கிக் கொண்டான். ஔவை யாரவள். எனது மகள் செல்வனின் ஒரே புதல்வி, கோழைத்தனம் அவளுக்குப் பிடியாது. சீ நான் ஏன் இப்படி அழுகின்றேனோ என்று தன்னைத் தானே நொந்து கொண்டான். ஆனால் அவன் கண்கள் கண்ணீரால் நிரம்பியே காணப்பட்டன. பெட்டியில் ஓரமாக அடுக்கப்பட்டிருந்த டயரிகள் கண்ணில் தென்பட்டன. அடியில் இருந்த ஒன்றை இழுத்து பிரித்துப் பார்த்தான். உள்ளே அதே கடிதங்கள்.

### ஔவை எழுதிக் கொள்வது

அன்புள்ள அப்பாவுக்கு உங்கள் மகள் எழுதிக் கொள்வது நான் இங்கே கூறப்போகும் விடயங்கள் அனைத்துமே ஏற்கெனவே உங் களுக்கு கால இடைவெளியில் அவ்வப்போது சுட்டிக்காட்டியவை தான் எனினும் நாங்கள் இருவரும் பிரியும் அளவுக்கு அவை இருந் திருக்குமென நீங்கள் எதிர் பார்க்க மாட்டீர்கள். ஒருவகையில் நான் கூடஇதை எதிர்பார்க்க வில்லைத்தான். எம்மைச் சூழவுள்ள சமூகம் முரண்பாடுகளின் உள்ளேயே பதுங்கியிருக் கின்றது. நான் நினைக்கின்றேன் வாழ்வின் எல்லா அசைவுகளுக்கும் தமக்கு சாதகமான ஒரு அர்த்தத்தை அவை உண்டு பண்ணுகின்றன. வெளிப்படும் கருத்துக்கள் எம் காதுகளை வந்தடையும் போது பிறிதொரு அர்த்தத்தைத் தருகின்றது உங்கள் வயதும் அனுபவமும் வேண்டுமானால் அவற்றை சாதாரணமாகவே அலட்சியப்படுத்தலாம். என்னால் முடிய வில்லையே. சிறுபிள்ளையில் இருந்து தனித் தவளாக வருந்தி வருந்தி வளர்ந்தேன். அனேகமான நாட்கள் சொல்ல முடியாத பல வேதனைகளால் எனக்கு நானே கோபக்காரி யாகவும் ஆறுதல் கூறுபவளாகவும் இருந்திருக் கின்றேன்.

அப்பா உங்கள் மேல் எனக்கு இறுதி வரை இருந்த கோபம் நீங்கள் ஒரு ஆண், எனக்குத் தந்தை. உங்களுக்கு நான் தரும் அடைமொழிகள் வேண்டுமானால் பாசக்கார மனுஷன், மென்மையான குணமுடையவர், நல்லவர் இன்னும் எத்தனையோ இருக் கின்றன. இதற்கும் அப்பால் நீங்கள் ஓர் ஆண். நான் உங்கள் மகள். (அவ்வளவே தான்) சமூகத்தில் நாங்கள் ஒரு தந்தையும் ஒரு மகளும் ஒரு வீடும் என்றே பார்க்கப்படுகின் றோம். கால ஓட்டத்தில் வார்த்தைகள் மாறுபடும் போது அர்த்தங்கள் வேறுபட்டு விடும் அப்பா. அதற்கு முன் எம் பிரிவு நடந்துவிடுவது தான் நல்லது. இது நியாயமான கோபம் என்பதை நான் உங்களிடம் பட்டியலிட்டு விளக்க ஆசைப்படுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்சாட்டுகள்

கு.சா.1

எனக்கு மூன்று வயதாக இருக்கும் போது அம்மா உங்களுடன் ஏதோ பிரச்சினை காரணமாக பிரிந்து விட்டா. நான் வளர்ந்த பின்பு தான் அதைக்கேட்டுத் தெரிந்து கொண்டேன். அம்மா பிரிந்தமைக்கு காரணம் உங்களை விட 20 வயது குறைந்திருந்தமையால் பிடிக்காமல் போய் விட்டா என நீங்கள் கூறியிருக்கிறீர்கள். எனக்கு இன்னும் அம்மாவின் முகம் நினைவு இருக்கின்றது. நான் பலதடவை என்னை அம்மாவை பார்க்க கூட்டிச் செல்லுங்கள் என்று கேட்டிருக்கிறேன். ஒருநாள் கூட நீங்கள் கூட்டிப் போனீர்கள் இல்லையே. அம்மா இருக்கும் இடம் உங்களுக்கும் தெரியும். அப்பா உங்களுக்கு உங்கள் பிடிவாதமும் கௌரவமும் முக்கியம். யார் போனால் எனக்கென்ன. என் மகள் இருக்கிறாள். அது எனக்குப் போதுமென்று கூறுவீர்கள். உங்களுக்கு இப்படி எண்ணத் தோன்றுகின்றது எனக்கு என் அம்மா இல்லையே என்று நினைக்கும் போது கோபம் தான் வருகின்றது.

கு.சா. - 2

அப்பா எனக்கு "நீங்கள் ஔவை தரு முகிலி" என்று பெயர் வைத்தீர்கள் . யாரோ உங்களுடன் முன்பு இணைந்திருந்த நண்பர்கள் பின்பு ஏதோ காரணத்தால் மரணித்து விட்டதாகவும், அவர்களது நினைவாகவே இப்படியொரு நீண்ட பெயரை எனக்கு சூட்டியதாகவும் அடிக்கடி சொல்லுவீர்கள். என் பெயரை நீங்கள் சொல்லும் போது நெஞ்சை நிமிர்த்திக் கொள்வீர்கள். அதில் நீங்கள் அடையும் கர்வமும் சந்தோஷமுமே தனியானது. வகுப்பில் என் நீளமான பெயரை ரீச்சர் கூப்பிடும் போது எல்லோரும் சிரிப்பார்கள். எனக்கு வெட்கம் தாங்க முடியாமல் இருக்கும். என் பெயரைச் சுருக்கி ஔவை என அழைத்த போது ஔவை எமது மூதாதையரின் பெயர் உன் அப்பா ஒரு கிழவர், நீயும் ஒரு கிழவி என்று சினேகிதி முன்பு அடிக்கடி கூறுவாள். எனக்கு தாங்க முடியாது அழுகை வரும். உங்களிடம் நான் வந்து இதைக்கூறுவேன். நீங்கள் ஏதேதோ தத்துவக்கதைகளைச் சொல்லி தூங்க வைப்பீர்கள். தூக்கத்திலும் எல்லோரும் என்னைப் பார்த்து சிரிப்பார்கள். மறுநாள் காலை பாடசாலைக்கு வெளிக்கிடும் போது நான் இருக்கின்ற மனநிலையை இப்போது நினைத்தாலும் உங்கள் மேல் கோபம் தான் வருகின்றது.

கு.சா. - 3

01.03.2005 ஆம் ஆண்டு நான் பிறந்தேன். அன்று உங்கள் வயது 56 எனக்கு பத்து வயதாகும் மட்டும் நீங்கள் வயதானவர் என்பது எனக்குத் தெரியவே இல்லை. நானும் நீங்களும் ஒருமுறை அயலூருக்குப் போய் இருந்தோம். அப்போது எனக்கு வயது பதின்மூன்று. உங்களுக்கு வயது அறுபத்தொன்பது யாரிந்தக் கிழவன் உன் தாத்தாவா என்று கேட்டார்கள். இல்லை இவர் என் அப்பா என்றேன். நம்பாதவர்கள் போல் சென்றார்கள் அவர்கள். பாடசாலைக்கு நீங்கள் வரும்போது பிள்ளைகள் சொல்லுங்கள். "உன்ரை கிழவர் வந்திருக்கிறார்" என்று. ஏதோ அதிபர்மட்டும் தான் உங்களுடன் அதிகம் பேசுவார். என்னுடைய இந்த வயதில் தான் உங்களின் வயோதிபத்தின் வயது புலப்படத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றோயல் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் தரம் 11 B மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோயல் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் தரம் 11 C மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. ஏன் என்னுடைய அப்பா இவ்வளவு கிழவனான இருக்கிறார். எனப் பலமுறை யோசித்து குழம்பிப் போய் ஒரு நாள் அதை உங்களிடமே கேட்டும் விட்டேன். திருமணமாகப் பிந்தி விட்டது என்று கூறினீர்கள். என்ன காரணம் என்று கேட்டேன். பத்து வருடங்கள் சிறை இருந்தேன். எனச் சொன்னீர்கள் அதற்கும் காரணம் கேட்டேன. மனிதர்கள் வாழ்வதற்காக இருபத்தைந்து வருடங்கள் காட்டை அழித்துக் கொண்டிருந் தேன். இறுதியில் காட்டை அழித்தது நாட்டின் சட்டதிட்டங்களுக்கு முரணானது என்று அதே மனிதர்களால் நாட்டின் சிறையில் அடைபட்டேன் என்று புரியாத வார்த்தைகளை நீங்கள் கூறிய போது நான் ஏதோ ஒன்றைப் புரிந்து கொண்டேன். எனக்கு மற்ற அப்பாக்களைப் போல நீங்கள் இல்லையே என்பது ஒரு பெரிய குறைவாகவேபடுகின்றது. இன்று எனக்கு பத்தொன்பது வயதாகி விட்டது. உங்களுக்கோ எழுபத்தைந்து வயது இப்படி எங்காவது அப்பாவும் மகளும் இருப்பார்களோ தெரியாது. எனது அனைத்துச் சுதந்திரங்களும் உங்கள் முதுமைக்குள் சுருங்கிப் பொய்க் கொண்டிருக் கின்றது. எனது நகரத்தை வந்து பாருங்கள் எத்தனை வேகமாக அது இயங்கிக் கொண்டி ருக்கிறது. உங்களுக்கு தெரிந்தது ஒரு மொழி தான். இங்கே ஒவ்வொரு வரும் வெவ்வேறு மொழி பேசுபவர்கள். என் அப்பாவிற்கு தமிழ் மட்டும் தான் தெரியுமென்பது எனக்கு வெட்கமான ஒன்று. இதையெல்லாம் நான் யாரிடம் சொல்ல முடியும். நான் ஓர் சூனியப் பிரதேசத்தில் இருந்து வேறோர் உலகுக்கு போக விரும்புகிறேன். அதற்கு இன்னுமொரு காரணம் இருக்கின்றது.

கு.சா. - 4

நீங்கள் என்னுடன் இருக்கும் மட்டும் நான் உங்களுடன் இருந்தால் நிகழும், நீங்கள் என்னுடன் இல்லாத போதும் நான் உங்களுடன் மட்டும் இருக்க வேண்டிய அவசிய நிலையை நீங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். நான் இவற்றிலிருந்து விடுபட்டு எனக்கான வாழ் வைத் தொடங்குகிறேன். சுதந்திரகாற்றை அதன் எல்லாத் திசைகளிலிருந்தும் அனுபவிக்கப் போகிறேன். போய் வருகிறேன் அப்பா. நான் சென்ற பின்னர் வருத்தப்படுவீர்கள் என்பது பரிகிறது. என்ன செய்வது எங்களுக்கான இடைவெளிகள் மிகவும் நீண்டன.

இப்படிக்கு

உங்கள் அன்பு மகள்,

**ஔவை தரு முகிலி.**

................................

கிழவன் தன் கைத்தடியை ஊன்றி யூன்றி ஓடி வந்தான். நெற்றியில் கைவைத்து தூரவாகப் பார்வையைச் செலுத்தினான். சூரியன் கிழக்குப் பக்கமாய் மெதுவாக உயரத் தொடங்கியது. எங்கு பார்த்தாலும் மணல் தேசம் ஒரு பாலைவனம் போலத் தோற்றம் தந்தது. யோசித்துப் பார்த்தான். ஔவை புது வாழ்வைத் தேடிச் செல்பவள். நிச்சயமாகச் சூரிய உதயம் நோக்கித் தான் அவளது பயணம் இருக்கும். வேகமாகச் சென்றால் விரைவாகக் கண்டுபிடித்து விடுவேன். மனம் குளிர்ந்தது. உதடுகள் புன்னகையால் நனையத் தொடங்கியது. ஓடினான்..... ஓடுகின்றான்... ஔவை.... என் ஔவை என ஓடிக் கொண்டேயிருக்கிறான். அவனுக்குத் தெரியவே இல்லை ஔவையின் பயணம் மேற்குப் பக்கமானதென்றும், அதுமேலானது என்பதும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் விளையாட்டின் பதிவுகள்...



ச. குமார் (Diploma in Sports)
விளையாட்டு அதிகாரி
பிரதேச செயலகம், கரைச்சி

**01. உதைபந்து (ஆண்கள்)**

1970ம் ஆண்டு காலப்பருவத்தில் உருத்திர புரம், அருணோதயா வட்டக்கச்சி FARM SCHOOL ஆகிய விளையாட்டுக் கழகங்களே முன்னணி அணிகளாக காணப்பட்டன. அருணோதயா அணியின் சிறந்த வீரனாக செல்வம், பரராஜசேகரம், தேவராஜா ஆகியோர் காணப்படுகின்றபோது சிறந்த கோல்காப்பு வீரனாக N.M. யோசெப் திகழ்ந்தார்.

1980ம் ஆண்டு காலப்பகுதியில் அருணோதயா இளம் பறவைகள், பரந்தன் கெமிக்கல்ஸ், ஆனையிறவு உப்பளம், உருத்திரபுரம், FARM SCHOOL, போன்ற அணிகள் சிறந்த வீரர்களை கொண்டிருந்த போதிலும் ஞானராசா, கருணாநிதி மாட்டின், சாமி ஆகியோரின் விளையாட்டுக்களை ரசிகர்கள் விரும்பிய பார்பதுண்டு. பல உதைகளை தடுக்கும் கோல்காப்பு வீரனாக பஞ்சா அனைவராலும் கவரப்பட்டார். பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுஸ்தாபனம் (FACTORY) விளையாட்டு வீரர்களை இனங்கண்டு அவர்களை ஊழியர்களாக சேர்த்த பொழுது விஜயன், பெனடிற், உருத்திரா, சண்முகலிங்கம், சீதபொன்கலம், ஞானம், யோசெப் ஆகியோர் உள்வாங்கப்பட்டு கெமிக்கல் சார்பாக உதைபந்து, கரப்பந்து, கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களிலும் தங்களது வித்தைகளை காண்பித்தார்கள். பல அணிகள் சிறந்த உதைப்பந்தாட்டத்தை காண்பிக்கின்ற பொழுது போட்டிகளின் நடுநிலை மத்தியஸ்தராக (DREFREE) செபஸ்ரியாம் பிள்ளை, தனம் ஆகியோர் அனைவராலும் மதிக்கப்பட்டனர்.

1990ம் ஆண்டு மேலும் பல அணிகள் தோற்றம் பெற்றன. பரந்தன் இளைஞர் வட்டம், லக்கி ஸ்ரார், உழவர் ஒன்றியம், சந்திரோதயா, திருநகர் என்பனவாகும். இருந்த பொழுதிலும் லக்கி ஸ்ரார், உழவர் ஒன்றியம் ஆகிய அணிகள் கிளிநொச்சி மட்டுமல்லாமல் முல்லைத்தீவிலும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

2000ம் ஆண்டுகளுக்கு பிற்பட்ட காலப் பகுதியில் பூநகரியின் பக்கம் உதைபந்தாட்டம் திரும்பியது என்று சொல்லலாம். இரணைதீவு சென்மேரீஸ், ஜெகமீட்பர், நாச்சிக்குடா, சென்மேரீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய அணிகள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவை. இரணைத்தீவு சென்மேரிஸ் ஸ்ரனி, அருமைநாயகம், ஜெயசீலன், கெனடி என்போர் பூநகரியின் சார்பில் சாதித்த வீரர்கள். எது எப்படி இருந்த பொழுதிலும் 2012ம் ஆண்டே கிளிநொச்சி மாவட்ட அணி வடமாகாண போட்டியில் இரண்டாம் இடத்தை பெறமுடிந்தது. இந்த வெற்றிக்கு வித்திட்ட வீரர்களாக ஜேசுதாசன் (வீம்சிங்), கனிஸ்ரன், குலேந்திரன் (றொனால்டோ) ஆகியோர் பூநகரியின் சார்பிலும் கரைச்சி சார்பில் ஜெயந்தன் (உதயதாரகை), றொசாந் (திருநகர்), பிரதீசன் (உருத்திரபுரம்), ஜால்டன் (திருநகர்) ஆகியோர் ஒன்றிணைந் தனர்.

### உதைபந்து (பெண்கள்)

2003ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற தேசிய உதைபந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி அணி மூன்றாம் இடத்தைப் பெற்றிருப்பினும் நீண்ட கால இடைவெளியின் பின்னர் தான் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி தமது உதைபந்து கவனத்தை ஈர்த்தது என்று கூறலாம். இதற்கு முழு மூச்சாக உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் தலைவர் பரஞ்சோதி பங்காற்றினார்.

| | | |
|---|---|---|
| 2012 - வடமாகாணம் | கிளிநொச்சி | இரண்டாமிடம் |
| 2013 - வடமாகாணம் | கிளிநொச்சி | முதலாமிடம் |
| 2015 - வடமாகாணம் | கிளிநொச்சி | இரண்டாமிடம் |

இதற்கு பங்காளியாக செயற்பட்ட வீராங்கனைகள் விதுசா (உழவர் ஒன்றியம்), துகிதா (உழவர் ஒன்றியம்) மங்கையற்கரசி (உழவர் ஒன்றியம்), டக்சி (பூநகரி), சீராணி (பூநகரி) ஆகியோர் செயல்பட்டனர். இவர்களுக்கான பயிற்சியை பயிற்றுனர் S.I ஆசைநாதர் நெறிப்படுத்தி வருகின்றார்.

### 02. கரப்பந்து (ஆண்கள்)

கிளிநொச்சியில் ஓவர் முறையிலான கரப்பந்தாட்டமே 1983 முற்பட்ட காலப்பகுதியில் காணப்பட்டது. மலை நாட்டுத் தமிழர்கள் பெரிதும் கிளிநொச்சிக்கு வருகை தந்த பின்னர் தான் கரப்பந்தாட்டம் வலுவடையத் தொடங்கியது. 1985ம் ஆண்டு காலப்பகுதியில் கிருஷ்ணபாரதி, (விவேகானந்த நகர்) இளந் தென்றல் (அம்பாள் குளம்) ஆகிய அணிகள் அதிகமான போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தார்கள். கிருஷ்ணபாரதியின் சார்பில் ஜெயசீலன், கந்தசாமி, சிவதாஸ் ஆகியோர் வழிநடாத்த இளந்தென்றல் அணியின் சார்பில் இரத்தினமணி, பன்னீர் செல்வம், நடராஜா, ஜெயரட்ணம் (கோபி) ஆகியோர் குறிப்பிடத்தக்க வீரர்களாக போட்டியிட்டார்கள். 2012 வரை இவர்கள் ஆதிக்கம் இருந்தாலும் 2012 இற்கு பிற்பட்ட காலப்பகுதியில் புதிய பாரதி (மலையாளபுரம்) ஏனைய அணியினரை எளிதாக வெல்லும் அணியினராக இன்று வரை காணப்படுகின்றனர். இந்த வெற்றிக்கு சிம்சன், சுரேஸ், தர்மிலன் ஆகியோர் தாக்குதல் (SMASH) வீரர்களாக செயல்படுகின்றமையேயாகும். இவர்களுக்கு எதிர்கொள்ளக் கூடிய அணியாக இளந்தென்றல் அணியினர் காணப்படுகின்றனர். இவ்வணியின் தாக்கும் வீரனாக சுந்தரலிங்கம், சசிக்குமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் செயற்படுகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் சிறந்த வீரர்களாக காணப்பட்டாலும் வடமாகாணப் போட்டியில் 2014ம் ஆண்டே கிளிநொச்சி மாவட்டம் இரண்டாம் இடம் பெற முடிந்தது. யாழ் மாவட்ட அணி முதலாம் இடத்தைப் பெற்றிருந்தது.

**கரப்பந்து (பெண்கள்)**

2000ம் ஆண்டளவில் கரப்பந்தாட்ட அணிகள் உருவாகிய போதும் பெரியளவில் வியாபிக்க முடியவில்லை. 2010 மீள் குடியேற்றத்திற்கு பின்னர் புதிய பாரதி, விபுலானந்தா, ஆதவன், கனகபுரம், லக்கிஸ்ரார் ஆகிய அணிகள் தோற்றம் பெற்றாலும் புதிய பாரதி அணி பெரும்பாலான போட்டிகளில் வெற்றி பெற்றார்கள். தனுசியா, அனுசியா சகோதரிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வெற்றியை வைத்திருந்தது. மட்டுமல்லாமல் 2013ம் வட மாகாணப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணி இரண்டாமிடம் பெற காரணமாகவுமிருந்தார்கள். 2014ம் ஆண்டில் இருந்து கடுமையான பயிற்சிகளையும், முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் பச்சிலைப்பள்ளி அதிசயம் வீராங்கனைகள் சுகிர்தா, பானுசா, நான்கு சகோதரிகள் தமது பக்கத்திற்கு வெற்றியை கொண்டு சென்றனர். அத்துடன் வடமாகாணப் போட்டியிலும் வெற்றிவாகையை கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெற்றுக் கொடுத்தனர்.

| | |
|---|---|
| 2014 - கடற்கரை கரப்பந்தாட்டம் கிளிநொச்சி | முதலாமிடம் |
| 2014 - வடமாகாணம் கிளிநொச்சி மாவட்டம் | இரண்டாமிடம் |
| 2015 - வடமாகாணம் கிளிநொச்சி மாவட்டம் | இரண்டாமிடம் |
| 2015 - வடமாகாணம் கடற்கரை கரப்பந்து | முதலாமிடம் |

**03. வலைப்பந்து (பெண்கள்)**

1990ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து 2015ம் ஆண்டு காலப்பகுதி வரை முழு ஆதிக்கத்தையும் வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் வீராங்கணைகள் தம்வசம் வைத்திருந்தார்கள். இதற்கு அதிகமாக பங்கை கலா, றமா ஆகியோர் வகித்தனர். 1993 - 1995 காலப்பகுதியில் கனகபுரம் வீராங்கனைகள் சிறப்பாக செயல்பட்டு கிளிநொச்சி முல்லைத்தீவிலும் வெற்றியை பதிவாக்கியிருந்தனர். சுமதி, பூமணி, கீதா, விஜயாநிதி ஆகியோரின் பங்களிப்புடன் இவ்வாறு இவர்கள் வெற்றி பெற்ற போதிலும் வடமாகாணப் போட்டிகளில் எந்தவொரு வெற்றியையும் கிளிநொச்சி மாவட்ட 2012 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் பெறமுடியவில்லை.

2010ம் ஆண்டிற்கு பிற்பாடு வலைப்பந் தாட்ட பயிற்றுனர் றெக்ஸ் அருள்நேசனின் வருகையாலும், முயற்சியாலும் வடமாகாணப் போட்டிகளில் யாழ் மாவட்ட அணிக்கு அடுத்த இரண்டாம் அணியாக கிளிநொச்சி மாவட்ட அணி காணப்படுகின்றது.

| | |
|---|---|
| 2012 - வடமாகாணம் கிளிநொச்சி | இரண்டாமிடம் |
| 2013 - வடமாகாணம் கிளிநொச்சி | இரண்டாமிடம் |
| 2014 - வடமாகாணம் கிளிநொச்சி | இரண்டாமிடம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(லக்கிஸ்ரார்), சிந்து (லக்கிஸ்ரார்), கிருத்திகா (லக்கிஸ்ரார்), நிரோஜி (லக்கிஸ்ரார்), பிரசாந்தி (லக்கி ஸ்ரார்), சிந்து (இளந்தளிர்), சரோமி (பரந்தன் இளைஞர் வட்டம்), ரதிதேவி (கனகபுரம்), சுஜீபா (கனகபுரம்) ஆகியோர் காணப்பட்டனர்.

### 04. மென்பந்து கிரிக்கெட் (ஆண்கள்)

1985ம் ஆண்டில் கிளிநொச்சியில் அருனோதயா, இளம் பறவைகள், பரந்தன் இளைஞர் வட்டம் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் முன்னணி வகித்தன. அருணோதயாவின் சார்பில் நாயகம், அஞ்சலோ, மிலான் துடுப்பாட்ட வீரர்களாகவும் நாதன் பந்து வீச்சாளராகவும் காணப்பட்டனர். இளைஞர் வட்டம் சார்பில் சந்திரசேகரம், பந்து வீச்சாளராகவும் சகலதுறை வீரராக குமார், டனி, ரகு ஆகியோர் காணப்பட்டனர். 1988 தேசிய ரீதியில் மாவட்டங்களுக்கு இடையில் 6 பேர் கொண்ட ஐந்து ஓவர் போட்டி கொழும்பில் நடைபெற்ற போது குமார், நிகால், ரகு ஆகியோரின் துணிச்சலான துடுப்பாட்டம் பிற மாவட்ட வீரர்களை வியப்பிற்குள் ஆழ்த்தி யிருந்தது. 2000ம் ஆண்டு காலப் பருவத்தில் ஸ்கந்தா, கனகபுரம், இளம் பறவைகள், தர்மபுரம் இளந்தாரகை ஆகிய அணியினர் தங்களுக்குள் வெற்றிகளை பதிவாக்கி யிருந்தனர். 2010 பின்னர் உதயசூரியன், கிருஷ்ண பாரதி, தர்மபுரம் இளந்தாரகை ஏனைய அணி வீரர்களுக்கு சவாலாகத் திகழ்ந்தார்கள். கிளிநொச்சி மாவட்ட தேர்வு அணியில் மதன் (இளந்தாரகை), தங்கராசா (உதயசூரியன்), யோகி (இளந்தாரகை), குகன் (கிருஷ்ண பாரதி), ஜனுசன் (மத்திய தீரர்), லகிதரன் (கிருஸ்ண பாரதி), தவதீஸ் (செந்தணல்), கீர்த்தி (இளந்தாரகை), கோணேசன் (கனகபுரம்) ஆகியோர் சிறந்த வீரர்களாகக் காணப்பட்ட போதிலும் இதுவரை வடமாகாண போட்டிகளில் எந்தவொரு வெற்றியையும் பெற்றுக் கொள்ளாதது கவலைக்குரியதே.

### மென்பந்து கிரிக்கெட் (பெண்கள்)

2010 மீள் குடியேற்றத்தின் பின்னரே கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள் அணி தோற்றம் பெற்றது. 2012ம் ஆண்டில் புனித திரேசா கல்லூரி, கனகபுரம் ம.வி, சிவநகர் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலை அணிகள் பயிற்சிகளை மேற்கொண்டு போட்டியிட்டுக் கொண்டிருந்தார்கள். புனித திரேசா பெண்கள் கல்லூரி வீராங்கனைகள் விளையாட்டு அலுவலர் குமார் அவர்களிடம் தொடர் பயிற்சிகளை மேற்கொண்ட பொழுது வடமாகாண திறந்த போட்டியில் 2013 - வடமாகாணம் கிளிநொச்சி இரண்டாமிடம் பெற முடிந்தது. இதன் முக்கிய பங்காளியாக மேரி டயானா, தாட்சாயினி, தமிழ்வாணி, அனுசா ஆகியோரின் நேர்த்தியான பந்து வீச்சினாலும் சக்திவேல் அனுசாவின் இறுதி நேர அதிரடி இரு ஆறு ஓட்டங்களும் வெற்றிக்கு வழிவகுத்தது எனலாம்.

### 05. மெய்வல்லுனர்

1985 - 1990 இக்காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் மெய்வல்லுனர் துறையில் பரந்தன் இளைஞர் வட்டம், உருத்திரபுரம் விளையாட்டுக் கழகங்கள் அதிக அளவில் பேசப்பட்ட வீர,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீராங்கனைகளைக் கொண்ட கழகங்களாக காணப்பட்டன. குறுந்தூர ஓட்ட வீரனாக ச. குமார் (100m - 11.4 செக்கன்), கிடைப்பாய்ச்சல் வீரனாக தெய்வேந்திரன் (நீளம் பாய்தல் 6.72m) மத்திய தூர ஓட்ட வீரனாக புவனேந்திரராஜாவும், குண்டு போடுதல் வீரனாக அன்ரன் அன்பழகனும் (11.8m) குறுந்தூர ஓட்ட வீராங்கனையாக புஸ்பராணி, உதயா (இளைஞர் வட்டம்) மத்திய தூர ஓட்ட வீராங்கனையாக சூட்டி (உருத்திரபுரம') ஆகியோர் காணப்பட்ட போதிலும் வெளி மாவட்ட போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் போனது துரதிஸ்டமே.

1990 இற்கு பின்னர் நெடுந்தூர ஓட்ட வீரனாக வே. சிவனேசன் இருந்த காலத்தில் 1993ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணப் போட்டியில் போட்டியிடும் சந்தர்ப்பம் கிடைக்கவே 10000m போட்டியில் சாதனையுடன் கூடிய (32 நிமி 20 செக்) தங்கத்தை வென்றார். அத்துடன் 5000m போட்டியிலும் தங்கம் கிடைத்தது. 2003ம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் பரந்தனைச் சேர்ந்த விக்ரர் மான் டிவன்யா தங்கம் வென்றார்.

2010 மீள் குடியேற்றத்தின் பின்னர் முதலாவது பதக்கத்தை வடமாகாணப் போட்டி வவுனியாவில் நடைபெற்ற போது பெருமாள் விமலாதேவி 5000m போட்டியில் 3ம் இடம் பெற்றார். அதன் பின் மெய்வல்லுனர் பயிற்சியாளர் ந. முகுந்தன் வருகையின் பின்னர் வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான போட்டியில் கிளிநொச்சியின் பதக்கங்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

| | | | |
|---|---|---|---|
| 2010 - வடமாகாணம் - | பெருமாள் விமலாதேவி 5000 m | | மூன்றாமிடம் |
| 2011 - வடமாகாணம் - | பெ. விமலாதேவி - மரதன் | | முதலாமிடம் |
| | லோகரதன் | - மரதன் | இரண்டாமிடம் |
| | S. துசிதா | - முப்பாய்ச்சல் | இரண்டாமிடம், |
| | | - 400m | மூன்றாமிடம் |
| 2012 - வடமாகாணம் - | மு. சகிதா | - 400m | இரண்டாமிடம் |
| | | - 400m HUR | இரண்டாமிடம் |
| | | - 200m | மூன்றாமிடம் |
| | பார்த்தீபன் | - உயரம் பாய்தல் | மூன்றாமிடம் |
| | S.துஜிதா | - உயரம் பாய்தல் | மூன்றாமிடம் |
| | | - முப்பாய்ச்சல் | மூன்றாமிடம், |
| | N. நிசாந்தன் | - 100m | மூன்றாமிடம், |
| | T. நிதர்சன் | - ஈட்டி எறிதல் | மூன்றாமிடம் |
| | S. மதுசா | - 800m | இரண்டாமிடம் |
| | நிமோஜ் | - 5000m, 1000m | இரண்டாமிடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013 - வடமாகாணம் - S. கமல்ராஜ் - முப்பாய்சல் முதலாமிடம்

M. தினேஸ் - 800m இரண்டாமிடம்

K. சகிதா - 400m மூன்றாமிடம்

- 400m HUR மூன்றாமிடம்

S. றம்யா - 5000m மூன்றாமிடம்

T. டென்சிகா - வேக நடை மூன்றாமிடம்

தேசியம் - T.டெல்மன் தே.பா அரை மரதன் போட்டி இரண்டாமிடம்.

2014 - வடமாகாணம் - T. டென்சிகா - 800m, 1500m, முதலாமிடம்

T.டெல்மன் - 5000m, 10000m, மரதன் முதலாமிடம்

யோ. சுகிர்தா - உயரம் பாய்தல் முதலாமிடம்

2015 - தேசியம் - தே. டென்சிகா - தே.க. மெய்வல்லுனர்

800m முதலாமிடம்

யோ. சுகிர்தா - தே.க. உயரம் பாய்தல் மூன்றாமிடம்

2015 - வடமாகாணம் - தே. டென்சிகா - நாட்டுக்குறுக்கோட்டம் முதலாமிடம்

தே. டெல்மன் - நாட்டுக் குறுக்கோட்டம் முதலாமிடம்

### 06. துவிச்சக்கரவண்டி ஓட்டம்

1980 - 1985 ஆண்டு காலப்பருவத்தில் சுலோசனா, சுகுணா, மாலதி சகோதரிகள் கிளிநொச்சி மட்டுமல்லாது யாழ் மாவட்டத்திலும் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று தலைசிறந்த வீராங்கனைகளாக காணப்பட்டனர். 2010 - 2012 பகுதியில் திருநகரைச் சேர்ந்த புஸ்பா வெற்றிகளை பதிவாக்கியிருந்தார்.

### 07. குத்துச் சண்டை

பிரமந்தனாறு விசுவமடுவைச் சேர்ந்த விற்றாலி நிக்கலஸ் குத்துச் சண்டைப் பயிற்சிகளை கடினமாக மேற்கொண்டு 64kg பிரிவில் 2013ம் ஆண்டு தேசிய கனிஷ்ட போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், 2014ம் ஆண்டு 2015ம் ஆண்டு வடமாகாணப் போட்டிகளில் தங்கத்தையும் வென்றார்.

### 08. ஜுடோ

ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரம வீராங்கனைகளுக்கு ஜுடோ பயிற்சியாளர் ஜெயவீரவின் தொடர் பயிற்சிகளின் மூலமாக 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் வடமாகாணப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்டம் முதல் இடத்தைப் பெற முடிந்தது. இவர்களுள் R. சுஜீபா, R. திருமகள், V. ஜெயப்பிரியா ஆகியோர் தேசிய போட்டிகளில் கூட சிறப்பாக போட்டியிட்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 09. கபடி

1995 பருவ காலத்தில் கபடியின் அறிமுகம் வட்டக்கச்சி குறிஞ்சி, கல்லாறு, உழவர் ஒன்றியம் சிறப்பாக விளையாடி வந்திருந்தாலும் வட்டக்கச்சி குறிஞ்சி வீரன் ஜெயசீலன் கிளிநொச்சியில் சிறப்பாக கபடி ஆடக்கூடிய RIDER ஆவார். இவரது நிறை 80kg இற்கு கூடவே கிளிநொச்சி வீரர்களின் போட்டியிடும் தன்மை குறைந்தது என்று கூறலாம். இருப்பினும் உழவர் ஒன்றியம் பரஞ்சோதி மாஸ்டர் சிவநகர் அ.த.க.பாடசாலையில் பயிற்சி களை வழங்கி 2013ம் ஆண்டிற்கு பின்னர் பாடசாலை மட்ட வடமாகாணப் போட்டி தேசிய போட்டியில் கூட வெற்றி பெற்றுள்ளார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 2014 - வடமாகாணம் - | 15 வயது ஆண்கள், பெண்கள் | - | முதலாமிடம் (சிவநகர்) |
| | 19 வயது ஆண்கள் | - | முதலாமிடம் (சிவநகர்) |
| 2015 - வடமாகாணம் - | 15 வயது ஆண், 19 வயது ஆண் | - | முதலாமிடம் |
| - தேசியம் - | 15 வயது ஆண் சிவநகர் அ.த.க | - | முதலாமிடம் |
| | 19 வயது ஆண் இந்து கல்லூரி | - | இரண்டாமிடம் |

இதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களாக 19 வயது தசப் பிரியன், தினேஸ், சிவராஜ் ஆகியோர் பெண்கள் மங்கயற்கரசி, விதுசா, டைசா, மாலினி ஆகியோரும் 15 வயது - கபில், சயந்தன், சிந்துஜன் ஆகியோரைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

### 10. மாற்றுவலுவுடையோர்

2011ம் ஆண்டு சிற்றிங் வொலிபோல் (கரப்பந்து) இருந்து விளையாடும் இலங்கை தேசிய அணியில் கிளிநொச்சியைச் சேர்ந்த P. மலர்விழி(காந்தி கிராமம்), A. மேரி அனிற்றா (புதுமுறிப்பு) T. நவலோஜினி (புதுமுறிப்பு) ஆகியோர் விளையாடப்படும் ஆறு வீராங்கனைகளில் மூவர் தேர் பெற்றனர்.

2011 - இலங்கை அணியின் சார்பாக - சீனா சென்று விளையாடினர்

2012 - இலங்கை அணியின் சார்பாக - இந்தியா சென்று விளையாடினர்

2014 - இலங்கை அணியின் சார்பாக - சிங்கப்பூர் சென்று விளையாடினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிலையத்தில் தடம் பதித்த ஆசிரியர்கள்

## தமிழ்

| | |
|---|---|
| ☞ திருமதி ர. வசந்தகுமாரி | 1990 - 1991 |
| ☞ திருமதி சி. சுலோஜினி | 1991 |
| ☞ திரு வே. லவேந்திரன் | 1996 - 2001 |
| ☞ திருமதி மனோரஞ்சிதம் | 1997 - 1998 |
| ☞ திருமதி ச. கலாவாணி | 1998 - 1999 |
| ☞ கலாநிதி செ. திருநாவுக்கரசு | 1998 - 2000 |
| ☞ திரு. ந. கிருஸ்னானந்தன் | 2006 |
| ☞ திரு. த.டேவிற்கிஸ்காட் | 2010 - 2012 |
| ☞ திரு. த. செல்வா | 2014 - 2015 |
| ☞ கலாநிதி இ. கிறேனோ வசீகரன் | 2010 - 2011 |

## கணிதம்

| | |
|---|---|
| ☞ திரு. ச. குமார் | 1990 |
| ☞ திரு. ச. சசிசராஜ் | 1996 - 2009 |
| ☞ திரு. பா. சசிபாபு | 2011 |

## விஞ்ஞானம்

| | |
|---|---|
| ☞ திரு. இ. சதானந்தன் | 1990 - 1991 |
| ☞ திரு. மா. அகிலநாயகம் | 1991 |
| ☞ திரு. சி. விமல்ராஜ் | 1996 - 2014 |
| ☞ திரு. சி. இளங்குமரன் | 2005 - 2007 |
| ☞ திரு. வே. பேரானந்தசிவம் | 2006 |
| ☞ திரு. சி. ஜெயரூபன் | 2010 - 2011 |
| ☞ திரு. சு. அருள்நேசன் | 2011 - 2013 |
| ☞ திரு. வே. ஜெயக்குமார் | 2014 |

## சைவ சமயம்

| | |
|---|---|
| ☞ திருமதி சக்தி சந்திரகுமார் | 1992 - 1994 |
| ☞ திருமதி எஸ். சந்திரவதனி | 1994 - 2010 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ திரு. சு. லோகேஸ்வரன் 2001 - 2002
- ☞ திரு ச. யோகராசா 2011

## ஆங்கிலம்

- ☞ திரு. சீ. ஏச். சண்முகநாதன் 1990 - 1999
- ☞ திரு. சிவனேசன் 1991 - 1993
- ☞ திரு. இரா. தனுராஜ் 1992 - 1993
- ☞ திரு. தவராசா 1996 - 1998
- ☞ திரு. க. மயில்வாகனம் 1994 - 1998
- ☞ திரு. துரைராஜா 1996 - 2000
- ☞ திரு. நா. ஜெகதீஸ்கரன் 2001 - 2003
- ☞ திரு. த. மனோகரன் 2004 - 2006
- ☞ திரு. கு. ஜேசுராஜன் 2005 - 2008
- ☞ திரு. அமிர்தலிங்கம் 2006 - 2008
- ☞ திரு. க. கமலேந்திரன் 2010 - 2011
- ☞ திரு. இ. சுதாபரன் 2010
- ☞ திரு. பொ. மதன்ராஜ் 2006

## வரலாறு

- ☞ திரு. எஸ். இ. ஆர். சேதுபதி 1990 - 1991
- ☞ திரு. ந. தம்பிராஜா 1991 - 1994
- ☞ திரு. அ. சத்தியானந்தன் 1992 - 1996
- ☞ திரு. சி. ஈசன் 1996 - 1997
- ☞ திரு. ஆ. இராஜேந்திரகுமார் 1996 - 1998
- ☞ திரு. விக்கினேஸ்வரன் 1996 - 2001
- ☞ திரு. பே. தேவராஜன் 1997 - 2001
- ☞ திரு. கி. மதனேஸ்வரன் 2001
- ☞ திரு. நா. ஜெகதீஸ்வரன் 2007

## புவியியல்

- ☞ திருமதி கு. புவனேஸ்வரி 1992
- ☞ திருமதி ப. சுஜாதா 1994 - 1997
- ☞ திரு. இ. உதயகுமார் 1996 - 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சங்கீதம்

| | | |
|---|---|---|
| ☞ | திருமதி .சகுந்தலா | 1997 - 2000 |
| ☞ | திருமதி சி. யோகேஸ்வரி | 2001 |

### சித்திரம்

| | | |
|---|---|---|
| ☞ | திரு. ம. அன்ரன்ஜோசெப் | 1993 - 1995 |
| ☞ | திரு. சத்தியசீலன் | 1996 - 1997 |
| ☞ | திரு. சூ. பரஞ்சோதி | 2004 - 2005 |
| ☞ | திரு. நா. ஜெகதீஸ்வரன் | 2001 |

### மனைப்பொருளியல்

| | | |
|---|---|---|
| ☞ | திருமதி மேரிதில்லைநாதன் | 2001 - 2004 |
| ☞ | திருமதி சகுந்தலா | 1996 - 2000 |

### விவசாயம்

| | | |
|---|---|---|
| ☞ | திரு. கருணாகரன் | 1994 - 1995 |
| ☞ | திரு. சிவகுருநாதன் | 1996 - 1998 |
| ☞ | திருமதி சிவகுருநாதன் | 1996 - 1998 |
| ☞ | திரு. ந. செல்வராஜா | 2001 - 2003 |
| ☞ | திரு. சி. இளங்குமரன் | 2005 - 2007 |
| ☞ | திரு. க. ஶ்ரீகுமார் | 2007 |

### சுகாதாரமும் உடற்கல்வியும்

| | | |
|---|---|---|
| ☞ | திரு. ச. குமார் | 2003 |

### தகவல் தொழில்நுட்பம்

| | | |
|---|---|---|
| ☞ | திரு. இ. கிருபா | 2011 - 2012 |

### தரம் 06

| | | |
|---|---|---|
| ☞ | திருமதி செ. தவமகள் ராதா | 2001 - 2004 |
| ☞ | திருமதி ச. கஜேந்தினி | 2005 - 2006 |
| ☞ | திருமதி தா. சத்தியா | 2006 - 2011 |
| ☞ | திருமதி த. ஜீவிதா | 2012 - 2013 |
| ☞ | திருமதி அ. அனுசா | 2014 - 2015 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளியல்

- ☞ திருமதி கி. நந்தினி — 1991 - 1992
- ☞ திரு. சிறிஞானேஸ்வரன் — 1993 - 1994
- ☞ திரு. ப. சந்திரன் — 1995 - 1996
- ☞ திரு. சத்தியசீலன் — 1995 - 1996
- ☞ திரு. ஞானேஸ்வரன் — 1997 - 1999

## வர்த்தகம்

- ☞ திருமதி கௌசலா — 1990 - 1991
- ☞ திரு. இ. நந்தினி — 1991 - 1992
- ☞ திரு. சத்தியானந்தன் — 1993 - 1996
- ☞ திரு. த. தர்மராஜன் — 1995 - 1996

## கணக்கீடு

- ☞ திரு. சதானந்தன் — 1992 - 1994
- ☞ திரு. இ. பத்மநாதன் — 1995 - 1996
- ☞ திரு. த. தர்மராஜன் — 1997 - 1998
- ☞ திரு. இசைப்பிரியன் — 1997 - 1998

## தமிழ் இலக்கிய நயம்

- ☞ திருமதி பி. மதுரநாயகம் — 2010 - 2012
- ☞ திருமதி சி. சுலோஜினி — 2013

## இந்து நாகரீகம்

- ☞ திரு. செ. சிவஞானம் — 1991 - 1992
- ☞ திரு. ர. சிவலிங்கம் — 1993 - 1994
- ☞ திரு. ம. உமாசங்கர் — 1994 - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சசீசராஜ் அரங்கம் 2010 திருமதி இராஜேஸ்வரி சண்முகநாதன் அவர்களால் ஆரம்பித்து வைத்தல்



அமரர் சசீசராஜ் அரங்கம் ஆரம்ப நிகழ்வின் போது கலந்து கொண்ட மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் கல்வி நிலையம்

## க.பொ.த சாதாரண தரம்

## முதல் நிலைப் பெறுபேறுகள்

### 1990

| | |
|---|---|
| ஆறுமுகம் தவக்குமார் | 5D, 2C, S |
| பாலச்சுப்பிரமணியம் சுகிர்தா | 5D, 2C, S |
| இதயகுமாரி | 3D, 3C, 2S |
| நாகரட்ணம் ஜெயாளன் | 2D, 5C, S |
| இராஜேஸ்வரன் ரதீசன் | D, 4C, 3S |

(பரீட்சை 1991ம் ஆண்டே நடாத்தப்பட்டது)

### 1991

| | |
|---|---|
| தர்மபாலசிங்கம் மைதிலி | 5D, 3C |
| நாகராசா வினோதன் | 5D, 2C, S |
| ஸ்ரீசெல்வராசா ரவிசாந் | 3D, 5C |
| பரமசாமி ஜெயராசா | 3D, 2C, 3S |
| பரமசாமி செல்வராசா | 2D, 4C, 2S |

### 1992

| | |
|---|---|
| கனகேந்திரன் பிரசாந்தி | 6D, 2C |
| நாகலிங்கம் ஜெயகரன் | 4D, 3C, S |
| கணபதி இராஜேஸ்வரன் | 3D, 3C, 2S |
| செல்லையா ரமேஸ் | 2D, 5C, S |
| தர்மலிங்கம் சிறீதரன் | 1D, 7C |

### 1993

| | |
|---|---|
| சிற்றம்பலம் வர்மன் | 6D, 2C |
| ஜெரோம் டேறியஸ் | 5D, 3C |
| கனகேந்திரன் யாழினி | 5D, 3C |
| இரத்தினம் சிவானந்தி | 4D, 4C |
| லோகநாதன் சஜினி | 4D, 4C |

### 1994

| | |
|---|---|
| தர்மலிங்கம் முரளீதரன் | 7D, 1C |
| செல்வராசா சுகந்தன் | 6D, C, S |
| பரராஜசேகரம் கோசலை | 4D, 4C |
| பாலமுருகா | 4D, 4C |
| விமலநாதன் நேசன் | 3D, 3C, 2S |
| பானுரேகா | 3D, 3C, 2S |

### 1995

| | |
|---|---|
| நடேசன் சசிரேகா | 6D, 2C |
| குருசாமி சுதாகரன் | 6D, 1C, S |
| இந்திரன் நித்தியா | 4D, 3C, S |
| சபாரத்தினம் எழில் | 4D, 3C |
| சிற்றம்பலம் நாகரபாஸ்கர் | 2D, 6C |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1996

| | |
|---|---|
| சக்திவேல் பிரதீப் | 5D, 3C |
| சபாவதிப்பிள்ளை ஜஜீவன் | 4D, 3C, S |
| கந்தசாமி ஜமுனா | 3D, 4C, S |
| மார்கண்டு பகிரதன் | 3D, 4C, S |
| நடராசா ஜனனி | 2D, 5C, S |
| திருநாவுக்கரசு பாமினி | 1D, 7C |

## 1997

| | |
|---|---|
| கந்தசாமி அருள்குமரன் | 8D |
| இராசநாயகம் சசிலேகா | 5D, 3C |
| சரவணபவானந்தன் கஜேந்தினி | 4D, 4C |
| செல்வராசா நித்தியா | 4D, 3C, S |
| குமாரி புஸ்பா | 3D, 4C, S |

## 1998

| | |
|---|---|
| பிரமிளா | 7D, C |
| தர்மலிங்கம் விஜயரஞ்சினி | 7D, S |
| விவேகானந்தா வாணி | 7D, S |
| சிவசுப்பிரமணியம் சுஜிதா | 6D, 2C |
| குமாரசாமி பிரதீபன் | 6D, 2C |

## 2000

| | |
|---|---|
| கோபாலபிள்ளை பிரசாந்தன் | 9D, C |
| மகேந்திரன் வாகினி | 9D, C |
| யோகநாதன் லதாங்கி | 9D, C |
| நடேசன் திலீபன் | 9D, S |
| செல்வநாயகம் கிருஷாந்தன் | 8D, 2C |
| சண்முகநாதன் பார்த்தீபன் | 8D, 2C |

## 1999

| | |
|---|---|
| பாலச்சந்திரன் ரஜதீபன் | 10D |
| கணேசராசா பிரகாஸ் | 10D |
| இராஜேந்திரன் அகிலன் | 10D |
| சரவணபவானந்தன் சரவணபவானி | 10D |
| இதயசிவதாஸ் இதயரூபன் | 9D, C |
| ஆனந்தராஜா சசிவனிதா | 9D, C |
| சண்முகராசா அஜந்தன் | 8D, 2C |
| இராசு இளங்கோ | 8D, 2C |

## 2001

| | |
|---|---|
| சிவசுப்பிரமணிம் மதுரதா | 10A |
| திருஞானசம்மந்தமூர்த்தி சர்மிளா | 8A, B, C |
| நந்தகுமார் அருட்செல்வி | 8A, B, S |
| துரையப்பா சுதர்சினி | 7A, 2B, S |
| நடராசா நிஷாந்தினி | 6A, 3B, C |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2002

| | |
|---|---|
| பாலசுப்பிரமணியம் சுதர்சன் | 10A |
| சிவபரஞ்சோதி உமைசொரூபி | 9A, C |
| சின்னத்துரை எழில்வேள் | 8A, 2C |
| யோகநாதன் ஆரணி | 7A, B, 2C |
| உஷாகரன் | 8A, B, S |

## 2003

| | |
|---|---|
| மதுரநாயகம் சிந்துஜா | 10A |
| விக்கினேஸ்வரன் அபிரா | 9A, B |
| சிவராசா மயூரன் | 9A, B |
| இரத்தினகுமார் நிஷாந்தன் | 8A, B, C |
| வடிவேல் ரமேஸ் | 8A, B, C |

## 2004

| | |
|---|---|
| பஞ்சாட்சரம் கோகுலன் | 9A, B |
| திருலோகமூர்த்தி அர்ச்சனா | 8A, B, C |
| சண்முகநாதன் சுஜீபன் | 7A, 2B, C |
| குலேந்திரன் டனுஜா | 5A, 3B, 2C |
| விநாயகமூர்த்தி திவ்வியா | 7A, 2B, C |

## 2005

| | |
|---|---|
| அமிர்தலிங்கம் அனுருத்தன் | 10A |
| பாலச்சந்திரன் தனதீபன் | 10A |
| மகேஸ்வரன் ரஜிதன் | 10A |
| கலேந்திரன் சோபியா | 9A, B |
| நடராசா யாதவன் | 8A, B, C |
| தூயல பிரதீசன் | 7A, 2B, C |

## 2006

| | |
|---|---|
| தவராசா தவக்குமரன் | 10A |
| லோகநாதன் நேருஜா | 9A, B |
| லோகநாதன் நிரோஜா | 9A, B |
| ஜெயபாலன் சுவேந்தினி | 9A, B |
| திருச்செல்வம் துளசிகன் | 9A, C |
| விக்கினேஸ்வரன் ஆரபி | 8A, 2B |
| புகேந்திரராசா சுமங்கலா | 8A, B |

## 2007

| | |
|---|---|
| கதிர்காமநாதன் மகிந்தன் | 10A |
| மோகன்ராஜ் அச்சுதன் | 10A |
| சிவானந்தம் ரஞ்சீவ் | 10A |
| திருச்செல்வம் சுபாங்கி | 10A |
| பாலகுமாரன் மகிழினி | 9A, B |
| அமிர்தலிங்கம் சாரங்கி | 9A, B |
| ஆறுமுகம் அனுசாந் | 9A, B |
| சிவகுமார் திர்ஷாந்தினி | 9A, B |
| P. அஜந்தா | 9A |
| A. ஆர்த்திகா | 9A, B |
| மகாதேவன் அபிராமி | 9A, C |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008

| | |
|---|---|
| அமிர்தலிங்கம் ஆருத்திரன் | 9A |
| சந்திரசேகரன் தேவப்பிரியன் | 9A |
| மேரியோசெப் அருள் சில்வெஸ்ரன் | 8A, B |
| விக்கினேஸ்வரநாதன் ஆரணி | 7A, 2B |
| கார்த்திகேசு தஸ்யந்தி | 7A, B,C |
| இராஜேந்திரம் கம்சாளினி | 7A, B, C |
| மதுரநாயகம் ஷானுஜா | 7A, B, C |
| சிவாநந்தன் கிருபாலினி | 7A, 2B |

## 2009

| | |
|---|---|
| சிறிரங்கநாதன் தர்சிகா | 5A, 2B, 2C |
| ஜெயச்சந்திரமூர்த்தி லக்சன் | 5A, 2B, 2C |
| ஜெயபாலன் பவிதரன் | 5A, 2B, 2C |
| ஜெயகுமார் ஜெனாறொசிங்டன் | 3A, 3B, 3C |
| குலசேகரம் தனுசன் | 2A, 3B, 4C |

## 2010

| | |
|---|---|
| சந்திரசேகரன் பானுப்பிரியன் | 9A |
| மதுரநாயகம் அஜித்ஜெரோம் | 8A, B |
| இராஜேந்திரன் தர்சினி | 7A, 2B |
| குமார் கீர்த்தனன் | 6A, 3B |
| திருஞானநம்பந்தமூர்த்தி கௌசிகா | 6A, 2B, C |

## 2011

| | |
|---|---|
| இராமமூர்த்தி ஜனத் | 8A, B |
| மகாதேவா நியோகிதன் | 8A, C |
| சிவஞானம் பிரணவன் | 7A, 2B |
| விக்கினேஸ்வரன் டினுசியன் | 7A, B, C |
| மகாராஜா றெரன்சியா | 5A, 4B |

## 2012

| | |
|---|---|
| சிவபாலன் கௌதமன் | 9A |
| சிம்மேந்திரன் சஜிபா | 9A |
| சண்முகராசா கோடீஸ்வரன் | 8A, C |
| நாகேந்திரன் கோபிகா | 7A, B, C |
| சிவகருணாகரன் விதுல்ஜன் | 6A, 3B |

## 2013

| | |
|---|---|
| சிம்மேந்திரன் வினீபா | 9A |
| நல்லைநாதன் நதுர்சா | 8A, B |
| சந்திரசேகரன் சோபனபிரியன் | 8A, C |
| ஜெகதீஸ்வரன் விதுசன் | 6A, 2B, C |
| திலகநாதன் சங்கவி | 6A, B, 2C |

## 2014

| | |
|---|---|
| ஜெயசேகரம் சத்திய சரண்யா | 9A |
| குலதாசன் கிருத்திகா | 9A |
| நவரத்தினராஜா கௌசிகன் | 9A |
| புருசோத்மன் புருகாசினி | 8A, B |
| நந்தகுமார் மிதுசிகா | 8A, B |
| குமாரகுலசிங்கம் தர்மிளா | 8A, C |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. பொ.த. உயர்தரம்

**1994 வர்த்தகம்**

| | |
|---|---|
| ப. ஜெயராசா | 4A |
| க. யோகநாதன் | 3A, B |
| B. யசோதா | 2A, 2B |
| செ. ஜீவா | 2A, 2B |
| க. எட்விச் | 2A, B, C |

**1994 கலை**

| | |
|---|---|
| ப. செல்வராணி | A, 2B, C |
| ச. குறிஞ்சி | A, 2B, C |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி விழா பரிசில் பெறுவோர்கள்

## தரம் 06

1ம் இடம் - செல்வன் கங்கேஸ்வரன் டர்ஜிகா
2ம் இடம் - செல்வன் சிறிதரன் கயாணன்
3ம் இடம் - செல்வி லோகநாதன் வைஸ்ணவி

## தரம் 07

1ம் இடம் - செல்வி ஞானச்சந்திரன் கவிசாளினி
2ம் இடம் - செல்வி விஷயமகோகரன் பிந்துஜா
3ம் இடம் - செல்வன் சிறிதரன் பவித்திரன்

## தரம் 08

1ம் இடம் - செல்வி மோகனராஜ் புகழினி
2ம் இடம் - செல்வி வின்சன் றிபோல்ட் பானுஜா
3ம் இடம் - செல்வி அமலராசா மதுஷனா

## தரம் 09

1ம் இடம் - செல்வி சிம்மேந்திரன் குணாஜினி
2ம் இடம் - செல்வி பாலகிருஸ்ணன் தரணிகா
3ம் இடம் - செல்வி புவனேந்திரன் கீர்த்திகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 10

1ம் இடம் - செல்வன் விமலநாதன் பவிக்சன்

2ம் இடம் - செல்வன் ஞானச்சந்திரன் குகப்பிரியன்

3ம் இடம் - செல்வி திசநாயகம் நிலா

## தரம் 11A

1ம் இடம் - செல்வன் சிவபாலன் பவித்திரன்

2ம் இடம் - செல்வி குமார் கீர்த்தனா

3ம் இடம் - செல்வி வின்சன் போல் கிருஜா

செல்வன் பத்மசிறி கீர்த்திகன்

## தரம் 11B

1ம் இடம் - செல்வன் ஸ்ரீகாந்ததாஸ் மிதுசன்

2ம் இடம் - செல்வி பேரம்பலம் கயல்விழி

3ம் இடம் - செல்வி விஜயகாந்தன் ஜிப்சிகா

## தரம் 11C

1ம் இடம் - செல்வி இராஜரட்சணம் யாழினி

2ம் இடம் - செல்வன் வரதராசன் கிஷோ

3ம் இடம் - செல்வன் ரமேஸ்வரன் விதுர்சன்

செல்வன் தயாளன் தனுசியன்

## 2014ம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரம் முதல் நிலைச் சித்தி

செல்வி ஜெயசேகரம் சத்தியதரண்யா 9A

செல்வி குலதாசன் கீருத்திகா 9A

செல்வன் நவரத்தினராஜா கௌசிகன் 9A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேசைப்பந்து - கீழ்ப்பிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வன் லோகநாதன் நிகாரஜன்
2ம் இடம் - செல்வன் ஜெகதீசன் கபிசன்

**மேசைப்பந்து - மத்தியபிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வன் யுவராஜா அபிசன்
2ம் இடம் - செல்வன் ரகு திலக்ஷன்

**மேசைப்பந்து - கீழ் பிரிவு - பெண்**

11ம் இடம் - செல்வி பாலகிருஸ்ணன் தனுசிகா
2ம் இடம் - செல்வி ஜெகதீஸ்வரன் டிலானி

**பட்மின்ரன் - மேல்பிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வன் ஸ்ரீதரன் அனோயன்
2ம் இடம் - செல்வன் பத்மசிறி கீர்த்திகன்

**பட்மின்ரன் - மேல்பிரிவு - பெண்**

1ம் இடம் - செல்வி குமார் கீர்த்தனா
2ம் இடம் - செல்வி கங்கேஸ்வரன் கோபிகா

**கரம் - கீழ்ப்பிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வன் தவராசா தனுஜன்
2ம் இடம் -செல்வன் கஜேந்திரன்

**கரம் - மத்திய பிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வன் புள்ளைநாயகம் அனுசன்
2ம் இடம் - செல்வன் உதயகுமார் கஜீபன்

**கரம் - மேல் பிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வன் சுரேஸ் தவசீலன்
2ம் இடம் - செல்வன் ஜவாகர் மிதுசன்

**சதுரங்கம் - கீழ்ப்பிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வன் ஜோயல்பியசீலன் பிரவிந்தன்
2ம் இடம் - செல்வன் நவரட்ணம் சானுஜன்

**சதுரங்கம் - மத்திய பிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வன் விமலேஸ்வரன் பவிக்ஷன்
2ம் இடம் - செல்வன் சுந்தரலிங்கம் சிவனுயன்

**சதுரங்கம் மேல் பிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வன் நாகேந்திரன் துவாரஜன்
2ம் இடம் - செல்வன் பத்மஸ்ரீ கீர்த்திகன்

**கரம் - கீழ்ப் பிரிவு - பெண்**

1ம் இடம் - செல்வி புவனேந்திரன் கோபிசா
2ம் இடம் - செல்வி லோகநாதன் வைஸ்ணவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கரம் - மத்திய பிரிவு - பெண்**

1ம் இடம் - செல்வி புவனேந்திரன் கீர்த்திகா
2ம் இடம் - செல்வி சதீஸ் மதுசா

**கரம் - மேல்பிரிவு - பெண்**

1ம் இடம் - செல்வி இராசேந்திரம் லோஜினி
2ம் இடம் - செல்வி பிரபாகரன் தனுஜா

**சதுரங்கம் - மத்திய பிரிவு - ஆண்**

1ம் இடம் - செல்வி புவனேந்திரன் கீர்த்திகா
2ம் இடம் - செல்வி சிம்மேந்திரன் குணாளினி

**சதுரங்கம் - கீழ்ப்பிரிவு - பெண்**

ம் இடம் - செல்வி அமல்ராஜ் மதுசனா
2ம் இடம் - செல்வி மோகனராஜ் புகழினி

**சதுரங்கம் - மேல்பிரிவு - பெண்**

1ம் இடம் - செல்வி பரமேஸ்வரன் மதுரிகா
2ம் இடம் - செல்வி குமார் கீர்த்தனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 YEARS








Multy Colours Printers
KILINOCHCHI

Digitized by Noolaham Foundation.